


மகேச்வர வடிவங்கள்

டாக்டர் R. இராமசேஷன்
வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன்

[illegible]
[illegible]
[illegible]

திரு உலகநாதன்

அன்பளிப்பு :
தஞ்சாவூர்
நடராஜபிள்ளை உலகநாதன் M.A.B.T



அன்பளிப்பு :
தஞ்சாவூர்
நடராஜபிள்ளை உலகநாதன் M.A.B.T

மகேச்வர வடிவங்கள்

'' சேக்கிழார் தாசன் ''

'' திருப்புகழ்வேள் திருத்தல ஆராய்ச்சிமணி ''

டாக்டர் R. இராமசேஷன் M.A., M.Ed., Ph.D.,

'' திருப்புகழ்த்தல ஆராய்ச்சித் திலகம் ''

வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன் B.Com.,

திருப்புகழ் பதிப்பகம்

35, முருகப்ப முதலித் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

போன்: 848354

முதற்பதிப்பு: ஜூன் 1992

விலை: ரூ. 90/-

அட்டைப்படம் வடிவமைப்பு: ஓவியர் திரு கு. வேதகணபதி (வேதா)

இந்நூலின் முகப்பு அட்டையில் திகழும் வடக்காலத்தூர் கல்யாணசுந்தரர் பஞ்சலோகப் படிமம்—சோழர்காலம்—கி. பி. 9-ஆம் நூற்றாண்டு

புத்தக வடிவமைப்பும் தயாரிப்பும்:
வலையப்பேட்டை **ரா. கிருஷ்ணன்**

அச்சிட்டோர்: சூப்பர் பவர் பிரஸ், சென்னை-1. போன்: 584492

73-2

பாராட்டு வாழ்த்து

மகா சந்நிதானம்

தவத்திரு சுந்தர சுவாமிகள்

கௌமார மடாலயம்

சின்னவேடம்பட்டி, கோயமுத்தூர்

வெண்பாக்கள்

அன்பர் திருச்சேக்கி மூர்தாசன் தன்தம்பி
மன்வலையப் பேட்டை வாழ்கிருஷ்ணன்—பன்னாய்வு
நூல்கள் பலவாம், நுவல்மகேச் சர்வடிவம்
சொல்நூல்அச் சிட்டார் தொகுத்து.

அண்ணனுடன் தான்சேர்ந்தே ஆய்ந்தபல நூல்களிலே
வண்ண மகேச் சரவடிவம்—எண்ணமுடன்
அச்சிட் டுலகுக் களித்தார் கிருஷ்ணன்
மெச்சுநூல் ஆய்வுமிக மேல்

சிற்பங்கள் ஆகமங்கள் சீலப் புராணங்கள்
கற்சிற்பம் நல்வெண் கலச்சிலைகள்—பற்பலவாய்
ஆராய்ச்சி செய்தே அளித்த மகேச்சர்சீர்
பரார்க்கு மேலாம் பயன்.

தில்லை நடராசர் திருக்கோயில் சுற்றினிடை
வல்ல சிவபெருமான் மன்வடிவம்—எல்லாமும்
சேர்த்துப் படங்களுடன் சிலநூல் அச்சிட்டே
ஆர்த்தபுகழ் பெற்றனர் வாழ்க!

கோயமுத்தூர்
30—6—92

சுந்தர சுவாமிகள்

பாராட்டுரை

B. R. குமார்

இயக்குனர், அகில இந்திய வானொலி நிலையம்
திருச்சிராப்பள்ளி

ஓம் ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் திருவடிக்கே

உலகத்திலுள்ள மக்கள் இறைவனிடம் பக்தியில்லாமல் வாழ்ந்து மடிகிறார்களே என்று அருணகிரிநாதர் திருச்சிராப்பள்ளி தாயுமானவரை வணங்கும் போது வருத்தமுடன் பாடுகிறார் (சத்திபாணி நமோ நம......திருப்புகழ்)

பக்தி என்பது நிலைத்து நிற்க வேண்டிய ஒன்று. ஒரு சில நிமிடங்களில் வந்து போகின்ற ஒன்றல்ல. ஆனால் மனித மனம் அவ்வாறு நிலைத்து நிற்காது என்பதால்தான் திரும்பிய இடங்களிலெல்லாம், கோயில்களும் இறை உருவங்களும் நம் நாட்டில் காணப்பெறுகின்றன. இவற்றின் தத்துவம் என்ன? தேவை என்ன? என்பவற்றை யெல்லாம் விளக்குகின்ற நூல்தான் "மகேச்வர வடிவங்கள்".

இதன் ஆசிரியர்களான சேக்கிழார்தாசன் டாக்டர் R. ராமசேஷன் அவர்களும் வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன் அவர்களும் முன்னமேயே "அருணகிரிநாதர் அடிச்சுவட்டில்," "முழுதும் அழகிய குமரன்", "சித்திரக்கவிகள்" ஆகிய நூல்களின் மூலம் நன்கு அறிமுகமானவர்கள். இம்மாதிரி நூல்கள் வெளியிடுவதில் தமக்கென்று ஒரு தனியிடம் வகிப்பவர். "மகேச்வர வடிவங்கள்" மேலும் அவர்களுடைய எழுத்தாற்றலுக்கு பெருமையைத் தேடித்தரும் என்பதில் ஐயமில்லை.

"ஒருவனையே நம்பு; அவன் ஆபத்துக்குதவுவான்" என்று திருவண்ணாமலை மகான் ஸத்குரு ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் அடிக்கடி கூறுவார். அந்த வகையில் ஸ்ரீ முருகப் பெருமானையே உயிர் மூச்சாகக் கொண்டு செயல்படும் வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன் அவர்களுக்கு இந்நூல் ஒரு வெற்றி முனையாக அமையும் என்று நம்புகிறேன். மேலும் அவர்கள் அன்னை பராசக்தியின் வடிவங்களை ஆராய்ந்து நூல் வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எல்லாப்புகழும் சேஷனுக்கே!

B. R. குமார்

அணிந்துரை

சிற்பகலாநிதி, சிற்பக்கலாசார்வபௌமம், சிற்பக்கலாரத்னா, சிற்பப்பிரவீணா, சிற்பரத்னப் பிரகாசா, சிற்பசுதார்ணவ, பரதக்கலாநிதி, சாஹித்யரத்ன, சில்பஸ்ரீ, ஜ்யோதிஷசாம்ராட்

ஸ்ரீ எஸ். எம். கௌரிசங்கர் ஸ்தபதி

'' மகேச்வர வடிவங்கள் '' என்ற இந்தநூல், அந்த வடிவங்களுடைய தியான ஸ்லோகங்கள், அதன் சரித்திரம், அந்த வடிவங்கள் உண்டாகிய காரணங்கள், அதன் தத்துவம், அந்த மூர்த்திகளுக்கு ஏற்பட்டிருக்கும் ஆயுதங்கள், அங்கலட்சணங்கள், இலக்கியச் சான்றுகள் ஆகிய யாவும் கொண்டதாய், மிகச்சிறப்பாக, எளிய நடையிலே யாவரும் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் ஆக்கப் பெற்றுள்ளது.

இந்நூலாசிரியர்கள் மிக்க ஆராய்ச்சியுடனும் ஆர்வத்துடனும் பலபுராதன ஆலயங்களிலிருந்து அந்தந்த வடிவங்களுக்கான திருவுருவங்களின் புகைப்படங்களையும் இணைத்து இந்த நூலைத் தயாரித்துள்ளார்கள். இதிலுள்ள அத்தனை வடிவங்களையும் நாம் நேரில் சென்று ஆராய்ச்சி செய்ய வேண்டிய அவசியமில்லாது நமக்குத் தெள்ளத் தெளிவாக அளித்துள்ளார்கள் இதன் ஆசிரியர்களான திரு. ஆத்ரேயராமசேஷன் அவர்களும், அவர் இளவல் திரு. வலையப்பேட்டை கிருஷ்ணன் அவர்களும்.

இந்தநூல் ஒவ்வொருவருடைய கரத்திலும் திகழவேண்டிய தொன்றாகும், மேலும் ஆஸ்தீகர்களுக்கு அவசியமானது. மாணவர்களுக்கு இந்த நூல் பாடநூலாக வைப்பதற்கு உகந்தது. இது இந்துசமய அறநிலையத்துறை அலுவலர்கள், அறங்காவலர்கள், சிவாசார்யர்கள் ஆகிய அத்தனைபேரும் படித்துத் தெரிந்து தெளிய வேண்டிய அவசியமான நூலாகும் என்று அடியேனுடைய அநுபவ சிற்றறிவுக்கு ஏற்பட்ட கருத்தைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்போன்ற ஸ்தபதிகளால் ஆக்கவேண்டிய இந்த நூலை, இவர்கள் சிரமம் பாராது தயாரித்துள்ளது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். எதிர்கால இளம் சிற்பிகளுக்கு இந்நூல் பேருதவியாகத் திகழும். ஆசிரியர் பெருமகனார் இருவருக்கும் எனது நல்லாசிகள் உரித்தாகட்டும்.

14—9—1983
சென்னை.

எஸ். எம். கௌரி சங்கர் ஸ்தபதி.

அணிந்துரை

பேராசிரியர் C. ஜெகந்நாதாசாரியார்,
M.A. (Hist.), M-A. (Tamil), L.T., P.O.L., Dip. in. Geog.
(Former U.G.C. பேராசிரியர்)

கைப்போ தகத்தின் கழலே வரனென்று
எப்போ தகத்து நினை.

நூற்சிறப்பு - ஆக்கியோர் பெருமை

பாலன் குமரவேள் நடுவுறும் பான்மையும்
ஆடல் வல்லான் ஆடிய பான்மையும்
இடப முகந்து ஏறிய பான்மையும்
மலையான் மகளை மணந்த பான்மையும்
திங்களைச் சடைமிசை வைத்த பான்மையும்
உமைதலை கவிழ இரந்துணும் பான்மையும்
காமனைக் கண்ணா லெரித்த பான்மையும்
காலனைக் காலாற் சாடிய பான்மையும்
சலந்தரன் இருகூறா வீழ்த்திய பான்மையும்
மூவெயி லெரிய வுடற்றிய பான்மையும்
மும்மத வேழ முரித்த பான்மையும்
தக்கனை எச்சனைத் தடிந்த பான்மையும்
தக்கிணா மூர்த்தியா யறமருள் பான்மையும்
கிராதனாய்ப் பார்த்தற் கருளிய பான்மையும்
விடமுண்ட கண்டராய் விளங்கிய பான்மையும்
கங்காள மாலியாய்க் கவினிய பான்மையும்

செங்கண் மாலுக் காழியீந்த பான்மையும்
கஜமுகனைக் கணபதி யாக்கிய பான்மையும்
சண்டிக்கு நாயக மளித்த பான்மையும்
ஏகபாத மூர்த்தியா யிலங்கிய பான்மையும்
மாலயன் காணாச் சோதியாம் பான்மையும்
உமைக் குபதேசித்த சுகாசனப் பான்மையும்
உமா சகிதராய் நிலவிய பான்மையும்
இருபெருந் தெய்வத் துருவாம் பான்மையும்
நாரி பாக னாகிய பான்மையும்

தெளியா தோரையும் தெளியக் காட்டி
மகேச்வர வடிவம் இருபத் தைந்தும்
உளமுறப் புகைப்பட மெடுத்துக் கவின
ஆயுதம் தாங்கிய பெற்றியும் அங்க
இலக்க ணங்களும் இலக்கிய சான்றொடு
தத்துவம் நிறுவி யாய்வுத் திறனுடன்
ஆக்கிய விந்நூல் மாண்புடைத் தன்றே

நூலா சிரியராம் சகோதர ரிருவருள்
மூத்தோர் டாக்டர் இராம சேடன்
சேக்கிழார் தாசன் எனவே திகழ்ந்து
முடிவி லின்ப மெய்திட மற்றை
இளவல் வலையப் பேட்டை கிருட்டிணன்
கொணர்ந்தனன் இந்நூல் குவலயம் வாழ
இருவர் புகழும் த்வநனி சிறந்து
திருப்புகழ் போலத் துலங்கிட வெங்கும்
மகேச்வரர் பொற்பதம் போற்றியே நாளும்
வாழிய வாழிய வெனவாழ்த் துவமே

திருவல்லிக்கேணி
சென்னை-5
5—10—88

இங்ஙனம்
C. ஜெகந்நாதாசார்யர்

அணிந்துரை

சைவத்தமிழ்மணி, வித்துவான்

மா. சிவகுருநாதபிள்ளை

நூலாசிரியர், "தேவார மூவர் தலயாத்திரை ஓர் ஆய்வு" "சிவ வடிவங்கள்" ஆய்வு,
தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சை

இவ்வுலகில் விளங்கும் சமயங்கள் பல. இவை யாவும் ஒரேவடிவில் இறைவனை வழிபடவில்லை. சில உருவவடிவிலும், சில அருவவடிவிலும் வழிபடுகின்றன. ஆனால் இந்துமதமோ இவ்விருவடிவுடன் அரு உருவ வடிவிலும் வழிபடுகிறது. இதனை முருகன் அருள் பெற்ற குமரகுருபர சுவாமிகள்,

"—ஏகத்து உருவும், அருவும், உரு அறிவுமாகி,
பருவ வடிவம் பலவாய்" என்கிறார்.

இம் மூன்றில் அரு உருவவடிவமே சிவாலயத்துள் விளங்கும் மூல லிங்கமான சதாசிவ வடிவம். இதனை சேக்கிழார் சுவாமிகள்

"காணாத அருவினுக்கும், உருவினுக்கும்
காரணமாய்; நீணாகம் அணிந்தார்க்கு
நிகழ் குறியாம் சிவலிங்கம்" என்கிறார்.

இச்சதாசிவவடிவிற்கு ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோசாதம் என்னும் முகங்கள் ஐந்து. இந்த ஒவ்வொரு முகத்திலும் இருந்து ஐந்து வடிவங்கள் வீதம் தோன்றியனதான் சோமாஸ்கந்தர் முதல் அர்த்தநாரீச்வரர் வரையான இருபத்தைந்து மகேச்வர வடிவங்களான உருவவடிவங்கள்.

இந்த இருபத்தைந்தையும் ஒருங்கு சேர ஒரே இடத்தில் வழிபாட்டில் காண்பது அரிது, எனினும் மதுரை சொக்கநாதர் சந்நதி நந்தி மண்டபத்தில் சிலா வடிவிலும், தில்லை திருமூலநாதர் திருச்சுற்றில் ஓவியவடிவிலும் காணலாம். இவை ஒவ்வொன்றையும் வழிபட ஒவ்வொருபயன் கிடைக்கும். இத்தகைய வெவ்வேறு தோற்றத்தில் அமைந்துள்ள இம்மகேஸ்வரவடிவங்களை கண்ணுக்கினிய புகைப்படங்களுடன் அவற்றின் பெருமைகளை விளக்கி சிவநேசச் செல்வர்களது கரத்தில் இருக்க அரும் பெரும் முயற்சியுடன் பன்னாள் ஆய்ந்து வெளியிட்டு இருப்பவர்கள் குடந்தை வலையப்பேட்டை சகோதரர்கள் அமரர் டாக்டர் திரு சேக்கிழார்தாசன் M.A., M.Ed., Ph.D., அவர்களும், திரு ரா. கிருஷ்ணன் B.Com., அவர்களும் ஆவர்.

முன்னவர் பெரியபுராணத்தை எழுத்தெண்ணிப் படித்த சிவத்தொண்டர். பின்னவர் திருப்புகழ்ப்பாடலில் திளைத்தவர். இவ்விருவரும் இதற்கு முன் முருகனது திருப்புகழ்த்தல இருப்பிடத்தை விளக்கும் "அருணகிரிநாதர் அடிச்சுவட்டில்" என்னும் தலயாத்திரை நூலையும், அழகே வடிவான முருகனது தோற்றத்தை பலவகையிலும் காட்டி நிற்கும் "முழுதும் அழகிய குமரன்" என்ற முருகன் புகழ் பரப்பும் நூலையும் சைவ உலகிற்கு அளித்தவர்கள் ஆவர். முன்னவரது மறைவிற்குப் பின் அவரது தம்பியார் திரு ரா. கிருஷ்ணன் அவர்கள் தாம் ஒருவரே அரிதின் முயன்று சைவநலம் பாலிக்கும் இந்த "மகேச்வர வடிவங்கள்" என்னும் அருள் நூலை சைவத்திற்கு அளிக்கின்றார். தம் வாழ்வியல் பணி நேரம் நீங்கிய எஞ்சிய நேரத்தில் சிவத்தின் பெருமையை ஆயும் பணியே பணியாகக் கொண்ட நண்பர் திருப்புகழ்த் தொண்டர் திரு வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன் மேற்கொள்ளும் பணிகள் நனி சிறக்கவும், நீடுவாழவும், தில்லையுள் உலகுய்ய நடமாடும் நடராசப் பெருமானது தூக்கிய திருவடிகளை பணிந்து வேண்டுகின்றேன்.

திருச்சிற்றம்பலம்

சுந்தரப் பெருமாள் கோயில்
தஞ்சாவூர் மாவட்டம்
11—6—1992

மா. சிவகுருநாதபிள்ளை

முகவுரை

காண்பார்க்குங் காணலாத் தன்மையனே கைதொழுது
காண்பார்க்குங் காணலாங் காதலாற்—காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே தொல்லுலகுக்
காதியாய் நின்ற அரன். —அற்புதத்திருவந்தாதி.

திருமயிலைக் கற்பகாம்பாள் உடனுறை கபாலீச்சரப் பெருமான் திருவருளால் 1983 ஆம் ஆண்டு திருமயிலை கும்பாபிஷேக விழா சிறப்பு மலரைத் தொகுக்கும் பணி அடியேனுக்குக் கிடைத்தது. அம்மலரில் சிவபெருமானின் பல்வேறு வடிவங்களை "மகேச்வர வடிவங்கள்" என்ற தலைப்பில் படத்துடன் வெளியிட எனது சகோதரரும் நானும் சிந்தித்தோம். அப்போது தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் "சிவ வடிவங்கள்" என்னும் தலைப்பில் ஆய்வு செய்துவந்த சுந்தரப் பெருமாள் கோயில் "சைவத் தமிழ்மணி" வித்வான் திரு. மா. சிவகுருநாத பிள்ளையவர்கள் சில முக்கிய குறிப்புகளைக் கொடுத்து அக்கட்டுரை சிறப்பாக அமைய உதவினார்கள். திருமயிலைக் கும்பாபிஷேக மலரில் "மகேச்வர வடிவங்கள்" கட்டுரையைப் படங்களுடன் அச்சிட்டதைத் தொடர்ந்து, அதனை விரிவு படுத்தி, சிறந்த ஆய்வு நூல் ஒன்றை தயாரிக்கும் எண்ணம் சிவபெருமான் திருவருளால் தோன்றி இந்நூல் உருவாகியது.

சதாசிவ மூர்த்தியின் ஐந்து முகங்களான ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் ஆகியவைகளில் தோன்றிய இருபத்தைந்து மகேச்வர வடிவங்களை சைவ ஆகமங்கள், சிற்ப நூல்கள், சமய இலக்கியங்கள், புராணங்கள் ஆகியவைகளின் குறிப்புகளைக் கொண்டு இந்நூலை தயாரித்துள்ளோம். மகேச்வர வடிவங்களின் அருமையும் பெருமையும் அற்புதங்களையும் அனைவரும் கண்டு இன்புற்று பயன்பெறும் வகையில் அந்தந்த வடிவங்களின் அரிய புகைப்படங்களும் இந்நூலில் இணைக்கப் பெற்றுள்ளன. அவைகளில் பெரும்பாலும் தமிழ்நாட்டில் அமைந்துள்ள கோயில்களில் காணப்பெறும் வடிவங்களின் புகைப்படங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோயிலின் திருமூலநாதர் சன்னதி பிராகாரச்சுவர்களில் உள்ள இருபத்தைந்து வடிவங்களின் வண்ண ஓவிய புகைப் படங்களும் இந்நூலுக்கு அழகு சேர்க்கின்றன.

தஞ்சை பிரஹதீச்வரர் பெரிய கோயிலின் மேலே விமானத்தின் உள் சுற்றில் அமைந்துள்ள சத்யோஜாத மூர்த்தி, அகோரமூர்த்தி ஆகியவற்றின் அரிய படங்கள் இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் சென்னை அலுவலகத்தின் மூலம் கிடைக்கப் பெற்று இதில் அச்சிடப் பெற்றுள்ளன. திரிவெண்காடு சுவேதாரண்யேசுரர் கோயிலில் உள்ள அகோர. மூர்த்தியின் திருவுருவப் படமும் இந்நூலில் இணைக்கப் பெற்றுள்ளது.

என் சகோதரர் அமரர் டாக்டர் R. ராமசேஷன் அவர்கள் கும்பகோணத்தை யடுத்த திருநாகேச்வரத்தில் தெய்வச் சேக்கிழார் விழா ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக நடைபெற முழுமூச்சுடன் பணி செய்தவர். திருநாகேச்வரம் ஸ்ரீ நாகநாதப்பெருமான் திருக்கோயில் சேக்கிழார் பெருமானது ஆன்மார்த்த தலம் என்பது குறிப்பிடத்தக்கது. சேக்கிழாரின் பெரியபுராணத்தில் நன்கு ஊறித்திளைத்த அவர் தமக்கு அளிக்கப் பெற்ற "சேக்கிழார் தாசன்" என்னும் பட்டத்திற்கு பெருமை சேர்த்தவர். இவர் 1987 செப்டம்பரில் ஓரத்தநாட்டில் தெய்வ நம்பிக்கையற்றவர்களின் கொடுமைக்கு பலியானார். மெய்ப்பொருள் நாயனாரைப் போன்று வாழ்ந்து கடைசி மூச்சு உள்ளவரை தம்மைக் குத்திய கயவர்களை காட்டிக் கொடுக்காத மாபெரும் மாமனிதர். உயிர்பிரியும் தறுவாயில் "அம்பலவாணன் என்னை அழைக்கிறான்; அவனது திருவிழா வைபவம் ஆனந்தமாக உள்ளது" என்று அந்த காட்சி இன்பத்தில் திளைத்து வானுறையும் தெய்வநிலைக்குச் சென்றுவிட்ட அவரது பக்தியும், புலமையும், சிந்தனையும், எழுத்தாற்றலும் இந்நூலில் வைரமென மின்னிடக் காணலாம்.

1983-ஆம் ஆண்டிலேயே எழுதப்பட்ட இந்நூல், 85-ஆம் ஆண்டில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ பரமாச்சார்ய சுவாமிகள் கலவையில் முகாமிட்டிருந்த போது இந்நூலின் கையெழுத்துப் பிரதியைப் பார்வையிட்டு ஆசி வழங்கினார்கள். என் சகோதரர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்திலேயே இந்நூலை அச்சிட பலரிடம் முயன்றும் இயலாமல் போய்விட்டது. தற்போது இந்நூல் மிகச் சிறப்பான முறையில் வெளிவரக் காரணமாயிருந்த எங்கள் குடும்ப மருத்துவர் டாக்டர் ஸ்ரீ V. ஸ்ரீனிவாசன், M.D., அவர்களுக்கு என் பணிவார்ந்த வணக்கங்களையும் நன்றியையும் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அவரது முயற்சிக்கு சிவ பெருமானது மலை போன்ற திருவருள் துணை நிற்க, பிரபல தொழிலதிபரும் அமால்கமேஷன்ஸ் நிறுவனத்தின் தலைவருமாகிய **ஸ்ரீ A. சிவசைலம்** அவர்கள் இந்நூலின் கையெழுத்துப் பிரதியைப் படித்து, மிகவும் மகிழ்ந்து, மிக்க ஆர்வமுடன் இத்தகைய முறையில் இந்நூல் வெளிவரத் தேவையான ஆக்கமும், ஊக்கமும் அளித்து நிதியுதவிகளைச் செய்ததோடு அல்லாமல் அவ்வப்போது தக்க ஆலோசனைகளை நல்கி உதவினார்கள். சிவம் என்ற சொல்லுக்கு அன்பு, உயர்வு, கடவுள், பிரம்மம், மகிழ்ச்சி, நித்தியயோகம், நன்மை, பசு, வேதம், மங்களம் ஆகிய பல பொருள்கள் உண்டு. எனவே சிவசைலம் என்னும் சிவமலையாகிய அந்த உயர்ந்த நல்ல அன்பு உள்ளத்திற்கு என் மனம் மொழி மெய்களால் நன்றியையும் நமஸ்காரங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் சிவபெருமான் திருவருள் என்றும் துணை நிற்க பிரார்த்திக்கிறேன்.

இந்நூலை முழுவதும் படித்து அணிந்துரை வழங்கிய கௌமாரமடாலயம் தவத்திரு சுந்தரசுவாமிகள், சிற்ப கலாநிதி ஸ்ரீ S. M. கௌரிசங்கரஸ்தபதி, பேரறிஞர், பேராசிரியர் ஸ்ரீ C. ஜகந்நாதாசார்யர், சைவத்தமிழ்மணி, வித்வான் திரு மா. சிவகுருநாதபிள்ளை, திரு B. R. குமார் ஆகிய அனைவருக்கும் எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலில் இணைக்கப் பெற்றுள்ள பெரும்பாலான வடிவங்களின் புகைப் படங்கள் மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரேச்வரர் கோயில் நந்தி மண்டபத்தில் உள்ளவை. 1877-இல் வயிநகரம் திரு. நாகப்ப செட்டியார் மற்றும் திரு. வேங்கடாசல முதலியார் இருவரும் எட்டு தூண்களில் மகேச்வர வடிவங்களின் சிலைகளுடன் கூடிய இம்மண்ட பத்தை அமைத்தார்கள். இந்த வடிவங்களின் புகைப்படங்களை எடுக்க அனுமதித்த இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களுக்கும், படமெடுக்க உதவிய திரு முருகன், திரு வே. ஸ்ரீராம் ஆகியோருக்கும் எமது நன்றி. சிதம்பரம் நடராஜர் கோயிலில் உள்ள வண்ண ஓவியங்களை படமெடுத்துக் கொள்ள அனுமதியளித்த பொது தீட்சதர்கள்-செயலாளர் மற்றும் சிதம்பரம் R. T. வேலு ஸ்டுடியோ திரு வைத்யநாதன், மற்றும் புகைப்படங்கள் அளித்த திரு V. நாராயணசாமி, திரு வே. முரளிதரன், தஞ்சை திரு பாரதிரத்னம். திரு N. பத்மநாபநாயுடு, ஆகிய அனைவருக்கும் எமது நன்றி உரித்தாகும். இந்நூலில் அச்சிடப்பட்டுள்ள ஓவியங்களை அளித்துதவிய ஓவியர்கள் திரு இராம. வேங்கடராமன், திரு கு. வேதகணபதி, திரு நா. மூர்த்தி மற்றும் ஆனந்தவிகடனுக்கும், மற்றும் பல வகையிலும் உதவிய திரு V. வேங்கடராமன், திரு P. கிருஷ்ணமூர்த்தி, திரு S. ராமானுஜாசாரி, திரு A. கிருஷ்ணமூர்த்தி, திரு சோம. சேகர் ஆகியோருக்கும் எனது நன்றி உரித்தாகும்.

இந்நூலை மிகுந்த சிரத்தையுடன் அனைவரும் பாராட்டத்தக்க வகையில் அழகுற அச்சிட்டுக் கொடுத்த சூப்பர் பவர் பிரஸ் உரிமையாளர்கள் திரு D. ஸ்ரீ காந்த், திரு D. முரளி, மேலாளர் திரு A. N. பார்த்தசாரதி மற்றும் திரு ராதாகிருஷ்ணன் மற்றும் ஏனைய உதவியாளர்கள் அனைவருக்கும் எனது பணிவார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். போட்டோ பிளாக்குகளை நல்ல முறையில் செய்து கொடுத்த ராயன் அண்ட் கம்பெனி திரு. கந்தவேல் அவர்களுக்கும் நன்றி உரித்தாகும்.

இந்நூலைப்பற்றி அன்பர்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் அன்புடன் வரவேற்கிறேன். புதிய செய்திகள் ஏதாவது இருப்பின் தெரிவித்து உதவினால் அடுத்து வரும் பதிப்புகளில் சேர்க்க உதவியாக இருக்கும். என்னுள் இயங்கி என்னை ஆற்றுப்படுத்தி வழிகாட்டி வரும் எனது அருமைச் சகோதரர் அமரர் ஆத்ரேய ராமசேஷன் அவர்களின் திருவடிகளை தியானித்து, எமது தாயார் ஸ்ரீமதி R. சீதாலக்ஷ்மி அம்மாள் அவர்களது திருவடிகளைப் பணிந்து உலகெங்கிலும் வாழும் சிவநேயச் செல்வர்களுக்கு இந்நூலை காணிக்கையாக அளிக்கிறேன். சைவநல்லுலகம் இந்நூலை ஏற்று ஆசி வழங்கி இன்புற சிவபெருமான் திருவருளைப் போற்றுகின்றேன்.

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்


திருவல்லிக்கேணி
சென்னை-600 005

வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன்


இதனுள்ளே ......

பிற்சேர்க்கை :


மகுடங்கள் (தலைக்கோலம்)




கிரீட மகுடம்



ஜடா மகுடம்




கரண்ட மகுடம் (தேன்கூடு)




கரண்ட மகுடம்

சின்னங்கள் * ஆயுதங்கள்




ஹஸ்த முத்திரைகள் (கை அமைதிகள்)




அபயம்




சூசி ஹஸ்தம்




கடக ஹஸ்தம்




விஸ்மய ஹஸ்தம்




வரதம்




ஞான ஹஸ்தம் (சின் முத்திரை)




கடி ஹஸ்தம்




கஜ (கரி) ஹஸ்தம்




தர்ஜனி ஹஸ்தம்



பூ ஸ்பரிச ஹஸ்தம்




அஞ்சலி ஹஸ்தம்




சிம்மகர்ண ஹஸ்தம்


ஆசனங்கள் (திருக்கோலம்)




சுகாசனம்




வீராசனம்




பத்மாசனம்



யோகாசனம்.



உற்குடிகாசனம்



ஆலீடாசனம்

மகேச்வர வடிவங்களின் தோற்றம்

சதாசிவமூர்த்தி

ஈசானமூர்த்தி

1. சோமாஸ்கந்தர்
2. நடராஜர்
3. ரிஷபாரூடர்
4. கல்யாணசுந்தரர்
5. சந்திரசேகரர்

சத்யோஜாதமூர்த்தி

21. லிங்கோத்பவர்
22. சுகாசனர்
23. உமாமகேச்வரர்
24. சங்கரநாராயணர்
25. அர்த்தநாரீச்வரர்

தத்புருஷமூர்த்தி

6. பிட்சாடனர்
7. காமதகனர்
8. காலசம்ஹாரர்
9. ஜலந்தரவதர்
10. திரிபுராந்தகர்

வாமதேவமூர்த்தி

16. கங்காளர்
17. சக்ரதானர்
18. கஜமுக அனுக்ரஹர்
19. சண்டேச அனுக்ரஹர்
20. ஏகபாதர்

அகோரமூர்த்தி

11. கஜசம்ஹாரர்
12. வீரபத்திரர்
13. தட்சிணாமூர்த்தி
14. கிராதமூர்த்தி
15. நீலகண்டர்

தில்லைச் சிற்றம்பலவன் கோயில்

திருமூலநாதர் சன்னதி

வெளிச்சுற்றுச் சுவரில் அமைந்துள்ள


மகேச்வரவடிவங்களின்

வண்ண ஓவியங்கள்


சோமாஸ்கந்த மூர்த்தி.
விக்கினப்பிரசாத மூர்த்தி
தட்க்ஷிண மூர்த்தி.
சக்கிரதான மூர்த்தி.
விஷாபஹரண மூர்த்தி
சுகாசன மூர்த்தி.


கல்யாணசுந்தர மூர்த்தி.


உமாசகாயமூர்த்தி


காமதகன மூர்த்தி.
பிச்சாண்டவர்.


சங்கரநாராயணர்
வீரபத்திரர்.




திரிபுராந்தகமூர்த்தி.
காளசம்கார மூர்த்தி
கஜசம்கார மூர்த்தி
ஜலந்தராசூர மூர்த்தி.
சண்டேசானுக்கிரகமூர்த்தி
கங்காள மூர்த்தி
(அர்ச்சுனன்) கிராதக மூர்த்தி.
அர்த்தநாரீச்வரர்.


சந்திரசேகரமூர்த்தி


ஏக பாத மூர்த்தி.


லிங்கோத்பவமூர்த்தி


ஸ்ரீ நடராஜர்.


விருஷபாருடமூர்த்தி

உ

சிவமயம்


உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

—சேக்கிழார்

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமான னாய்எறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாச மாய்அட்ட மூர்த்தி ஆகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணும்ஆணும்
பிறருருவும் தம்உருவுந் தாமேயாகி
நெருநலையாய் இன்றாகி நாளையாகி
நிமிர்புன் சடைஅடிகள் நின்றவாறே.

—அப்பர்

T. N. Alaganathan,



நுழைவாயில்

இறைவனது படைப்பில் உயர்ந்து நிற்பவன் மனிதன். அவனால் இறைவனை அறிந்து உணர்ந்து உறவு கொண்டு இன்புற முடியும். இதுகாறும் மனிதன் பெற்ற வெற்றிகளுள் அவன் இறைவனுடன் உறவாடி இன்புறும் நிலையை எய்தியதே மிக உன்னதமானதாகும். அறிவியலில் அவன் அடைந்துள்ள சாதனைகள், புற உலக வளங்களை அவன் கட்டுப்படுத்தவும், துய்க்கவும் அவனுக்கு உதவிபுரிகின்றன. ஆனால் அவனது மனதைச் செம்மைப்படுத்த அறிவியலால் முடியவில்லை; அப்பணி செய்ய அது முன்வரவுமில்லை. அது அறிவியலால் ஆகாததென்பதை அவனும் அறிகிறான். மனதைச் செம்மையாக்கி, தன் அண்டை அயலாருடன் நேசமாக இசைந்து இன்ப அன்புநெறியில் வாழத்தெரியாத அவனுக்கு அறிவியல் சாதனைகள் என்ன நன்மை செய்துவிட முடியும்! ஆம். அங்கேதான் அவன் சமயத்தின் உதவியை நாடுகிறான். சமயம் அறிவியலைப் போன்று அவனுக்கு வானொலியையோ, தொலைக் காட்சியையோ, தொலைபேசியையோ வழங்காது; ஆனால் தன் மனைவி மக்களுடனும், உறவினருடனும், நண்பர்களுடனும்—ஏன் உலகிலுள்ள ஒவ்வொரு உயிருடனும் அன்போடு ஒற்றுமையாய் இன்புற்று இணைந்துவாழ அது அவனுக்கு அழைப்பு விடுக்கிறது. சமயத்தின் குரலை உண்மையாகக் கேட்டு உணர்ந்தவர்கள் செம்மையாக வாழ்கிறார்கள். உலகின் ஆர்வாரம், ஆடம்பரப் பகட்டுகள், கட்டுப்பாடற்ற வாழ்வு ஆகியவற்றில் சிக்குண்டுப் பரிதவிக்கும் மனிதனுக்கு, வாழ்வைச் செம்மையாக்கிக் கொள்ள சமய சஞ்சீவியாய்த் துணைபுரியச் சமயம் முன்வருகிறது. அறிவியல் ஏணியின் மேற்படியில் நிற்கும் நாகரீக மனிதனின் புறவாழ்வு பகட்டாக அமைந்துள்ளது;

ஆனால் அவனது அகவாழ்வு இருண்டுள்ளது. தன்னலம், பொய், வஞ்சனை, சூது பேராசை போன்ற பேய்கள் அவனது உள்ளத்தில் குடியேறிப் பெருகிவிட்டன. அவன் தற்கொலையை நாடுகிறான்; நோய்களால் அழிகிறான்; செத்துக் கொண்டே வாழ்கிறான். ஆம்! அவனுக்கு வாழ்வு என்பது கானல்நீர். எல்லாம் பெற்றிருந்தும் அவன் ஏழை. ஏன் அவன் மனத்தில் மாசுகள் மண்டிவிட்டன. கவலைகள் அவனைத் தின்று அழித்துக் கொண்டிருக்கின்றன.

மனம் செம்மையாக இருத்தல் வேண்டும் என்பதை இவ்வுலகில் பல்லாயிரம் ஆண்டுகளாக வற்புறுத்திவரும் ஒரேநாடு நம்பாரத நன்னாடு. மாமுனிவர் பலரும் மோனத்தவமிருந்து, ஞானவேள்வி இயற்றி, சீலமுடன் வாழ்ந்து, காலத்தைவென்று, ஞாலத்திற்கு நல்லுரை வழங்கியுள்ளதை இந்நாட்டு வரலாறு பேசுகின்றது. ஆதலால் தான் நமது பாரத நாட்டுச் சமயம்—சன்மார்க்கம் (நல்வழி) என்று போற்றப் பெறுகின்றது. இதற்குத் தருமம் (அறநெறி) என்ற பெயரும் உண்டு. ஏனைய நாடுகளில் தோன்றிய சமயங்கள் ஒவ்வொன்றும் தோற்றுவித்தவர் ஒருவரைப் பெற்று, ஒரு குறிப்பிட்ட காலத்திலிருந்தே வளர்ந்து வாழ்ந்து வருகின்றது. ஆனால் நமது பாரத நாட்டுச் சமயம் ஒருவரால் தோற்றுவிக்கப்படாத உயர்தனிச் செந்நெறி. இது திருநெறி, அறநெறி, அருள்நெறி என்ற பல பெயராலும் போற்றப் பெறுவது. இப்புராதன சநாதன இந்துசமயத்தில் அவ்ரவர் இச்சைப்படி இறைவனை உணர்ந்து வழிபடச் சுதந்திரம் உண்டு. இங்கே இறைவனுக்கும் பக்தனுக்குமிடையே நடுவில் தலையிட்டு உறவு ஏற்படுத்திக் கொண்டிருக்க எவரும் தேவையில்லை. நம் சமய நெறிப்படி, இறைவனே குருவாகி வந்து அவரவர் மனப்பக்குவத்திற்கேற்ப அருள் புரிகின்ற நிலையில் குருவே சிவமெனப் போற்றப்படும் பெற்றியைக் காணலாம்.

உலகில் நிலவும் சமயங்கள் மூவகைப்படும். இறைவனைப் பற்றி ஏதும் கூறாமல் சாமானிய அறங்களை மட்டுமே கூறுவன முதல் வகை: சமணபௌத்த சமயங்கள் இவ்வகையைச் சாரும். காலப்போக்கில் இவற்றுள்ளும் கடவுள் வடிவங்கள் ஏற்படுத்தப்பட்டு அநுட்டான முறைகளும் மிகுந்தன என்பதை வரலாற்றில் காண்கிறோம். இரண்டாவது வகையில் அமைந்த சமயங்கள் இறைவன் உண்டு என்று கூறுவன; ஆனால் அவன் எவ்வாறு இருப்பான் என அவற்றால் கூற இயலவில்லை. கிறித்தவ, இஸ்லாமிய சமயங்கள் இவ்வகையில் அடங்கும். இவ்விரு சமயங்களும் இறைவனைப் பற்றிப் பேசுவன; ஆயினும் இறைவனைக் காட்ட இவற்றால் இயலாது என்பது இச்சமய நூல்களிலிருந்து அறியப்படும். மூன்றாவது வகையில் அமைந்த சமயம் இறைவனைப் பற்றிப் பேசுவதோடு நின்றுவிடாமல் அவன் இவ்வாறு இருக்கிறான், நான் கண்டேன், நீங்களும் கண்டு வணங்கி மகிழ்ந்தின்புறுங்கள் என்று காட்டக் கூடிய அநுபூதிமான்கள் நிறைந்தது. அதுதான் நமது இந்து சமயம். நமது அருளாளர்கள் பலரும் இறைவனைத் தாமும் கண்டார்கள்; நம்மையும் காணுமாறு வழி வகுத்துத் தமது அருட்பனுவல்களாலும் அமுதமொழிகளாலும் ஆற்றுப்படுத்தியுள்ளார்கள். காண்பதற்கரிய பரம்பொருளைப் பலவடிவங்களிலும் கண்டுபரவிய ஞானியரை வாழையடி வாழையாகப் பெற்று உலகிற்கு அளிக்கும் பேறு நம் பாரதநாடு பெற்ற பெரும் பேறாகும்.

பகுத்தறிவு பெற்ற முதல் மனிதன், தன்னால் காரணகாரிய முறையில் அறிய முடியாத—அனைத்திற்கும் அப்பாற்பட்ட—ஒரு பெரிய ஆற்றலைக் கண்டு அதையே கடவுளாக வழிபட்டான். சூரியன், சந்திரன், மழை, இடி, மின்னல், புயற்காற்று, வெள்ளப்பெருக்கு முதலிவற்றில் அவன் கடவுளைக் கண்டான். தொடக்கத்தில் அவனால் அஞ்சி வழிபடப் பெற்ற இயற்கை, நாளடைவில்-அறிவுமுதிர்ச்சியால்-தந்தையைப் போலவும், தாயைப் போலவும், நண்பனைப் போலவும் அவனுக்கு உதவும் கடவுளராயினர். இந்நிலையில் இறைவனை எட்டு வடிவினனாகக் கண்டான் மனிதன். நீர், நிலம், தீ, காற்று, வெளி, சூரியன், சந்திரன், ஆன்மா என்னும் எண்பொருளாகப் பரமன் போற்றப் பெற்றான். இறைவன் எங்கும் நிறைந்த வியாபகப் பொருள் என்பதை இதனால் தெளிவாக அவன் உணரலானான். இறைவன் வியாபகத்துள் உயிர்வர்க்கங்கள் முழுமையும் அடங்கியுள்ளது என்பதை உணர்ந்த நம் முன்னோர் உயிர்களுக்குள்ளும் இறைவன் விளங்குவது வியாபகத்தின் ஒரு பகுதியாதலால் ஆன்மாவையும் அட்டமூர்த்தங்களுள் ஒன்றாகக் கண்டு போற்றினர்.

காலம் செல்லச் செல்லப் பரம்பொருளின் பல்வேறு அம்சங்களையும் ஆய்ந்து ஒரு நாமம் ஓருருவம் இல்லாதவனுக்கு ஆயிரம் திருநாமங்களையும் சூட்டி மகிழ்ந்தனர் அருள்நெறிநின்ற நம்முன்னோர். இவ்வாறு அறுவகைச் சமயங்கள் நமது நாட்டில் தனிச்சிறப்புடன் திகழலாயின.

காணாபத்தியம்	— கணேசரை	முழுமுதற் பொருளாகக்கொண்ட		சமயம்.
கௌமாரம்	— குமரக்கடவுளை	,,	,,	,,
சைவம்	— சிவபெருமானை	,,	,,	,,
சாக்தம்	— தேவியை	,,	,,	,,
வைணவம்	— விஷ்ணுவை	,,	,,	,,
சௌரம்	— சூரியனை	,,	,,	,,

மேற்குறித்த அறுவகைச் சமயமும் ஒன்றிற்கொன்று பகைகொண்டன அல்ல. "யாதொரு தெய்வம் கண்டீர் அத்தெய்வமாகி அங்கே மாதொருபாகர் அருள்வார்" என்ற முறையில் அவரவர் மனநிலை, பக்திக்கேற்பப் பரமனின் ஒரு வடிவை வணங்குதலே இவற்றில் அடிப்படையாகும். கணேசரும் குமாரக்கடவுளும் சிவ குமாரர்கள் எனவும், தேவி, சிவபெருமானின் துணைவி எனவும், திருமால் சகோதரியே தேவி எனவும், சூரியனைச் சூரியநாராயணன் அல்லது சிவசூரியன் எனவும், இவ்வாறு ஒன்றோடொன்று தொடர்புடைய தெய்வவடிவங்களே இவ்வறுவகைச் சமயங் களுள்ளும் போற்றப்படுகின்றன என்பது தெளிவு.

மேற்குறித்த அறுவகைச் சமயங்களுள்ளும் மிகத்தொன்மையானது சைவ சமயமே ஆகும். பண்டைக் காலத்தில் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்கு, தூரக்கிழக்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் சிவ வழிபாடு நிலவியதை இலங்கை அறிஞர் ந. சி. கந்தையா அவர்கள் தனது "சிவன்" என்னும் நூலில் ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார். சிவம் என்ற சொல்லுக்குச் செம்மை, மங்கலம் எனப்பொருள். வியாபகமாக விளங்கும் இறைவனைச் சிவம் என்ற சொல்லால்

அழைத்தனர். சிவபெருமான் எப்போது பிறந்தார்? அவரைப் பெற்றவர் யாவர்? அவர் எப்போது மறைந்தார்? என்பவற்றைப் பற்றிய வரலாறு எதுவும் இந்நாள் வரை எங்குமே காண இயலவில்லை! அருணகிரி அந்தாதி ஆசிரியர் கூறுவது போல

......சோணேசர்—இல்லிற்
பிறந்த கதையும் கேளேம் பேருலகில் வாழ்ந்துண்டு
இறந்த கதையும் கேட்டிலேம்

தமிழ்நாட்டில், ''பிள்ளைத்தமிழ்'' என்ற பிரபந்தம் சிவபெருமானுக்கு எழுதப் படாமைக்குக் காரணமும் இதுவேயாகும். எந்நாட்டவர்க்கும் இறைவன் தென்னாட்டில் சிவனாகப் போற்றப்படுகிறார் என்பது மணிவாசகர் அமுதமொழி. தன் அடியார்களுக்கு அவர் எல்லாமாகி விளங்குகின்றார். இப்பிரபஞ்சத்தின் மூலமும் முதலுமாக அவர் திகழ்கின்றார். வாழ்வினூடே இலங்கும் சிருஷ்டி-சம்ஹார ஓட்டமும் அவரே. அசைவன—அசையாதன, ஆண்-பெண், ஒளி-இருள், துறவி, காமுகன் என்றிவ்வாறு எல்லாமாயும் அவற்றின் எதிரானவையாயும் அவரே விளங்குகிறார். பிரபஞ்சமும் அதன் ஆற்றலுமாக அவரே விளங்குகிறார். எங்கும் நிறைந்த சக்தியாக—பல வடிவங்களில் வெளிப்படும் ஒளிமிகுந்த பேராற்றலாகத் திகழ்பவரும் அவரே.

தன் அடியார்களுக்கு அருள் செய்ய வேண்டித் தாம் நினைத்தபடி எல்லாம் அவர் வடிவேற்பார்.

குறித்ததொன் றாகமாட்டாக் குறைவிலன் ஆதலானும்
நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமையானும்
வெறுப்பொடு விருப்புத் தன்பால் மேவுதல் இலாமையானும்
நிறுத்திடும் நினைந்தமேனி நின்மலன் அருளினாலே. —சிவஞானசித்தியார்

சிவபெருமான் உயிர்களை உய்வித்தற்பொருட்டு ஏற்கும் வடிவங்கள் மூவகைப் படும். உயிர்களின் இம்மை வாழ்விற்கு உலகியல் இன்பங்களை நுகர்விப்பதற்கு அவர் **போக மூர்த்தங்களாகத்** திகழ்கிறார். உயிர்களின் மறுமை வாழ்விற்குரிய ஞான நன்னெறிகளில் நலம் பெறச் செய்யும் **யோக மூர்த்தி**களாக விளங்குபவரும் அவரே. உயிர்களின் குற்றங்களைக் கடிந்து வினைமாற்றி மறக்கருணையால் தண்டித்து ஆட்கொள்ள அவர் அருள் சுரக்கும் **வேக மூர்த்தங்**களாகவும் வெளிப்படுகின்றார்.

தனது பூரணத் தன்மையில் சிவபெருமான் எல்லையற்றவராகவும், சுதந்திரராகவும், அனைத்து வரையறைகளையும் கடந்தவராகவும் திகழ்கிறார். உரு, பால், அளவு ஆகிய அனைத்தையும் கடந்த-பகுக்க முடியாத ஒரு முழுமையாக அவர் விளங்குகிறார். தன் அடியார்களுக்குத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு ஆட் கொண்டருள அவர் திருவுள்ளம் பற்றும்போது, தனது நிரந்தரமான வடிவற்ற நிலையினின்றும், இடைப்பட்ட ஒரு நிலைக்கு அவர் இறங்கிவருகிறார். அந்த இடை நிலையிலிருந்து இறங்கி-இறுதியாகக் காணத்தக்க, எண்ணற்ற முரண்பாடான வடிவங்களில்-பருப்பொருளுடைய காலமும் இடமும் செயலும் கொண்ட உலகில் வாழும் அடியார்களுக்கு அவர் காட்சி தந்தருளுகின்றார். இம்மூன்று நிலைகளையும் முறையே **பரசிவம், சச்சிதானந்தம், மகேசுவரம்** என்றழைப்பர்.

சிவபெருமானுக்குத்தான் எத்தனை பெயர்கள். "ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்டாமோ" என்று திருவாசகத்தில் போற்றுவார் நம்மணிவாசகர். ரிக்வேதத்திலும், சுக்ல யஜுர் வேதத்தின் வாஜஸநேயி சம்ஹிதையிலும், அதர்வணவேதத்திலும் அவர் ருத்திரனாக அழைக்கப்படுகிறார். அதர்வண வேதத்தில் ருத்திரனுக்குரியதாக பவன், சர்வன், சஹஸ்ரபாஹு, மகாதேவன், பசுபதி, ருத்திரன், அர்த்தகாரி (புராணத்தில் அந்தகாரி), உக்கிரன், ஈசானன் ஆகிய பெயர்களும் வருகின்றன. இப்பெயர்களுடன் 'அகோரன், கிரீசன், நீலக்ரீவன், கபர்தின், சபாபதி, கணபதி, சேனானி, பீமன், சிதிகண்டன், சம்பு, சங்கரன் ஆகியனவும் அவருக்குரியதாகச் சதருத்ரீயத்துள் காணப்பெறுகின்றன. மகாபாரதத்தில் அக்னியாம் ருத்திரனே கந்தனின் தந்தை என்று காட்டப்படுகிறது. வேதகாலத்தின் அக்னியிலிருந்து, புராண கால உன்னத தெய்வங்களுள் ஒருவராக உருத்திரர் எழுகின்றார். இவருக்கு எட்டுப் பெயர்கள் உண்டென சதபதப்பிராமணம் பேசுகின்றது. சிவபெருமானின் அட்டமூர்த்த விளக்கமாக இவை அமைகின்றன.

உருத்திரன்	—	அக்னி (தீ)	தத்துவத்தொடர்பு
சர்வன்	—	அப்பு (நீர்)	,,
பசுபதி	—	பிருதிவி (மண்)	,,
உக்கிரன்	—	வாயு (காற்று)	,,
அசனி	—	வித்யுத் (மின்னல்)	,,
பவன்	—	பர்ஜன்யன் (மழை)	,,
மஹாந்தேவன்	—	சந்த்ரமஸ் (சந்திரன்)	,,
ஈசானன்	—	ஆதித்யன் (சூரியன்)	,,


சிவபெருமானை யாரே முழுமையாக அறிய முடியும்! அவர் உமையம்மையின் கணவராக. கணபதி, முருகனின் தந்தையாகத் திகழ்கிறார். அந்நிலையில் அவர் சிறந்த காதலராக, கணவனாக, தந்தையாக விளங்குகிறார். ஆடல்வல்லானாக விளங்கும் போது சிறந்த கூத்தனாகிறார். சநகாதி முனிவர்களுக்குச் சொல்லாமற் சொன்ன தட்சிணாமூர்த்தியும் அவரே. ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியர் அவர். யோகம், ஞானம், வித்தை, கலை முதலிய எல்லாம் அவரிடத்திலிருந்தே இப்பிரபஞ்சம் பெற்றுக் கொள்கிறது. அவர் மயானத்தையும் விடுவதில்லை. குருதி வெறிகொண்ட குறட்பூதங்களோடு, அவற்றின் இசைக்கேற்ப நள்ளிருளில் நடனமாடி மகிழ்கின்றார். காளியுடன் அவர் ஆடும் கூத்துக்கு விலங்குகள் பக்கவாத்தியங்கள்!

பரசிவமாக விளங்கும் அவர் சொரூப சிவநிலையில் நம் மனம் வாக்குக் காயங்களுக்கு அப்பாற்பட்டவராகத் திகழ்கிறார். தடஸ்தசிவம் என்ற நிலையில் உயிர்கள்பால் கருணைகொண்டு அவர் இறங்கிவருகிறார். அப்போது உருவத் திருமேனியோடு-சகளமாக-வருகிறார். இந்நிலையில் அறுபத்து நான்கு மூர்த்தங்களை நம் முன்னோர்கள் காட்டுகின்றனர்.*

* அறுபத்து நான்கு மூர்த்தங்களின் பெயர்களை இந்நூலின் பின் இணைப்பில் காண்க.

சிவபெருமான் மூன்று நிலைகளில் விளங்குகிறார்: அரூபம்-அருவம்; ரூபாரூபம்-அருவுருவம்; ரூபம்-உருவம்- அரூப நிலையில் சிவம், சக்தி, நாதம், விந்து, என அவர் திகழ்கிறார். ரூபாரூப நிலையில் அவர் சதாசிவமாகக் காட்சி தருகிறார். ரூப நிலையில் மகேசுரன், உருத்திரன், மால், அயன் முதலியவடிவேற்கிறார்.

சைவசித்தாந்தத்தில் சிவம், சதாசிவம், மகேசுரன் என்னும் மூன்று தத்துவங்கள் சிறப்புடையன. அவை முறையே அவரது நிஷ்களம் (அருவம்) சகளநிஷ்களம் (அருவுருவம்), சகளம் (உருவம்) என்னும் சிறம் பியல்புகளைக் காட்டிநிற்கின்றன. அவயவங்கள் ஏதுமில்லா லிங்கமே நிஷ்களத் திருமேனியாகும். அவயவங்களுடன் அமையப்பெற்ற முகலிங்கமே சகள நிஷ்களத் திருமேனி என்று சொல்லப்படும். 'களம்' என்ற வடசொல் பெரும்பாலும் வடிவம் என்னும் கருத்தைக் குறிக்கவே பயன்படுத்தப் படுகிறது. ஆகவே நிஷ்களம் என்ற நிலையில் வடிவமில்லாத் தன்மை உள்ளது. இந்நிலையில் பரம்பொருளுக்குத் தொடக்கமில்லை, வரம்பில்லை, எல்லையில்லை; அது எங்கணும் நீக்கமற நிறைந்த தாய், அழிவற்றதாய், ஒப்பில்லாததாய், மிக நுண்ணியதாய், மேலானதாய், எவ்வித நிருபணத்தாலும் அறிய இயலாததாயுள்ளது.



ஊழிக்கால முடிவில் சுத்த தத்துவங்கள், சுத்த புவனங்களைப் படைக்கும் நோக்கத்திற்காகவும், யோகியரின் மல நீக்கத்திற்காகவும் சிவபரம்பொருளின் ஐந்து சக்திகள் உருப்பெறுகின்றன. தனது அளவற்ற கருணையோடு சிவபெருமான் எண்ணும்போது அவரது தன்மையில் ஆயிரத்தில் ஒரு பகுதி அவரிடமிருந்து **பராசக்தி**யாக வெளிப்படுகிறது. இப்பராசக்தியின் ஆயிரத்தில் ஒரு பகுதியிலிருந்து **ஆதிசக்தி** வெளிப்படுகின்றது. ஆதிசக்தியின் ஆயிரத்தில் ஒரு பகுதியே **இச்சாசக்தி**. இதே முறையில் இச்சாசக்தியினின்று **ஞானசக்தி**யும், அதனின்றும் **கிரியாசக்தி**யும் வெளிப் படுகின்றன. இவ்வைந்து சக்திகளும் கீழ்க்கண்டவாறு அழைக்கப்படுகின்றன.

பராசக்தி	—	சாந்தியாதீத சக்தி
ஆதிசக்தி	—	சாந்தி சக்தி
இச்சாசக்தி	—	வித்தியா சக்தி
ஞானசக்தி	—	பிரதிஷ்டா சக்தி
கிரியாசக்தி	—	நிவர்த்தி சக்தி

பராசக்தியைச் சாந்தியாதீத சக்தி என அழைக்கப்படுவதன் காரணம், இறைவனின் சச்சிதானந்த சொரூப அறிவினை அடைவதற்கு அதுவே மூலமாக உள்ளது. ஆதி சக்தியைச் சாந்தி சக்தி என அழைப்பதன் காரணம் அது மலம், மாயை, கன்மங்களை அழிக்கின்றது. மாயை, மாயையால் தோற்றுவிக்கப்படும் பொருள்கள், அவற்றினின்றும் வேறுபட்ட ஆன்மா—இவற்றைப் புலப்படுத்துவதால் இச்சாசக்தி வித்தியாசக்தி என அழைக்கப்படுகிறது. இயல்பாகவே அசைவற்றதாயும்

மிக நுண்ணியதாயுமுள்ள புருட தத்துவங்களை உயிர்ப்பிப்பதால் ஞான சத்தியைப் பிரதிஷ்டாசத்தி என அழைப்பர். ஆன்மாக்களின் கன்ம (நன்மை, தீமை) அனுபவங் களைத் தோற்றுவிப்பதால் கிரியாசத்தியை நிவிர்த்தி சத்தி எனவும் கூறுவர்.*

மேற்குறித்த ஐந்து சத்திகளிலிருந்து ஐந்து சதாசிவ தத்துவங்கள் தோன்றும்.

1. பராசத்தியின் பத்தில் ஒரு பாகத்திலிருந்து முதல் சதாசிவ தத்துமான **சிவசாதாக்கியம்** தோன்றுகிறது. இதனை **ஈசன்** எனவும் அழைப்பர். மின்னலைப் போன்று ஒளிவீசும் நுண்ணிய தெய்வ ஒளியாக இது எங்கும் விளங்குகிறது. பிரபஞ்ச வெளி முழுவதும் இது வியாபித்துள்ளது.

2. ஆதி சத்தியின் பத்தில் ஒரு பாகத்திலிருந்து இரண்டாவது சதாசிவ தத்துவமான **அமூர்த்த சாதாக்யம்** தோன்றுகின்றது. இதனை **ஈசானன்** எனவும் அழைப்பர். ஒருகோடி சூரியர்களை ஒன்றாக்கியது போன்று ஒளியுள்ள சோதித்தம்பமாக இது திகழ்கிறது. இத்தம்பம் திவ்வியலிங்கம் அல்லது மூலத்தம்பம் என அழைக்கப்படுகிறது.

3. இச்சாசத்தியின் பத்தில் ஒரு பாகத்திலிருந்து மூன்றாவது சதாசிவ தத்துவமான **மூர்த்த சாதாக்கியம்** தோன்றுகின்றது. இதனைப் **பிரம்மா** எனவும் அழைப்பர், இது சகளம் ஆகும். நெருப்பின் ஒளியுடன், தன்னைச் சுற்றிலும் தீச்சுடர்கள் விளங்க, ஒரு திவ்வியலிங்க வடிவாய் இது திகழும். இவ்விலிங்கத்தின் உச்சியில் ஒரு முகமும், முக்கண்களும் நாற்கரங்களும் கொண்ட அழகிய உருவம் ஒன்று விளங்கும். அதன் இரு பின்கரங்களில் மானும் மழுவும் காணப்படுகின்றன. இருமுன் கரங்கள் அபய, வரதமாக அமைந்திருக்கும்.

4. ஞான சத்தியின் பத்திலொரு பாகத்திலிருந்து நான்காவது சதாசிவ தத்துவமான **கர்த்ரு சாதாக்கியம்** தோன்றுகின்றது. இதனை **ஈசுவரன்** எனவும் அழைப்பர். அளக்கலாகா நீளமும் பருமனும் கொண்ட ஒரு திவ்விய லிங்கவடிவில் அது திகழ்கிறது. இல்விலிங்கத்தின் சிறப்பு அதன்படிகத் தன்மை வாய்ந்த தெளிவேயாகும். இவ்விலிங்கத்தில் தான் அனைத்து உயிர்களுக்கும் மூலமாக விளங்கும் சிவபெருமான் நான்கு முகங்களும், எண்கரங்களும், பன்னிரு கண்களும் கொண்டு திகழ்கிறார். இவரது வலக்கரங்களில் சூலம், பரசு, கட்கம், அபயம் ஆகியனவும், இடக்கரங்களில் பாசம், சர்ப்பம், கண்டம், வரதம் ஆகியனவும் உள்ளன.

5. கிரியா சத்தியின் பத்திலொரு பாகத்திலிருந்து ஐந்தாவது சதாசிவ தத்துவமான **கர்ம சாதாக்கியம்** தோன்றுகின்றது. பீடத்தின் மீது அமைந்த இலிங்கமாகத் திகழும் இதனைச் **சதாசிவம்** எனவும் அழைப்பர். ஐந்து சாதாக்கியாங் களுக்கும் அமைந்த ஏனையஅம்சங்கள் வருமாறு.

***இவற்றின் விளக்கத்தைச் சூதசம்ஹிதை—யக்ஞகாண்டம். அத்தியாயம் 14—சுலோகம் 27. விளக்கவுரையின் காண்க.**

எண்	சாதாக்கியம்	பெயர்	முகம்	திசை	வண்ணம்
1.	சிவசாதாக்கியம்	ஈசன்	வாமதேவம்	வடக்கு	சிவப்பு
2.	அமூர்த்த சாதாக்கியம்	ஈசானன்	தத்புருஷம்	கிழக்கு	குங்குமப்பூ
3.	மூர்த்த சாதாக்கியம்	பிரம்மா	சத்யோஜாதம்	மேற்கு	வெண்மை
4.	கர்த்ரு சாதாக்கியம்	ஈசுவரன்	அகோரம்	தெற்கு	கருப்பு
5.	கர்ம சாதாக்கியம்	சதாசிவம்	ஈசானன்	உச்சி (நடு)	படிகம்

இத்தத்துவங்கள் ஒவ்வொன்றும் அதன் முன் தத்துவத்தைச் சார்ந்துள்ளன. அமூர்த்த சாதாக்கியம் சிவ சாதாக்கியத்தையும், மூர்த்த சாதாக்கியம் அமூர்த்த சாதாக்கியத்தையும் என்றிவ்வாறு ஒன்றையொன்று சார்ந்துள்ளன. ஆகவே கர்ம சாதாக்கியம் தன்னுள்ளே ஏனைய நான்கு சாதாக்கியங்களையும் கொண்டுள்ளது.

கர்ம சாதாக்கியத்தை விளக்கி நிற்கும் மூர்த்தி படிகத்திருமேனியுடையவர். இவரது நிறம் குந்தமலர் அல்லது முழுநிலவை ஒத்துள்ளது. இவர் ஐந்து தலைகளையும் அவற்றில் ஜடாமகுடங்களையும் கொண்டுள்ளார். ஒவ்வொரு முகத்திலும் மூன்று கண்கள் கொண்ட இவர் பத்துத்திருக்கரங்களுடன் பத்மா சனத்தில் நிற்கிறார். இவரது வலக்கரங்களில் சூலம், பரசு, கட்கம், வஜ்ரம் அபயம் ஆகியனவும், இடக்கரங்களில் நாகம், பாசம், அங்குசம், கண்டம், அக்னி ஆகியனவும் உள்ளன. அனைத்து அணிகலன்களையும் பூண்டு, மிக உயர்ந்த ஆடைகளை அணிந்து, புன்முறுவலுடன் அழகு ஒழுகத்திகழ்கிறார் இப்பெருமான்.*

இவரது ஐந்து முகங்களுள்

கிழக்கு நோக்கிய முகம் ஈசுவரனுடையது—தத்புருஷம்
தெற்கு நோக்கிய முகம் ருத்ரனுடையது—அகோரம்
மேற்கு நோக்கிய முகம் பிரம்மாவினுடையது—சத்யோஜாதம்
வடக்கு நோக்கிய முகம் விஷ்ணுவினுடையது—வாமதேவம்
உச்சியில் விளங்கும் முகம் சதாசிவனுடையது—ஈசானம்

இவ்வைந்து முகங்களிலிருந்தே சைவ ஆகமங்கள் கீழ்வருமாறு தோற்றுவிக்கப்பெற்று உலகிற்கு வழங்கப் பட்டன என்பர்.

---

* கூடிய பாதம் இரண்டும் படிமிசை
பாடியகை இரண்டெட்டும் பரந்தெழுந்
தேடு முகம் ஐந்து செங்க ணூவைந்து
நாடும் சதாசிவ நல்லொளி முத்தே.

ஐந்து முகம்உள ஐம்மூன்று கண்ணுள
ஐந்தனோடைந்து கரதலம் தானுள
ஐந்துடன் ஐந்தாயுதமுள நம்பி என்
நெஞ்சு புகுந்து நிறைந்து நின்றானே-திருமந்திரம்

முகம்	ஆகமம்	நியாஸம்
சத்தியோஜாதம்	1. காமிகாகமம்	திருவடிகள்
	2. யோகஜாகமம்	குல்பம்
	3. சிந்தியாகமம்	திருவடிவிரல் நுனிகள்
	4. காரணாகமம்	ஜங்கை
	5. அஜிதாகமம்	முழங்கால்
வாமதேவம்	6. தீப்தாகமம்	தொடைகள்
	7. சூட்சாகமம்	குறி
	8. சகஸ்ராகமம்	அரை
	9. அம்சுமானாகமம்	குதம்
	10. சுப்ரபேதாகமம்	தொப்புள்
அகோரம்	11. விஜயாகமம்	வயிறு
	12. நிஸ்வாசாகமம்	இதயம்
	13. ஸ்வயம்புவாகமம்	மார்பு (ஸ்தனம்)
	14. அனலாகமம்	கண்கள்
	15. வீராகமம்	கழுத்து
தத்புருஷம்	16. ரௌரவாகமம்	காதுகள்
	17. மகுடாகமம்	கிரீடம்
	18. விமலாகமம்	தோள்கள்
	19. சந்த்ரஞானாகமம்	மார்பு (வக்ஷஸ்தலம்)
	20. முகபிம்பாகமம்	உதடு
ஈசானம்	21. ப்ரோத்கீதாகமம்	நாக்கு
	22. லலிதாகமம்	புருவங்கள்
	23. சித்தாகமம்	நெற்றி
	24. சந்தானாகமம்	காதணிகள்
	15. சர்வோத்தாகமம்	முப்புரிநூல்
	26. பாரமேசுவராகமம்	முத்துமாலை
	27. கிரானாகமம்	இரத்தினாபரணங்கள்
	28. வாதுளாகமம்	வாக்கு.

ஐந்து முகங்களின் தத்துவம் வருமாறு :

ஈசானம் ; பிரபஞ்சம் அனைத்திற்கும் மேலாக அமைந்த பண்புடனே, உலகங்களுக்கெல்லாம் ஈசனாக இருப்பதாலும், உயிர்களுக்குத் தற்பரத்தை அருளுவதாலும் ஈசான மூர்த்தி என இயம்புவர்.

தற்புருடம் ; ஆன்மாக்களிடத்திலே இறைவன் அந்தர்யாமியாய் இருந்து அறிவை விளக்கி யருள்வதையே தற்புருடன் என்பர்.

அகோரம் ; ஞான வடிவாகவுள்ள இறைவன் அஞ்ஞானத்தைப் போக்கி மேலான சிவஞானத்தை அளிப்பதால் அகோரன் என அழைக்கப்படுகிறார்.

வாமதேவம் : அழகின் உறைவிடமாக இருப்பதாலும், அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று புருடார்த்தங்களை ஆன்மாக்களின் பொருட்டு அருள்வதாலும் வாமதேவர் என விளம்புவர்.


சத்யோஜாதம் ; விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவித ஆன்மாக்களுக்கும் காரணதேகம், புரியட்டகதேகம் என்னும் சூட்சும, தூல தேகமாகிய உடல்களைத் தம் இச்சாமாத்திரத்தில் படைப்பதால் சத்தியோஜாதர் என உரைப்பர்.

மகேசமூர்த்தி : கர்ம சாதாக்கியத்தின் (சதாசிவத்தின்) ஆயிரத்திலொரு கூறிலிருந்து மகேசமூர்த்தி தோன்றுகிறார். இவரே படைத்தல் (சிருஷ்டி) ; காத்தல் (ஸ்திதி), ஒடுக்கல் (லயம்) ஆகியவற்றை நேரடியாக இயற்றுகிறார். இவர் சகளத் திருமேனி உடையவர். இம்மகேச மூர்த்தியே அடியவர்களைக் காக்கவும், அரக்கர்களைக் தண்டிக்கவும் பல வடிவங்களில் வெளிப்பட்டு, பல அருளாடல்கள் புரிகின்றார். நிற்றல், அமர்தல், கூத்தாடல், வாகனங்களிலேறி வருதல், உக்ரமாயிருத்தல், சாந்தமாயிருத்தல், என்றிவ்வாறு இவர்தம் தோற்றம் பலவாறாக அமைகின்றன. இம்மகேசரது வடிவம் ஒருமுகமும், முக்கண்களும், ஜடாமகுடமும், நாற்கரங்களும் கொண்டு பத்மாசனத்தின்மீது நிற்கும் கோலமாகும். இவரது பின் இருகரங்களிலும் மானும் மழுவும் விளங்குகின்றன. ஏனைய இருகரங்களும் அபய, வரதமாய் உள்ளன.


மகேச மூர்த்தியின் அருளாடல்கள் இருபத்தைந்து தோற்றங்களில் திகழ்கின்றன. இவற்றை மகேசுவர வடிவங்கள் என்பர். சதாசிவ மூர்த்தியின் ஐந்து முகங்களுக்கும் இயைய இம்மூர்த்தங்களைக் கீழ்க்கண்டவாறு கூறுதல் மரபு.

ஈசான மூர்த்தி

1. சோமாஸ்கந்த மூர்த்தி
2. நிருத்த மூர்த்தி
3. ரிஷபாரூட மூர்த்தி
4. கல்யாணசுந்தர மூர்த்தி
5. சந்திரசேகர மூர்த்தி



சத்யோஜாதமூர்த்தி



அகோரமூர்த்தி


தஞ்சாவூர் ஸ்ரீ பிரஹதீச்வரர் கோயில் மேல் விமானத்தின் உட்பிராகாரத்தில் உள்ளது.

நன்றி : இந்திய தொல் பொருள் ஆய்வுத்துறை, சென்னை.



அகோரமூர்த்தி
திருவெண்காடு
ஸ்ரீ சுவேதாரண்யேசுரர் கோயில்

சோமாஸ்கந்தர்



கும்பகோணம்
ஸ்ரீ ஆதிகும்பேச்வரர் கோயில்
பக்கம் : 20

தத்புருஷ மூர்த்தி	6. பிட்சாடன மூர்த்தி
	7. காமதகன மூர்த்தி
	8. காலாந்தக மூர்த்தி
	9. ஜலந்தரவத மூர்த்தி
	10. திரிபுராந்தக மூர்த்தி
அகோர மூர்த்தி	11. கஜாரி மூர்த்தி
	12. வீரபத்திர மூர்த்தி
	13. தட்சிணா மூர்த்தி
	14. கிராத மூர்த்தி
	15. விஷாபஹரண மூர்த்தி
வாமதேவமூர்த்தி	16. கங்காள மூர்த்தி
	17. சக்ரதான மூர்த்தி
	18. கஜமுக அனுக்ரஹ மூர்த்தி
	19. சண்டேச அனுக்ரஹ மூர்த்தி
	20. ஏக்பாத மூர்த்தி
சத்யோஜாதமூர்த்தி	21. லிங்கோற்பவ மூர்த்தி
	22. சுகாஸன மூர்த்தி
	23. உமாசகித மூர்த்தி
	24. சங்கர நாராயண மூர்த்தி
	25. அர்த்தநாரீசுர மூர்த்தி

இவ்விருபத்தைந்து வடிவங்களையும் காணும்போது சிவபெருமானின் அனுக்ரஹ, சம்ஹார, ஞான வடிவங்களையும், சிவவிஷ்ணு இணைந்த, சிவசக்தி இணைந்த வடிவங்கள் இவற்றுள் இடம் பெற்றிருப்பதையும் நன்கு உணரலாம்.

அனுக்ரஹ மூர்த்தங்கள் 6 : சந்திரசேகரர், கிராதமூர்த்தி, விஷாபஹரணர், சக்ரதானர், கஜமுகஅனுக்ரஹர், சண்டேச அநுக்ரஹர், ஆகியன.

சம்ஹார முர்த்தங்கள் 7 : காமதகன மூர்த்தி, காலாந்தக மூர்த்தி, ஜலந்த்ரவத மூர்த்தி, திரிபுராந்தக மூர்த்தி, கஜாரி மூர்த்தி, வீரப்த்ரர், கங்காளர் ஆகியன.

ஞான மூர்த்தங்கள் 5 : நிருத்த மூர்த்தி, தட்சிணா மூர்த்தி, ஏகபாத மூர்த்தி, சுகாஸன மூர்த்தி, லிங்கோற்பவ மூர்த்தி, ஆகியன.

சிவவிஷ்ணு இணைந்தவை 3 ; பிட்சாடனர், சங்கரநாராயணர், அர்த்தநாரீசர்.

ம—3

சிவசக்தி இணைந்தவை 4: சோமாஸ்கந்தர், ரிஷபாரூடர், கல்யாணசுந்தரர், உமாசகிதர் ஆகியன.

அடியார்கள் அவரவர் மனப்பக்குவத்திற்கேற்பவும், விழையும் பலன்களுக் கேற்பவும் இம்மூர்த்தங்களில் ஏதாவதொன்றைப் போற்றி வழிபடுவதைக் காண்கிறோம். சிவபராக்கிரமத்தை இம்மூர்த்தங்கள் இனிது எடுத்துக் காட்டுகின்றன.

உரையொடு சொல் தெரிந்த மூவர்க்கும்
ஒளிபெற நற்பதங்கள் போதித்தும்
ஒருபுடை பச்சை கங்கையோடுற்றும் உலகூடே
உறுபலி பிச்சை கொண்டு போயுற்றும்
உவரி விடத்தை உண்டு சாதித்தும்
உலவிய முப்புரங்கள் வேவித்தும் உறநாகம்
அரையொடு கட்டி அந்தமாய் வைத்தும்
அவிர்சடை வைத்த கங்கை யோடொக்க
அழகு திருத்தி இந்துமேல் வைத்தும் ஆவோடே
அறுகொடு நொச்சி தும்பை மேல்வைத்த
அரிஅயன் நித்தம் வந்து பூசிக்கும்
அரன் ... ... (திருப்புகழ்: நரையொடு...)

என சந்தத் தமிழ்க்கடலாம் அருணகிரிநாத சுவாமிகள் இறைவனின் மகேசவடிவங் களைத் தொகுத்துப் பரவுகின்றார். மகேசுவர வடிவங்கள் இருபத்தைந்தும் நம் சைவத்திரு முறைகளிலும் தோத்திரங்களிலும் சாத்திரங்களிலும் பலவாறு போற்றப் படுகின்றன. இவையனைத்தையும் ஆலயங்களில் ஒருசேரக் காண இயலாவிடினும், ஒருசில வடிவங்கள் தனிச்சிறப்புடைய தலங்கள் உள்ளன என்பதை இந்நூலில் இனிது காணலாம்.

நம்நாட்டுக் கலைவல்லுநர்களைப்பற்றியும் ஈண்டு நாம் ஓரிரு கருத்துக்களைக் கூறவேண்டியுள்ளது. ஒருசில கோயில்களில் இம்மூர்த்தங்களை வடிவமைத்த சிற்பிகளை நாம் திசைநோக்கித் தொழக் கடமைப்பட்டுள்ளோம். இறைவன் திருவுருவம் எப்படியிருக்கும்? இவ்வினாவிற்கு விடை கண்ட பெருமை நம் முன்னோர் களையே சாரும். இறைவன் இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன் என எழுதிக்காட்டஒண்ணா பரம்பொருளை நமக்கு அடையாளங்காட்டித் தாம் கண்டவாறே நமக்கும் காட்டிச் சென்றுள்ள நம் அருளாளர்களையும், அவர்தம் நெறிநின்று அவற்றைக் கல்லிலும், ஐம்பொன்னிலும் வடிவமைத்து நிலையாக நாம் வழிபட்டுய்ய வகை செய்த சிற்பிகளையும் நாம் எப்படிப் போற்றுவது! அவர்தம் பெற்றிக்கு உலகில் இணை ஏது! அடியார்கள் இறைவனைக் காணத் துடிக்கிறார்கள்; இறைவனை எப்படிக் காண்பது என்ற ஏக்கம் ஒருபுறம்! அவன் எவ்வுருவினன் என்று ஏவரேனும் கேட்டால் எப்படி விடையளிப்பது! ஆம், காணும் பொருளனைத்தும்

அவனாயிருக்கும்போது, அவனுக்கென்று ஓர் திருவுருவம்—தனிவடிவம் காட்டுவதும் கடினம் தானே. காரைக்கால் அம்மையாருக்கு இப்படி ஒருநிலை. அவரே கூறுகிறார். கேளுங்கள் ;

அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவம் காண்கிலேன்—என்றுமே
எவ்வுருவோன் நும்பிரான் என்பார்கட்கு என்னுரைப்பேன்
எவ்வுருவே நின்னுருவம் ஏது

இனி, காரைக்காலம்மையார் போன்று நாம் கேட்கமாட்டோம். அடியார்க்கெளியனாம் இறைவனின் அருட்கோலங்களைக் கோயில்களில் வடிவமைத்துள்ள நம் கலைஞர்கள் அருளாளர்தம் சொற்கோயிலைக் கற்கோயிலாக்கி விட்டார்கள். எப்படியெல்லாம் இறைவன் நம்முன்னோர்க்கு எளிவந்து அருள்புரிந்தான் என்பதை நம் திருக்கோயில் சிற்பங்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் மனித குலத்துக்கு விளக்கி நிற்குமன்றோ !

மேலை நாட்டுக் கலைகள் உள்ளதை உள்ளவாறு படம் பிடித்துக் காட்டுவன. இயற்கையில் காணும் அழகை அப்படியே வண்ணத்தாலும் சுண்ணத்தாலும் அவர்கள் காட்டுவர். ஆனால் நம்நாட்டுக் கலைஞர்களோ வண்ணத்தையும் சுண்ணத்தையும் கடந்து அக்காட்சியில், கோலத்தில், ஒரு எண்ணத்தையும் புகுத்திக் கலையைத் தெய்வீகமாக்கி இறைவனுக்கு அர்ப்பணித்துவிட்டார்கள். நமது திருக்கோயில்களில் அமைந்த சிற்பங்கள் மனித உருவில் தெய்வமே வந்து வெளிப்படுத்திய கலைப் படைப்புகள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. திருக்கோயில்களைப் பேணிக் காப்பதன் மூலம், தெய்வீகப் படைப்புகளைப் போற்றி நம் அருளாளர்களுக்கும் அருங்கலை வல்லுநர்களுக்கும் நம் அஞ்சலியை உரித்தாக்கி நாமும் உய்வடைவோம் !

மகேச்வர வடிவங்களைக் கண்டு மகிழ்வோம்
மனங்களிக்க வாருங்கள்



மகேச்வர வடிவங்கள்

1. சோமாஸ்கந்தர்
2. நிருத்த மூர்த்தி
3. ரிஷபாரூடர்
4. சந்திரசேகரர்
5. கல்யாணசுந்தரர்
6. பிட்சாடனர்
7. காமதகனர்
8. காலாந்தகர்
9. ஜலந்தரவதர்
10. திரிபுராந்தகர்
11. கஜாரி
12. வீரபத்திரர்
13. தட்சிணாமூர்த்தி
14. கிராதமூர்த்தி
15. நீலகண்டர் (விஷாபஹரணர்)
16. கங்காளர்
17. சக்ரதானர்
18. கஜமுக அனுக்ரஹர்
19. சண்டேச அனுக்ரஹர்
20. ஏகபாத மூர்த்தி
21. இலிங்கோத்பவர்
22. சுகாஸனர்
23. உமாசகிதர்
24. சங்கர நாராயணர்
25. அர்த்தநாரீச்வரர்

சோமாஸ்கந்தர்

ஏலவார் குழல் இறைவிக்கும் எம்பிரான் தனக்கும்
பாலன் ஆகிய குமரவேள் நடுவுறும் பான்மை
ஞால் மேலுறும் இரவொடு பகலுக்கும் நடுவே
மாலை யானதொன்று அழிவின்றி வைகுமாறதொக்கும். —கந்தபுராணம்.

சிவாலயங்களில் ஐந்து எழுந்தளுரும் திருவுருவங்கள் இன்றியமையாதன. கணேசர், முருகன், சோமாஸ்கந்தர், அம்பிகை, சண்டேசர் என்பன அவை. இவற்றுள் தத்துவச் சிறப்புமிகுந்த தனித்தன்மை வாய்ந்த வடிவம் சோமாஸ்கந்தர் ஆகும். ஸ்ஹ உமா ஸ்கந்தர் என்ற வடமொழிச் சொல்லுக்கு உமையுடனும் கந்தனுடனும் விளங்குபவர் என்று பொருள். அதாவது சிவபெருமான் தேவியுடனும் கந்தனுடனும் காட்சிதரும் அருட்கோலம். இறைவனை இல்லறத்தானாக-இனிய கணவனாக-பாசம் மிக்க தந்தையாகத் தநயனுடன் காட்டும் இவ்வடிவம் களித்து மகிழ வேண்டிய கவின் மிகு கருணை உருவம் ஆகும்.

சச்சிதானந்தம் (சத்சித் ஆனந்தம்) சோமாஸ்கந்தமூர்த்தியின் தத்துவமாகும்.

சத்து	சித்து	ஆனந்தம்
உண்மை	அறிவு	இன்பம்
சிவன்	உமை	ஸ்கந்தன்
அருமை	எளிமை	அழகு

சத்தாகிய சிவத்துக்கும் சித்தாகிய அம்மைக்கும் நடுவே ஆனந்தமே வடிவான கந்தனோடு விளங்கியமைந்த ஸோமாஸ்கந்தர் ஈசானத்தில் தோன்றியவராவர். இவரே சிவாலயத்தில் ஆட்சி செலுத்தும் பிரதான மூர்த்தியாவார். இவ்வடிவின் உட்கருத்துக்கள் பல. 'அருமையில் எளிய அழகே போற்றி' என்ற திருவாசக வரியின் உட்பொருள் இவ்வடிவமே என்பர் ஆன்றோர். உண்மையும் அறிவாகிய நன்மையும் சேர்ந்தால் கிடைப்பது இன்பம் என்பதை இக்கோலம் எடுத்துக்காட்டுகின்றது. இம்மூர்த்தத்தில் சிவபெருமான்-கடந்த நிலையையும். இறைவி-கலந்தநிலையையும், கந்தன்-கவர்ந்த நிலையையும் காட்டுகின்றனர். கணவன்-மனைவி-குழந்தை என்னும் இல்லறத்தின் முப்பொருட்டன்மையை முழுமையாக்குவது இவ்வடிவம் என்பாரும் உளர். குழந்தையைப் பெற்றோர் நடுவில் வைத்துக்கொண்டாடும் கோலாகல வடிவம் இது.

அனைத்துச் சிவாலயங்களிலும் சோமாஸ்கந்தருக்குச் சிறப்பிடம் தரப் பட்டிருப்பினும் திருவாரூர் இப்பெருமானுக்குரிய சிறப்புத்தலமாகும். கமலைத் தியாகேசர், ஆழித்தேர் வித்தகர் என்றெல்லாம் இத்தலத்தில் இவர் போற்றப் பெறுகிறார், திருவாரூர் நான்மணிமாலை பாடியருளிய குமரகுருபரசுவாமிகள் கமலைத்தியாகேசராம் ஸோமாஸ்கந்தருக்கு ஒரு புதிய விளக்கத்தை அற்புதமாகத் தருகின்றார். நமது பாரதநாட்டில் கங்கை, யமுனை, சரசுவதி என்னும் மூன்று புண்ணியப் பேராறுகளும் சங்கமமாகும் முக்கூடலான திரிவேணி சங்கமம் என்னும் பிரயாகையில் நீராடுவது மிகப்புனிதமானது அல்லவா! திருவாரூர் இருந்தாடும் அழகராம் ஸோமாஸ்கந்தரைப் பார்க்கும் போது குமரகுருபரருக்குத் திரிவேணி சங்கமம் நினைவுக்கு வருகிறது. சிவபெருமான் வெண்ணீறணிந்து சண்ணித்திருத்தலால் வெண்மை நிறமுடைய கங்கையைப் போலவும், உமாதேவி தன் நீல நிறத்தால் யமுனையைப் போலவும், சிவந்த நிறமுடைய கந்தன் சரசுவதியைப் போலவும் காட்சி யளிக்கின்றனர். இவ்வருட் சங்கமக்கருத்து, அருமையான கவிதையாக மலருகின்றது :

தம்மேனி வெண்பொடியால் தண்ணளியால் ஆரூரர்
செம்மேனி கங்கைத் திருநதியே-அம்மேனி
மானே யமுனை ; அந்த வாணி நதியும் குமரன்
தானே குடைவேம் தனித்து. —திருவாரூர் நான்மணிமாலை.

மற்றொரு பாடலிலும் சோமாஸ்கந்த மூர்த்தச்சிறப்பை மிக அழகாகப் பேசுகிறார் குமரகுருபரர்.

மல்லல் வளம் கனிந்தபுகழ்க் கமலேசர்
திருவுருவும் வாமபாகத்து
அல்லமர் பைங்குழல் உமையாள் திருவுருவும்
இருவருக்கும் அமுதமான
கொல்லயில் வேற் பசுங்குழவி திருவுருவும்
அருவுருவாம் குணங்கள் மூன்றின்
நல்லுருவாதலின் அன்றோ இவர் அகில
காரணராய் நவில்கின்றாரே.

சோமாஸ்கந்த மூர்த்தத்தை நினைக்கும் போது காஞ்சிபுரம் நம் நினைவுக்கு வருகிறது. காஞ்சி ஏகாம்பரேசர் கோயிலும், குமரக் கோட்டமும், காமாட்சியம்மன் கோயிலும் அமைந்துள்ள பாங்கு சோமாஸ்கந்த வடிவையே காட்டுகின்றது. கந்தபுராண ஆசிரியர் கச்சியப்பர் இக்காட்சியை அற்புதமான உவமையாகக் காட்டுகிறார். பகலுக்கும் இரவுக்கும் நடுவே மாலைக்கால இயல்பினை இது காட்டுகிறதென்கிறார். பாம்பன் சுவாமிகள் சோமாஸ்கந்த தத்துவத்தைக் கவினுறக்காட்டும் ஒரு பாடல் வருமாறு:

பொருள் உள சத்து நிரந்தரம்
பொறுவரும் அத்தை அணைந்தவிர்
அருள் உறு சித்து; நிரம்பிடும்
அதிக மதர்ப்பெனும் இன்பமும்
ஒருமுகமும் உற்ற சொலின் கண்முன்
உளது சிவப்பொருள்; நள்ளது
திருவுறு சத்தி; நல் அந்தரம்
திகழ்வது சுப்பிரமண்யமே.

சோமாஸ்கந்தவடிவம் தமிழ்கத்துக்கே உரியது. மாபெரும் யோகியான சிவபெருமானை மாபெரும் போகியாகக் காட்டும் இக்கோலங்குறித்து ஐங்குறுநூறு பேசுகின்றது பாருங்கள்:

மறியிடைப் படுத்த மான்பிணை போலப்
புதல்வன் நடுவணன் ஆக, நன்றும்
இனிது மன்ற அவர் கிடக்கை! முனிவின்றி
நீல்நிற வியலகம் கவைஇய
ஈனும் உம்பரும் பெறலருங் குரைத்தே. (401)

சைவத்திருமுறைகளில் குறிப்பாகத் தேவார திருவாசகப் பாடல்களுள் சோமாஸ்கந்த மூர்த்தம் பற்றிய குறிப்பேதும் இல்லை. இருப்பினும் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் திருக்காறாயில் பதிகத்தில்

" தாயானே தந்தையும் ஆகிய தன்மைகள்
ஆயானே ஆய நல்லன்பர்க்கு அணியானே"
சேயானே

எனவரும் பகுதிகள் இம்மூர்த்தத்தை நினைவுபடுத்துவதாகக் கொள்ளலாம்.

பல்லவர் காலந்தொட்டு சோமாஸ்கந்தர் வடிவங்கள் சிறப்புற்றன. இரண்டாம் நரசிம்மவர்மன் (இராசசிம்மன்: 680-700) காலக்குடைவரைக் கோயில்களிலும் கற்றளி களிலும் பின் சுவரில் புடைசிற்பமாகச் சோமாஸ்கந்தர் திருவுரு அமைக்கப்பெற்றன. மாமல்லபுரம் இராமாநுச மண்டபக் கருவறையின் பின் சுவரிலும், தர்மராச ரதத்தின்

மூன்றாவது நிலையிலுள்ள கருவறையிலும், மாமல்லபுரத்தை அடுத்த சாலுவன் குப்பம் அதிவிசைந்த பல்லவகிருகம் குடைவரைக் கோயில் பின் சுவரிலும் உள்ள புடைச் சிற்பங்கள் இதனை உறுதி செய்கின்றன. காஞ்சி கயிலாசநாதர் கோயில், மாமல்லபுரம் கடற்கரைக் கோயில், பனமலைத்தளபுரீசர் கோயில் இவைகளிலும் இம்முறையிலேயே சோமாஸ்கந்தர் புடைச்சிற்பங்கள் உள்ளன. சாலுவன் குப்பம், பனமலைச் சிற்பங்களில் சோமாஸ்கந்தருடன் மலரோனும், மாலும் புடைசூழ விளங்குகின்றனர். திருக்கழுக்குன்றம், திருமறைக்காடு, திருப்புள்ளிருக்குவேளூர், திருப்புறம்பயம் கோயில்களிலும் கருவறைப் பின்சுவரில் சோமாஸ்கந்தர் திருவுரு உள்ளது. திருப்பைஞ்ஞீலி குடைவரைக் கோயிலில் சிவபெருமானுக்கு வலப்பக்கம் அம்பிகை அமர்ந்த வடிவில் சோமாஸ்கந்தர் உருவம் காணப்படுவது தனிச் சிறப்புடையதாகும். இவ்வுருவில் அம்பிகையின் காலடியில் ஒரு உருவம் காணப்படுகிறது. இதனை யமன் என்று கூறி, இக்கோயிலை யமன் கோயில் என அழைக்கின்றனர். ஆனால் இவ்வுருவம் முயலகன் என்பதே பொருந்தும். இராசசிம்மன் காலத்திற்குப் பிறகு சோமாஸ்கந்த வடிவம் கருவறையின் பின்சுவரின் அமைக்கப்படவில்லை என்று கருதலாம்.



சோமாஸ்கந்தர் வடிவம் குறித்துச் சிற்பநூல்களைச் சற்று ஆராய்வோம். சில்பரத்தினம் என்னும் நூலில் இம்மூர்த்தி மூன்று வடிவங்களில் விளக்கப்படுகிறது. சிவபெருமான் அமர்ந்த கோலத்தில் இடக்காலை மடித்து வைத்து, வலக்காலைத் தொங்க அமைத்து விளங்குகிறார். புலித்தோலையும் பட்டினையும் உடுத்த இவர் நான்கு கரங்களுடையவர். வலக்கரங்கள் இரண்டிலும் பரசு (மழு)வும், அபயமும், இடக்கரங்கள் இரண்டிலும் மானும், வரதமும் அல்லது சிம்ஹகரணமுத்திரையும் அமைந்துள்ளன. இவர் வலது காதில் மகர குண்டலம் அல்லது சிம்ஹகுண்டலம், இடது காதில் பத்ர குணடலமும் அணிந்திருப்பார்; அல்லது இரு காதுகளிலும் விருத்த குண்டலம் அணிந்திருப்பார். ஜடாமகுடமும், சர்ப்ப கங்கணங்களும், பற்பல அணிகலன்களும் இவர் பூண்டிருப்பார். சிவபெருமானுக்கு இடப்பக்கம் தேவி அமர்ந்திருப்பாள். அவளது இடக்கால் கீழே தொங்க, வலது கால் மடித்து அமர்ந்திருப்பாள். அவளது இரு கரங்களுள் வலக்கரம் தாமரைமலரையும் இடக்கரம் சிம்ஹகரணம் அல்லது ஆசனத்தில் வைத்தநிலையில் கொண்டிருக்கும்; கரண்டமகுடம் அணிந்திருப்பாள். சிவபெருமானுக்கும் உமைக்கும் நடுவே கந்தன் சிறுகுழந்தையாக நிற்கிறான். அவன் உமையின் மடியில் அமர்ந்தோ, நடனமாடிக் கொண்டோ இருத்தலும் கூடும். கரண்ட மகுடம் மகர குண்டலங்கள், சன்ன வீரம் ஆகியவற்றை அணிந்திருப்பான். அவனது இருகரங்களுள் வலக்கரம் தாமரை மலர் வைத்திருக்கலாம்; அல்லது இரு கரங்களிலுமே தாமரைமலர் இருக்கலாம்.

தேவியின் வலக்கரத்தில் நீலோற்பல மலரும், இடக்கரம் வரதமும் கொண்டிருத்தலும் உண்டு. அம்பிகை பச்சைநிறத்தினளாகச் சிவப்புப்பட்டாடை அணிந்து விளங்குவாள்.

கந்தன் நடனமாடும் கோலத்தில் இருப்பின் அவனது இடக்கரம் பழத்தையும், வலக்கரம் சூசி முத்திரையும் கொண்டிருக்கும். சில வடிவங்களில் இடக்கரம் தொங்க விடப்பட்ட நிலையில் அமைந்திருக்கும்.

சோமாஸ்கந்த வடிவத்தின் இருபுறமும் நான்முகனும் திருமாலும் தம் தேவியருடன் நிற்றல் வேண்டும் என்று காரணாகமம் கூறுகிறது.

குடந்தையருகே நாச்சியார் கோயிலை அடுத்த இராமநதீச்சரம் சோமாஸ்கந்தர் வடிவில் அம்பிகையின் கரத்தில் இடபம் காணப்படுகிறது.

உலகிலேயே மிகப்பெரிய சோமாஸ்கந்தர் வடிவம் ஸ்ரீ லங்கா திருக்கேதீச்சரத்தில் உள்ளது.

சிவத்தலங்கள் சிலவற்றில் சிவபிரான், அம்பிகை, முருகன் ஆகியோர் சன்னதிகள் சோமஸ்கந்த வடிவத்தில் அமைந்துள்ளன. திருக்கருகாவூர் (தஞ்சை மாவட்டம்) திருக்கள்ளில் (செங்கல்பட்டு மாவட்டம்) இவைகளைக் குறிப்பிடலாம்.

கந்தம் கமழ் கொன்றையணி பெம்மானுக்கும் கொங்கியல் பூங்குழற் கொவ்வைச் செவ்வாய் கோமளமாதுமையாளுக்கும் இடையில் சூர்முதல்தடிந்த சுடரிலை நெடுவேலன் கோழிக்கொடியோனும் திகழும் கோலம் சிறுத்தொண்ட நாயனாருக்கு மட்டும் இறைவன் அருளியதைப் பெரிய புராணம் காட்டும்.

செய்யமேனிக் கருங்குஞ்சிச் செழுங்கஞ் சுகந்துப் பயிரவன்யாம்
உய்ய அமுது செய்யாதே ஒளித்த தெங்கே எனத்தேடி
மையல் கொண்டு புறத்தணைய மறைந்த அவர்தம் மலைபயந்த
தையலொடுஞ் சரவணத்துத் தனயரோடும் தாம் அணைவார்.
(சிறுத்தொண்டர்புராணம் 84)

சோமாஸ்கந்தர் வடிவத்தைத் தொழுவார் இல்லறத்தில் நன்மக்களோடு நலம்பல துய்த்து மகிழ்வர் என்று கந்தபுராணம் பேசும்.

"தொல்லையுலகம் போற்றெடுக்கும் சோமாஸ்கந்தர் தமைப் பணிவோர்
நல்லமகவும் சந்தானத் தொடர்பும் இனிதுநனி பெறுவார்..."

திருச்செந்தூர் திருப்புகழில் அருணகிரிநாத சுவாமிகள் கூறுவது போல,

"மறிபரசு கரமிலகு பரமன் உமை இருவிழியும்
மகிழ்மடி மிசைவளரும் இளையோனே"

என நாமும் பரவி இன்புறுவோம்.

* * *

நிருத்தமூர்த்தி

ஆடல் வல்லான்

ஓங்கொளியாய் அருள்ஞான மூர்த்தியாகி
உலகமெலாம் அளித்தருளும் உமையம்மை காணத்
தேங்கமழு மலரிதழி திங்கள் கங்கை
திகழரவம் வளர்சடைமேற் சேரவைத்து
நீங்கலரும் பவத்தொடர்ச்சி நீங்கமன்றுள்
நின்றிமையோர் துதிசெய்ய நிருத்தம் செய்யும்
பூங்கமல மலர்த்தாள்கள் சிரத்தின் மேலும்
புந்தியினும் உறவணங்கிப் போற்றல் செய்வாம்

—சிவப்பிரகாசம் : ஸ்ரீஉமாபதிசிவம்

மண்ணில் நவரத்தின மணிகள் ஒளி வீசுகின்றன ; நீரில் அலைமோதுகின்றது ; நெருப்பு தனது சுவாலையாம் நாக்கை நீட்டியாடுகிறது ; காற்று தென்றலாகவோ புயலாகவோ வீசுகிறது ; வானில் மின்னல் துள்ளி ஒளிர்கிறது. இவ்வாறு ஐம்பூதங்களிலும் ஒருவகை நடனம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஐம்பூத நடனமே இறைவன் ஆடும் நடனம் என்பார் திருமூலர் :

காளியோடு ஆடிக் கனகாசலத் தாடி
கூளியோடு ஆடிக் குவலயத்தே ஆடி
நீடிய நீர் தீக்கால் நீள்வான் இடையாடி
நாளுற அம்பலத்தேயாடும் நாதனே.

—திருமந்திரம்

உலக இயக்கங்களின் உயிர்த்துடிப்பு ஆடல்வல்லானின் ஆடலால் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. உயிர்கள் பிறப்பதும், இருப்பதும், வாழ்வதும், மறப்பதும், இறப்பதும், பேரின்பநிலையில் சாவாமூவாப் பெருவாழ்வில் பொருந்துவதும் ஆடல்வல்லானின் அசைவினாலேயே நிகழ்கின்றன. நுண்ணிய அணுகூட அசைவற்றிருப்பதில்லை. இயக்கம் என்பது உலகின் மாபெரும் அறிவியல் தத்துவம். இதனைக் காட்டும் இணையற்ற இறைவடிவம் இன்ப நடராச வடிவமாகும்.

இறைவன் தன் அடியார்களைப் பாதுகாத்து—அரக்கர் முதலிய எதிர்ப் பாற்றல்களைவென்று, வெற்றிக்களிப்பால் ஆடிய ஆடல்களே தாண்டவங்களாகும்.

சங்க இலக்கியங்களில் இறைவனது பாண்டரங்கம், கொடுகொட்டி, காபாலம் என்னும் ஆடல்கள் குறிக்கப்பெறுகின்றன. கலித்தொகை, கடவுள் வாழ்த்துப் பாடல் வருமாறு.

> ஆறு அறி அந்தணர்க்கு அருமறை பல பகர்ந்து,
> தேறு நீர் சடைக்கரந்து, திரிபுரம் தீமடுத்து,
> கூறாமல் குறித்ததன் மேல் செல்லும் கடுங்கூளி
> மாறாப்போர், மணிமிடற்று, எண்கையாய் ! கேள், இனி :
> படுபறை பல இயம்ப, பல் உருவம் பெயர்த்து நீ
> **கொடு கொட்டி** ஆடுங்கால், கோடு உயர் அகல் அல்குல்,
> கொடி புரை நுசுப்பினாள் கொண்டசீர் தருவாளோ?
> மண்டு அமர் பலகடந்து, மதுகையால் நீறு அணிந்து
> **பண்டரங்கம்** ஆடுங்கால், பணை எழில் அணைமென்தோள்
> வண்டு அரற்றும் கூந்தலாள் வளர் தூக்குத் தருவாளோ ?
> கொலை உழுவைத் தோல் அசைஇ, கொன்றைத் தார்கவற் புரள,
> தலை அங்கை கொண்டு, நீ **காபாலம்** ஆடுங்கால்,
> முலை அணிந்த முறுவலாள் முன்பாணி தருவாளோ ?
> என ஆங்கு
> பாணியும் தூக்கும் சீரும் என்று இவை
> மாண் இழை அரிவைகாப்ப
> ஆணம்இல் பொருள் எமக்கு அமர்ந்தனை, ஆடி,

இப்பாடலில் சிவபெருமானது கொடுகொட்டி, பாண்டரங்கம், காபாலம் என்னும் மூன்று கூத்துக்கள் பேசப்படுகின்றன. இறைவன் கொடுகொட்டி என்னும் திருக்கூத்து ஆடும்போது, இறைவி அதற்கு ஏற்பத் தாள அறுதியாகிய சீரைத்தருகின்றாள். இறைவன் பாண்டரங்கம் என்னும் கூத்தை ஆடும்போது இறைவி தாள அறுதிக்கு முன் நிகழ்வதாகிய தூக்கினைத் தருகின்றாள். இறைவன் காபாலம் என்னும் பெயர்பெற்ற கூத்தை ஆடும்போது இறைவி தாளத்தின் முதலெடுப்பாகிய பாணியைத் தருகின்றாள் என்ற குறிப்பை இப்பாடலில் காண்கிறோம். தாளத்தின் மூன்று உறுப்புக்களுள் சீர், தூக்கு, பாணி என்பன ஒவ்வொரு கூத்திற்கும் சிறந்ததாகக் காட்டப்படுகிறது. கொடுகொட்டியும் பாண்டரங்கமும் திரிபுரம் எரித்த காலத்தில் இறைவன் ஆடியவை.

உமைஒருபாலாக, இறைவன் ஒருபாலாக நின்று அச்சம், வியப்பு, விருப்பு, அழகு முதலியன பொருந்த அவுணர்கள் இறந்த போர்க்களத்தில் ஆடியது கொடுகொட்டி, இது காத்தற் பொருளைக் கொண்டது.

இறைவன் திரிபுரம் எரித்தகாலத்தில் ஊழிக்காலக் காற்றைப்போல் சுழன்று ஆடிய கூத்து பாண்டரங்கம் ஆகும்.

பிரமகபாலத்தை ஏந்தி இறைவன் ஆடியது காபாலமாகும்.

கொடுகொட்டி, திரிபுரம் எரிகின்ற காலத்துக் கைக்கொட்டி ஆர்த்து ஆடியதால் அப்பெயர் பெற்றது என்பர். இது கொட்டிச் சேதம் எனவும் அழைக்கப்பட்டது என்பதைச் சிலப்பதிகாரம் நடுகற்காதையில் கூத்தச் சாக்கையர் ஆடும் கூத்துகளை விளக்கும்போது இளங்கோவடிகள் காட்டுகின்றார். பாண்டரங்கம் இறைவன் பாரதி வடிவில் வெண்ணீறணிந்து ஆடியது ஆதலின் இது பெண்கள் ஆடும் ஆட்டம் என்பது பெறப்படும்.

திருமூலரும் இறைவனது கூத்துக்களைக் காட்டுகிறார்.* ஆடல் வல்லானை அகமார்க்கத்திற் கண்டும் புறமார்க்கத்திற் கண்டும் சுவைத்தவர் திருமூலர். எங்கும் இறைவன் ஆட்டம், எங்கெங்கும் தோன்றுவன அவனருள் விளையாட்டாகிய நடனமே என்று கண்டவர் திருமூலர். இறைவன் கூத்தினைச் சிவானந்தக் கூத்து, சுந்தரக்கூத்து, பொற்பதிக்கூத்து, பொற்றில்லைக்கூத்து, அற்புதக்கூத்து என்று ஐவகையாக அவர் காட்டுகிறார். இவற்றையன்றி 'திருக்கூத்துத் தரிசனம்' என்னும் தலைப்பில் 82 பாடல்களில் திருக்கூத்தின் தத்துவத்தையும் திருவுருவ அமைப்பையும் அவர் நன்கு விளக்குகின்றார்.

திருமூலரை அடுத்துக் காலத்தால் முற்பட்ட காரைக்கால் அம்மையார் தமது திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் ஆடல்வல்லானைப் பரவுகின்றார்; அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க வேண்டும் என்பது தான் அவர் கேட்கும் வரம்.

தேவார ஆசிரியர்களான திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், சுந்தரரும் ஆடல்வல்லானைப் பாடிப்பரவிய பாடல்கள் பல. தில்லைபாதி திருவாசகம் பாதி என்பது பழமொழி. மணிவாசகர் தில்லைக்கூத்தனைத் தெய்வத்தமிழில் தித்திக்கச் செய்கிறார். சேரமான் பெருமாள் நாயனார் தினமும் திருக்கூத்தின் சிலம்பொலி கேட்டவர் என அறிகின்றோம். அவர் பொன் வண்ணத்தந்தாதி ஆனந்தக்கூத்தனின் அழகு வெள்ளத்தில் நம்மை திளைக்கச் செய்கின்றது. பட்டினத்தார் பாடியுள்ள கோயில் நான்மணிமாலை தில்லைக்கூத்தன் திருவருளைச் சொரிகின்றது. தேவாரத் திருமுறைகளைத் தொகுத்துதவிய நம்பியாண்டார் நம்பி, ஆடல்வல்லானை அனுபவித்துப்பாடிய பனுவல் கோயில் திருப்பண்ணியர் விருத்தமாகும். தில்லைக்கூத்தனின் இன்ப வெள்ளமே பெரியபுராணம்.

---

* கொடுகொட்டி பாண்டரங் கோடுசங்கார
நடமெட்டோடைந்தாறு நாடியுள் நாடும்
திடமுற் றெழுந்தேவ தாருவாந்தில்லை
வடமுற்றமாவன மன்னவன் தானே. திருமந்திரம். 2733.

வடமொழியில் பரத சூடாமணி என்னும் நூலில் ஐந்தொழில் தாண்டவங்களாக—அகோர தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், ஆச்சர்ய தாண்டவம், ஆனந்த தாண்டவம், சௌந்தரிய தாண்டவம் என்பன பேசப்படுகின்றன. பரதசார சங்கிரகம் என்னும் நூலில் அற்புதத் தாண்டவம், அநவரத தாண்டவம், ஆனந்த தாண்டவம், பிரளய தாண்டவம், சங்கார தாண்டவம் என்னும் ஐவகைத் தாண்டவங்கள் காட்டப் படுகின்றன.

தாண்டவம் என்ற சொல் 'தட்' என்ற வேர்ச் சொல்லிலிருந்து பிறந்தது என்பர். தட்—பூமியைத்தட்டுதல். ஜதியே இதன் சிறப்பு அம்சமாகும். தட்டு தலையுடையது தாண்டவமாயிற்று. தண்டுவாகிய திருநந்தி தேவரால் பரவியதால் இது தாண்டவம் ஆயிற்று என்பாரும் உளர். இனி 'பரதம்' என்ற சொல்லைக் காண்போம். இது பாவம், ராகம், தாளம் என்ற மூன்றின் முதலெழுத்தொலியான ப-ர-த என்பதன் இணைப்பு என்பர். இதனை நாட்டியம் எனவும் கூறுவர்.

நாட்டியம் இருவகைப்படும்: தாண்டவம், லாஸ்யம் என்பன. மென்மையான கூத்துக்கள் லாஸ்யம் அல்லது லலிதம் எனப்படும். காமச்சுவையைச் சிறப்பாகக் கொண்டவை இவை. இவை ஏழு வகைப்படும்: சுத்தலாஸ்யம், தேசிலாஸ்யம், பிரேரணாலாஸ்யம், பிரேங்கணாலாஸ்யம், குண்டலிலாஸ்யம், தண்டிகாலாஸ்யம், கலசலாஸ்யம் என்பன. இவற்றுள் சுத்தலாஸ்யம் ஏழு வகைப்படும். அவை வருமாறு:

1.	தட்சிணப் பிரமணம்	—	வலப்பக்கமாகச் சுழலுதல்.
2.	வாமப் பிரமணம்	—	இடப்பக்கமாகச் சுழலுதல்.
3.	லீலாப் பிரமணம்	—	விளையாட்டாகச் சுழலுதல்.
4.	புஜங்கப் பிரமணம்	—	பாம்பு போலச் சுழன்று ஆடுதல்.
5.	வித்யுத் பிரமணம்	—	மின்கொடிபோல அசைந்தாடல்.
6.	லதாப் பிரமணம்	—	கொடிபோல் அசைந்தாடல்.
7.	ஊர்த்துவ தாண்டவம்	—	காலை மேலே தூக்கி நின்றாடுதல்.

இவ்வேழும் சிவபெருமான் ஆடியன.

தேசிலாஸ்யம் ஐந்து வகைப்படும்: நிருஞ்சிதம், குஞ்சிதம், ஆகுஞ்சிதம், பார்சுவகுஞ்சிதம், அர்த்தகுஞ்சிதம் என்பன. இவை பார்வதி ஆடியவை.

பிரேரணாலாஸ்யம்	—	பார்வதி ஆடியவை.
பிரேங்கணாலாஸ்யம்	—	கலைமகள் ஆடியது.
குண்டலிலாஸ்யம்	—	திருமால் ஆடியது.
தண்டிகாலாஸ்யமும் கலசலாஸ்யமும்	—	திருமகள் ஆடியவை.

சிவபெருமானுடைய ஏழுவகைத்தாண்டவங்கள் ஆகமங்களில் முக்கியமாகப் பேசப்படுகின்றன.

1. **ஆனந்த தாண்டவம் :** சிவபெருமான் நான்கு கரங்களும், மூன்று கண்களும், பரந்தசடையும், பொன்னிறமும் கொண்டவராய், மயில்தோகை சூடிய முடியில் வலப்பக்கம் பிறையும் ஊமத்தமலரும், வலச்சடையின் நுனியில் கங்கையும் புனைந்து, வலக்காதில் மகர குண்டலமும், இடக்காதில் இலையும் பூண்டு, அணிகள்பல தரித்து, புலித்தோல் உடுத்து, கால்களில் கிண்கிணிமாலை அணிந்து, பின்வலக்கையில் உடுக்கையும், பின் இடக்கையில் தீயகலும், முன் வலக்கையில் அபயமும் கொண்டு முன் இடக்கையை நீட்டி ஆடும் தாண்டவம் இது. பெருமான் தனது வலக்காலை முயலகன் மீது ஊன்றி இடக்காலைத் தூக்கி வலப்பக்கமாக நீட்டி ஆடுகின்றார். இதுவே தில்லைத் திருச்சிற்றம்பலவனின் தாண்டவம். தில்லையில் இது தனிச்சிறப்புடையது.

2. **சந்தியா தாண்டவம் :** நான்கு கரங்களும் மூன்று கண்களும் ஜடா மகுடமும் உடையவராய், வலக்கரங்கள் இரண்டிலும் அபயமும் உடுக்கையும், இடக் கரங்கள் இரண்டிலும் மயில்தோகையும் விஸ்மித ஹஸ்தமும் கொண்டு தனது இடது காலின் கீழே முயலகன் இன்றி, இடது காலை வளைத்து முன்விரலைப் பீடத்தில் ஊன்றி, வலக்காலைத் தூக்கி இடப்பக்கமாக வளைத்து நீட்டி இத்தாண்டவத்தைச் சிவபெருமான் ஆடுகின்றார்.

3. **உமா தாண்டவம் :** ஆறுகரங்களும் முக்கண்ணும் ஜடாமகுடமும் கொண்டு பொன்னிற வண்ணராய், தனது மூன்று வலக்கரங்களிலும் முறையே அபயம், உடுக்கை, சூலம் ஏந்தி, இடக்கரங்கள் மூன்றிலும் கபாலம், விஸ்மித ஹஸ்தம், கஜ ஹஸ்தம் கொண்டு இடப்பக்கம் உமாதேவியுடனும், சடையில் கங்கையுடனும், அனைத்து அணிகலன்களையும் பூண்டு புலித்தோல் உடுத்து இத்தாண்வம் புரிகின்றார் சிவபெருமான்.

4. **கௌரி தாண்டவம் :** நான்கு கரங்கள் உடையவராய், செந்நிறத்தவராய், புன்னகை தவழும் திருமுகங்கொண்டு, கபாலம், கொக்கிறகு, ஊமத்தைமலர், எருக்க மலர், பிறை ஆகியவற்றைச் சூடிய ஜடா முடியுடன், பரந்த சடையையும் பாம்பு வளையல்களையும் புனைந்தவராய், முயலகன் மீது வலக்காலை ஊன்றி, இடக்காலை வளைத்து, வலக்கரங்களில் அபயமும் உடுக்கையும், இடக்கரங்களில் தீயகலும் புலியும், தரித்து, இடப்பக்கம் கௌரியும் வலப்பக்கம் நந்தியும் விளங்க, முடியை இடப்பக்கம் சாய்த்து இறைவன் இத்தாண்டவம் ஆடுகின்றார்.

5. **காளிகா தாண்டவம் :** எட்டு கரங்களும் முக்கண்ணும் பரந்த சடையும் கொண்டு, இடக்காலைத் தூக்கி வலக்காலை முயலகன் மீது ஊன்றி, வலக்கரங்கள் நான்கிலும் அபயம், உடுக்கை, சூலம், பாசமும், இடக்கரங்கள் நான்கிலும் கபாலம், தீயகல், மணி, கஜஹஸ்தமும் கொண்டு இறைவன் இத்தாண்டவம் புரிகின்றார். சில நூல்களில் இது சண்ட தாண்டவம் எனவும் கூறப்படும். (திருவாலங்காடு)

6. **திரிபுர தாண்டவம் :** சிவபெருமான் பதினாறு கரங்களுடன் இத்தாண்டவம் புரிகின்றார். வலக்கரங்கள் எட்டிலும் அபயம், தமருகம், வஜ்ஜிரம், சூலம் முதலியனவும், இடக்கரங்களில் புத்தகம், வரதம், கேது, கேடகம், கடம், கபாலம்

முதலியனவும் தரித்து, ஏனைய அங்கங்கள் முன்னைய நிருத்தம் போல் அமையப் புரியும் தாண்டவம் இது. இத்தாண்டவத்தில் பெருமானுக்கு இடப்பால் கௌரியும் வலப்பால் அஞ்சலி ஹஸ்தமுடன் முருகனும் விளங்குவர்.

7. **சங்கார தாண்டவம்:** எட்டுக்கரங்களும், மூன்று கண்ணும், பரந்த சடையும் கொண்டு பெருமான் இயற்றும் இத்தாண்டவத்தில், அவர்தனது இடது காலை முயலகன் மீது ஊன்றி தூக்கிய வலக்காலுடன் திகழ்கின்றார். புலித்தோல் அவரது மேலாடையாக விளங்குகிறது. அவரது வலக்கரங்கள் நான்கிலும் அபயம், சூலம், பாசம், தமருகம், ஆகியவும், இடக்கரங்களில் கபாலம், அக்னிபாத்திரம், கஜஹஸ்தம் முதலியனவும் அமைந்துள்ளன. அவருக்கு இடப்பக்கம் கௌரியும் வலப்பக்கம் நந்திதேவரும் நிற்கின்றனர்.

சிவபெருமானுடைய தாண்டவங்கள் அனைத்துள்ளும் முதன்மையாகத்திகழ்வது நடராஜர் அமைப்பாகும். இவ்வடிவம் தில்லைச்சிதம்பரத்தில் சிறப்பாகவும் ஏனைய தலங்களில் பொதுவாகவும் அமைந்துள்ளது.

"எந்நடராஜப்பெருமானுக்குச் சதாசிவ மூர்த்தி ஆசனமாக அமைகிறாரோ, அவரே நவந்தரு பேதங்களுக்கும் மேலானவர். இந் நவந்தரு பேதங்களும் யாரிடத்தில் ஒடுங்குகின்றனவோ, அவரே துவாதசாந்தப் பெருவெளியில் பரமானந்தத் தாண்டவம் புரிகின்றார். ஆதலால் இத்தாண்டவமூர்த்தியே மிகமேலானவர். ஏனைய மூர்த்தி பேதங்களை விட்டுத் தாண்டவமூர்த்தியையே இம்மைமறுமை இன்பங்களுக்காக ஞானியர் தியானிக்கின்றனர். தாண்டவமூர்த்தி அருட்சோதிப்பெருமான்; பஞ்ச கிருத்திய தாண்டவமூர்த்தி" என மகுடாகமும் வாதுளோத்தரமும் போற்றுகின்றன. தில்லைப் பொன்னம்பலத்தில் நிகழும் இத்தாண்டவம் நாதாந்த நடனம் எனக் குறிக்கப் படுகிறது.

இனி நடராஜ தத்துவத்தைச் சற்று ஆராய்வோம்.

திருமுகம்: எல்லையற்ற அழகும் இனிய தண்ணளித்திறனும் கொண்டு தலைமைப்பாட்டினைக்குறிக்கும்.


பனித்தசடை: "நுண்சிகைஞானமாம்"—திருமந்திரம்; "சைவம் விட்டிட்ட சடைகளும்"—திருவிசைப்பா. சடைசிவநெறிக்குரிய தவஒழுக்கச்சிறப்பையும் காட்டுகின்றது. "தாழ்சடைப்பொலிந்த அருந்தவத்தோன்" என்பது புறநானூறு.

கங்கை: "நில்லாத நீர்சடைமேல் நிற்பித்தானை"—அப்பர். இது இறைவன் பேராற்றலையும் வேகங்கெடுத்தாளும் வித்தகத்தையும் விளக்குவது.

பிறைசூடுதல்: சரண் என அடைந்தவரைத் தாங்கித் தாழ்வு நீக்கிப்பாதுகாக்கும் வள்ளல்தன்மை. "தன் அடைந்தார்க்கு இன்பங்கள் தருவானை"—சம்பந்தர். "சார்ந்தவர்க்கு இன்பங்கள் தழைக்கும் வண்ணம் நேர்ந்தவன்"—சம்பந்தர்.

குனித்தபுருவம் : பரதக்கலையின் மெய்ப்பாடு உணர்த்துவது. தன்பாற் போந்து குறையிரந்து முறையிடும் அடியார்களின் விண்ணப்பங்களைக் கூர்ந்து நோக்கி ஊன்றிக் கேட்டருளும் கருணைத்திறத்தினைக்காட்டுவது.

குமிண்சிரிப்பு : அடைக்கலம் புகுந்தோரை, 'என்றுவந்தாய்' என்று அருளோடு வரவேற்று, பிழைபொறுத்து வாழ்வளித்து மகிழ்விக்கும் மாட்சியைக் குறிப்பது.



பவளமேனி : இறைவன் தீ வண்ணத்தான்; நெருப்பை யொத்தவன். நெருப்புத் தன்பால் எய்தும் பொருள்களை எல்லாம் தூய்மையாக்கிப் புனிதம் அடையச் செய்வது போல, இறைவனும் தன் அடியார்களின் மாசுகளை நீக்கி-மலநீக்கி மாண்புறச் செய்யும் அருட்டிறத்தைக் குறிப்பது.

பால்வெண்ணீறு : எப்பொருளும் இறுதியில் எய்தும் நிலை சாம்பல்தானே! நீறு மற்றொன்றாக மாறி அழியாது. ஆகவே பால் வெண்ணீறு தூய இயல்பினையும் அழியாத் தன்மையையும் குறிக்கின்றது. தொழுதெழுவார் வினைவளம் நீறெழ இறைவன் நீறு அணிகின்றார். மேலும் செந்நிற மேனியில் வெண்ணீறு அணிந்த கோலம் எவர் நெஞ்சையும் கவர்ந்து பிணிக்கும் பான்மையுடையது.

நெற்றிக்கண் : மேல் நோக்கிய நிலையில் நிமிர்ந்து நிற்கும் நெற்றிக்கண் சிவபிரானின் தனிப்பெரும் முதன்மையை உணர்த்துவது, இது சிவபெருமானுக்குரிய சிறப்பு அடையாளம்; "கண்ணுதலான்."

நீலகண்டம் : ஒருவரும் உண்ணாத நஞ்சு உண்டும் இருந்தருள் செய்யும் இறைவனின் நயத்தக்க நாகரிக நலனையும் பெருங்கருணைத் திறத்தையும் காட்டுவது. "கறைமிடறு அணியலும் அணிந்தன்று, அக்கறை பதினெண்கணனும் ஏத்தவும் படுமே" —புறநானூறு.

உடுக்கை : தமருகம் எனப்படும் உடுக்கை, இறைவன் உலகப் பொருள்களைப் படைக்கும் சிருஷ்டியைக் குறிப்பது. பரநாதத்தைப் பரமன் தோற்றுவிக்கும் பான்மையை இது காட்டுகிறது.

நெருப்பு : இறைவன் இடக்கரத்தில் ஏந்தியுள்ள நெருப்பு, உயிர்களின் பிறவித் தளைகளின் இளைப்பினை நீக்கும் பொருட்டுச் செய்யும் சம்ஹாரத் தொழிலைக் காட்டுவது. "அழிப்பு இளைப்பாற்றல்" —சிவஞான சித்தியார்.

அபயகரம் : அமைந்தகை காத்தல் தொழிலைக் குறிப்பது. அடியார்களுக்கு ஆறுதல் கூறித் தேற்றும் நிலை இது.

வீசியகரம் : யானையின் துதிக்கையைப் போன்று திகழும் இவ்விடக்கை கஜஹஸ்தம் எனப்படும். இக்கையின் விரல், தூக்கிய திருவடியைக் காட்டுகின்றது. "திருவடியை நம்பித் தொழுக. இது உம்மை ஈடேற்றும்" என்பது குறிப்பு.

எடுத்த திருவடி : இறைவனின் இடது திருவடி இது; அம்பிகைக்கு உரியது. "ஆடஎடுத்திட்ட பாதம் அன்றோ நம்மை ஆட்கொண்டதே"—அப்பர். துன்பக் கடலிடைத் தோணித் தொழில்பூண்டு தொண்டர் தம்மை இன்பக் கரை முகந்து ஏற்றும் திறத்தைக் காட்டுவது.

ஊன்றிய திருவடி : இறைவனின் வலது திருப்பாதம் இது. முயலகனை மிதித்து அவன் மீது ஊன்றிய நிலை. மலத்தை முழுதாக அழித்துவிடாமலும், மலத்தால் உயிர்கள் பெரிதும் வருந்தாமலும், வினைப்பயன்களை உயிர்கள் நுகர இறைவன் இயற்றும் மறைத்தல் தொழிலைக் குறிப்பது.

முயலகன் : இது ஆணவ மலத்தைக் குறிப்பது. ஆணவம் என்றும் அழிவதில்லை. முயலகன் இறைவனுக்குப்படி நிலையாக அமைந்துள்ளதைப் போன்று, ஆணவமலமும் உயிர்களின் இறையின்ப நுகர்ச்சிக்கு ஓர் ஆற்றற்காரணமாவதை இது குறிக்கின்றது. முத்திநிலையில் உயிர்கள் மாட்டு ஆணவமலம் அடங்கிக் கிடப்பதைப் போன்று, முயலகனும் இறைவன் திருவடியின்கீழ், மாயாதே தன் சத்தி மாய்ந்து கிடக்கின்றான்.

தெற்கு நோக்குதல் : ஆடல்வல்லான் தெற்கு நோக்கியே ஆடுகின்றார், யமபயத்தை நீக்கியருளி நம்மை உய்விப்பதற்காக. தென்றற்காற்றின் மீதும் தென் தமிழின் மீதும் உள்ள விருப்பாலும் தெற்கு நோக்கி இறைவன் ஆடுகின்றார் என நயம்படக் கூறுவார் திருவிளையாடற் புராண ஆசிரியர் **பரஞ்சோதி முனிவர்.**

சைவசித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றன **"உண்மை விளக்கத்"**தில் நடராஜ தத்துவ உண்மைகளைக் காட்டுகின்றார் திருவதிகை மனவாசகம் கடந்தார். ஆடல் வல்லான் திருவுருவம் ஐந்தொழில் விளக்கமாக அமைந்துள்ளதை அழகாகக் காட்டுகிறார்.*

தோற்றம் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு. (உண்மை விளக்கம் : 36)

*திருமந்திரம் 2799-ம் காண்க.

இறைவன் உடுக்கை—ஆக்கல் (சிருட்டி); அமைத்தகை—காத்தல் (ஸ்திதி); ஏந்திய அனல்—அழித்தல் (சம்ஹாரம்); ஊன்றிய திருவடி—மறைத்தல் (திரோபவம்); எடுத்ததிருவடி—முத்தி (அனுக்கிரகம்).

மாயை தனைஉதறி வல்வினையைச் சுட்டுமலஞ்
சாய அமுக்கிஅருள் தானெடுத்து—நேயத்தால்
ஆநந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பரதந் தான் (உண்மை விளக்கம் : 37)

மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத்
தானந்த மானிடத்தே தங்கியிடும்—ஆநந்த
மொண்டிருந்த நின்றாடல் காணுமருண் மூர்த்தியாக்
கொண்டதிரு அம்பலத்தான் கூத்து. (உண்மை விளக்கம் : 38)

இறைவன் துடி (உடுக்கை)யைக் கொட்டுவதால் ஆன்மாக்களின் மாயையை உதறுகிறான்; ஏந்திய நெருப்பால் கன்ம மலத்தினைச் சுடுகின்றான்; ஊன்றிய திருவடியால் ஆணவ மலத்தை அழுந்தித் தேய்விக்கிறான்; தூக்கிய திருவடியால் உயிர்களைப் பிறவிக் கடலிலிருந்து எடுக்கிறான்; அபயகரத்தால் உயிர்களை இன்பக் கடலில் திளைக்கச் செய்கின்றான். மும்மலங்களையும் நீக்கி ஆன்மாவை ஆனந்தத்தில் ஆழ்த்தும் அம்பலத்தான் கூத்தினை அழகாகக் காட்டி விடுகிறார் உண்மை விளக்கத்தின் ஆசிரியர்.

இறைவனது திருக்கூத்து ஐந்தெழுத்தின் வடிவம். அவன் மந்திரவடிவினன் அல்லவா! நமசிவய என்பது தூலபஞ்சாக்கரம் எனப்படும். திருவடியில் **ந**; வயிற்றில் **ம**; தோளில் **சி**; முகத்தில் **வ**; திருமுடியில் **ய** என்று ஆடல் வல்லான் வடிவம் அமைந்துள்ளது. இவ்வமைப்பு இலயாங்கம் எனப்படும். ஊன நாடகம் என்ற தலைப்பில் இக்கருத்தைக்காட்டுகிறார் மனவாசகம் கடந்தார் :

ஆடும்படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியி லே**ந**கரம்—கூடு
மகரம் உதரம் வளர்தோள் **சி**கரம்
பகருமுகம் **வா**முடி**ய**ப் பார். (உண்மை விளக்கம் : 33)

சிவயநம என்பது சூக்கும பஞ்சாட்சரம் ஆகும். துடி (உடுக்கை)யில் **சி**; வீசும்கரத்தில் **வ**; அபயகரத்தில் **ய**; ஏந்திய நெருப்பில் **ந**; முயலகனில் **ம** எனக்கொண்டு ஆடல் வல்லான் அமைப்பு விளங்குவதைக் காணலாம்.* இதற்கு ஓங்கார வடிவமே திருவாசியாகிறது. ஓங்காரத்திற்குள்ளே சுடராகப் பொலிவுறும் இவ்வற்புதவடிவை ஆங்காரமற்றவர்கள் அறிவர்; அம்பலத்தானின் இப்பாடலைப் பெற்றவர்கள் பிறப் பற்றவர்கள் அன்றோ! ஞானநாடகம் என்ற தலைப்பில் இக்கருத்தை உண்மை விளக்கம் பேசுகின்றது :

---

*திருமந்திரம் 2798-ம் காண்க.

சேர்க்கும்துடி சிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கில்இறைக்
கங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தாங்கு மகரமது தான். (உண்மைவிளக்கம் : 34)

ஓங்கார மேநற் றிருவாகி யுற்றதனின்
நீங்கா எழுத்தே நிறைசுடராம்—ஆங்கார
மற்றார் அறிவர்அணி அம்பலத்தான் ஆடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின். (உண்மை விளக்கம் : 35)

இச்சிவ தாண்டவத்தின் சிறப்பு மூவகையில் அமைந்துள்ளது.

1. திருவாசியால் குறிக்கப்படும் இப்பிரபஞ்சத்துள்ளே அனைத்து இயக்கங்களுக்கு அவரது தாண்டவமே மூலமாக அமைந்துள்ளது.

2. மாயையின் தலையிலிருந்து எண்ணிறந்த உயிர்களை விடுவிப்பதையே அவரது தாண்டவம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

3. பிரபஞ்சத்தின் மையத்தானமான சிதம்பரம் நமது இதயத்தானமாகும். இதயத்திலே தான் அவரது நடனம் நிகழ்கிறது.

உண்மை விளக்கத்தில் காட்டப் பெற்ற விளக்கங்கள் திருமூலரால் முன்னமேயே காட்டப் பெற்றவைதாம் என்பதைத் திருமந்திர நூலைப் பயின்றோர் அறிவர். உலக உயிர்கள் அனைத்தையும் தாமாய் நின்று * ஆடும் பரமனின் கூத்தும் அதன் அங்கமும் அனைத்துமே ஆனந்த மயம் என்கின்றார் திருமூலர் :

இடங்கொண்ட சக்தியும் எந்தை பிரானும்
தடங்கொண்டு நின்றமை யானும் அறிந்தேன்
படங்கொண்டு நின்ற இப் பல்லுயிர்க் கெல்லாம்
அடங்கலும் தாமாய் நின்று ஆடுகின்றானே—திருமந்திரம் : 2768.

ஆனந்தம் ஆடரங்கு ஆனந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்லியம் ஆனந்தம் வாச்சியம்
ஆனந்தமாக அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்துகந் தானுக்கே—திருமந்திரம் : 2725

இங்ஙனம் ஆடல்வல்லான் அருள் வடிவம் உண்மையின் வடிவாக, அன்பின் வடிவாக, கருணையின் வடிவாக, இன்பவடிவாக, ஆனந்தவடிவாகத் திகழ்கின்றது.

---

* உலகமே உருவமாக யோனிகள் உறுப்பதாக
இலகுபே ரிச்சா ஞானக் கிரியையுட் கரணமாக
அலகிலா உயிர்ப்புல்ன்கட் கறிவினை யாக்கியைந்து
நலமிகு தொழில்களோடு நாடகம் நடிப்பன் நாதன்—சிவஞானசித்தியார் சுபக்கம்.

அருணகிரிநாத சுவாமிகள் தனது மதுரைத்திருப்புகழில் ஆடல்வல்லான் தத்துவத்தைக் காட்டும் பாங்கும் ஈண்டு அறிந்தின்புறத்தக்கது. அகரம் முதலான அட்சரங்கள் ஐம்பத்தொன்றும். மண், காற்று, விண், நீர், தீ இவையனைத்தும் கூடிட ஒரே நேரத்தில் ஒருருவமாய்க் கூத்தனாய் அமைந்து, முதற் பொருளாக விளங்கி, தேவர்கள் வழிபடத் தில்லைப் பொன்னம்பலத்தில் தேவிபாட அமலனான, விமலனான இறைவன் ஆடுகின்றார் :

"அகர மாதியாம் அக்ஷரங்கள்
அவனி கால்வி ணாரப் பொடங்கி
அடைய ஏக ரூபத்தில் ஒன்றி முதலாகி
அமரர் காண வேஅத்த மன்றில்
அரிவை பாட ஆடிக் கலந்த
அமல நாதனார்..."

—முகமெலா......திருப்புகழ்)

அணுக்களின் அசைவும், உயிர்களின் இயக்கமும், மலநீக்கமும், ஐந்தொழில் விளக்கமும், கலையமைப்பும் தன்னுட்கொண்ட ஆடல்வல்லான்வடிவம் அறிவியல், வேதாந்தம், சமயம், கலை ஆகிய பலதுறையினரும் போற்றும் வகையில் சிறப்பாக அமைந்துவிளங்குகின்றது. சிவபெருமானது நடனம் விறகில் வெப்பம் மறைந்திருத்தல் போன்று மனத்திலும் பொருளிலும் அமைந்த ஆற்றலை வெளிப்படுத்தி அவற்றையும் நடனமிடச் செய்துவிடுகிறது அன்றோ !

இனி, ஆகமங்களில் காட்டும் நடராஜர் வடிவ அமைப்பினையும் ஈண்டு காண்போம். அம்சுமத் பேதாகமப்படி, இவ்வடிவில் சிவபெருமானுடைய முன் இடக்கரம் தண்ட/கஜஹஸ்தமாகவும், பின் இடக்கரம் உள்ளங்கையில் அக்னி/அகல் ஏந்தியதாகவும் இருக்கும். முன்வலக்கை அபயஹஸ்தமாகும். இதில்முன்கையில் அவர் சர்ப்பவளையம் பூண்டிருப்பார். இதனைப் **புஜங்கவலயம்** எனவும் அழைப்பர். பின் வலக்கையில் டமருகம் (உடுக்கை) இருக்கும். அவரது வலக்கால் சற்றே வளைந்து முயலகன் மீது ஊன்றியிருக்கும். இடதுகால்தூக்கிய திருவடியாக இருக்கும். அவரது தலையில் ஊமத்தை, அறுகு மலர்மாலைகளுடன் ஜடாமகுடமும் பாம்பும் கபாலமும் பிறையும் விளங்கும். ஜடாமகுடத்திலிருந்து இருபுறமும் 5, 6, 7 அல்லது 11 சடைகள் பரந்து நேராகவோ வளைந்தோ காணப்படும். புலித்தோலாடை அணிந்து விளங்கும் இவரது விரல்களில் மோதிரங்கள் ஒளி வீசும். இடப்பக்கம் பார்வதி தேவி நிற்பள்.

உத்தர காமிகாகமப்படி, நடராஜர்வடிவத்தில், சடையின் வலப்புறம் கங்கா தேவியின் தலைவிளங்கும். சடையின் தென்புறம் பிறை இருக்கும். இவருக்கு வலப்

பால் பிருங்கி முனிவர் அல்லது பத்ரகாளி நிற்பள். இது **புஜங்கத்ராஸம்*** எனவும் அழைக்கப்பெறும். இத்தகையவடிவங்களைத் திருவாலங்காடு, கொட்டபாடி, இராமேசுவரம், பட்டீசுரம் கோயில்களில் காணலாம். நடராஜரின் தூக்கிய திருவடி, அவரது ஊன்றிய காலின் முழங்காலை விட உயர்ந்திருப்பின் அது **புஜங்கலளிதம்** எனப்படும்.

தமிழகக் கட்டிட மற்றும் சிற்பக்கலையின் அடித்தளமாக விளங்குவன பல்லவர்களது குடைவரைக் கோயில்கள். மாமல்லபுரம் தர்மராஜர் ரதத்தில் நடராஜர் திருவுருவம் உள்ளது, பல்லவர்களைக் காட்டிலும் பாண்டியர்தம் குடைவரைக் கோயில்களில்தான் ஆடல்வல்லான் திருவுருவம் முதன்மை பெற்றுள்ளது எனலாம். இராமநாதபுரம் மாவட்டம் திருமலை, செவிலிப்பட்டி, குன்றக்குடி, நெல்லை மாவட்டம் திருமலாபுரம் ஆகிய குடைவரைக் கோயில்களில் ஆடல்வல்லான் திருவுருவங்கள் உள்ளன. திருமலை, செவிலிப்பட்டி, திருமலாபுரம் வடிவங்களில் நான்கு கரங்களும், குன்றக்குடி வடிவத்தில் எட்டுக்கரங்களும் காணப்படுகின்றன. இவ்வடிவங்களில் திருவாசியோ முயலகனோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. சோழர்கால கோயில்கள் சிலவற்றிலும் கருவறைத் தென்சுவரில் நடராசர் வடிவம் காணப்படுகின்றன. சோழர் காலத்திலேயே செப்புத் திருமேனிகளாக ஆடல்வல்லான் வடிவங்கள் உருப்பெற்றன.

வடஇந்தியாவில் ஆடல்வல்லான் எட்டுக்கரங்களுடன் காணப்பெறுகிறார். திருவாசியோ, முயலகனோ அங்கே காணப்படவில்லை.

பொதுவாக நடராஜர் திருவுருவம் அனைத்துச் சிவாலயங்களிலும் இடம் பெற்றிருப்பினும் சில திருக்கோயில்களில் தனித்தன்மை வாய்ந்த திருவுருங்களைக் காண்கிறோம். தலபுராணப்படி அங்கங்கே சில வேறுபாடுகளும் காணப்படுகின்றன. எடுத்துக் காட்டாகத் திருவாலவாய் எனப்படும் மதுரையம்பதியில் ஆடல்வல்லான் கால்மாறியாடுகிறார். இதில் அவரது இடக்கால் சற்றே வளைந்துள்ளது. முயலகன் முதுகில் அது ஊன்றப்பட்டுள்ளது. முழங்கால் நாபீ சூத்திரத்தை அடைந்து காணப் படுகிறது. வலதுகாலை உயர்த்தி இடதுகாலை நோக்கி அவர் வீசியாடுகிறார். இத்தாண்டவம் 'அதிரவீசி ஆடுதல்' எனவும் அழைக்கப்படுகிறது. பெரும்பற்றப் புலியூர் நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் இது காட்டப்படுகிறது.

---

*பரத நாட்டிய சாஸ்த்திரத்தின் உரையாசிரியரான அபிநவ குப்தாசாரியர் தானியற்றிய " நாட்டிய வேதவிவர்த்தி " என்னும் நூலில் புஜங்கத்ராஸம் என்ற சொல்லை விளக்குகிறார் : நடனமாடுபவர் தன்னருகே ஒரு பாம்பினைக்கண்டவர் போலத் திடீரென்று தனது காலை உயர்த்துகின்றார். அவர் சமநிலையற்றவராக இருப்பார். இந்நடனத்தில் ஒருகரம் டோல ஹஸ்தமாகவும் மற்றொன்று கடக ஹஸ்தமாகவும் இருக்கும்.

சிவாகமங்களில் சிவபெருமான் 108 தாண்டவங்கள் ஆடியதாகக் கூறப்பட்டுள்ளன. பரத நாட்டிய சாஸ்திரத்தில் பேசப்படும் நூற்றெட்டுக்கரணங்கள் சிவபெருமானுடைய 108 தாண்டவங்களுக்கு இணையானவை. தில்லைக் கோயில் கிழக்குக் கோபுரத்தின் இருமருங்கிலும் 108 நடனச் சிற்பங்கள் உள்ளன. குடந்தை சாரங்கபாணி கோயிலிலும் இத்தகுசிற்பங்கள் உள்ளன. (See M.E.R. 1913-14.) 108 நடனவகைகளைப் பிற்சேர்க்கையில் காண்க.

கதிதரு மறைகள் பாடக் கருணைமெய் காட்டித் தென்னன்
துதிசெய ஆருங்காணாச் சோதிநின் றதிரவீசித்
திதமுறு மதுரை யந்தண் சிற்பரவெளியாங் தொல்லைப்
பொதுவினுள் மாறியாடும் பூங்கழல் போற்றி! போற்றி! —கடவுள் வாழ்த்து. 16

கீழ்வேளூரிலும் இராமநாதபுரம் மாவட்டம் திருப்புத்தூர் வன்னியன் சூரக்குடி கோயிலிலும் கால்மாறியாடிய திருவுருவம் சிறப்புடையது. திருப்புத்தூர்ப் புராணத்தில் ஏழுநடனத் தலங்கள் காட்டப் பெறுகின்றன.



காளி



ஊர்த்துவ தாண்டவம்

(மதுரை கோயில் தூண் சிற்பம்)

எண்	ஊர்	சபை	தாண்டவம்	செயல்	ஸ்வரம்
1.	திருநெல்வேலி	தாமிர சபை	காளிகா தாண்டவம்/ முனிதாண்டவம்	படைத்தல்	ஸ
2.	திருப்புத்தூர்	சிற்சபை	கௌரி தாண்டவம்	காத்தல்	ரி
3.	மதுரை	இரஜத சபை (வெள்ளியம்பலம்)	சந்தியா தாண்டவம்	காத்தல்	க
4.	—	நள்ளிருள்	சங்கார தாண்டவம்	அழித்தல்	ம
5.	திருக்குற்றாலம்	சித்திர சபை	திரிபுர தாண்டவம்	மறைத்தல்	ப
6.	திருவாலங்காடு	இரத்தின சபை	ஊர்த்துவ தாண்டவம்	அருளல்	த
7.	தில்லை	கனக சபை	ஆனந்த தாண்டவம்	ஐந்தொழில்	நி

சிதம்பரம் திருக்கோயிலிலுள்ள இரத்தின சபாபதி என்னும் மாணிக்க நடராஜ மூர்த்தியும், திருவுத்தரகோசமங்கைக் கோயிலிலுள்ள மரகத நடராஜ மூர்த்தியும் தனிச் சிறப்புடையதன்றோ !

சப்த விடங்கத் தலங்கள் என்று போற்றப் பெறும் ஏழு தலங்களிலும் ஏழுவித நடனக் கோலங்கள் சிறப்புடையன :

திருவாரூர்	—	அஜபா நடனம்
திருக்கோளிலி	—	பிரமரதாண்டவம்
திருநள்ளாறு	—	உன்மத்த நடனம்
நாகபட்டினம்	—	பாராவார தரங்க நடனம்
திருமறைக்காடு	—	ஹம்ஸ நடனம்
திருவாய்மூர்	—	கமல நடனம்
திருக்காறாயில்	—	குக்குட நடனம்.

நம் தமிழ் நாட்டில் சிறப்பான நடனத்தலங்களாகக் கீழ்க்கண்டவற்றைக் கூறுவர்.

மயிலாடுதுறை	—	மயூர நடனம்
திருக்கடவூர்	—	கால சம்ஹார நடனம்
கண்டியூர்	—	காபால நடனம்
திருக்கோவலூர்	—	சம்ஹார நடனம்
திருவதிகை	—	திரிபுர சம்ஹார நடனம்
திருக்கருப்பறியலூர்	—	தட்ச சம்ஹார நடனம்
திருவிற்குடி	—	சலந்தர சம்ஹார நடனம்
வழுவூர்	—	கஜ சம்ஹார நடனம்
திருக்குறுக்கை	—	சாந்த நடனம்

மேற்கண்டவற்றுள் அட்டவீரட்டத்தலங்களும் அவற்றிற்குரிய நடனங்களும் அமைந்துள்ளதைக் காணலாம். இன்னும் கீழ்க்கண்ட தாண்டவங்களும் சிறப்பாகக் கருதப்படுகின்றன :

அஞ்சிதபாதகரண தாண்டவம்	—	திருச்செங்காட்டங்குடி
அம்மை பாத ஸ்வஸ்திகதாண்டவம்	—	பட்டடைக்கல் (பாதாமி வட்டம்).
அர்த்தமத்தளி கரணம்	—	புவனேஸ்வரம்
அர்த்த ரேசித தாண்டவம்	—	திருமலாபுரம், கிளாக்காடு
அலாதக தாண்டவம்	—	கோலார்-ஆவணி ; கடப்பை-புஷ்பகிரி
ஆனந்த தாண்டவம்	—	ஆனந்த தாண்டவபுரம்.
ஊர்த்துவ தாண்டவம்	—	திருச்செங்காட்டங்குடி
கடிசமம்	—	திண்டிவனம், திருவக்கரை
கால சம்ஹார தாண்டவம்	—	திருச்செங்காட்டங்குடி
சதுர தாண்டவம்	—	கோலார்-ஆவணி, திருப்பரங்குன்றம், நல்லூர், மேலக்கடம்பூர், பட்டடைக்கல், காமக்கூர், சோமங்கலம்
சுந்தர தாண்டவம்	—	கீழ்வேளூர்
ரிஷப தாண்டவம்	—	பட்டடைக்கல்
லதா விருச்சிகம்	—	உடையார் பாளையம், திருமழபாடி.


இனி, இறைவனை வணங்கும் வழிகளுள் ஒன்றாகக் கூத்து கருதப்படுதலை. “ தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி ” என்னும் திருநாவுக்கரசர் திருவாக்கு உணர்த்துகின்றது. திருக்கோயில்களில் நடனமாதர்கள் பணியாற்றியமை கல்வெட்டுக்களால் புலப்படும். இராஜராஜ சோழன் தான் அமைத்த தஞ்சைப் பெரிய கோயிலுக்காகத் தன்னாட்சிக்குட்பட்டிருந்த தொண்ணூற்று ஒன்று கோயில்களினின்றும் நானூறு நடன மகளிரை (தளிச்சேரி பெண்டுகளைக்) கொணர்ந்து தஞ்சையில் குடியமர்த்தியதை வரலாறு பேசுகின்றது.

ஆடல்வல்லானின் அருமை பெருமைகள் விரிக்கிற்பெருகும். நடனச் சிற்பங்கள் மலிந்த நம் ஆலயங்களைப்பேணி, புராதனமான அருங்கலையாம் ஆடலையும் பேணிக் காப்பது நம் கடமை எனக் கொள்வோம். சிதம்பரம் நடராஜர் கோயில், குடந்தை சாரங்கபாணி சுவாமி கோயில், விருத்தாசலம் கோயில், திருவண்ணாமலை அருணாசலேசர் கோயில், தஞ்சைப் பெரிய கோயில்களில் நடன சிற்பங்கள் சிறப்பாக விளங்குகின்றன. இந்தியாவிலேயே முதன் முதலாக நடன வடிவங்கள் கல்லிலே செதுக்கப்பட்டது தஞ்சைப் பெரிய கோயிலின்தான் என்பது அறிஞர் முடிவு.

நிருத்தமூர்த்தி - நடராஜர்




திருவாலங்காடு ரத்னசபை
ஊர்த்துவ தாண்டவம்
பக்கம் : 35




மதுரை வெள்ளியம்பலம்
கால்மாறி ஆடியது
பக்கம் : 33

நிருத்தமூர்த்தி - நடராஜர்



மேலக்கடம்பூர் (தென் ஆற்காடு)
பத்துகரங்கள்
நந்தியின் மீது நடனம்
பக்கம் : 36



சோமங்கலம்—சதுரதாண்டவம்
(செங்கை எம். ஜி. ஆர். மாவட்டம்)

பக்கம் : 36

ஆடல்வல்லான் மாட்சியைக் கூறும் சில பாடல்களைக் கூறி முடிப்பாம்:

குழலின் ஓசை வீணைமொந்தை கொட்ட முழவு அதிரக்
கழலின் ஓசை ஆர்க்க ஆடும் கடவுள் —திருஞானசம்பந்தர்.

பேய்கள் பாடப் பலபூதங்கள் துதிசெயப் பிணமிடு சுடுகாட்டில்
வேய்கொள் தோளிதான் வெள்கிட மாநடம் ஆடும் வித்தகனார்
—திருஞானசம்பந்தர்.

குனிந்தபுருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே —திருநாவுக்கரசர்.

சாட எடுத்தது தக்கன்தன் வேள்வியில் சந்திரனை
வீட எடுத்தது காலனை நாரணன் நான்முகனும்
தேட எடுத்தது தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்
ஆட எடுத்திட்ட பாதம்அன்றோ நம்மை ஆட்கொண்டதே —திருநாவுக்கரசர்.

முடிகொண்ட மத்தமும் முக்கண்ணின் நோக்கும் முறுவலிப்பும்
துடிகொண்ட கையும் துதைந்த வெண்ணீறும் கரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித்தோலும் என்பாவி நெஞ்சில்
குடிகொண்டவா தில்லை அம்பலக் கூத்தன் குரைகழலே. —திருநாவுக்கரசர்.

கருமானின் உரியதளே உடையாவீக்கிக் கனைகழல்கள் கலந்தொலிப்ப
அனல்கை ஏந்தி
வருமானத் திரள்தோள்கள் மட்டித்தாட வளர்மதியஞ் சடைக்கணிந்து
மானேர் நோக்கி
அருமான வாண்முகத்தாள் அமர்ந்துகாண அமரர்கணம் முடிவணங்க ஆடுகின்ற
பெருமானைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம்
பிறவா நாளே. —திருநாவுக்கரசர்.

பறையும் குழலும் ஒலிபாடல் இயம்ப
அறையும் கழல் ஆர்க்கநின்றாடும் அமுதே —சுந்தரர்.

படுபல் பிணக்காடு அரங்கா ஆடிய மாநடத்தான் —சுந்தரர்.

ஞானக்கரும்பின் தெளியைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும்பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே. —திருவாசகம்.

உலகெலாம் உணர்ந் தோதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குமாம் —பெரியபுராணம்.

ஈட்டிய வினைப்பயன் எவற்றையும் மறைத்துநின்று
ஊட்டுவதாகும் நின் ஊன்றிய பதமே. —குமரகுருபரர்.

மாயைதனை உதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கி அருள்தாள் எடுத்து-நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான் அழுத்தல்
தான் எந்தை யார்பதம் தான். —குமரகுருபரர்.

பூமலி கற்பகப் புத்தேள் வைப்பும்
நாமநீர் வைப்பின் நானில வளாக்மும்
ஏனைப்புவனமும் எண் நீங்கு உயிரும்
தானே வகுத்தது உன் தமருகக் கரமே
தனித்தனி வகுத்த சராசரப்பகுதி
அனைத்தையும் காப்பது உன் அமைத்தபொற்கரமே
தோற்றுபு நின்ற அத்தொல்லுலகு அடங்கலும்
மாற்றுவது ஆரடில் வைத்ததோர் கரமே
ஈட்டிய வினைப்பயன் எவற்றையும் மறைத்துநின்று
ஊட்டுவதாகும் நின் ஊன்றியபதமே
அடுத்த இன் உயிர்கட்கு அளவில் பேரின்பம்
கொடுப்பது முதல்வ நின் குஞ்சித பதமே. —குமரகுருபரர்.

தத்துவம் ஆடச் சதாசிவம் தானாடச்
சித்தமும் ஆடச் சிவசத்தி தானாட
வைத்த சராசரம் ஆடமறை ஆட
அத்தனும் ஆடினான் ஆனந்தக் கூத்தே. —திருமந்திரம்.

எங்கும் திருமேனி எங்கும் சிவசத்தி
எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்
எங்கும் சிவமாயிருத்தலால் எங்கெங்கும்
தங்கும் சிவனருள் தன்விளை யாட்டதே. —திருமந்திரம்.

மானுடராக்கை வடிவு சதாசிவம்
மானுடராக்கை வடிவு சிதம்பரம்
மானுடராக்கை வடிவு சிவலிங்கம்
மானுடராக்கை வடிவு திருக்கூத்தே. —திருமந்திரம்.

★ ★ ★

ரிஷபாரூடர்

கடகரியும் பரிமாவும் தேரும் உகந்து ஏறாதே
இடபம் உகந்து ஏறியவாறு எனக்கறிய இயம்பேடி
தடமதில்கள் அவைமூன்றும் தழல்எரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ.

—திருவாசகம்

சிவபெருமானுக்கு இடபக்கொடியும் இடபவாகனமும் உரியன. சிவ பெருமானுடைய திருக்கோலங்களுள் அருளுதற்கு அமைந்த கோலமாக ரிஷபாரூட மூர்த்தி திகழ்கிறார். தனது அடியார்களுக்கு இடப வாகனராகவே சிவபெருமான் திருக்கோலங்காட்டி ஆட்கொண்டருளியதைத் திருத்தொண்டர்புராணம் நமக்குக் காட்டுகின்றது. சிலவருமாறு :

"துன்னிய விசும்பினூடு துணையுடன் விடைமேற்கண்டார்"

—திருநீலகண்டநாயனார் புராணம்.

"பொன்றிகழ் குன்று வெள்ளிப் பொருப்பின் மேற் பொலிந்த தென்னத்
தன்றுணை யுடனே வானில் தலைவனை விடைமேற் கண்டார்"

—இயற்பகைநாயனார் புராணம்.

"ஏலவார் குழலாள் தன்னோடு இடபவாகனனாய்த் தோன்றி"

—இளையான்குடிமாறநாயனார் புராணம்.

"விடை மேற் கொண்டு நின்றவர் முன்" —மானக்கஞ்சாற நாயனார் புராணம்.

"என்றவர் போற்றி செய்ய இடபவாகனராய்த் தோன்றி
... ...
மன்றுளே ஆடும் ஐயர் மழவிடை உகைத்து நின்றார்"

—அரிவாட்டாய நாயனார் புராணம்.

"ஆனாயர் குழலோசை கேட்டருளி அருட்கருணை
தானாய திருவுள்ளம் உடையதவ வல்லியுடன்
கானாதி காரணராம் கண்ணுதலார் விடையுகைத்து
வானாறு வந்தணைந்தார் மதிநாறுஞ் சடைதாழ."

—ஆனாயநாயனார் புராணம்.

"தேனிறைந்த மலரிதழித் திருமுடியார் பொருவிடையின்
மேனிறைந்த துணைவியொடும் வெளிநின்றார்."

—திருக்குறிப்புத்தொண்டநாயனார் புராணம்.

"செறிந்த சடைநீள் முடியாரும் தேவியோடும் விடையேறி"

—சண்டேசநாயனார் புராணம்.

"பொன்மலை வல்லியும் தாமும் பொருவிடைமேல் எழுந்தருளிச்
சென்னி இளம் பிறைதிகழச் செழும் பொய்கை மருங்கணைந்தார்"

—திருஞானசம்பந்தர் புராணம்.


"தொண்டர் எதிர் நெடும் விசும்பில் துணைவியொடுந் தோன்றினார்
மழவிடைமேல் எழுந்தருளி வந்ததொரு செயலாலே."

—சாக்கியநாயனார் புராணம்.

"மலைபயந்த தையலோடுஞ் சரவணத்துத் தனயரோடும் தாம் அணைவார்
தனிவெள் விடைமேல் நெடுவிசும்பில் தலைவர்"

—சிறுத்தொண்ட நாயனார் புராணம்.

ஆகவே இடபாரூட மூர்த்தி இறைவனின் மிக உன்னதமான திருக்கோலமாக அடியார்களால் விரும்பித் தொழப்படுகிறது. திருக்கோயில் திருவிழாக்களில் பெருமானுடைய இடபவாகனக் காட்சி காண எண்ணற்ற அடியார்கள் காத்து நிற்பதைக் காணலாம். திருவீதியுலாவில் இடபாரூடக் காட்சியே மிகவும் போற்றி வழிபடப் பெறுகின்றது. இறைவன் இறைவியோடு இடபவாகனத்திலேறி வருவதில் ஒப்பற்ற ஒரு தத்துவம் பொதிந்துள்ளது. கருணையே திருமேனியாகக்கொண்ட இறைவியோடு, ஆருயிர்களை ஆட்கொள்ளும் இயல்பினனான சிவபெருமான் அறத்தின் வடிவாகிய இடபத்தின்மீது எழுந்தருளி உயிர்களை நோக்கிவரும் எளிவந்த வான்கருணையை இக்கோலம் நன்கு காட்டுகின்றது. அறத்தை நிலைநிறுத்த


N. Sadasivan

ரிஷபாருடர்



மதுரை கோயில், நந்தி மண்டபம்
பக்கம் : 41

ரிஷபாந்திகர்



திருமழிசை (சென்னை அருகில்)
பக்கம் : 41

வரும்போது, அறத்தின் வடிவாகிய இடபத்தின்மேல் ஆருயிர்களைப் பேணும் அருட் சத்தியாகிய அன்னையோடு அவர் அமர்ந்து வருவது பொருத்தமன்றோ !

திரிபுரங்களை அழிக்கச் சிவபெருமான் நினைத்தபோது, விண்ணோர் அனைவரும் தத்தம் ஆற்றல்களுக்கேற்ப அவருக்கு உதவியாய் நின்றனர். தமது உதவியில்லையேல் சிவபெருமான் முப்புரங்களை அழிக்க இயலுமோ என அவர்கள் சிறிது நினைக்கவும், அவர்தம் எண்ணங்கண்டு இறைவன் புன்முறுவலித்தார். தேரும் முறிந்தது ! முப்புரமும் எரிந்தது. உடனே திருமால் இடபவடிவேற்றுச் சிவபிரானைத் தாங்கினார் என்ற வரலாறும் திருமுறைகளில் பேசப்படுகின்றது. தன்னை இடபமாக்கிக்கொண்டு தன்மீது எழுந்தருளவேண்டுமென்று சிவபெருமானிடம் திருமால் வேண்டிக்கொண்டதை உபதேசகாண்டம் குறிப்பிடுகின்றது :

சத்தியோர் புடையிருக்கவும் யானுமோர் சத்தி
யொத்திடப் புரிந்தருளினையாது போலுடையாய்
வித்தகத்தனி யேறுளை யாயினும் வினையேன்
அத்தனித்திற லேறெனத் தாங்குதற்கு அருள்வாய்.

திருமாலாகிய இடபத்தை வாகனமாகக் கொண்டு சிவபெருமான் உமையோடு ஆரோகணித்தால் அவருக்கு இடபாரூட மூர்த்தி என்று பெயர் எனச் சிவபராக்கிரமம் என்ற நூல் கூறும்.

ஸ்ரீதத்வநிதியில் இம்மூர்த்தம் பற்றிக் கூறும்போது, வலது பக்கத்தில் மடியில் கணபதியை அணைத்துக்கொண்டு கடகஹஸ்தமுடன், வலது கரத்தில் ஜபமாலையுடன், பின் இருகரங்களிலும் மானையும், மழுவையும் ஏந்தி, அழகியமுகங்கொண்டு, முக்கண்ணராய், கிரீடம் தரித்து, இடது பக்கம் உமாதேவியுடன், இடபத்தின்மீது வீற்றிருப்பவரே இடபாரூடமூர்த்தி என வருணிக்கப்பட்டுள்ளது. இவரை வணங்கினால் சகல சௌபாக்கியங்களும் கிட்டும் எனவும் அந்நூல் கூறுகிறது.

பொதுவாகச் சந்திரசேகர மூர்த்தியை இடப வாகனத்தில் வைத்து அலங்கரித்து வீதியுலாச் செய்வது மரபாக உள்ளது. சோமாஸ்கந்த மூர்த்தியை இடபவாகனத்தில் எழுந்தருளச் செய்து இடபாரூட மூர்த்தியாகக் காட்டுவது உண்டு. இவ்வாறு அலங்கரிக்கும்போது ஸ்கந்தனை மறைத்து விடுவர்.

சில கோயில்களில் இடபம் பின் நிற்கச் சிவபெருமான் தனது இருகால்களையும் மாற்றிநிற்கும் வடிவில் அவரது வலக்கரம் இடபத்தை அனுக்ரஹிக்கும் கோலத்தில் காணப்படுகிறது. இக்கோலம் **ரிஷபாந்திக மூர்த்தி** எனச்சிவபராக்கிரமம் கூறும். எல்லா உலகும் உயிர்களும் ஒடுங்கி அழியும் கடையூழிக் காலத்தில் தாமும் அழிய நேரிடுமோ என அஞ்சிய தருமதேவதை இடபவடிவங்கொண்டு சிவபெருமானைத் தஞ்சம் அடைய, அறவெள்விடைக்கு அவர் அருள் புரிந்த நிலையே இடபாந்திக மூர்த்தி யாகும் என்பர்.

இடபாந்திக மூர்த்தி திருக்கோலம் திருமழிசை, திருநெல்வேலி மாவட்டம் திருவாலீசுரம், தஞ்சைமாவட்டம் இஞ்சிக்குடி, திருவெண்காடு வேதாரண்யம், தண்டந்தோட்டம் கோயில்களில் காணப்படுகின்றது.

பொதுவாக இடபாரூட மூர்த்தியையே நம் திருமுறைகளில் போற்றிப் பேசப்படுவதைக் காண்கிறோம்.

"எரிதரும் உருவினர் இடபமதேறுவர்", "ஏறுகந்தேறுவர்" "மடவாள் தனோடும் விடையேறும் எங்கள் பரமன்", "உருவளர் பவளமேனி ஒளி நீறணிந்து உமையோடும் வெள்ளை விடைமேல்", "கடிய ஏற்றினர் கனலன மேனியர்", "தார்மணி யணிதரு தறுகண் விடையர்", "பசு வேறும் எங்கள் பரமன்", "பைங்கண தொரு பெருமழலை வெளேற்றினர்", "விண்ணுறு மால் வரைபோல் விடையேறுவர்", "வேனல் வெள்ளேற்றினர்" என்று பலவாறு போற்றுவார் திருஞான சம்பந்தர்.

"அடல் விடை ஊர்தியாகி", "அரிப்பெருத்த வெள்ளேற்றை அடர ஏறி", "எருதேறி", "செங்கண்மால் விடை ஏறிய செல்வனார்", "பசுஏறி", "புல்லம் ஊர்தி", "பெற்றம் ஊர்தி", "மேகநல் ஊர்தியர்", "விடையேறிப்புரம் எரித்தார்", "வெள்ளிமால் வரை போல் வதோர் ஆனையார்", "உமையொடு பெற்றம் ஏறுகந் தேறும் பெருமையான்", "மட்டுவார் குழலாளொடு மால்விடை இட்டமா உகந்தேறும் இறைவனார்", "ஆகாயம் தேரூரவல்லாய்", "ஆனுகந்தேறுவான்", "இடபம் ஏறி" என்று போற்றுவார் திருநாவுக்கரசர்.



கல்யாணசுந்தரர்

மலையரையன் பொற்பாவை வாள்நுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டாள் என்னுமது என்னேடி.
உலகறியத் தீவேளாது ஒழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்க ளெல்லாம் கலங்கிடுங்காண் சாழலோ. —திருவாசகம்.

அன்பு என்னும் பிணைப்பில்தான் உலகமே உருண்டுகொண்டு வருகின்றது. அன்பேசிவம் என்பார் திருமூலர். சிலகாலமே வாழும் நாம் ஒருவருக்கொருவர் அன்புடன் இணைந்து வாழ்ந்தால் உலகமே இன்பமயமாகிவிடும் அன்றோ! உலகம் இன்புற்றிருக்க இறைவன் எடுத்த கோலமே கலியாணசுந்தரர் திருக்கோலமாகும். சிவபெருமானை மணக்கோலநாதராகப் பார்ப்பதில்தான் நம்மக்களுக்கு எவ்வளவு களிப்பு! மலையரசன் பொற்பாவையாக வந்த உமாதேவியைச் சிவபெருமான் மணந்து கொண்டதை மிகத் தொன்மையான வராஹ புராணம் முதலாகப் பல வடமொழி நூல்களிலும், தமிழ் இலக்கியங்களிலும் சுவைபடக் காண்கிறோம். காளிதாசனது குமாரசம்பவம் இக்காட்சியை மிக அருமையாகப் பேசும். சைவத்திருமுறைகள் தமக்கே உரிய பாணியில் இக்கோலத்தைக் காட்டுகின்றன.

சிவபெருமான் கயிலையில் கல்லாலமரத்தின் கீழ் யோகியாக அமர்ந்து அறம் உரைத்திருந்தார். உயிர்கள் போக நுகர்ச்சியின்றி வறிதே செயலற்றுக் கிடந்தன. நான்முகன், திருமால் உள்ளிட்ட விண்ணோர் அனைவரும் பரமனிடம் விண்ணப்பித்து, உலக உயிர்கள் போகநுகர்ச்சியில் தலைப்பட்டு இன்புறுமாறு செய்தருளல் வேண்டும்

என இறைஞ்சினர். உயிர்கள் அனைத்தும் இன்புறுதற் பொருட்டும், உலகில் இல்லறமாகிய நல்லறவாழ்வு நடைபெறுதற் பொருட்டும் சிவபெருமான் மலைமகளைத் திருமணங்கொண்டருளினார். அமரகாதலரான சிவசக்திப் பேரன்பினை உலக உயிர்கள் பெற்று மகிழ்ந்து இன்புற இறைவன் திருமணக்காட்சி ஒரு நல்ல வாய்ப்பு அல்லவா ! ஞானமே வடிவாக விளங்கும் இறைவியை சத்தியமே வடிவான இறைவன் கூடுவதையே-சத்தியஞான இணைப்பையே இறைவன் திருமணம் என்று கூறுகிறோம். சத்தியமும் ஞானமும் இணையும் போதுதான் ஆனந்தம் கிட்டுகிறது. சத் சித்து ஆனந்தம் அதுதானே !

அன்று குமரன் தோன்றவேண்டும், சூரபதுமன் முதலான அவுணர் அழிய வேண்டும் என விண்ணோர் முறையிடவும், இறைவன் கருணையோடு இறைவியைக் கடிமணம் கொண்ட காட்சியை அன்று கயிலையில் நாம் காணும் பேறு பெறாவிடினும், அக்குறை நீக்கிட ஆலயம்தோறும் இறைவனது திருமணக் காட்சியைக் காணும் பேறு நாம் பெற்றது பெரும்பேறு அல்லவா! இறைவன் நித்தம் மணாளர், நிரம்ப அழகியர், நம்சித்தத்திருப்பர் என்று போற்றுவார் மணிவாசகர். அருட்சத்தியோடு சிவம் கலந்திருந்தால்தானே உலகம் இயங்கும். இதுவே அவ்வன் திருமணத் தத்துவம்.


கயிலையில் பெருமானுடைய திருமணங்காணப் பெருங்கூட்டம். வடக்கே தாழ்ந்து, தெற்கே உயர்ந்து விடவும், புவியினைச் சமநிலைக்குக் கொணரக் குறுமுனியைத் தென்பால் செல்லுமாறு பணித்தார் பரமன். மணக்காட்சி காணும் நற்பேறு தமக்குக்கிட்டவில்லையே எனக் கவன்ற குறுமுனிக்குத் திருக்குற்றாலத்தில் அச்காட்சியைக் காட்டினான் பரமன். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் டெலிவிஷனில் பார்த்தவர் நம் குறுமுனியான அகத்தியர் ! இக்காட்சியைத் திருக்குற்றாலத்தல புராணத்தில் நமக்கும் காட்டுகிறார் திரிகூடராசப்பக் கவிராயர் :

மடப்பாவைக்கு அருள்புரிந்து வலப்பால்வைத்து
மாவேதன் சடங்கு இயற்ற உந்தி பூத்தோன்
கடப்பாலில் புனல்வார்ப்ப கருணைமூர்த்தி
கடமுனிக்கு மணக்கோலக் காட்சிதந்தான்.

இக்காட்சி குடமுனியாகிய தமிழ்க் குறுமுனிக்கு மட்டுமா கிட்டியது ! நாதன் அருளாலே இன்றும் நமக்குக் கிடைக்கின்றது.

எங்கும் நீக்கமற நிறைந்த சிவபெருமான் தலங்கள் தோறும் தனிப்பெயர் கொண்டு திகழ்வது போலவே இறைவியும் தனிப்பெயர் கொண்டு விளங்குகின்றாள். ஒவ்வொரு தலத்திலும் சிவசிவை திருமணம் சிறப்பாக நடைபெற்று வருவது கண்கூடு. ஒவ்வொரு தலத்திலும் நடைபெறும் திருக்கலியாணப் பெருவிழா ஒன்றையொன்று விஞ்சுவதாக அடியார்கள் கண்டு வழிபட்டு இன்புற அமைந்துள்ளது. மதுரையில் மீனாட்சி திருக்கலியாணம் மாண்புமிக்கது. கள்ளழகர் வைகையாற்றில் இறங்குவதும் மீனாட்சி திருக்கல்யாணப் பெருவிழா வைபவங்களும் இன்றும் மிகச்சிறப்புற நிகழ்ந்து.

கல்யாணசுந்தரர்




திருமணஞ்சேரி
(மயிலாடுதுறை வட்டம்)
பக்கம் : 46



வடக்காலத்தூர்
(நாகப்பட்டினம் வட்டம்)
பக்கம் : 46

கல்யாணசுந்தரர்



திருவான்மியூர் (சென்னை)
பக்கம் : 46

வருகின்றன. மதுரை நகரையாண்ட பாண்டியன் மகளாக வந்தவதரித்துச் கயிலைப் பெருமானைக் கரம் பற்றிய தடாதகைப்பிராட்டியாம் அங்கயற்கண்ணியின் அருளை நாடி, அக்கலியாண விழாக்காண அங்கே கூடுவோர் பலகோடி; அழகர் நீர்வார்ப்ப அழகியை அழகன் கைப்பற்றிய காட்சியைத் திருவிளையாடற்புராணம் கூறுவதைப் பாருங்கள்:

அத்தலம் நின்ற மாயோன் ஆதிசெங் கரத்து நங்கை
கைத்தலம் கமலப்போது பூத்ததோர் காந்தள் ஒப்ப
வைத்தகு மனுவாய் ஓத கரகநீர் மாரிபெய்தான்
மொத்தலர் கண்ணி விண்ணோர் தொழுது பூமாரிபெய்தார்.

இன்னும் திருநெல்வேலியில் காந்திமதி அம்மையார் திருமணம், திருவாரூரில் அல்லியங் கோதைத் திருமணம், திருமறைக் காட்டில் யாழைப் பழித்த இன்மொழியாள் திருமணம். திருவையாற்றில் அறம் வளர்த்த நாயகியின் திருமணம், காஞ்சியில் காமாட்சியம்மையின் திருமணம், கும்பகோணத்தில் மங்களநாயகியின் திருமணம்.........என்றிவ்வாறு கலியாணத்திருவிழாக்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

கலியாண சுந்தரக்கோலம் எவ்வாறு அமைந்திருத்தல் வேண்டுமென்று கஸ்யப சில்ப சாஸ்திரம், சில்ப சங்கிரகம், சில்பரத்தினம், மயமதம், முதலிய நூல்களில் விவரிக்கப்பட்டுள்ளன. அம்சுமத் பேதாகமம், உத்தரகாமிகாகமம், பூர்வகாரணாகமம் ஸ்ரீதத்வ நிதி முதலியவற்றில் இம்மூர்த்தி லட்சணம் பேசப்படுகின்றது.



இக்கோலத்தில் சிவபெருமானும் உமாதேவியும் முக்கிய திருவுருவங்கள். இருவரும் கிழக்கு நோக்கி விளங்குகின்றனர். மணமக்கள் அழகுக்கு அழகு செய்தாற் போல அலங்கரிக்கப் பெறுவர் கன்னிகாதானம் செய்து கொடுப்பவர் திருமால்! ஆம் அவர் உமாதேவியின் சகோதரர் அல்லவா! அவர் தனது இருதேவியருடன் எழுந்தருளியிருப்பார். சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் நடுவே பின்னால் திருமால் தனது கரத்தில் தங்கக் கலசத்தில் நீருடன் கன்னிகா தானம் செய்து நீர்வார்க்கக் காத்திருப்பார். உமாதேவியாருக்கு இருபுறமும் சேடியராகத் திருமகளும் நிலமகளும் பின்புறம் நிற்பர். முன் பக்கம் நான்முகன் அமர்ந்து திருமணவேள்வி செய்து கொண்டிருப்பார். பின்னணியில் அஷ்ட வித்தியேசுவரர், அஷ்டதிக்பாலகர், சித்தர்கள், யட்சர்கள், முனிவர்கள், கந்தருவர், சப்தமாதர் மற்றும் ஏனைய கடவுளர் தத்தம் தேவியருடன் கூப்பிய கையினராக மகிழ்ச்சியும் வியப்பும் பொங்க விளங்குவர்.

பதினாறு வயதுடைய, செம்மேனியுடைய, மணமகனான சிவபெருமான் தனது வலக்கரத்தை நீட்டி உமையம்மையின் திருக்கரம் பற்ற ஆயத்தமாக நிற்பார். அவரது இடக்கரம் வரத ஹஸ்தமாயிருக்கும். அவரது பின் இருகரங்களிலும் மானும் மழுவும் விளங்கும். திரிபங்கவடிவில் பெருமான் திகழ்வார். சிரத்தில் ஜடாமகுடமும் பிறையும் சூடி, ஹாரம், கேயூரம், உதரபந்தம், சர்ப்பகுண்டலம் முதலியன அணிந்து விளங்குவார். தட்சன் என்னும் நாகத்தை தனது அரையிலும் புஷ்கரன் என்னும் நாகத்தை மாலையாகவும் அவர் அணிந்திருப்பார்.

பார்வதிதேவி சிவபெருமானின் இடப்பக்கம் நிற்பதும் உண்டு. பெருமானுக்கு வலப்பக்கம் தேவி நிற்பதும் சில வடிவங்களில் காணப்பெறுகிறது. கரியநிற மேனியளாகிய உலகன்னை, தனது வலக்கரத்தை நீட்டிப் பெருமானுடைய கரம்பற்ற ஆயத்தமாக நிற்பாள். இடக்கரம் நீலோற்பல மலரை ஏந்தியிருக்கும்.

மையார் தடங்கண் மடந்தை கைப்பிடித்த செய்யார் திருமேனிப் பிரானின் திவ்விய ரூபசௌந்தரியத்தை எவ்வாறு நம்மால் இயம்பமுடியும்! தொண்டர்கண்டு அண்டிமொண்டு உண்டு உவந்தின் புறத்தக்க அக்கோலத்தைச் சொற்களால் முழுதும் கூறிவிட இயலுமா!

சிவபெருமானின் கலியாண சுந்தரத் திருக்கோலத்தை எலிபென்டா, இரதன்பூர், எல்லோரா, திருவொற்றியூர், மதுரை, திரைலோக்கி முதலிய இடங்களில் சிற்பங்களாகக் காணலாம்.

திருமணஞ்சேரி, திருவேள்விக்குடி, திருவெண்காடு, திருவான்மியூர், வடக்காலத்தூர் செப்புத்திரு மேனிகளாக இக்கோலம் பொலிவுடன் திகழ்கின்றன. திருவேள்விக்குடி, திருவெண்காடு மூர்த்தங்கள் தஞ்சைக்கலைக் கூடத்தில் உள்ளன. வடக்காலத்தூர் கல்யாணசுந்தரர் செப்புத் திருமேனி உலகப் பிரசித்தி பெற்றது. இந்த வடிவத்தை சில நிமிடங்கள் பார்த்துக் கொண்டிருந்தாலே அதிலிருந்து தோன்றும் தெய்வீக சக்தியை வார்த்தைகளால் விவரிக்க இயலாது.

திருநல்லூர் (திருநாவுக்கரசர் திருவடி சூட்டப் பெற்றதலம்), திருமறைக்காடு, திரைலோக்கி, திருக்குற்றாலம், திருவேற்காடு தலச்சிறப்புக்களாக இறைவன் திருமணக் கோலம் காட்டப் பெற்றவரலாறுகள் உள்ளன.

திருமுறைகளில் கலியாண சுந்தரர் கோலம் புகழ்ந்து பேசப்பட்டுள்ளது. "மயிலினேரன சாயலோடமர்ந்தவன்", "பெருநலமுலையிணை பிணை செய்த பெருமான்", "மலையுடை மடமகள் தனை இடம் உடையோன்", "கோதையுடன் இருந்த மணவாளன்" என்று திருஞானசம்பந்தரும், "நித்தமணவாளனென நிற்கின்றான்காண்", "வம்பின் மலர் குழலுமையவள் மணவாளன்" என்று திருநாவுக்கரசரும் இக்கோலத்தைப் போற்றுகின்றனர்.

★ ★ ★

சந்திரசேகரர்

நெற்றியிற் கண்ணுடை நிமலத் தெம்பிரான்
உற்றவர்க் கருள்புரி கின்ற உண்மையைத்
தெற்றென உணர்த்தல் போல் திங்களின்கலை
கற்றையஞ் சடைமிசைக் கவின்று பூத்ததே.

—கந்தபுராணம்

'**த**ன்னடைந்தார்க்கு இன்பங்கள் தருவானை' என்று திருஞானசம்பந்தர் சிவபெருமானைப் போற்றுவார். விரும்பித்தொழும் அடியார் விழிநீர் மல்கி, கசிந்து, நெக்குருகி, குழைந்து, தம்பிழைபொறுத்து ஆட்கொண்டருளுமாறு வேண்டிப் பணிந்தால் சிவபெருமான் எங்ஙனம் காத்தருளுவார் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்வது பெருமான் முடியில் தவழும் பிறை! தக்கன் மக்களை மணந்த சந்திரன், ரோகிணி என்பாளிடமே தனியன்புகாட்டி ஏனைய இருபத்தாறு மனைவியரையும் வெறுத்தொதுக்கினான். தம் மக்களின் நிலைகண்டு வருந்திய தக்கன் சினந்து சந்திரனைச் சபித்தான். அதனால் அவன் நோயுற்றுத் தன் கலைகள் குன்றி மெலிந்தான். கழுவாய் தேடிச் சிவபிரானிடம் அடைக்கலம் புகுந்து போற்றித் துதித்தான். மூன்றாம் பிறையளவாகத் தேய்ந்திருந்த சந்திரன், தன் காலில் விழுந்தது கண்ட பரமன் கருணைபொங்க அவனைத் தலையிலே சூடிக்காத்தார். காலில் விழுவோரைத் தலையில் தாங்கும் தண்ணளியைச் சிவபிரானையன்றி வேறு யாரிடம்

காணமுடியும்! சிவபெருமான் பிறையை ஏற்றுத் தன் தலையில் சூடிய அக்கணமே தக்கன் சாபம் பொய்த்தது !

தீர்ந்தன வன்றியே திங்கள் தன்னிடை
யார்ந்திடு கலையினை யங்கையாற் கொளா
வார்ந்திடு சடைமிசை வயங்கச் சேர்த்தினான்
சார்ந்தில தவ்வழித் தக்கன் சாபமே

என்று கந்தபுராணம் பேசுகின்றது.

சிவபெருமான் பிறைசூடியதைச் சங்க நூல்களிலும் பேசக்கேட்கிறோம்.

" பிறைநுதல் வண்ணம் ஆகின்று; அப்பிறை
பதினென் கணனும் ஏத்தவும் படுமே" என்று புறநானூறும்

" முதிராத் திங்களொடு சுடரும் சென்னி " என்று அகநானூறும் போற்றுகின்றன.

பெரியோரைத்தஞ்சம் அடைந்தால் பெருமையேகிட்டும். 'சேரிடம் அறிந்து சேர்' என்பது மூதுரையன்றோ !

" திருந்தவானவர்க்கு அரியவன் செஞ்சடைமுடிமேல்
இருந்த வானவன் பெருமையை யார்கொலோ இசைப்பார் "

என்று ஆன்றோர் கூறுமாறு சந்திரன்நிலை உயர்ந்தது. உலகத்தவர்க்கு இது ஒரு சிறந்த முன்மாதிரியுமாகும்.


" மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும், வந்தடையிற்
கண்ணுதலான் பெருங்கருணைக் கைக்கொள்ளும் "

என்ற தத்துவத்தைச் சேக்கிழார் சுவாமிகள் கூறுவதும் ஈண்டு பொருந்தித் திகழ்கின்றது.

பிறைசூடிய சிவபெருமான் கோலமே சந்திரசேகரர் என்று போற்றப்படும். சிவாலயங்களில் மாதப்பிறப்பு, பிரதோஷம், அமாவாசை, பௌர்ணமி முதலிய விசேட நாட்களில் சந்திரசேகரமூர்த்தியே எழுந்தருளி வலம் வருவார். தியாகராஜர் திருக்கோலம் பொலியும் தலங்களில் எல்லா வாகனங்களிலும் சந்திரசேகரரே எழுந்தருளி வலம் வருவார். மிகச்சிறிய வடிவில் சந்திரசேகரர் அமைக்கப்பெற்று, நாடோறும் காலை, மாலை, இரு வேலைகளிலும் ஸ்ரீபலி சாதிக்க எழுந்தருளுவித்தல் சில கோயில்களில் மரபாக இருக்கும். இவரே பிரதோஷ நாயகர் என்று எல்லாக் கோயில்களிலும் இடம் பெற்றிருப்பார்.

சந்திரசேகர மூர்த்தி இலட்சணம் சுப்பிரபேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது. இவர் மூவகைப்படுவர்: கேவலமூர்த்தி, உமாசகிதமூர்த்தி, ஆலிங்கனமூர்த்தி.

கேவலமூர்த்தி : அம்சுமத் பேதாகமத்தின்படி சிவபெருமான் மட்டுமே பிறைசூடி விளங்கும்நிலை கேவலமூர்த்தியாகும். இவர் நான்கு கரங்களை யுடையவர். வலக்கரங்கள் இரண்டிலும் டங்கமும், அபயமும் கொண்டிருப்பார், இடக்கரங்களில் மானும் வரதமும் விளங்கும். சமபங்கநிலையில் இராஜஸகுணமோடு இவர் திகழ்வார். இவரது ஜடாமகுடத்தின் வலப்புறமோ இடப்புறமோ பிறை திகழும்.



பட்டீச்சரம் திருக்கோயிலில் கேவலமூர்த்தி சிற்பம் உள்ளது.

உத்தர காமிகாகமத்தின்படி கேவலமூர்த்தியின் முன் வலக்கரம் ஸிம்ஹகரணம், கடக ஹஸ்தம் அல்லது கட்யவலம் பிதமாக இருக்கும். அவர் தனது இடக்காதில் இரத்தின குண்டலம், சங்கபத்திரம் அல்லது பத்மபத்திரம் அணிந்திருப்பார். அவரது வலக்காதில் மகரகுண்டலம், சிம்ஹ குண்டலம் அல்லது பத்திரகுண்டலம் திகழும். பலவித முத்து மாலைகளும், இரத்தின மாலைகளும், பதக்கங்களும் அவர் அணிந்திருப்பார்.

உமாசகித சந்திரசேகர மூர்த்தி : ஒரே பீடத்தில் அல்லது பக்கத்தில், நின்ற கோலத்தில் விளங்கும் சந்திரசேகரர், தேவியைக் கொண்டிருப்பின் இவ்வடிவம் உமாசகித சந்திரசேகரர் என அழைக்கப்படும். தஞ்சைக் கலைக்கூடத்தில் இவ்வடிவத்தைக் காணலாம். ஆலயங்களிலும் இம்மூர்த்தம் பொதுவாக இருக்கும்.

ஆலிங்கன மூர்த்தி : தஞ்சைக்கலைக் கூடத்தில் காணப்பெறும் ஆலிங்கன சந்திரசேகர மூர்த்தியைப் பார்க்கும் எவரும் கம்பனது கீழ்க்கண்ட வரிகளைக் கூறாமல் இருக்கமாட்டார் :

" மஞ்சிடை வயங்கித் தோன்றும் பவளத்தின் வல்லி அன்ன
குஞ்சரம் அனையவீரன் குவவுத் தோள் தழுவிக் கொண்டான்."


ஆலிங்கன சந்திரசேகர மூர்த்தி, தனது ஓர் இடக்கரத்தினால் தேவியை ஆலிங்கனம் செய்து கொண்டு விளங்குகிறார். தேவியின் வலக்கரத்தில் செந்தாமரை மலர் விளங்கும்; அல்லது அவளது வலக்கரம் சிவபெருமானைத் தழுவிக் கொண்டிருக்கும். அவளது இடக்கரம் நீலோற்பல மலரை ஏந்தியிருக்கும். அல்லது சிவபெருமானும் உமாதேவியும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்ட நிலையிலும் இம்மூர்த்தம் அமைந்திருக்கும். எல்லா நிலைகளிலும் இறைவன் பிறை சூடியிருப்பார்.

சென்னைக்கருகிலுள்ள மண்ணிவாக்கம் மிருத்யுஞ்சேசுவரர் கோயிலிலுள்ள ஆலிங்கனமூர்த்தி சிறப்புடையது. திருவாவடுதுறை அணைத்தெழுந்த நாயகர் ஆலிங்கன மூர்த்திக்கு அருமையான எடுத்துக் காட்டு ஆகும்.

சந்திரசேகரர் மூர்த்தங்கள் பல கோயில்களிலும் செப்புத் திருமேனிகளாக விளங்குகின்றன. கற்சிற்பமாகவும் பல கோயில்களில் உள்ளன. மருதாந்தநல்லூர், கோயிலூர், செப்புத் திருவுருவங்களும் மயிலாடுதுறைகற்சிற்பமும் குறிப்பிடத் தக்கனவாம்.

திருமுறைகளில் பிறைசூடிய பெம்மான் பலவாறு போற்றப்பெறுகிறார். சில கூறுவாம்: " பிறையும் புனலும் சடைமேலுடையார் ", " அரவமும் மதியமும் விரவிய அழகர் ", " பிறைகொள்சடையர் ", " முளைவெண் மதியர் ", " முளைவெண் பிறையர் ", " மதிசூடுவர் " என்றிவ்வாறு திருஞான சம்பந்தரும், " மாதர் பிறைக் கண்ணியானை ", " பிறைமதியும் சூடினானை " ... என்று திருநாவுக்கரசரும், " பிறைசூடி " என்று சுந்தரரும் போற்றுகின்றனர்.

★ ★ ★



பிட்சாடனர்

புரந்துலகு ஏழும் படைத்த பிரானை
இரந்து உணி என்பார்கள் : எற்றுக்கு இரக்கும் ?
நிரந்தரமாக நினையும் அடியார்
இரந்துண்டு தன்கழல் எட்டச் செய்தானே.

—திருமந்திரம்

சிவபெருமானுக்குத் தியாகராஜன் என்றொரு பெயர். அவர் கொண்ட கோலங்களும், இயற்றிய அருளாடல்களும் அவரது மாண்பினை—உயிர்கள் மாட்டு அவர் கொண்ட அளவற்ற கருணையைப் புலப்படுத்துகின்றன. அவர் பிச்சை ஏற்பவராக-பிக்ஷாடன மூர்த்தியாக வடிவேற்றார். இரவலன் போல் நடித்து அவ்வழியாகவேனும் நம்மையெல்லாம் உய்விக்க—ஆட்கொள்ள விழைந்து எளிவந்து எழுந்தருளிய கோலம் அது. அன்பைப் பிச்சை ஏற்கிறார் இறைவன். உயிர்களாகிய நம் உள்ளக்கதவுகள் திறக்காதா என்று ஏக்கற்று நிற்கிறார். நம் இதயக்குகையைத் தூய்மை செய்து, தன் அருளொளியைப் பரப்பி நலம் புரியத்துடிக்கிறார். நமது துன்பப் பொதிகளையும் வினைச் சுமைகளையும் தான் ஏற்று தன்னருளைச் சொரிய நம்பால் வருகிறார்.*

*** It is not so much man seeking God as God seeking man.**

தத்துவ விளக்கமான பிட்சாடனர் வடிவத்திற்குப்புராணச் சான்றும் ஒன்று இருக்கத்தானே வேண்டும்! தாருகா வனத்திலே முனிவர்கள் தம் குடும்பத்தோடு கடுந்தவம் புரிகின்றனர். சிவபெருமானது கருணையை மறந்து, பக்தியின்றி, உலகியல் வாழ்வையும் மறந்து, கருமமே பயன் தரும், கடவுள் எதற்கு? என்ற மனப்பான்மையோடு தவமியற்றுகின்றனர். பிரவிர்த்தி மார்க்கத்தை மறந்த அவர்களுக்கும் கருணை புரிய வேண்டிச் சிவபெருமான் பிச்சைத் தேவராக வடிவேற்கிறார். முனிவர் இல்லங்களில் பிச்சை ஏற்க, இறைவன் ஆடையுமற்ற ஆண்டியாக-அழகனாகச் செல்கிறார். பிட்சாடனரது அழகிலே மனதைப் பறி கொடுத்த முனிபத்தினிகள் தமது இல்லங்களையும் மறந்து, ஆடைகள் நெகிழ அவர் பின்னே செல்கின்றனர். மோகினி வடிவில் திருமால் முனிவர்களிடையே தோன்றுகிறார். அம்மோகினியின் அழகிலே-காமப்பார்வையிலே மோகங் கொண்டவர்களாய் முனிவர்கள் தமது தவச் சாலைகளை. வேள்விச்சாலைகளை விட்டு அவள் பின்னே செல்கின்றனர். தம்மனைவியர் பிட்சாடனர் பின்செல்வதையும் தாம் மோகினி பின் செல்வதையும் உணரத்தலைப்பட்டவுடன். தம்பிழைக்கு வருந்தி, பிட்சாடனரை முதற்கண் தண்டிக்க விரைகின்றனர். தவவலிமை என்னும் செருக்கு அவர்களிடம் முனைப்பாக முன்நிற்கிறது. பிட்சாடனரை அழிக்க ஆபிசார வேள்வியைச் செய்கின்றனர். அதனின்றும் எழுந்த சிங்கம், புலி, யானை, பாம்பு, முயலகன் முதலானவற்றை பிட்சாடனர் மீது ஏவுகின்றனர். பெருமான் புன்னகை புரிந்து,

"தங்கிய மாதவத்தின் சுழல் வேள்வியினின்று எழுந்த
சிங்கமும் நீள்புலியுஞ் செழுமால் கரியோடு அலறப்
பொங்கிய போர்புரிந்து பிளந்து ஈருரி போர்த்து"

என்று சுந்தரமூர்த்திசுவாமிகள் கூறியது போன்று அருளாடல் புரிகின்றார். பாம்புகள் அணிகலன்களாகின்றன பரமனுக்கு; விலங்குகளின் தோல்கள் ஆடையாகின்றன விமலனுக்கு; முயலகனோ அவர் திருவடியின் கீழ் அடிப்படுத்தப்பட்டு ஆணவம் அழிந்ததன்மையைக்காட்டி நிற்கிறான்.

கந்தபுராணத்தில் வேறெந்தப் புராணத்தையும் விட நயமாகப் பிட்சாடனர் முனி பத்தினிகள் நடுவே வருவது படம் பிடித்துக் காட்டப் பெறுகிறது:

கண்ணுறு மாதர் யாரும் காமன் ஐங்கணையின் மூழ்கி
உண்ணிகழ் உணர்வு மாழ்க உயிர்பதை பதைத்துச்சோர
அண்ணல்தன் காதல் என்னும் ஆழ்திரைப்பட்டார் அன்னார். —(6-13-46)

பூண்இலங்கிய பொற்றொடி சங்கினம்
மாணுறுந்துகில் மற்றிவை சோர்தலும்
நாணுகின்றனர் கைநெரித் தஞ்சியே
நாணிவீதி நடுவிருந்தார் சிலர். —(6-13-52)


... ... தெரிவையர் யாரையும்
கொல்லுகின்றதுவே பலி கொள்வதோ
சொல்லுமென்று தொடர்ந்திடுவார் சிலர். —(6-13-75)

சந்திரசேகரர்



திருமயிலை கபாலீச்சரம்

பக்கம் : 49






ஆலிங்கன சந்திரசேகர்

டெல்லி தேசிய அருங்காட்சியகம் — மண்ணிவாக்கம் (வண்டலூர் அருகில்)

பக்கம் : 49

பிட்சாடனர்





பிட்சாடனர் வழுவூர் மோகினி
(மயிலாடுதுறை வட்டம்)
பக்கம் : 54

காமதகனர்



மதுரை நந்திமண்டபம்

பக்கம் : 59

சந்தக்கவிவலர் நம் அருணகிரிநாதசுவாமிகள் சிவபெருமானின் பிட்சாடன மூர்த்தத்தைக் காட்டும் அற்புதமான வரிகளைப்பாருங்கள் :

"வாரணம் உரித்துமாதர் மேகலைவளைக்கை நாண
மாபலி முதற் கொள் நாதன்" (கூரிய...குறட்டி திருப்புகழ்)

காஞ்சிப்புராணத்தில் பிட்சாடன வடிவத்தையே நம்முன் காட்டிவிடுகிறார் சிவஞானமுனிவர் :

"அடியிற் றொடுத்த பாதுகையும் அசைத்த நடையும் இசை மிடறும்
வடியிற் சிறப்ப நடந்தருளி மூழையேந்தி மருங்கணைந்த
தொடியிற் பொலிதோள் முனிமகளிர் சுரமங்கையரை மயல்பூட்டிப்
படியிட் டெழுதாப் பேரழகாற் பலிதேர் பகவன் திருவுருவம்."

திருவிளையாடற் புராண ஆசிரியர் இக்கோலத்தைப் பாடாமல் விடுவாரா! அவர் வருணனையையும் சற்றுக் கேளுங்களேன் :

"வேதம் அசைக்கும் கோவணமும் மெய்யில் நீறும் உள்ளாளக்
கீதம் இசைக்கும் கனிவாயும் உள்ளே நகையும் கிண்கிணி சூழ்
பாதமலரும் பாதகையும் பலிகொள் கலனும் கொண்டு இரதி
மாதர் கணவன் தவவேடம் எடுத்தார்..."

பிட்சாடன மூர்த்தி நம்மிடம் என்ன கேட்பார்; நம்முடைய அன்பையும் நன்றியுணர்வையுமே பெற விழைகின்றார். விபுலானந்த அடிகள் பாடல் ஒன்று இங்கே நம் நினைவுக்கு வரும்.


வெள்ளை நிறமல்லிகையோ? வேறெந்த மாமலரே?
வள்ளற் பிரானார்க்கு வாய்த்த மலர் எதுவோ?
வெள்ளை நிறமல்லி யல்ல, வேறுஎந்த மலரும் அல்ல,
உள்ளக்கமலம் அடி உத்தமனார் வேண்டுவது.

இறைவனைப் பொன்னாலும் மணியாலும் பொருளாலும் மலராலும் திருப்தி செய்ய நாம் யார்? எல்லாமே அவர் நமக்குக் கொடுத்தவைதானே! அவர் கொடுத்ததை அவர் என்றுமே திருப்பிக் கேட்பதில்லை. அது மனிதர் தொழில் அல்லவா! பின்னர் இறைவன் கேட்பது என்ன? நம் உள்ளக்கமலமலரை அவனுக்கு அர்ப்பணிப்போம். வினைமூட்டைகளை அவனது ஞானத்தீயில் சுட்டுச் சாம்பராக்கிப் புனிதம் அடைவோம். நம் குற்றங் குறைகளை எல்லாம் தாம் ஏற்றுக்கொண்டு தமது குணங்களையெல்லாம் நமக்கு அருள் செய்யும் பரமனின் தியாகம் எத்தகையது. குறைமதியைச் சூடி நம் குறைமதியை உயர்மதியாக்கும் அவரது சந்திரசேகர வடிவம் போன்று, நம் பாதக மலங்களைத் தன்பாத கமலங்களில் உயிர்கள் பிச்சையாக இடவேண்டிய அவரே உயிர்களை நாடிவரும் உத்தமக் கருணையின் சத்திய வடிவமல்லவா பிட்சாடனமூர்த்தி! தான் இரவலனாகி நம்மைப் புரவலராக்குகின்ற அவரது பெற்றியை என்னென்பது.

"இரத்தலும் ஈதலே போலும்" என்ற வள்ளுவர் வாக்கிற்கு இதுவும் ஒரு புது விளக்கமோ!

பிட்சாடன வடிவம் தென்னாட்டிற்கே உரிய சிறப்பான வடிவமாகும். பொதுவாக அனைத்துச் சிவாலயங்களிலும் இம்மூர்த்தி விளங்குவார். அம்சுமத் பேதாகமம், காமிகாகமம், காரணாகமம், சில்பரத்தினம் ஆகிய நூல்கள் இவ்வடிவ அமைப்பினை விளக்குகின்றன.

பிச்சைப் பெருமான்தன் இடக்காலை ஊன்றி, வலக்காலை வளைத்து, நடந்து செல்லும் குறிப்புணர்த்தும் வடிவம் இது. அவர் நான்கு கரங்கள் உடையவர்; முன் வலக்கரத்திலுள்ள அருகம்புல்லால் மானை ஈர்த்தும், பின் வலக்கரத்தில் உடுக்கை ஏந்தியும், பின் இடக்கரத்தில் பாம்புடன் திரிசூலம் ஏந்தியும், முன் இடக்கரத்தில் கபாலங் கொண்டும் அவர் திகழ்கிறார். ஆடையேதுமின்றி, பாம்பையே அரையில் அணிந்து விளங்குகிறார். பாம்பணிகளைப்பூண்டு, நெற்றியில் திரியக்புண்டரத்துடன் விளங்கும் அவரது சூலத்தை மயில்தோகை அணி செய்யும். மரத்தாலான பாதுகைகளை அவர் அணிந்துள்ளார். அவரது தலையில் ஜடாபாரம் அல்லது ஜடாமண்டலம் திகழ்கிறது. நெற்றியிற்பட்டமும், முக்கண்ணும் உடைய நீலகண்டராக விளங்குகிறார். வலக்காலில் வீரக்கழல்; திருவடிகளில் வேதமே பாதுகைகள், பிரமகபாலமாகிய பிச்சைப்பாத்திரம் அவரது கொப்பூழ் வரையில் உயர்ந்துள்ளது. தமருகம் (உடுக்கை) கொண்ட வலக்கை காது வரையில் நீண்டு ஓங்கி விளங்குகின்றது. கபாலம் ஏந்திய இடக்கை கட்கமுத்திரையில் அமைந்துள்ளது. வலப்பக்கம் ஒருமானும் இடப்பக்கம் ஒரு குறட்பூதமும் காணப்படும். கபாலம் உடையவராதலின் கபாலி என்ற பெயரும் பிட்சாடனருக்கு உண்டு.



சில பிட்சாடனர் வடிவங்களில் தண்டு, பாணம் ஆகியனவும் அமைந்திருக்கும்.

காஞ்சிபுரம், திருச்செங்காட்டங்குடி, திருவெண்காடு, கும்பகோணம், வழுவூர், பந்தநல்லூர் முதலிய தலங்களிலுள்ள பிட்சாடன மூர்த்தங்கள் கண்டின்புறத்தக்கன.

பிட்சாண்டார் கோயில் என்ற பெயர் கொண்டே ஒருதலம் திருச்சிக்கருகில் விளங்குகிறது.

திருவெண்காட்டுக்குத்தெற்கே (6 கி. மீ.) மேலப் பெரும்பள்ளம் எனப்படும் திருவலம்புறத்தில் பிட்சாடனர் வீணை ஏந்திய செப்புத்திருமேனி அற்புதமானது.

"முறித்ததொரு தோலுடுத்து முண்டஞ் சாத்தி
முனிகணங்கள் புடைசூழ முற்றந் தோறுந்
தெறித்ததொரு வீணையராய்ச் செல்வார்"........

—'கருத்ததொரு' ...திருவலம்புரம் திருத்தாண்டகம்.

வழுவூர், திருநின்றவூர் மோகினி செப்புத்திருமேனியும், சென்னை சென்னமல்லீசுவரர் கோயில் பிட்சாடனர், மோகினி செப்புத்திருமேனிகளும் குறிப்பிடத் தக்கவை. தஞ்சைக் கலைக்கூடத்திலும், நெல்லைமாவட்டம் பிரமதேசம் கோயிலிலும் அமைந்த பிச்சைப் பெருமான் வடிவங்களும் காணற்குரியன.

பிச்சைப்பெருமானை வணங்கினால் பெருவாழ்வுகிட்டும் என்கிறார் வரதுங்க பாண்டியன் :

" பாரிடஞ் சூழ்வரத் தான்பலி கொண்டுந்தன் பாதமலர்
சேர் அடியார்க்குப் பெருவாழ்வளிப்பான் "

—திருக்கருவைக்கலித்துறைஅந்தாதி.

திருமுறைகளில் பிச்சைப்பெருமானின் திருக்கோலம் பலபடப் போற்றப் பெறுகின்றன. " பற்றி ஒருதலை கையினில் ஏந்திப் பலி தேரும், பெற்றி அதுவாகித்திரி தேவர் பெருமானார் ", இடுபலியது கொடு மகிழ்தருஞ் சேடர் ", " செகுவாயுகு பல்தலை சேர்கையர் ", " பல்லையார் படுதலைப் பலிகொளும் பரமனார் ", " ஞாலமெங்கும் பலி கொண்டுழல்வார் ", " வாடற்றலையில் பலிதேர் கையார் " என்று திருஞானசம்பந்தரும், " கபாலம் ஏந்திக்கடை தொறும் பலிகொள்ளும் காட்சியர் ", " அக்கும் ஆமையும் பூண்டு......பல்பலிதேரும்," " உன்மத்தக மலர் சூடி உலகந்தொழச் சுடலைப் பன்மத்தகங்கொண்டு பல் கடைதொறும் பலி திரிவான் ", " என்பு பூண்டு எருதேறி இளம்பிறை மின்புரிந்த சடைமேல் விளங்கவே நன்பகற் பலி தேரினும் ", " ஓடு ஒன்று ஏந்திவந்து இடுதிருவே பலி என்றார் ", " கழலொலியும் கைவளையும் ஆர்ப்ப ஆர்ப்பக் கடைதோறும் இடுபிச்சைக்கென்று செல்லும் திகழொளி ", " சந்தித்த கோவணத்தர் வெண்ணூல் மார்பர் சங்கரனைக் கண்டீரோ கண்டோம் இந்நாள், பந்தித்த வெள்விடையைப் பாய ஏறிப்படுதலையில் என்கொலோ ஏந்திக்கொண்டு ", " தொட்டிலங்கு சூலத்தர் மழுவாளேந்திச் சுடர்க்கொன்றைத் தாரணிந்து சுவைகள்பேசிப் பட்டி வெள்ளேறேறிப் பலியும் கொள்ளார் ", " படர்சடைக் கொன்றையும் பன்னகமாலை பணிகயிறா உடைதலை கோத்துழல் வேணியன் உண்பலிக்கென்றுழல் வோன் ", " கபாலம் ஏந்தி ", " பொய்த் தலை ஏந்தி நற்பூதியணிந்து பலிதிரிவான் ", " பொன்னொத்த மேனிமேல் வெண்ணீறணிந்து, புரிசடைகள், மின்னொத்திலங்கப் பலிதேர்ந்துழலும் விடங்கவேடம் ", " விடையேறி நீறுபூசி நாகங்கச்சரைக் கார்த்தோர் தலைகையேந்தி, உரையாவந்தில் புகுந்து பலிதான் வேண்ட ", " இயல்பாக இருபிச்சை ஏற்றல் தோன்றும் " என்று திருநாவுக்கரசரும், பிச்சைப் பெருமானின் பல்வேறு தன்மைகளைக் காட்டும் சில பகுதிகள் ஈண்டு சுவைத்து இன்புறத்தக்கன. " ஆரூர் எம் பிச்சைத் தேவா! நான் என்செய்கேன்! பேசாயே! " என்று மணிவாசகர் இறைவனைப் பேச அழைக்கின்றார்.

★ ★ ★

காமதகனர்

பூதப் படையுடைப் புண்ணியரே ! புறஞ்சொற்கள் நும்மேல்
ஏதப்பட எழுகின்றனவால் ! இளையாளொடு உம்மைக்
காதற் படுப்பான் கணைதொட்ட காமனைக் கண்மலராற்
சேதப் படுத்திட்ட காரணம் நீர்இறை செப்புமினே.

—சேரமான் பெருமான் நாயனார்.

உலகில் வரும் கேடுகளை ஊன்றிக் கவனித்தால் அவற்றிற்கு அடிப்படைக் காரணம் காமமே என்பது புலப்படும்.

"காமம் இல்லைஎனிற் கடுங்கேடு எனும்
நாமம் இல்லை நரகமும் இல்லையே"

என்பார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

காமமே கொலைகட்கெல்லாம் காரணம், கண்ணோடாத
காமமே களவுக் கெல்லாம் காரணம், கூற்றும் அஞ்சும்
காமமே கள்ளுண்டற்கும் காரணம், ஆதலாலே
காமமே நரகபூமி காணியாக் கொடுப்பதாகும்

என்று காமத்தின் தன்மையைத் திருவிளையாடற் புராணம் தொகுத்துரைக்கின்றது. இவ்வுலகில் காமத்தால் வரும் கேடுகளை அறிந்திருந்தும் காமத்தின் வசப்

படாதவர்களைப் பார்ப்பது அரிதாக உள்ளது. கள் உண்டவர்க்கே மயக்கந்தரும், காமம் பேசும்போதே மயக்கந்தரும் அல்லவா !

" மணிநகையாரே தெய்வம், வாக்கு உபதேசம், கொங்கைத்
துணைகுரு பீடம், பாதத்துணை வருடுவதே பூசை
அணைவது முத்தி...காமன் ஆகமங்கள் என்றான் "

என்றபடி காமன் ஆகமங்களில் வல்லவர்களே உலகில் அதிகம். இத்தகையோர்பால் சிவாகமங்களை எப்படிக் கூறமுடியும். காமனை வெல்லுவதென்பது எளிதான காரியமல்லவே. சிவபெருமானுக்குரிய தனிச்சிறப்புகள் அவர் காமனை எரித்ததும் காலனை உதைத்ததும் தானே ! மனிதன் வெல்லவிரும்பும் காமமும் காலமும் மனிதனையே வென்றுவிடுகின்றன. காமத்தையும் காலத்தையும் வெல்லும் ஆற்றல் நாம் பெறவேண்டுமாயின் அவற்றைவென்ற சிவபெருமானுடைய பெருங்கருணைக்கு ஆளாகவேண்டும். ஐந்தொழில் இயற்றும் இறைவன் காமனை ஏன் எரிக்கவேண்டும் ? கண்ணுதற்கடவுள் காலனைக்காய்ந்தார் என்றால் காரணம் இருந்தாக வேண்டும்.

காமதகனம் பற்றி வடமொழி லிங்கபுராணம் விரிவாகப் பேசுகின்றது.

சூரபன்மாதியரின் கொடுமையால் தீமையின் வலிமை மிகுந்து உலகம் அல்லலுற்றது. அவுணர்களை அழிக்க இறைவனைப் பணிந்து பரவினர் நல்லோர். கயிலையில் மோன மூர்த்தியாக-யோகியாக-தட்சிணாமூர்த்தியாக அமர்ந்து நால்வர்க்கு அறம்பொருள் இன்பம் வீடு பற்றிச் சொல்லாமற்சொல்லும் குருமூர்த்தியாக எழுந்தருளியிருந்தார் சிவபெருமான். இமவான் மகளாக அவதரித்து உமையம்மையார் பெருமானைத் திருமணம் புரிந்துகொள்ளக் கடுந்தவம் இயற்றி வந்தாள். இவர்கள் திருமணம் நிகழ்ந்து ஒரு குமாரன் தோன்றி அசுரர்களை அழித்தாக வேண்டும். யோகியாய் விளங்கும் இறைவன் போகியாக மாறவேண்டும். அவருக்கு உமையம்மை பால் மனம் செல்லவேண்டும். ஆம் அவருக்குக் காமம் வரவேண்டும் ! என செய்வது. விண்ணோர் கூடினர். இந்திரன் காமனை அழைத்துச் சிவபெருமான் மீது மலரம்பு தொடுக்கப் பணித்தனன். மன்மதன் அஞ்சினான். இந்திரனால் அழிவதைவிடச் சிவபெருமானால் உய்வடைவது உயர்வுதரும் எனத்துணிந்தான். சிவபெருமான்மீது மலர்க்கணைகளைத் தொடுத்தான். சிவபெருமான் மோனங்கலைந்து கண் திறந்தார். நெற்றிக்கண் விழித்தது. மன்மதன் சாம்பரானான். காமன் மலர்களைத்தானே சிவன்மீது செலுத்தினான் ! கல்லெறிந்த சாக்கியருக்குக் கதியளித்த கண்ணுதற்கடவுள் மலர் எறிந்த மன்மதனை மாய்த்துவிட்டார் ! என்ன நியாயம் ! ஆம், மன்மதன் மலர் எய்திய போதிலும் அவன் உள்ளம் பக்தியால் அதனைச் செய்யவில்லை. சாக்கியர் கல்லெறிந்தபோதிலும் அவர் உள்ளம் சிவபெருமான் மீது கனிந்து பக்தி மிகுந்திருந்து. அவர் எறிந்த கல்கண்டு அதனைக் கற்கண்டாக ஏற்றான் பரமன் ! செயலைவிட நோக்கம் தானே முக்கியம். ஆதலால்தான் மன்மதன் கதி அவ்வாறாயிற்று. மன்மதன் பாணம் மாதேவனை மயக்கிவிடவில்லை என்பதும் ஈண்டு கருதத்தக்கது. தனது அமரகாதலனான மன்மதன் மாய்ந்தது கண்டு இரதிதேவி புலம்பினாள். இறைவனைப்

பலவாறு துதித்துப் பரவினாள். தனக்கு மாங்கல்ய பிச்சை அருள வேண்டினாள். இறைவனும் அவள் நிலைக்கு இரங்கி, அருவமாய் தன் தொழில் செய்யுமாறு மன்மதனைப் பணித்து உயிரளித்து அருள்புரிந்தான்.

"எரிபுனை நமது நோக்கால் இறந்தநின் உடலம் நீறாய்
விரைவொடு போயிற்றன்றே வேண்டினள். இரதியன்னாட்
குருவமாய் இருத்தியேனை உம்பரோ டிம்பர்க்கெல்லாம்
அருவினை யாகி யுன்றன் அரசியல் புரிதி என்றான்"

என்று இந்நிகழ்ச்சியைக் கந்தபுராணம் பேசும். இரதியின் வேண்டுகோளுக்கு இரங்கி, மன்மதனைக் கிருஷ்ணாவதாரத்தில் பிரத்யும்னனாகத் திருமால் பெற்றெடுப்பார் என்றருள் புரிந்தார் சிவபெருமான் என வடமொழிப் புராணம் பேசும். காமபாணத்தை விட உமையின் தவமே இறைவனது மோனங்கலையக் காரணமாயிற்று. பார்வதி தன் தவத்தினாலேயே சிவபெருமானை அடையப்பெற்றார் என்று குமாரசம்பவம் விளக்குகின்றது. சிவபெருமான் உமையை மணந்தருளினார்.

எந்த நெற்றிக் கண்ணிலிருந்து காமனை எரித்த நெருப்புத் தோன்றியதோ, அதே நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகள் தோன்றி அறுமுகச் செவ்வேளாகி, பார்வதி பாலனாகி-பூவுலகில் அசுரர்களை மாய்த்து அமரர் இடரும் அவுணர் உயிரும் அழிய அருள் புரிந்ததைக் கந்தபுராணம் விரிவாகக் கூறும்.

காமதகனம் எப்போது நிகழ்ந்தது என்ற வினாவுக்குத் தேவாரத்தில் விடை கிடைக்கின்றது. இறைவன் யானை உரித்த பின் திரிபுரத்தை எரித்தார். திரிபுரத்தை எரித்த பின் மன்மதனை எரித்தார் என்று தேவாரம் பேசுகின்றது. திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும் இதற்கு விடையளிக்கும் பான்மை சுவையானது.

"உரித்த கரியுரி மூடி ஒன்னார் மதில் மூன்றுடனே
எரித்த சிலையினன்"—திருநாவுக்கரசர் தேவாரம் (திருநெய்த்தானம்)

"உமையாளொடுங் கூட்டமா விண்டவர் தம் மதில் எய்தபின்
வேனில் வேள் வெந்தெழக் கண்டார்"—திருஞானசம்பந்தர் தேவாரம்
(திருமுக்கீச்சரம்)

காமனை எரித்த இறைவனைக் காமதகனமூர்த்தி என்று போற்றுகிறோம். நம் காமங்கள் மாற்ற அப்பெருமானை வழிபடுகின்றோம். இதில் சில தத்துவங்கள் பொதிந்துள்ளன. இறைவனும் இறைவியும் பிரிந்திருந்த நிலையில் உலகுயிர்கள் செயலிழந்து கிடந்தன என்னும் போது அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்ற உண்மை புலப்படும். இறைவி மலைமகளாய் அவதரித்துத் தவம் இயற்றினாள் இறைவனை மணக்க. இறைவனோ தட்சிணாமூர்த்தியாக யோக நிலையில் இருந்தார். ஒரு சிறந்த கணவனை அடையப்பெண்ணும், ஒரு சிறந்த மனைவியைப் பெற ஆணும் அருந்தவம் இயற்ற வேண்டும். தவத்தினாலேயே கணவனுக்குத் தகுந்த மனைவியும் மனைவிக்குத் தகுந்த கணவனும் வாய்க்கும் என்ற தத்துவமும் இதில் வெளிப்படுகின்றது.

காமதகனம் நடைபெற்ற பிறகே குமாரசம்பவம் ஏற்பட்டது என்பது காமம் நீங்கித் தவ யோகத்தால் பிள்ளை பெறுவதே சிறப்புடையது என்பதைப் புலப்படுத்தும். மனிதன் தன் உயிராற்றலை உயர்ந்த குறிக்கோள்களுக்கு மேலான நிலையில் பயன் படுத்த வேண்டுமென்பதைச் சிவபெருமானது ஆற்றல் நெற்றிக்கண் வழியே (ஊர்த்துவரேதசு) தவக்கனலாக-முருகனாகத் தோன்றி உலகைக்காத்தருளியது. உள்ளதன் தன்மையாம் சக்தியும் நல்லதன் தன்மையாம் சிவமும் தவத்தால் இணையும் போது தனிப்பெரும் அழகாம் முருகு தோன்றித் தீமைகளை அழித்து உலகை இன்புறச் செய்கின்றது என்ற மாபெரும் தத்துவத்தை இம்மூர்த்தி விளக்கியருளுகின்றார். இவரை வழிபட்டால் நம் காமங்கள் நீங்கி, கண்ணுதற் கடவுளின் கருணையினால் கதிகிட்டும்.

காமனை எரித்ததால் சிவபெருமானுக்குக் காமாரி என்ற பெயரும் உண்டு. அவர் காமனை எரித்த திருத்தலம் தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறைக்கு அண்மையிலுள்ள திருக்குறுக்கை என்று அத்தலமான்மியம் பேசுகின்றது. இறைவனது எட்டு வீரச் செயல்களைக் குறிக்கும் அட்டவீரட்டத் தலங்களுள் திருக்குறுக்கையும் ஒன்று. காமனை எரித்து இறைவன் நடனமாடிய சபை அத்தலத்தில் ' காமாங்கநாசினி சபை ' என அழைக்கப்படுகிறது.

உத்தர காமிகாகமம், சுப்பிரபேதாகமம், பூர்வ காரணாகமம் முதலியவற்றில் காமதகனமூர்த்தியின் திருவுருவம் விளக்கப்பட்டுள்ளது. இவ்வடிவில் சிவபெருமான் யோகதட்சிணாமூர்த்தியாகவும் அவரது திருநோக்கின் மாத்திரத்திலே அவருக்குமுன் காமன் வீழ்ந்துகிடப்பதாகவும் இக்கோலம் அமைக்கப்படலாம். பூர்வகாரணாகமத்தின்படி, சிவபெருமான் மூன்றுகண்களும் நாற்கரங்களும் கொண்டு ஜடாமகுடம் தரித்து உக்கிரமாகத் தோன்றுவார். அவரது இருவலக்கரங்களிலும் பாம்பும் அட்சமாலையும் இரு இடக்கரங்களும் பதாக, சூசிஹஸ்தங்களாக அமைந்திருக்கும், மன்மதனது துணைவர்களான மதம், ராகம், வசந்தம், சிசிர்ருது ஆகியவற்றையும் காரணாகமம் காட்டுகின்றது.

காமதகன மூர்த்தியைக் குறித்துத் திருமுறைகளில் பல இடங்களில் பேசப்பட்டுள்ளது. " காமனாருடல் கெடக் காய்ந்த எம் கண்ணுதல் ", " கனலாடு கண்ணாற் காமனைக்காய்ந்தவன் ", " கருப்பு வில்லியைப் பொடிபட விழித்தவர் " எனப் போற்றுவார் திருஞானசம்பந்தர். " காமன்கணைவலங்காய்ந்த முக்கண்ணினர் ", " காய்ந்ததுவும் அன்று காமனை வெற்றிக்கண்ணினால் " எனச் சாற்றுவார் திருநாவுக்கரசர். " ஐவணமாம் பகழியுடை அடல்மதனன் பொடியாகச் செவ்வணமாம் திருநயனம் விழிசெய்த சிவமூர்த்தி " எனப்பரவுவார் சுந்தரர். " அயனை அனங்கனை அந்தகனைச் சந்திரனை வயனங்கள் மாயா வடுச்செய்தான் " எனப்பட்டியலிடுவார் மணிவாசகர். அருணகிரிநாதசுவாமிகளும் " அனங்கன் நொந்து நைந்து வெந்து குந்துசிந்த அன்று கண்திறந்திருண்டகண்டர் ", " மதனாரைக்கரிக்கோலமிட்டார் ", "மதனாகமும் விழவிழி ஏவியநாதர் " என்றுபலவாறு இவ்வடிவத்தை நினைப் பூட்டுகின்றார்.

★ ★ ★

காலாந்தகர்

தோடுலா மலர்கள் தூவித் தொழுதெழு மார்க்கண்டேயன்
வீடுநாள் அணுகிற்றென்று மெய்கொள்வான் வந்த காலன்
பாடுதான் சொல்ல அஞ்சிப் பாதமே சரணம் என்னச்
சாடினார் காலன் மாளச் சாய்க்காடு மேவினாரே. —திருநாவுக்கரசர்

இறப்பைப் பற்றிய எண்ணமே மனிதனைத் தத்துவநெறிக்கு இட்டுச் செல்கின்றது. "நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும், பெருமை உடைத்து இவ்வுலகு" என்பார் திருவள்ளுவர். "இன்னாது அம்ம இவ்வுலகம்" என்று கூறும் புறநானூறு. ஞானியரும் இறப்பைக் கண்டு அஞ்சுவர். இறப்பே இவ்வுலகைத் துயர் இலங்கச் செய்கிறது. ஆனால் அது இயற்கையின் விதி.

வஞ்ச நமன் வாதனைக்கும் வன்பிறவி வேதனைக்கும்
அஞ்சிஉனை அடைந்தேன் ஐயா! பராபரமே!

என்று அடிபற்றுவார் தாயுமான அடிகள். பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறத்தலும் புதிய செய்தி அன்று. தோற்றம் உண்டேல் மரணம் உண்டு என்பது வெள்ளிடைமலை. இறப்புத் துன்பக் கொடுமையைத் தனது ஒவ்வொரு பாட்டிலும் எடுத்தியம்பி இறைவனைப் பணியுமாறு நம்மை ஆற்றுப்படுத்தும் ஐயடிகள் காடவர்கோன் நாயனார் இயற்றிய சிவத்தலத் திருவெண்பா, பதினொன்றாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. மரணவாயிலில் இறைவனைத் தொழுவது என்ன இயலக்கூடியதா

காலசம்ஹாரர்



திருச்செங்காட்டங்குடி
(நன்னிலம் வட்டம்)
பக்கம் : 63



மதுரை நந்திமண்டபம்

பக்கம் : 62



கங்கைகொண்ட சோழபுரம்
(திருச்சி மாவட்டம்)
பக்கம் : 62

ஜலந்தராவதர்



திருவிற்குடி வீரட்டானம்
(திருவாரூர் அருகில்)
பக்கம் : 66



மதுரை நந்திமண்டபம்

பக்கம் : 66

என்ற அச்சமே ஞானியரைக்கூட " அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன் " எனவும் பாடச் செய்தது. மரண வரம் கேட்கும் திருப்போரூர் சிதம்பர சுவாமிகளின் பாடலைப் பாருங்கள் :

நோயுற் றடராமல் நொந்துமனம் வாடாமல்
பாயிற் கிடவாமல் பாவியேன்—காயத்தை
ஓர் நொடிக்குள் நீக்கி எனை ஒண்போரூர் ஐயா நின்
சீரடிக்கீழ் வைப்பாய் தெரிந்து

நிலையாத வாழ்வைப் பெற்ற நாம் நிலையாக வாழ நினைக்கிறோம். அலையாத மனத்தவராய் கலையாத கல்வியோடு கலைக்கோயில் விளங்கும் கடவுளைப் பணிந்து உய்வடைகின்றோம். இறைவன் ஒருவனே காலகாலன். ஆகவே காலத்தை வென்று வாழ அவனைத்தானே பற்ற வேண்டும் !

" நீரிற்குமிழி இளமை நிறை செல்வம்
நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று "

என எச்சரிக்கின்றார் குமரகுருபரசுவாமிகள்.

உயிர்களுக்கெல்லாம் அந்தகனாம் யமனுக்கும் ஒரு அந்தகனாகத் திகழ்கிறார் சிவபெருமான், அவர் காலாந்தகர், காலாரி, காலசம்ஹார மூர்த்தி என்றெல்லாம் போற்றப்பெறுகிறார். இக்கோலம் அடியவர்களுக்காக எதையும் செய்யவல்ல சிவபெருமானது பராக்கிரமத்தை விளக்கிக் காட்டுகின்றது. காலனிடமிருந்து நம்மைக் காப்பவராகக் காலகாலமூர்த்தி திகழ்கிறார். உலகில் தீயசக்திகளையும் அசுரர்களையும் அழித்துக் காக்கும் பெருமான், அடியவர் ஒருவருக்காக-அதுவும் ஒரு சிறுவனுக்காகக் காலனையே உதைத்தார் எனில் அவரது அளவற்ற கருணையை என்னென்பது! ஆம். மார்க்கண்டேயர் வரலாறு மனித குலத்துக்கே மாண்பைத் தருவது ; மன்னா உலகில் மன்னுதல் குறித்து மனிதன் என்ன செய்யவேண்டுமென்பதை முறைப்படி எடுத்து இயம்புவது அல்லவா !

கூற்றங் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு

என்னும் தமிழ்மறை மார்க்கண்டன் வரலாற்றை விளக்க எழுந்த தத்துவம் அன்றோ !

கவுசிக முனிவரின் புதல்வராக விளங்கிய மிருகண்டு முனிவர் தம்மனைவி மருத்துவதியோடு இல்லறம் இயற்றிவரும் நாளில், ஆண்மகவு வேண்டி அருந்தவம் இயற்றிட அவதரித்த மைந்தன் மார்க்கண்டேயனுக்கு வயது பதினாறு என்பது பிரமன் வகுத்த கணக்கு ! மார்க்கண்டேயன் மனம் சிவபெருமானைப் பற்றியிருந்தது. நாளும் சிவபெருமானை வழிபட்டு வந்தான். வயது பதினாறு அடைந்தான்.

மார்கண்டேயனைக் கவர்ந்து செல்ல யமன் வந்துவிட்டான். அப்போது மார்க்கண்டேயன் சிவபூஜை செய்து கொண்டிருந்தான். யமனைக் கண்ட அவன் சிவலிங்கத்தைக் கட்டிக்கொண்டுவிட்டான். யமன் விடுவதாயில்லை. சிவலிங்கத்துடன் மார்க்கண்டேயனையும் சேர்த்து பாசக்கயிற்றால் இழுத்தான். சிவபெருமான் தோன்றினார். காலனை உதைத்தார்; காலன் வீழ்ந்தான். மார்க்கண்டேயன் "என்றும் பதினாறு" என்னும் பெருவரம் பெற்றுய்ந்தான். இவ்வரலாற்றை கம்பர் மிக அழகாக இராமாயணத்தில் வீபீடணன் அடைக்கலப் படலத்தில் வைத்துப் பேசுவதைப் பாருங்கள்:

"நஞ்சினை மிடற்று வைத்த நகைமழு வாளன் நாளும்
தஞ்செ'ன முன்னம் தானே தாதைபாற் கொடுத்துச் சாதல்
அஞ்சினேன் அபயம் என்ற அந்தணர்க்காகி அந்நாள்
வெஞ்சினக் கூற்றை மாற்றும் மேன்மையின் மேன்மை யுண்டோ?

(யுத்தகாண்டம்: வீடண. அடை. படலம்-15)

தாயுமான அடிகள் மார்க்கண்டேயன் வரலாற்றைக் குறிப்பிடும் போது இனி அன்பர்கள் மரணத்தைக்கண்டு ஏன் அஞ்சவேண்டும் என்று தெளிவுறுத்துகிறார்:

"மார்க்கண்டர்க் காக அன்று மறலிபட்ட பாட்டை உன்னிப்
பார்க்கில் அன்பர்க்கு என்னபயங்காண் பராபரமே!"

காலகாலமூர்த்தியாகப் பெருமான் அருள்புரிந்த தலம் எது?

தஞ்சைமாவட்டம்-மயிலாடுதுறை வட்டத்தில் **திருக்கடவூர்** என்ற தொன்மையானதலம் உள்ளது. ஊழிக்காலத்தையும் கடந்து விளங்கும் தலமாதலின் அது கடவூர். ஆம். யமபயத்தையும் கடக்க உதவும் தலமாதலின் அப்பெயர் பொருத்தமானதுதானே! அட்டவீரட்டத்தலங்களில் ஒன்றான அங்கே, காலசம்ஹார மூர்த்தியின் அற்புதத் திருவுருவம் நமக்கு மரணத்திலிருந்து காப்பளிக்கின்றது. கடவூர்ப்பெருமானைவிடச் சிறந்த ஆயுள் இன்ஷியூரன்ஸ் வேறுயாரால் நமக்கு அளிக்க முடியும்! பாலிஸிதொகை பக்திதானே! பணம் கட்டவேண்டியதில்லை! அங்கே அன்பர்க்கு நல்லனவெல்லாம் தரும் அபிராமியின் கடைக்கண் நோக்கும் நமக்குக் கிடைக்குமே! குங்குலியக்கலயநாயனார் வாழ்வைக் குபேர வளமாக்கிய பதியும் அதுதானே. ஆதலால்தான் அறுபது ஆண்டு நிரம்பியவர்கள் தமது ஆயுள்நலம்வேண்டி இன்றும் திருக்கடவூர்ப் பெருமானிடம் சென்றுவழிபட்டு இன்புறுகிறார்கள். கங்கை கொண்ட சோழபுரத்தில் காலகாலமூர்த்தி திருவடிவம் அற்புதமாக உள்ளது.

அம்சுமத் பேதாகமத்தில் காலசம்ஹாரமூர்த்தியின் வடிவம் விளக்கப்பட்டுள்ளது. இவ்வடிவில், பெருமான் மூன்றுகண்களும் நான்கு அல்லது எட்டுத் திருக்கரங்களும், பக்கப்பற்களும் கொண்டுதிகழ்கிறார். எட்டுத்திருக்கரங்கள் இருப்பின், வலக்கரங்கள் நான்கிலும் முறையே சூலம், பரசு, வஜ்ஜிரம், கட்கமும், இடக்கரங்கள் இரண்டிலும்

கேடகமும் பாசமும் கொண்டு திகழ்வார். எஞ்சிய இரு இடக்கரங்களும் விஸ்மய, சூசி முத்திரைகளைக் காட்டும். அனைத்து அணிகலன்களையும் பூண்டு விளங்கும் இம்மூர்த்தி பவளச்செம்மேனியுடையராய் விளங்குவார்.

இயமன் அச்சத்துடன் நடுங்கிநிற்கிறான். இருகரங்களுடன் பக்கப்பற்கள் தெரியுமாறு கரண்ட மகுடத்துடன் அவன்விளங்குகிறான். அவனது ஒருகரத்தில் பாசத்துடன் இருகரங்களையும் கூப்பி இறைவன் கருணைக்கு ஏங்கி வணங்கி நிற்கிறான்.




காமிகாகமத்தின்படி, சிவபெருமானுடைய இடது பாதம் யமனை உதைப்பதாகவும், வலது பாதம் பூமியில் ஊன்றியதாகவும் அமைந்திருக்கும். அவரது இருவலக் கரங்களிலும் சூலமும் பரசும் விளங்கும். ஒரு இடக்கரம் நாகபாசம் கொண்டதாயும் மற்றொரு இடக்கரம் சூசிஹஸ்தமாயும் அமைந்திருக்கும். சிவபெருமானுடைய சூலம் யமனது கழுத்தில் குத்திச்செல்வதாக அமைந் திருக்கும். யமன் மயங்கிக் கீழே விழுந்துகிடப்பான். மார்க்கண்டேயர் வழிபடும் இலிங்கத்தினின்றும் பெருமான் தோன்றுவதாகவும் இம்மூர்த்தி அமைந்திருக்கலாம். இவ்வடிவில் இலிங்கமும் சிவபெருமான் வடிவமும் இலிங் கோற்பவ மூர்த்தி அமைப்பில் இருக்கும். சிவலிங்கத்தின் அருகே மார்க்கண்டேயர் பூசைபுரிந்துகொண்டிருப்பார்.

திருமுறைகள் காலகாலனைப் பலவாறு துதிக்கின்றன. சில எடுத்துக்காட்டுவாம்.

திருஞானசம்பந்தர் " மாணிதன்னுயிர் மதித்துணவந்த அக்காலனை உதை செய்தார் " எனப்போற்றுவார். சுந்தரரோ, " அந்தணாளன் உன் அடைக்கலம் புகுத அவனைக்காப்பது காரணமாக, வந்த காலன்தன் ஆருயிரதனை வவ்வினாய் " எனப் போற்றுகிறார்.

★ ★ ★



ஜலந்தரவதர்

இருகூறாகச் சலந்தரனை இறுத்து மாட்டி அவ்வடிவம்
அருகே தோன்றச் சுதரிசனம் அங்கைத் தலத்தின் மிசை ஏந்தி
முருகார் கடுக்கைத் தண்ணறும்பூந்தொடையல் வாகைமுடிவிளங்கத்
திருவார் காட்சி யளித்தருளும் தேவர் கோமான் திருவுருவம். —காஞ்சிப்புராணம்

தேவர்களாயினும் அகந்தை மேலிடும் போது அல்லலுக்கு ஆளாகி, உழன்றுப் பின் இறைவனருளால் இடர்நீங்கப் பெறுவர் என்பதற்கு நமது புராணங்களில் பல வரலாறுகள் உண்டு. இறைவன் அருளில்லையேல் யாராயிருந்தாலும் இன்பமுடன் வாழ இயலாது.

தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது

என்ற திருக்குறள் புகட்டும் தத்துவமும் அதுதானே. அதன் விளக்கமாகத் திகழ்வது ஜலந்தரவதமூர்த்தியாகும்.

ஒருநாள் தேவேந்திரன் கயிலைக்குச் சென்றான். அவனுக்கு அறிவு புகட்டச் சிவபெருமான் வடிவு மாறி எதிரே நின்றார். அவரை நோக்கி, 'நீ யார்?' என இந்திரன் வினவினான். அவர் பதிலேதும் கூறவில்லை. வெகுண்டான் இந்திரன்; தன்வச்சிராயுதத்தால் அவரைத்தாக்கினான். அது பொடியாக உதிர்ந்தது. உடனே சிவபெருமான் ஓர் உருத்திரர் வடிவாக நின்றார். இந்திரன் வணங்கித்தன் பிழை பொறுத்தருள வேண்டினான். ஆனால் உருத்திரன் வடிவில் ஏற்பட்ட வியர்வையி லிருந்து ஒருவன் தோன்றினான்; கடலரசன் அவனை வளர்த்தான். அவனுக்கு ஜலந்தரன் என்று பெயர். அவன் அசுரர்களோடு சேர்ந்து ஆற்றல் மிகுந்து விளங்கினான். காலநேமி என்பவனுடைய மகளான பிருந்தையை மணந்து தருக்குமிக்குச் செருக்கோடு வாழ்ந்தான். மேருமலையிலிருந்த தேவர்களோடு போரிட

முனைந்த ஜலந்தரனோடு திருமால் இருபதினாயிரம் ஆண்டுகள் எதிர்த்துப் போரிட்டும் அவனை வெல்ல முடியவில்லை. ஜலந்தரன் அடுத்து கயிலை சென்றான். இந்திரன் அங்கே ஒளிந்திருந்தான். கயிலைக்குப் போரிடச் செல்ல வேண்டாம் எனப்பிருந்தை தடுத்தாள். ஜலந்தரன் அவள் சொற்குச் செவி சாய்க்கவில்லை. இந்திரன் தன்னைக் காத்தருளுமாறு கயிலை நாதனைத்துதிக்க, அவரும் அவனுக்கு அபயம் அளித்தருளினார். கயிலையை அடைந்த ஜலந்தரன், முன்னால் வயது முதிர்ந்த முனிவர் ஒருவர் தென்பட்டார். அவர் ஜலந்தரனை நோக்கி, ‘ நீ யார் ? ’ எனவினவ, அவனும் ‘ நான் ஜலந்தரன், சமுத்திரராஜன் மகன். சிவபெருமானுடன் போரிட வந்தேன் என்று இறுமாப்புடன் பதிலளித்தான். முனிவர் நகைத்து, “ கண்ணுதற் கடவுளோடு போரிடக்கருதினால் கணத்தில் உயிர் இழப்பாய் ; உயிர் பிழைக்க வேண்டில் உடனே திரும்பி ஓடி விடு ” என்றார். ஜலந்தரன் ‘ என் ஆற்றலை விரைவில் நீர் காண்பீர் ’ என, முனிவரும் தன் பாதத்தால் தரையில் ஒரு சக்கரம் போல் கீறி, “ இவ்வலையத்தைச் சிரமேல் ஏற்றுத்தாங்குவாயோ ?” என்றார். உடனே ஜலந்தரன் ” இது ஒரு பெரிய செயலோ ” என நகைத்து அதனைத் தன் இரு கைகளாலும் எடுத்து மார்பிலும் புயத்திலும் தாங்கிச் சிரத்தின்மேல் வைத்துக் கொள்ள அச்சக்கரம் அவனை இருபிளவாகப் பிளந்துவிட்டு, மீண்டும் முனிவர் வடிவிலிருந்த சிவபெருமான் கரத்தினை அடைந்தது. சிவபெருமான் விழித்தீயினால் அவனது சேனையும் சாம்பராயிற்று. இந்திரனும் தேவர்களும் சிவபெருமானைத் துதித்துப் போற்றினார்.

மற்றொரு வரலாற்றின்படி, திரிபுரங்கள் மூன்றினையும் சிவபெருமான் எரித்த போது, அவரது நெற்றிக் கண்ணிலிருந்து எழுந்த தீயானது சிந்துநதி கடலோடு கலக்குமிடத்தில் விடப்பெற்று, ஜலந்தரன் என்னும் பெயருடைய குழந்தையாகி வளரலாயிற்று. காலநேமியின் மகளான பிருந்தையை ஜலந்தரன் மணந்து மிகுந்த வலிமையோடு திகழ்ந்தான். அவன் விண்ணோரை எதிர்த்தான். திருமாலும் அவனை வெல்ல முடியாது திகைத்தார். கடவுளரும் தேவர்களும் சிவபெருமானைப் பணிந்து தம்மை ஜலந்தரனிடமிருந்து காத்தருள வேண்டினார். சிவபெருமான் சுதர்சனச் சக்கரத்தைக் கொண்டு ஜலந்தரனைக் கொன்றார். இவ்வாறு வடமொழிச் சிவபுராணம் ஜலந்தரவதத்தை விவரிக்கின்றது.

தமிழில், கந்தபுராணம், ஜலந்தரவதம் குறித்துக் கூறுவதைக் கேளுங்கள். ஜலந்தரனது வரம்பிலாற்றலையும் அவன் செய்த இடையூறுகளையும் பட்டியலிட்டுக் காட்டுகிறார் கச்சியப்பசிவாசாரியர்.

“ புங்கவர் யாரையும் புரங்கண்டேன் வரு
கங்கையை யடைத்தனன் கார்கொள் வேலையில்
அங்கியை அவித்தனன் அரியை வென்றனன்
இங்கிது தாங்குவ தரியதோ என ”


ஜலந்தரன் சக்கரத்தை எடுக்கிறான்.

புரத்தழல் கொளுவியோன் பொறித்த நேமியைக்
கரத்திடை எடுத்தனன் கணங்கொண் டெய்தலின்
உரத்திடைப் புயத்திடை உயிர்த்துத் தாங்கியே
சிரத்திடை வைத்தனன் தேவர் ஆர்க்கவே.

செழுஞ்சுடர்ப் பரிதியைச் சென்னி கோடலால்
ஒழிந்திடு சலந்தரன் உச்சியே முதற்
கிழிந்தது முழுதுடல் கிளர்ந்து சோரிநீர்
இழிந்தது புவிதனில் இழுமென் னோசையால்.

ஜலந்தரனை அழித்த வடிவமே ஜலந்தரவதமூர்த்தி, சலந்தராரி, ஜலந்தரஹர மூர்த்தி என்றெல்லாம் போற்றப் பெறுகிறார்.

ஸ்ரீதத்துவநிதி இம்மூர்த்தியின் வடிவத்தை விவரிக்கின்றது. செம்மேனியுடையவராய், உக்கிரமான முக்கண்ணும் இருகரங்களும் கொண்டு இவர் விளங்குகிறார். வலக்கரத்தில் ஒரு குடையையும் இடக்கரத்தில் ஒரு கமண்டலத்தையும் இவர் ஏந்தியிருப்பார். குண்டலம், ஹாரம், தண்டை, பாதுகைகளையும் இவர் தரித்திருப்பார். இவருக்கு முன்னே ஜலந்தரன் மஞ்சள் நிறமுடையவனாய், தனது இருகரங்களையும் கூப்பிநிற்பான். அவனது கைகளின் நடுவே சுதரிசனம் தெரிகிறது. அரையிலே வாள்தொங்குகிறது.



ஜலந்தரனைச் சிவபெருமான் வதைத்த திருத்தலமாக விற்குடி வீரட்டம் விளங்குகின்றது. தஞ்சை மாவட்டம் திருவாரூர் வட்டத்தில் இத்தலம் அமைந்துள்ளது. இத்தலம் பிருந்தை மயானம் எனவும் அழைக்கப்படும்.

திருமுறைகளில் சலந்தரவதம் போற்றப்படுகின்றது.

"சலந்தரன் உடலந்தடிந்த சக்கரம் எனக்கு அருளென்று அன்று அரிவழிபட்டு" என்று திருஞானசம்பந்தரும்,

"சமரமிகு சலந்தரன் போர் வேண்டினானைச் சக்கரத்தாற் பிளப்பித்த சதுரர்"

"கற்பொலி தோள் சலந்தரனைப் பிளந்த ஆதி கருமானுக் கருள் செய்தகருணையான்" என்று திருநாவுக்கரசரும்

"சலமுடைய சலந்தரன்தன் உடல்தடிந்த நல்லாழி" என மாணிக்கவாசகரும் போற்றுகின்றனர்.

சலந்தரனைக் கொன்ற சுதரிசனமே சிவபெருமானால் திருமாலுக்கு அளிக்கப் பெற்றது. இதன் வரலாற்று விரிவைச் சக்கரதான மூர்த்தி என்னும் திருவுருவத்தை விளக்கும்போது பின்னர் விரிவாகக் காட்டுவோம்.

★ ★ ★

திரிபுராந்தகர்

ஓங்குமலைப் பெருவிற் பாம்பு நாண்கொளீஇ
ஒருகணை கொண்டு மூஎயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற்று அண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கும் ஒருகண்போல
வேந்து மேம்பட்ட பூந்தார் மாற...... புறநானூறு 55

சிவபெருமானுடைய எட்டு வீரட்ட மூர்த்தங்களில் ஒன்றான திரிபுரதகன மூர்த்தி என்பது தொன்மையான சிறப்புடையது. சங்கநூல்களான புறநானூறு, கலித்தொகை, மற்றும் சிலப்பதிகாரத்திலும் திரிபுரத்கனம் பேசப்படுகின்றது. இவற்றிற்கு அடிப்படையாக வேதசம்ஹிதைகள் பிரமாணங்களில் ஒரு வரலாறு காணப்படுகிறது. யஜுர் வேதம் வாஜஸநேயி சம்ஹிதை விரிவுரையில் - தேவர்களால் தோற்கடிக்கப்பட்ட அசுரர்கள் மூன்றுகோட்டைகளை அமைத்தனர் எனவும், இந்திரன் ஓர் இடியாயுதத்தை அமைத்தான் : அதற்கு அக்னியேதண்டு, சோமனே இரும்பு, விஷ்ணுவே முனையாக இருந்தது எனவும் கூறப்பட்டுள்ளது. தைத்ரிய சம்ஹிதையில் வேறு விதமாகக் கூறப்படும் செய்தி வருமாறு. அசுரர்கள் இரும்பு வெள்ளி தங்கம் ஆகியவற்றாலான மூன்று கோட்டைகளைக் கொண்டிருந்தனர். அவற்றை வெல்ல இயலாத கடவுளர் ஒன்று சேர்ந்து ஓர் அம்பினைத்தயாரித்தனர். அதற்கு அக்னியே மரத்தண்டு, சோமனே இரும்பு, விஷ்ணுவேமுனை, அவ்வாயுதத்தைக் கையாள உருத்திரன் தேர்ந்

தெடுக்கப்பட்டார். அவரே அக்கோட்டைகளை அழித்தார். ஐதரேய பிராமணமும் இந்நிகழ்ச்சியைக் கூறும். மஹாபாரதம் கர்ணபர்வத்தில் திரிபுராதியர் வரலாறு விரிவாகப் பேசப்படுகிறது. தாரகாசுரனுடைய மைந்தர் மூவர் : வித்தியுன்மாலி, தாரகாட்சன், கமலாட்சன் என்னும் அம்மூவரும் முறையே தங்கம், வெள்ளி, இரும்பினால் ஆன கோட்டைகளை அமைத்துக்கொண்டு உலகிற்குப்பெருந்தொல்லை கொடுத்தனர். விண்ணோர் கூடி முயன்றும் இம்மூவரையும் அழிக்கமுடியவில்லை. இறுதியில் அவர்கள் சிவபெருமானிடம் சரண்புகுந்தனர். ஒவ்வொரு கடவுளும் தேவரும் தம் ஆற்றலில் பாதியைச் சிவபெருமானுக்கு அளிக்க முன்வந்தனர். அவர்களது எண்ணம் எப்படியாவது மூன்று அசுரர்களையும் அவர்தம் கோட்டையோடு அழிக்க வேண்டும் என்பதுதான். அனைவரும் சேர்ந்து ஒரு தேரை உருவாக்கினர். முதன் முதலாகக் கூட்டணி அமைத்தவர் சிவபெருமானேயாவார் ! திருமால் அம்பு ஆனார் ; அக்னியே அதன்முனை ; இயமன் அதன் இறகு ; வேதங்களே வில்லாயிற்று ; சாவித்திரி வில்லின் நாண் ஆனாள் ; பிரம்மா தேரோட்டியாய் அமர்ந்தார். சோமன், அக்கினி, விஷ்ணு ஆகியோரைக் கொண்ட மூன்று அம்புகளாலே முப்புரங்களையும் எரித்து விட்டார் மகாதேவர்.

தமிழ்நூல்களிலே முப்புரம் எரித்தவரலாறு கூறப்பட்டுள்ளதைச் சற்றுக் காண்போம்.

ஆறறி அந்தணர்க்கு அருமறை பலபகர்ந்து
தேறுநீர் சடைக்கரந்து திரிபுரம் தீ மடுத்துக்
கூறாமற் குறித்ததன்மேற் செல்லுங் கடுங்கூளி
மாறாப்போர் மணிமிடற்று எண்கையாய் கேள் இனி... கலித்தொகை 1

தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக
அடங்காதார் மிடல்சாய அமரர்வந் திரத்தலின்
மடங்கல் போற் சினைஇ மாயம்செய் அவுணரைக்
கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூளயிலும்
உடன்றக்கால் முகம்போல் ஒண்கதிர் தெறுதலின்... கலித்தொகை 2

திரிபுரம் எரியத் தேவர் வேண்ட
எரிமுகப் பேரம்பு ஏவல் கேட்ப
உமையவள் ஒரு திறன் ஆகி ஓங்கிய
இமையவன் ஆடிய கொடுகொட்டி ஆடலும்... சிலப்பதிகாரம் 6-40-44

முப்புரத்தை எரித்த முதல்வனின் செயல் எந்த அளவுக்குத் தமிழ் இலக்கியங்களில் செல்வாக்குப் பெற்றிருந்தன என்பதற்கு மேற் சொன்ன சான்றுகள் சிலவாம். தமிழ் நாட்டு இலக்கியங்களில் முப்புரம் எரித்த வரலாறு சிறிது வேறு விதமாகக்கூறப் படுவதைக் காணலாம். குறிப்பாகத் திருமுறைகளும், சமய இலக்கியங்களும் இந்நிகழ்ச்சியைச் சற்று விரிவாகவே நயம்படப் பேசுகின்றன. சிவபெருமான் முப்புரத்தை அழிக்கத் தம் ஆற்றலன்றோ உதவியாக அமைகிறது என விண்ணோர்

நினைத்தனர். பெருமான் தேரில் ஏறினார் தேர் முறிந்தது; நகைத்தார் புரமெரிந்தது. சிரித்து எரித்தார் முப்புரத்தை என்று மிகச் சுவைபடப் பேசும் இலக்கியங்களும் தமிழில் உள்ளன. எடுத்துக்காட்டாக—

நாண் என்றால் நஞ்சிருக்கும், நற்சாபம் கற்சாபம்,
பாணம்தான் மண்தின்ற பாணம்தான் அம்மானை
பாணம்தான் மண்தின்ற பாணமே ஆமாயின்
சேணார் புரம் எரித்த சேவகம் என் அம்மானை!
சேவகத்தைச் சொல்லில் சிரிப்பன்றோ அம்மானை! —தில்லைக்கலம்பகம்

தமிழ் மரபுப்படி மேருமலையேவில்; வாசுகியேநாண்; பாணமோ மண்தின்ற வாசுதேவனான திருமால்; புரம் எரித்ததோ சிரிப்பால் என்ற செய்திகளைத் தில்லைக் கலம்பகப் பாடல் எவ்வளவு இனிமையாகக் காட்டுகின்றது பாருங்கள்! மற்றும், திருவாரூருக்கு வந்த இரட்டையர்கள் "நாணென்றால் நஞ்சிருக்கும் நற்சாபம் கற்சாபம், பாணந்தான்" என்று மொட்டையாக ஒரு வெண்பாவை எழுதி விட்டுச் செல்ல அதுகண்ட காளமேகம் :—"மண்தின்ற பாணமே—தாணுவே, சீராரூர் மேவுஞ்சிவனே சிரிப்பன்றோ நேராரூர் செற்றநிலை" என்று பாடி முடித்தார் என்பதும் நினைக.

சொல்லுக்கினிய கழுக்குன்றரே!
உமைச் சொல்ல என்றால்
அல்லற் பிழைப்புப் பிழைத்து விட்டீர்!
முப்புராதியர் மேல்
வில்லைக் குனித்தெய்ய மாட்டாமல்
நீர் அந்த வேளைதனில்
பல்லைத் திறந்து விட்டீர்!
இதுவோ நும்படைத் தொழிலே! —தனிப்பாடல்

கழுத்குன்றநாதரின் போர்த்தொழில் நன்றாக இருக்கிறது! வில்லை எடுத்துப் போருக்குச் சென்றவர், வில்லைப் பூட்டாமல் பல்லைக்காட்டிச் சிரிக்கின்றாரே என ஏளனம் செய்வது போல, அவரது புரம் எரித்த பராக்கிரமம் எவ்வளவு அழகாகக் காட்டப்படுகிறது!

சங்க காலத்தில் மூவெயில் அழித்த முதல்வன் செயல் மிகவும் பிரபலமாக இருந்த தென்பதைப் பேரெயில் முறுவலார்" என்று ஒரு புலவர் விளங்கியது இனிது காட்டும். (குறுந் : 17; புறம் : 239)

திருமால் அம்பு ஆகவும், நெருப்பு அம்பின் முனையாகவும், வாயு அம்பின் சிறகாகவும் அமைந்திருந்ததை, "மாருதம்மால் எரி மூன்றும் வாய் அம்பு ஈர்க்காஞ் சரத்தானை" என்று திருநாவுக்கரசர் பாடினார். புரமெரிய வில்லேந்தியது உமையின் கரம் என்பதை நகைச் சுவையாகக் காட்டுவார் திருநாவுக்கரசர்;

தெடுக்கப்பட்டார். அவரே அக்கோட்டைகளை அழித்தார். ஐதரேய பிராமணமும் இந்நிகழ்ச்சியைக் கூறும். மஹாபாரதம் கர்ணபர்வத்தில் திரிபுராதியர் வரலாறு விரிவாகப் பேசப்படுகிறது. தாரகாசுரனுடைய மைந்தர் மூவர்: வித்தியுன்மாலி, தாரகாட்சன், கமலாட்சன் என்னும் அம்மூவரும் முறையே தங்கம், வெள்ளி, இரும்பினால் ஆன கோட்டைகளை அமைத்துக்கொண்டு உலகிற்குப்பெருந்தொல்லை கொடுத்தனர். விண்ணோர் கூடி முயன்றும் இம்மூவரையும் அழிக்கமுடியவில்லை. இறுதியில் அவர்கள் சிவபெருமானிடம் சரண்புகுந்தனர். ஒவ்வொரு கடவுளும் தேவரும் தம் ஆற்றலில் பாதியைச் சிவபெருமானுக்கு அளிக்க முன்வந்தனர். அவர்களது எண்ணம் எப்படியாவது மூன்று அசுரர்களையும் அவர்தம் கோட்டையோடு அழிக்க வேண்டும் என்பதுதான். அனைவரும் சேர்ந்து ஒரு தேரை உருவாக்கினர். முதன் முதலாகக் கூட்டணி அமைத்தவர் சிவபெருமானேயாவார்! திருமால் அம்பு ஆனார்; அக்னியே அதன்முனை; இயமன் அதன் இறகு; வேதங்களே வில்லாயிற்று; சாவித்திரி வில்லின் நாண் ஆனாள்; பிரம்மா தேரோட்டியாய் அமர்ந்தார். சோமன், அக்கினி, விஷ்ணு ஆகியோரைக் கொண்ட மூன்று அம்புகளாலே முப்புரங்களையும் எரித்து விட்டார் மகாதேவர்.

தமிழ்நூல்களிலே முப்புரம் எரித்தவரலாறு கூறப்பட்டுள்ளதைச் சற்றுக் காண்போம்.

ஆறறி அந்தணர்க்கு அருமறை பலபகர்ந்து
தேறுநீர் சடைக்கரந்து திரிபுரம் தீ மடுத்துக்
கூறாமற் குறித்ததன்மேற் செல்லுங் கடுங்கூளி
மாறாப்போர் மணிமிடற்று எண்கையாய் கேள் இனி... கலித்தொகை 1


தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக
அடங்காதார் மிடல்சாய அமரர்வந் திரத்தலின்
மடங்கல் போற் சினைஇ மாயம்செய் அவுணரைக்
கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூளயிலும்
உடன்றக்கால் முகம்போல ஒண்கதிர் தெறுதலின்... கலித்தொகை 2

திரிபுரம் எரியத் தேவர் வேண்ட
எரிமுகப் பேரம்பு ஏவல் கேட்ப
உமையவள் ஒரு திறன் ஆகி ஓங்கிய
இமையவன் ஆடிய கொடுகொட்டி ஆடலும்... சிலப்பதிகாரம் 6-40-44

முப்புரத்தை எரித்த முதல்வனின் செயல் எந்த அளவுக்குத் தமிழ் இலக்கியங்களில் செல்வாக்குப் பெற்றிருந்தன என்பதற்கு மேற் சொன்ன சான்றுகள் சிலவாம். தமிழ் நாட்டு இலக்கியங்களில் முப்புரம் எரித்த வரலாறு சிறிது வேறு விதமாகக்கூறப் படுவதைக் காணலாம். குறிப்பாகத் திருமுறைகளும், சமய இலக்கியங்களும் இந்நிகழ்ச்சியைச் சற்று விரிவாகவே நயம்படப் பேசுகின்றன. சிவபெருமான் முப்புரத்தை அழிக்கத் தம் ஆற்றலன்றோ உதவியாக அமைகிறது என விண்ணோர்

திரிபுராந்தகர்







திருவதிகை விரட்டானம் (தென் ஆற்காடு)

திரிபுரசம்ஹாரர் — திரிபுரசுந்தரி

பக்கம் : 73

திருச்செங்காட்டங்குடி
(நன்னிலம் வட்டம்)

பக்கம் : 73

கஜசம்ஹாரர்



வழுவூர்
(மயிலாடுதுறை வட்டம்)
பக்கம் : 74



திருச்செங்காட்டங்குடி
(நன்னிலம் வட்டம்)
பக்கம் : 76

வீரபத்திரர்



மதுரை நந்திமண்டபம்

பக்கம் : 80

நினைத்தனர். பெருமான் தேரில் ஏறினார் தேர் முறிந்தது; நகைத்தார் புரமெரிந்தது. சிரித்து எரித்தார் முப்புரத்தை என்று மிகச் சுவைபடப் பேசும் இலக்கியங்களும் தமிழில் உள்ளன. எடுத்துக்காட்டாக—

நாண் என்றால் நஞ்சிருக்கும், நற்சாபம் கற்சாபம்,
பாணம்தான் மண்தின்ற பாணம்தான் அம்மானை
பாணம்தான் மண்தின்ற பாணமே ஆமாயின்
சேணார் புரம் எரித்த சேவகம் என் அம்மானை!
சேவகத்தைச் சொல்லில் சிரிப்பன்றோ அம்மானை! —தில்லைக்கலம்பகம்

தமிழ் மரபுப்படி மேருமலையேவில்; வாசுகியேநாண்; பாணமோ மண்தின்ற வாசுதேவனான திருமால்; புரம் எரித்ததோ சிரிப்பால் என்ற செய்திகளைத் தில்லைக் கலம்பகப் பாடல் எவ்வளவு இனிமையாகக் காட்டுகின்றது பாருங்கள்! மற்றும், திருவாரூருக்கு வந்த இரட்டையர்கள் "நாணென்றால் நஞ்சிருக்கும் நற்சாபம் கற்சாபம், பாணந்தான்" என்று மொட்டையாக ஒரு வெண்பாவை எழுதி விட்டுச் செல்ல அதுகண்ட காளமேகம் :—"மண்தின்ற பாணமே—தாணுவே, சீராரூர் மேவுஞ்சிவனே சிரிப்பன்றோ நேராரூர் செற்றநிலை" என்று பாடி முடித்தார் என்பதும் நினைக.

சொல்லுக்கினிய கழுக்குன்றரே!
உமைச் சொல்ல என்றால்
அல்ற் பிழைப்புப் பிழைத்து விட்டீர்!
முப்புராதியர் மேல்
வில்லைக் குனித்தெய்ய மாட்டாமல்
நீர் அந்த வேளைதனில்
பல்லைத் திறந்து விட்டீர்!
இதுவோ நும்படைத் தொழிலே! —தனிப்பாடல்

கழுத்குன்றநாதரின் போர்த்தொழில் நன்றாக இருக்கிறது! வில்லை எடுத்துப் போருக்குச் சென்றவர், வில்லைப் பூட்டாமல் பல்லைக்காட்டிச் சிரிக்கின்றாரே என ஏளனம் செய்வது போல, அவரது புரம் எரித்த பராக்கிரமம் எவ்வளவு அழகாகக் காட்டப்படுகிறது!

சங்க காலத்தில் மூவெயில் அழித்த முதல்வன் செயல் மிகவும் பிரபலமாக இருந்த தென்பதைப் பேரெயில் முறுவலார்" என்று ஒரு புலவர் விளங்கியது இனிது காட்டும். (குறுந் : 17; புறம் : 239)

திருமால் அம்பு ஆகவும், நெருப்பு அம்பின் முனையாகவும், வாயு அம்பின் சிறகாகவும் அமைந்திருந்ததை, "மாருதம்மால் எரி மூன்றும் வாய் அம்பு ஈர்க்காஞ் சரத்தாணை" என்று திருநாவுக்கரசர் பாடினார். புரமெரிய வில்லேந்தியது உமையின் கரம் என்பதை நகைச் சுவையாகக் காட்டுவார் திருநாவுக்கரசர்;

.........கண்ணுதலே !

விற்றாங்கியகரம் வேல்நெடுங்கண்ணி வியன்கரமே
நற்றாணெடுஞ்சிலை நாணவலித்தகரம் நின்கரமே
செற்றார் புரஞ்செற்ற சேவகம் என்னைகொல் செப்புமினே !

மேருமலையேவில் : " பொன்மலையே சிலையா " —திருஞானசம்பந்தர்

அரவு நாண் : " வாசுகிநாண் கல்வில்லால் " —திருஞானசம்பந்தர்

வேதமேகுதிரை : " அருமறையைத் தேர்க்குதிரையாக்கிக் கொண்டார் " —திருநாவுக்கரசர்

வைதிகத்தேர் : " வைதிகத்தேர்மிசை " —திருநாவுக்கரசர்

நோக்கால் எரித்தார் : " மும்மதில் தீ எழுந்து எரிய நோக்கிய இன்னம்பர் ஈசனே " —திருநாவுக்கரசர்.

நகைத்து எரித்தார் : " முப்புரமெரியுண நகை செய்தார் "—திருஞானசம்பந்தர்.

நெற்றிக்கண்ணால் எரித்தார் : " காவல் மிக்க மாநகர் சாய்ந்து வெங்கனல்படக், கோவமிக்க நெற்றியான் " —திருஞானசம்பந்தர்.

முப்புரத்தைச்சுட்டு அந்நீற்றை அணிந்தார் :

" மதிலெய்து வெண்ணீறுபூசி " —திருஞானசம்பந்தர்.

முப்புரம் எரித்தபின் நடனமாடியது : (பாண்டரங்க நடனம்) " மூவெயிலும் எரியுண்ணக் கூரெரி கொண்டெல்லியாடலன் ஆதிரையன் "

—திருஞானசம்பந்தர்.

அழிந்த முப்புரம் ஆண்ட மூவரில் இருவர் துவாரபாலகராகவும் ஒருவன் முழா முழக்குபவனாகவும் சிவபெருமானுக்கு பணிசெய்தல் :

" மூவெயில் செற்றஞான்று உய்ந்த மூவர், இருவர் நின்திருக்கோயிலின் வாய்தல்
காவலான ரென்றேவிய பின்னை ஒருவன் நீகரிகாடரங்காக, மானை நோக்கியோர்
மாநடமகிழ மணிமுழா முழக்க அருள்செய்த" —சுந்தரர்.

விண்பயில் புரங்கள் வேவ வைதிகத் தேரின் மேருத் திண்சிலை குனிய நின்றார்.

(பெரிய புராணம் ; குங்குலியக்கலயர் ; 30)

என்றிவ்வாறு நம் திருமுறைகளில் திரிபுரம்எரித்த வரலாறு விரிவாகக் காட்டப் படுகின்றது.

இனி, திரிபுரம் எரித்த வரலாற்றின் தத்துவம் யாது? இவ்வினாவிற்கு விடை தருகிறார் திருமூலர் :

அப்புஅணி செஞ்சடை ஆதிபுராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மலகாரியம்
அப்புரம் எய்தமை யார் அறிவாரே. —திருமந்திரம்.

நமது தூலம், சூக்குமம், காரணம் என்னும் மூவகை உடல்களையும் அவற்றிற்குக் காரணமாய் அமைந்த ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் அழித்தொழித்து இறைவன் நமக்கு அருள் செய்யும் திறத்தினையே இவ்வரலாறு அறிவுறுத்துகின்றது. 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பது பழமொழி. ஆனால் பெருமான் புன்முறுவலாலேயே புரம்எரித்தார் என்பது அவரது பேராற்றலைக் காட்டுகின்றது. முப்புரம் எரித்த முக்கண்ணப்பர் நம் மும்மலங்களையும் எரிக்க வேண்டி அவரை வழிபடுதல் வேண்டும் என்பதும் ஒரு குறிப்பு அல்லவா!

இம்மூர்த்தியைப்பற்றிக் கூறுங்கால் எல்லா இயற்கைத் தத்துவங்களுக்கும் தலைவன் இறைவன் எனக் காட்டப்படுகின்றது. அவர் புரமெரிக்க அமைத்த தேரைப்பற்றிக் குறிப்பிடும்போது தேரின் உறுப்புகளாகக் கூறப்படுவதை நோக்குவோம். மந்தரமலை, கேசரிமலைகள் தேரின் அச்சுக்கட்டைகள் ; சூரியனும் சந்திரனும் தேரின் சக்கரங்கள் ; பதினான்கு உலகங்கள், 64 கலைஞானங்கள், 28 சிவாகமங்கள், 21 யாகங்கள், 6 பருவங்கள், 7 கோடி மகாமந்திரங்கள், இராசிகள், மாதங்கள், தினங்கள், நாழிகைகள், யோகங்கள் இவை அனைத்தும் தேரின் உறுப்புக்கள் ; திசையானைகள், அட்டகுல பருவதங்கள், உதயகிரி, அஸ்தமனகிரி ஆகியவை தூண்கள் என்று விவரிக்கப்பட்டுள்ளன. இவற்றைக் காணும்போது இறைவனின் பரம் பொருட்டன்மை இனிது புலனாகின்றது. இம்மூர்த்தி தத்துவத்திலேயே இப்பிரபஞ்சத்தின் கூறுகள் நினைவு கூரப்படுகின்றன.

இனி, திரிபுராந்தக மூர்த்தியின் திருவுருவ அமைப்பைச் சற்றுக் காண்போம். அம்சுமத் பேதாகமம் இம்மூர்த்தியை எட்டுவிதமாகக் காட்டுகின்றது.

1. இவ்வமைப்பில், பெருமானுடைய வலதுகால் சற்று முன்னேயும் இடக்கால் சற்றுவளைந்து பின்னேயும் அம்பெய்த அமைந்த நிலையைக் காட்டுவதாக இருக்கும். இவர் நான்கு கரங்கொண்டிருப்பார். இவரது வலக்கரங்களில் ஒன்று சிம்ஹகரண முத்திரையில் அம்பு பூட்டிய வில்லின் நாணைப் பற்றியிருக்கும். இடக்கரங்களில் ஒன்று வில்லைப் பற்றியிருக்கும் ; வில்லானது பிறைபோன்றோ, மூன்று வளைவுகளைக் கொண்டோ அமைந்திருக்கும். மற்றொரு வலக்கரம் டங்கத்தையும், இடக்கரம் மானையும் பற்றியிருக்கும். இவர் ஜடாமகுடமும் பிறஅணிகலன்களையும் பூண்டிருப்பார். இவருக்கு இடப்பக்கம் உமையம்மை நிற்பாள். உத்தரகாமிகாகமம், இம்மூர்த்தி நான்கு அல்லது இரண்டு கரங்களைக் கொண்டிருக்கலாம் எனவும் கூறும். அவருக்கு இருகரங்களே இருப்பின் வில்லையும் அம்பையும் அவர் தரித்திருப்பார்.

2. இவ்வமைப்பில், பெருமானது இடப்பாதம் முயலகன்மீது பதிந்திருக்கும். ஏனைய அம்சங்கள் முற்கூறப்பட்டது போன்றே இருக்கும்.

3. இக்கோலத்தில், சிவபெருமானது இடதுகால் நேராக நிற்கவும், வலதுகால் சற்றவளைந்தும் இருக்கும்.

4. இவ்வடிவில், சிவபெருமானது வலப்பாதம் முயலகன்மீது பதிந்திருக்கும்.

5. இக்கோலத்தில், சிவபெருமானது முன் வல, இடக்கரங்கள் அம்பின் முனையையும் வாலையும் பற்றியிருக்கும். பின் வல, இடக்கரக்கள் முறையே டங்கம், மான் அல்லது வில்லைப் பற்றியிருக்கும். கால்கள் சற்றே வளைந்திருக்கும். இவ்வமைப்பில் முயலகன் இல்லை. தேவி, பெருமானுக்கு இடப்பால் நிற்கிறாள்.

6. இக்கோலத்தில், பெருமான் எட்டுக்கரங்களுடன் திகழ்கிறார். நான்கு வலக்கரங்களிலும் முறையே பாணம், பரசு, கட்கம், வஜ்ஜிரம் ஏந்தியுள்ளார். இரு இடக்கரங்களில் தனுசும் (வில்), கேடகமும் உள்ளன. எஞ்சிய இரு இடக்கரங்கள் விஸ்மய, கடக முத்திரைகளாக உள்ளன. இம்மூர்த்தியின் உடல் அமைப்பு அதிபங்க மாக (பல வளைவுகளுடன்) இருக்கும். இடப்பக்கம் தேவி நிற்பாள்.

7. இக்கோலத்தில், பெருமான் பத்துக்கரங்கொண்டுள்ளார். வலக்கரங்கள் ஐந்திலும் முறையே பாணம், சக்கரம், சூலம், டங்கம், வஜ்ஜிரம் ஆகியவற்றைப் பற்றியுள்ளார். இடக்கரங்கள் மூன்றில் தனுசு, சங்கம், கேடகம் ஆகியவற்றை ஏந்தியும், ஏனைய இரு இடக்கரங்கள் விஸ்மய, சூசி முத்திரைகளாகவும் அமைந்துள்ளன.

8. இவ்வமைப்பில், பெருமான் ஒரு தேரில் செல்வது போன்று அமைந்திருக்கும். அவர் தனது இடக்காலைச் சற்றே உயர்த்தித் தேரின் ஒரு பகுதியில் பதித்திருப்பார்.



அவரது வலக்கால் தேரின் நடுவில் ஊன்றியிருக்கும். முகுளம் கயிற்றாற் கட்டப்பட்டிருக்கும். பெருமான் தேரில் அமர்ந்த போர்க்கோலம் ஆலீடம் எனப்படும். தேரின் சாரதியான பிரம்மா முகுளத்தின் நடுவில் அமர்ந்திருப்பார். பிரம்மாவின் வலக்கரம் ஒன்றில் சாட்டையும், மற்றொருகரத்தில் கமண்டலமும் இருக்கும். அவரது இடக்கரங்கள் இரண்டிலும் முறையே பத்மபாசமும் குண்டிகையும் அமைந் திருக்கும். முகுளத்தின் கீழே வெள்ளி இடபம் நிற்கும். அதுவே திருமால். இத்தேர் ஆகாயத்தில் செல்வது போல் காட்டப்பட வேண்டும்.

திரிபுரம் எரித்தது எப்போது? எங்கே? என்ற வினாக்கள் எழுவது இயற்கை. முதல் வினாவுக்குத் தேவாரமே பதில் கூறுகிறது என்பதைக் காமதகன மூர்த்தியில் காட்டினோம். அதாவது, சிவபெருமான் யானை உரித்தபின் திரிபுரமெரித்தார். திரிபுரம் எரித்த வீரட்டத்தலம் திருவதிகையாகும்.

தென்னாற்காடு மாவட்டத்தில் பண்ருட்டிக்கு அருகே உள்ளது திருவதிகை. திருநாவுக்கரசரைச் சைவத்திற்கு மீண்டும் ஏற்ற, தமக்கை திலகவதியார் திருத்தொண்டு புரிந்த தலமும் இதுவே. இத்தலத்தில் இடப்பால் தேவியுடன் திரிபுராந்தக மூர்த்தி சிறப்பாக விளங்குகின்றார். திருவிற்கோலம், திரு அச்சிறுப் பாக்கம் என்ற தலங்களும் திரிபுரம் எரித்த வரலாற்றுத் தொடர்புடையனவாகச் சிறப்பிக்கப்படுகின்றன. அச்சிறுப்பாக்கம்—அச்சு+இறு+பாக்கம்: இங்குத்தான் சிவபிரான் ஏறிச்சென்ற தேர் அச்சு இற்றது. ஏன்? கணபதியை மதியாமற் போயினமையால். இதனை அருணகிரியார் "முப்புரமெரி செய்த அச்சிவனுறைரதம் அச்சது பொடி செய்த அதிதீரா" எனப்பாராட்டுகின்றார். சென்னையி லிருந்து மேற்கே 45 கல் தொலைவில் உள்ள திருவிற்கோலத்தில் இறைவன் பெயர் திரிபுராந்தகர். திரிபுரம் எரிப்பதற்காகப் பெருமான் வில் ஏந்திய கோலம் இங்கே சிறப்பாகக்காணப்படுகிறது. அதிக மழை பெய்வதாக இருந்தால் இங்குள்ள பெருமான் மீது வெள்ளை நிறமும், போர் மூளுவதாயின் செம்மை நிறமும் படரும் என்பர். சென்னைக்குத் தெற்கே 59 கல் தொலைவில் உள்ள அச்சிறுபாக்கம் திரிபுரதகனத்திற்கு அமைந்த தேரின் அச்சு முறிந்த தலமாகக்கருதப்படுகிறது.

திருச்செங்காட்டங்குடியிலுள்ள திரிபுராந்தகர் திருவுருவமும் காணத்தக்கது.

தஞ்சைப் பெரிய கோவிலில் காணப்பெறும் திரிபுராந்தகர் ஓவியமும் ஈண்டு நினைவு கூறத்தக்கது. திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமான் இவ்வோவியத்தில் ஒருகாலைத் தேர்த்தட்டின் மீதுவைத்து, மற்றொருகாலை ஊன்றி, வில்வளைத்து, சூலத்தை நீட்டி நிற்கின்றார். திரிபுராந்தகரைச் சுற்றித் தேவகணங்கள் திகழ்கின்றனர்.

திரிபுரம் எரித்தபோது இறைவன் ஆடிய ஆடல்கள் கொடுகொட்டி, பாண்டரங்கம் எனப்படும். இவற்றைப் பற்றி ஆடல் வல்லானைக் குறிப்பிடும்போது காட்டியுள்ளோம்.

மூதெயில் எரியெழ முனிந்த முக்கணன் நம் வினைகளையும் எரித்து நம்மை உய்விக்க வேண்டுவோம்.

★ ★ ★



கஜசம்ஹாரர்

....வேழம்
உரித்து உமை யஞ்சக்கண்டு ஒண்திரு மணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே. —திருநாவுக்கரசர்.

சிவபெருமானுடைய எட்டுப் பராக்கிரமச் செயல்களுள் ஒன்றாக அவர் யானை உரித்தவரலாறு பேசப்படுகின்றது. சிவபெருமானை எதிர்த்த யானையை அவர் கொன்று அதன் தோலைத்தன் மேனி சூடி ஆடையாக அணிந்த செயல் கேட்கும்போதே நம்மைச் சிலிர்க்கச் செய்கின்றது. தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறைக்குத் தெற்கே சில கல் தொலைவிலுள்ள வழுவூர் இப்பராக்கிரமத்தைப் பாரறியச் செய்யும் தலமாகத் திகழ்கின்றது. இங்கே அற்புதமாக அமைந்த கஜசம்ஹாரமூர்த்தி, வீரமும் வியப்பும் கலந்த உணர்வில் நம்மைத் திகைக்கச் செய்து விடுகிறார். இம்மூர்த்தியின் அருகே உமையம்மை, தனது கரங்களில் கந்தனை வைத்துக் கொண்டு தனது நாதனின் உக்கிரத்தைக்கண்டு அச்சத்துடன் நடுங்குபவள் போன்று நிற்கின்றாள். ஆம். வழுவூர்ப் பாரக்கிரமனை வாழ்வில் ஒரு நாளாவது நீங்கள் காணத்தான் வேண்டும். அதனைக் காண மனிதப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே !

கந்த புராணம் ததீசி யுத்திரப் படலத்தில் கஜசம்ஹார நிகழ்ச்சி கவினுறக் காட்டப்படுகின்றது :

மதித்து வேழமாந் தானவன் வருதலும் வடவை
உதித்த வன்னியும் அச்சுற வெரிவிழித்தொருதன்
கதித்த தாள்கொடு தள்ளவே கயாசுரன் கவிழ்ந்து
பதைத்து வீழ்தலும் மிதித்தனன் சிரத்தையோர் பதத்தால்.

ஒரு பதத்தினைக் கவானுற திருக்கரத் துகிரால்
வெரி நிடைப் பிளந் தீரிரு தாள்புடை மேவக்
குருதி கக்கியே யோலிட அவுணர்தங் குலத்துக்
கரியுரித்தனன் கண்டு நின்றம்மையுங் கலங்க

ஐயன் மிக்கதன் கதிரினைக் குருதிநீரறாத
மைய்ல் யானைவன் றோலைமேற் கொண்டனன் மறைத்தான்
செய்ய கோளொடு கரியகோ ளிருவருஞ் செறிந்து
வெய்ய பானுவி னடுவுறக் கவர்ந்து மேவிய போல்

இறைவன் கஜாசுரனைச் சம்ஹாரம் செய்து அதன் தோலைத் தன் ஆடையாகப் போர்த்திக்கொண்டார் எனவும், இந்நிகழ்ச்சிக் காசியில் நிகழ்ந்தது எனவும் ஆதலால் காசியிலமைந்த ஒரு இலிங்கத்துக்குக் கீர்த்திவாசேச்வரர் எனப்பெயர் வந்தது எனவும் வடமொழிக் கூர்மபுராணம் கூறுகின்றது.

கஜாசுரசம்ஹார தத்துவம் யாது? ஐம்புலன்களென்னும் ஐந்து கரமுடையதாக நாம் யானையைப் போன்று செருக்கித்தருக்கி நிற்கிறோம். இறைவனையே எதிர்க்கிறோம். இறைவன் ஐம்புலச் சேட்டையை அடக்கி, ஆன்மாவைத் தூய்மையாக்கி ஏற்றுக்கொள்கிறான். ஆணவக்களிறாக இல்லாமல் ஞானச் செல்வனாகக் கந்தனைப் போன்று அருட்சக்தியின் கரங்களில் நாம் தவழ்தலையே விழையவேண்டும். இதுவே இவ்வடிவம் கூறும் படிப்பினை எனலாம்.

கஜசம்ஹார மூர்த்தி, கம்பனையும் ஈர்த்துள்ளார் என்பதை அவரது இராமாயணப் பாடல் ஒன்று அருமையாகக் காட்டுகின்றது.

கரித்தமூன் றெயிலுடைக் கணிச்சி வானவன்
எரித்தலை அந்தணர் இழைத்த யானையை
உரித்தபேர் உரிவையால் உலகுக்கோர் உறை
புரித்தனன் நான்முகன் என்னும் பொற்பதே :

—ஊர்தேடுபடலம் 44. சுந்தரகாண்டம்

சுப்ரபேதாகமம், அம்சுமத்பேதாகமம், சில்பரத்தினம் மற்றும் பிற சிவாகமங்களிலும் கஜசம்ஹார மூர்த்தியின் வடிவமைப்பு விளக்கப்பெற்றுள்ளது.

அம்சுமத்பேதாகமத்தின்படி, இம்மூர்த்தி நான்கு அல்லது எட்டு திருக்கரங்களைக் கொண்டிருப்பர். நான்கு கரங்கள் அமைந்திருப்பின், ஒரு வலக்கரம் பாசத்தையும் மற்றொன்று யானையின் தோலையும் பற்றி இருக்கும். இடக்கரங்கள் இரண்டும் முறையே யானையின் கொம்பையும், தோலையும் பற்றி இருக்கும். எட்டுத் திருக்கரங்கள் அமைந்திருப்பின், வலக்கரங்கள் மூன்றும் முறையே திரிசூலம், தமருகம்,

பிட்சாடனர்



ஸ்ரீ கயிலாசநாதர் கோயில்
பிரம்மதேசம்
(அம்பாசமுத்திரம் வட்டம்)
பக்கம் : 54

நீலகண்டர்



வெட்டுவான் கோயில்
கழுகுமலை
(திருநெல்வேலி மாவட்டம்)
பக்கம் : 97

நன்றி : French Institute of Indology, Pondicherry

பாசம் ஆகியவற்றைப் பற்றியிருக்கும்; ஒருகரம் யானைத்தோலைப் பற்றியிருக்கும். இடக்கரங்களில் ஒன்று விஸ்மயஹஸ்தமாகவும், ஒன்று யானையின் தோலைப் பற்றியதாகவும், ஏனைய இரண்டும் கொம்பையும், கபாலத்தையும் பற்றியும் இருக்கும். அவரது இடது திருவடி யானைத்தலையை உறுதியாக மிதித்துக் கொண்டிருக்க, வலது காலை மற்றொரு தொடைக்கு மேல் உயர்த்தி வளைத்து விளங்குகிறார். சிவபெருமானுடைய மகுடத்திற்கு மேலே யானையின் வால் தெரிகின்றது. பெருமானுடைய திருமேனிக்கு ஒரு பிரபா மண்டலம் போன்று யானையின் தோல் அமைந்திருக்கிறது. அனைத்து அணிகலன்களும் பூண்டு, கருஞ்சிவப்பான வண்ணத்துடன் கஜசம்ஹார மூர்த்தி விளங்குகிறார்.



சில்பரத்தினம் என்னும் நூலில் கஜசம்ஹார மூர்த்தியின் அமைப்புக் கீழ்க்கண்டவாறு காணப்படுகிறது; இவர் எட்டுக்கரங்களை உடையவர். வலக்கரங்கள் மூன்றில் முறையே திரிசூலம், வாள், யானைக் கொம்பு காணப்படும். நான்காவது கரம் யானைத் தோலைப் பற்றியிருக்கும். மூன்று இடக்கரங்களில் முறையே கபாலம், கேடகம், கண்ட்டம் ஆகியவை விளங்க, நான்காவது கரம் யானையின் தோலைப் பற்றியிருக்கும். இவரது இடக்கால் யானைத் தலைமீது உறுதியாகப் பதிந்திருக்க, வலக்கால் உத்குடிகாஸன அமைப்புடையதாயிருக்கும். உமையம்மையார் தனது கைகளில் கந்தனுடன் தனது நாயகனின் உக்கிரம் கண்டு அச்சத்துடன் நடுங்குபவளைப் போல நிற்பாள்.

வேலூர், திருச்செங்காட்டங்குடி, ஆகிய தலங்களில் அமைந்த கஜசம்ஹார மூர்த்தி வடிவங்கள் தனிச்சிறப்புடையன. பேரூரில் உள்ளதும் வியக்கச் செய்கிறது.

திருமுறைகளில் யானை உரித்த பிரானைப் போற்றும் பகுதிகள் பலவாம். எடுத்துக்காட்டாக, "மதகரி யதள்பட உரிசெய்த விறலினர்", "அத்தியின் உரிதனை அழகுறப் போர்த்தவன்", "வெங்கண் மால்வரை கரியுரித்துகந்தவன்", "காட்டு மாவது ரித்துரி போர்த்துடல் நாட்டமூன்றுடையாய்" என்று திருஞானசம்பந்தரும், "பனைக்கை ஒம்மத வேழம் உரித்தவன்", "தேனையார் குழலாளை யொர் பாகமா ஆனையீருரியார்" என்று திருநாவுக்கரசரும், "மறிசேர் கையினனே மதமாவுரி போர்த்தவனே" என்று சுந்தரரும், "பேரானை ஈருரிவைப் போர்த்தானை" என்று கபிலரும், "யானை உரித்தானை" என்று பரணரும் போற்றுவர்.

★ ★ ★

வீரபத்திரர்



ஸ்ரீ ஏகாம்பரேச்வரர் கோயில்
காஞ்சிபுரம்

பக்கம் : 80

தட்சிணாமூர்த்தி



ஞான தட்சிணாமூர்த்தி
ஸ்ரீ வீரட்டேச்வரர் கோயில்
திருத்தணிகை
பக்கம் : 85

கங்காளர்



ஸ்ரீ ராமநாதசுவாமி கோயில்
த் ருவரங்குளம்
(மன்னார்குடி வட்டம்)
பக்கம் : 100

நன்றி : French Institute of Indology, Pondicherry

வீரபத்திரர்

காம்னுடலுயிர் காலன்பற் காய்கதிரோன்
நாமகள் நாசி சிரம்பிரமன் கரமெரியைச்
சோமன் கலைதலை தக்கனையும் எச்சனையும்
தூய்மைகள் செய்தவா தோணோக்கம் ஆடாமோ. —திருவாசகம்

மனிதன் எவ்வளவுதான் வரம்பிலாற்றல் பெற்றிருந்தாலும் அகந்தை என்பது இருத்தல் கூடாது. ஆணவமே மனிதனை அழிக்கும். வேறு புறப்பகை தேவையில்லை. சான்றோர் ஒழுகலாற்று வரம்பினை எக்காலத்திலும் நாம் மீறலாகாது. மரபுகளைப் பேணிக்காத்தல் வேண்டும். இறைவன் அறக்கருணையாலும் மறக் கருணையாலும் மன்னுயிரைக்காத்து உய்வடையச் செய்கிறான். இறைவன் அருளைப் பெறவிழையவேண்டுமேயன்றி, எதிர்த்து அழியவேண்டாம் எனப்பல தத்துவங்களை உலகுக்குப் புகட்ட எழுந்த கோலமே வீரபத்திர வடிவம் ஆகும்.

தக்கன் (தட்சப் பிரஜாபதி) தன் மகளான தாட்சாயணியைச் சிவபெருமானுக்குத் திருமணம் செய்து கொடுத்து மகிழ்ந்திருந்தான். ஆனால் தன் அகந்தையால் சிவபெருமானைப் பகைத்துக் கொண்டான்; அவரை நிந்தித்தான். சிவபெருமானை அவமதிக்க வேண்டி, அவரை அழைக்காமலேயே மாபெரும் வேள்வி ஒன்றைச் செய்தான்; அனைத்துத் தேவர்களையும் அழைத்தான்; உபசரித்தான். ஆனால் தன் மகளுக்கோ மருமகனுக்கோ அழைப்பு அனுப்பவில்லை. தந்தை செய்யும் வேள்வியைக் காணவும்,

தந்தையைத் திருத்தவும் நினைத்த தாட்சாயணி, சிவபெருமான் அனுமதி பெற்றுத் தந்தை வீட்டிற்கு வருகிறாள். தந்தையின் வெறுப்புணர்ச்சி அவளைத் திடுக்கிடச் செய்கின்றது. வேள்விக் குண்டத்திலே பாய்ந்து அவள் மறைந்து விடுகிறாள். தன்னை அவமதித்ததையும், தனது தேவியின் மறைவையும் கேட்டு, தக்கன்மீது சினங்கொண்டு, சிவபெருமான் தனது நெற்றிக் கண்ணைத் திறக்கிறார். அதிலிருந்து தோன்றுகிறார் வீரபத்திரர்.

பார்த்த திக்கினில் கொடுமுடி ஆயிரம் பரப்பி
சூர்த்த திண்புயவரை இரண்டாயிரம் துளக்கி
போர்த்த தாள்களில் அண்டமும் அகண்டமும் பெயர
வேர்த் தெழுந்தனன் வீரரில் வீரரில் வீரன் —கந்தபுராணம்

வீரபத்திரரின் கண்களில் வீசும்பொறி ஊழிவெங்கனலையே எழுப்பியது.

மலை யதிர்ந்தன, மாதிரம் அதிர்ந்தன, வான
நிலை அதிர்ந்தன, வீரர்கள் அதிர்தலும் நெடுநீர்
அலை அதிர்ந்தன, மகம் செய்யும் மயன்மகன் குடுமித்
தலை அதிர்ந்திட அதிர்ந்தன வானவர் தொகுதி. —கந்தபுராணம்

தக்கனையும், யாகத்தையும் அழித்து, வந்திருந்த வானவர்களுக்கும் பாடம் புகட்டுகிறார் வீரபத்திரர். வீரபத்திரரால் தண்டிக்கப்பட்டவர்கள் யார் யார் என்று திருநாவுக்கரசரும் மணிவாசகரும் பட்டியலிட்டுக்காட்டுகின்றனர். திருநாவுக்கரசர் தேவாரக்குறிப்பின்படி, “எச்சன் நிணத்தலை கொண்டார், பகன் கண்கொண்டார், இரவி பல் இறுத்துக் கொண்டார், மெச்சன் வியாத்திரன் தலையும் வேறாக் கொண்டார். நமன் தாள் அறுத்தார், சந்திரனை உதைத்தார், புள்ளரசைக்கொன்று உயிர் பின் கொடுத்தார், அக்கினிகரம் கெடுத்தார், இந்திரன் தோள் நெரித்தார், திருமால் தலை இழந்தார், பிரமன் தலை இழந்தார்” என்று வீரபத்திரரின் வீரச்செயல்கள் பேசப்படுகின்றன.

சிவபெருமானை மதிக்காத யாகத்திற்கு வந்த காரணத்தாலே மேற்குறித்தோர் தண்டனை பெற்றனர். தீயாரோடு இணங்குதலும் தீமைதானே தரும். தக்கன் தன் தலையை இழந்தான் அவனுக்கு ஆட்டுத்தலையும் பொருத்தப்பட்டது.

“ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டியவா பாடி உந்தீபற” என்பார் மணிவாசகர்.

அக்கினி தன் கரம் இழந்தான். அவன் தானே அவிர்ப்பாகம் ஏற்றான். அவன் கரத்தை வெட்டுவது முறைதானே !

வெய்யவன் அங்கிவிழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தானென்று உந்தீபற —திருவாசகம்,

இந்திரன் தோள் நெரிந்தது. கருடன் உயிர் இழந்து மீண்டும் உயிர் பெற்றான். சந்திரன் தரையில் தேய்ப்புண்டான்.

> "மதியினை......தன்னொரு பதங்கொடே தள்ளி......தேய்திட்டானரோ."
> —கந்தபுராணம்.

சூரியன் தன் கண்ணையும் பற்களையும் இழந்தான்.

> உண்ணப்புகுந்த பகன் ஒளித்தோடாமே
> கண்ணைப் பறித்தவாறு உந்தீபற. —திருவாசகம்
>
> சூரியனார் தொண்டை வாயினிற் பற்களை
> வாரி நெரித்தவாறு உந்தீபற. —திருவாசகம்
>
> பகன் தாமரைக்கண் கெடக்கடந்தோன் —திருக்கோவையார்

திருமால் தலையிழந்தார்; பிரமன் தலை இழந்தார்; இயமனும் தாளிழந்தான்; தலையிழந்தான் என்று கந்தபுராணம் இயம்பும்.

> கூற்றுவன் அலமந்தோடலும் வெட்டினன் அவன்தலை வீரவீரனே
> —கந்தபுராணம்

இவ்வாறு தக்கன் வேள்வியைத் தகர்த்த வீரபத்திரர் செயல்களைக் கூர்மபுராணம், வராகபுராணங்களும் பேசுகின்றன. தக்கனுக்கும் உருத்திரனுக்கும் நிலவிய பகை குறித்துப் பாகவத புராணம் விவரிக்கின்றது.

வீரபத்திரரைச் சிவனார் மகனெனக் கூறுவதும் உண்டு. சிவபெருமானுக்கு நான்கு குமாரர்கள்: கணேசர், பைரவர், வீரபத்திரர், வேலர் என்பர்.

சிவபெருமானுடைய அட்டவீரட்டங்களில் ஒன்றாக வீரபத்திரர் கருதப் படுகிறார். தக்கனைத் தண்டித்த பராக்கிரமம் நிகழ்ந்ததலமாகத் திருப்பறியலூர் வீரட்டத்தலம் போற்றப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள திருப்பறியலூரில் விளங்கும் வீரபத்திரர் திருவுருவம் காணவேண்டிய தொன்றாகும். இங்கே வீரபத்திரர் எட்டுக்கரங்கொண்டு திகழ்கிறார்.

காரணாகமும் ஸ்ரீதத்துவநிதியும் வீரபத்திரர் வடிவத்தை விவரிக்கின்றன.

காரணாகமத்தின்படி, வீரபத்திரர் மூன்றுகண்களும், நான்குகரங்களும், அக்கினி ஜடையும், கோரப்பற்களும் கொண்டு, மணி, கபாலம், தேள்மாலைகளையும், நாக யக்ஞோபவீதத்தையும் தரித்திருப்பார். இவர் குறுகிய காற்சட்டையணிந்து பாதுகைகளும் அணிந்திருப்பார். இவரது முகம் மிகுந்த சினத்துடன் கொடிய நோக்குடையதாய் இருக்கும். தனது நான்கு கரங்களிலும் கட்கம், கேடகம், தனுசு, பாணம் இவற்றை ஏந்தியிருப்பார்.

ஸ்ரீ தத்துவநிதியில் வீரபத்திரர் வடிவம் கீழ்வருமாறு காட்டப்படுகிறது; இவர் கோரமுகமும், கோரமான பற்களும் மூன்று கண்களும் நான்கு கரங்களும் கொண்டிருப்பார். இடக்கரங்கள் இரண்டிலும் வில்லும், கதையும் கொண்டிருப்பார். வலக்கரங்கள் இரண்டிலும் கட்கமும் பாணமும் ஏந்தியிருப்பார். கபாலமாலை அணிந்து, கால்களில் பாதுகையும் தரித்திருப்பார். அருகே பத்திரகாளி விளங்குவாள். வீரபத்திரருக்கு வலப் பக்கம் ஆட்டுத் தலையுடன் அஞ்சலி கரத்தனாகத் தக்கன் நின்று கொண்டிருப்பான்.



கும்பகோணம் கும்பேசர் கோயில் கொடி மரத்தருகே தூணில் சிதைந்த வடிவில் காணப் பெறும் வீரபத்திரர் நமக்கு அச்சத்தைத் தருகிறார். ஆவுடையார் கோயில் திருநெல்வேலி - கிருஷ்ணா புரம் - திருவேங்கடநாதன் சந்நிதியில் விளங்கும் வீரபத்திரரும், தென்காசி வீரபத்திரரும் சிறப்பான வடிவங்கள் ஆகும். மதுரை மீனாட்சியம்மன் திருக் கோயிலில் அக்னி வீரபத்திரர், அகோர வீரபத்திரர் ஆகிய வடிவங்கள் சிறப்பாக உள்ளன.

கருநாடக மாநிலத்தில் வீரபத்திரர் கைகளில் வீணை விளங்கக் காண்கிறோம்.

தத்தம் செயல்களில் வீரமும் வெற்றியும் வேண்டுவோர் வீரபத்திரரை வழிபடல் வேண்டும். வீரசைவர்களான இலிங்காயதர்கள் வீரபத்திரரைச் சிறப்பாக வழிபடுகின்றனர்.

வீரபத்திரரைப் பிரதிட்டை செய்வதால் கொடிய தீமைகள் அகலும்; மக்கள் துன்பம் நீங்கி வாழ்வர் என ஆகமங்கள் கூறுகின்றன.

திருமுறைகளில் வீரபத்திரர் பராக்கிரமங்கள் போற்றப்படுவது பற்றி முன்னரே சில எடுத்துக்காட்டுக்கள் தந்தோம். வேறு சில சான்றுகளும் காண்போம் :

"தக்கனார் வேள்வியைச் சாடிய சதுரனார்," தக்கன் வேள்வி தகர்த்த தலைவன்" "சுருதியான் தலையும் நாமகள் மூக்கும் சுடரவன் கரமும் முன்னியங்கு, பருதியான் பல்லும் இறுத்தவர்க்கருளும் பரமனார்", "தக்கனது பெருவேள்விச் சந்திரன் இந்திரன் எச்சன், அருக்கன், அங்கி, மிக்க விதா தாவினோடும் விதிவழியே தண்டித்த விமலா" எனவரும் திருஞான சம்பந்தர் திருவாக்குகளும், "விண்பட்ட பூதப்படை வீரபத்திரரால், புண்பட்ட வாபாடிப் பூவல்லி கொய்யாமோ" என்று மணிவாசகர் திருவாக்கும்," புரம் கரி கருடன் மறலிவேள் இவர்மிசை செகுத்தோன்", "எச்சன் வன் தலையும் விண்டுருள" எனவரும் திருவிசைப்பா வரிகளும் ஈண்டு கருதத்தக்கன.

இனி, திருவெண்காட்டில் விளங்கும் அகோரமூர்த்தியைச்சிலர் அகோர வீரபத்திரர் என்பர். இவர் வீரபத்திரமூர்த்தியினின்றும் வேறுபட்டவர். இவருக்கும் வீரபத்திரருக்கும் தொடர்பு ஏதும் இல்லை. இவரை அகோரசிவன் என்பர். பஞ்சப்பிரம்ம மூர்த்தங்களுள் தென்முகமாயுள்ள அகோர மூர்த்தியான இவர் மருத்துவாசுரன் என்பவனின் வலி தொலைக்கத் தோன்றியவர். இவர் திருமேனியில் பதினான்கு நாகங்கள் ஆபரணமாக விளங்குகின்றன. இவரது வலது கால் கட்டை விரலும் இரண்டாவது விரலும் ஊன்றியும் மற்ற பாதம் தூக்கியும் காணப்படுகிறது. திருவெண்காடு திருத்தாண்டகத்தில்,

தூண்டு சுடர்மேனித் தூநீறாடிச்
சூலங்கை ஏந்தியோர் சுழல்வாய் நாகம்
பூண்டு பொறியரவங்காதிற்பெய்து
பொற்சடைகளவை தாழப்புரிவெண்ணூலர்
நீண்டு கிடந்திலங்கு திங்கள் சூடி
நெடுந்தெருவே வந்தெனது நெஞ்சங்கொண்டார்
வேண்டு நடைநடக்கும் வெள்ளேறேறி
வெண்காடு மேவிய விகிர்தனாரே.

என்று பாடுவது இப்பெருமானை மனத்தும் கொண்டேதான் என்பது இம்மூர்த்தத்தை நேரில் காணும்போது புலப்படும். இவரது திருவடியில் மருத்துவாசுரன் சரணடைந்து கிடக்கிறான். மூவிலைச் சூலமேந்தி முக்கண் எண் தோளீசராக இவர் கம்பீரமாகக் காட்சியளிக்கிறார். உத்தரகாரண ஆகமம் இவரை அகோராஸ்திர மூர்த்தி எனச் சொல்லும்.

★ ★ ★



T. N. Alaganathan.,

தட்சிணாமூர்த்தி

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை ஆறங்க முதற்கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கு அப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்துகாட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைத்து பவத்தொடக்கை வெல்வாம்.

—பரஞ்ஜோதி முனிவர் : திருவிளையாடல் புராணம்

சிவபெருமான், யோகம் இசை மற்றும் ஏனைய அறிவியற் கலைகளைக் கற்பிக்கும் திருக்கோலத்தில் ஞானாசிரியனாக-தட்சிணாமூர்த்தி என வழிபடப் பெறுகிறார். தட்சிணம் என்ற சொல் தெற்கு, ஞானம், சாமர்த்தியம் முதலிய பொருள்களைத் தருவது. தட்சிணாமூர்த்தி தெற்கு நோக்கி அமர்ந்திருக்கிறார். தெற்கு அழிவைக் குறிப்பது; வடக்கு அழியாத அமுத வாழ்வைக் குறிப்பது. அமுத வாழ்வு வேண்டி வடக்கு நோக்கி ஆன்மா வழிபட ஏதுவாக, இறைவன் தெற்கு நோக்கி அமர்ந்து அமரத்தன்மையை அருளுகின்றார். ஆனந்த வடிவான ஆடல்வல்லானும் சாந்த வடிவான தட்சிணாமூர்த்தியும் தெற்கு நோக்கியே விளங்குகின்றனர். ஞானமே வடிவமாக விளங்குவது சிவம். அவரை ஞானத்தாலேயே தொழவேண்டும். ஆலமர் செல்வனாக அருந்தவர் நால்வருக்கும் மௌனமாயிருந்து - சொல்லாமற்சொல்லி - உபதேசிக்கும் ஞானமூர்த்தியே தட்சிணாமூர்த்தி. அவர் ஆசாரியர்களுக்கெல்லாம் பரமாசாரியர். கற்பிக்க வேண்டிய பொருளுக்கேற்பப் போதனாமுறை அமையும். மனதுக்கும், வாக்குக்கும் எட்டாத பரம்பொருளை மனதிற்குக் கட்டுப்பட்ட வாக்கால் எங்ஙனம் காட்ட இயலும்! அனுபூதி வடிவில் உள்ளதற்குச் சொல்லாமல் விளக்கம் தரஇயலாது. ஆகவே எவ்வித செயலுமற்ற மௌனத்தைக் கடைப் பிடித்து, ஆனந்தத்தை அனுபூதியாகத் தம் உணர்வினால் வெளிப்படுத்திச் சலனமற்றுத் தம்மிடம்

கலந்துள்ள சீடர்களின் உள்ளத்தில் அவ்வானந்தம் முழுவதும் பரவச்செய்து பேரின்ப நிலையை உணர்த்தும் பரம்பொருளின் வடிவமே தட்சிணாமூர்த்தி. அறியச் சக்தி பெற்றவர் மட்டுமே அறியுமாறு போதித்த உருவம் அது. சிவத்தினிடம் சக்தி அடங்கிய வடிவம் தட்சிணாமூர்த்தி. வெளித்தோற்றத்தில் சலனமற்ற சிவவடிவமாயினும் உள்ளே சக்தி அங்கு நிரம்பியிருக்கிறது. ஞானமேவடிவான அருட்சக்தி நிறைந்து விளங்கும் சச்சிதானந்த வடிவமே தட்சிணாமூர்த்தி. பேரானந்தத்தை வெளிப் படுத்தாமல் உள்ளடக்கிக்கொள்ளத் திறமை மிகவும் தேவை. அந்தத் திறமை - சாமர்த்தியம் மிக்க மூர்த்தியாகத் திகழ்பவர் தட்சிணாமூர்த்தி. இவ்வடிவைக் குருவின் வடிவில் தான் உள்அடங்கிச் சிவனாகத் தேவி தோன்றுகிறாள் என்பர் சாக்தர்.

தட்சிணாமூர்த்தி வடிவைச் சிவாலயங்கள் அனைத்திலும் காணலாம். கருவறையின் தென் சுவரில் வெளிப்புறம் தெற்கு நோக்கி இவர் எழுந்தருளி நம்மை எல்லாம் தன் மோனத்தால் அழைத்து சிவ ஞானத்தைத் திருநோக்காலே தந்தருளு கின்றார். ஆராய்ச்சியைவிட அனுபூதியே சிறந்தது அல்லவா! அருளால் நோக்குக. அது அறிவால் பார்ப்பதைவிட உயர்ந்தது அன்றோ! மோனம் என்பது ஞானவரம்பு. சொல்லாமற் சொல்லும் இப்பரமாசாரியர் இவ்வுலகின் ஞானாசிரியர், நல்லாசிரியராக என்றும் திகழ்கிறார். இவரது வடிவமே தத்துவ விளக்கமாக அமைந்துள்ளது.

திருமேனி : பளிங்கு போன்ற வெண்ணிறம். தூய்மையை உணர்த்தும்.

வலப்பாதம் முயலகனை மிதித்தமர்ந்திருத்தல் : அனைத்துத் தீமைகளையும் அடக்கி ஆளும் வலிமை.

திருக்கரத்திலுள்ள நூல் : இதுசிவஞான போதமாகும். ஞானங்கள் அனைத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டு திகழ்கின்றது. ஞானத்தாலேயே வீடு பேறுகிட்டும். நோயாளியைக் குணப்படுத்த மருத்துவர் மருந்துப் பெட்டியைக் கைக் கொண்டு சுமத்தல் போல, உயிர்களை உய்விக்க இவர் சிவஞானபோதத்தைக் கையில் ஏந்தியுள்ளார்.

திருக்கரத்தில் உருத்திராக்கமாலை : 36 அல்லது 96 தத்துவங்களை உணர்த்துவது. உருத்திராக்க மாலை கொண்டு திருவைந்தெழுத்தைப் பன்முறை எண்ணிப்பல்காலும் உருவேற்றித் தியானித்தலே ஞானம்பெறும் நெறிஎன உணர்த்தலும் ஆகும்.

இடக்கரத்தில் அமிர்தகலசம் : அனைத்து உயிர்களுக்கும் பேரின்பம் அளிக்க வல்ல ஆற்றல்.

சின்முத்திரை : ஞானத்தின் அடையாளம். பெரு விரலின் அடிப்பாகத்தைச் சுட்டுவிரல் தொடவும், ஏனைய மூன்று விரல்களும் விலகி நிற்கும் முத்திரை இது.

புலித்தோலின் மீது அமர்தல் : தீய சக்திகளை அடக்கியாளும் பேராற்றல்.

தாமரை மலர்மீது அமர்தல் : ''மலர்மிசை ஏகினான்''; அன்பர் இதயதாமரை யில் வீற்றிருப்பவர். தாமரை மலர் ஓங்காரத்தை உணர்த்துவது.

நெற்றிக்கண் : காமனை எரித்த கண்ணுதல் : ஞானமும் வீடும் எய்தவிரும்புவோர் எவரும் ஐம்பொறி அவர்களை அறுத்தொழித்துப் புலனடக்கம் உடையராதல். துறவின் சிறப்பு.

படம் ஆலமரமும் அதன் நிழலும் : மாயையும் அதன் காரியமாகிய உலகமும்.

தென்முகம் : அவரை நோக்கி வடக்காகத்தியானிக்க வேண்டும் என்ற குறிப்பு.

அணிந்துள்ள பாம்பு : குண்டலினி சத்தியைக் குறிப்பது.

வெள்விடை : தருமம்.

சூழ்ந்துள்ள விலங்குகள் : பசுபதித்தன்மை. அனைத்துயிர்களுக்கும் அவரே தலைவர்.

முயலகன் வடிவம் அறியாமையைக் குறிப்பதால் அறிவுப் பிழம்பாகிய ஆலமர் செல்வன் அறியாமையாகிய முயலகனைக் காலடியில் மிதிப்பதாகக் காட்டுவது அருட்குறிப்பு.

தட்சிணாமூர்த்தி பலவாறு அழைக்கப்படுகிறார். மேதா தட்சிணாமூர்த்தி, யோக தட்சிணாமூர்த்தி, வீணாதர தட்சிணாமூர்த்தி, வீர தட்சிணாமூர்த்தி, லட்சுமி தட்சிணாமூர்த்தி, இராஜ தட்சிணாமூர்த்தி, கீர்த்தி தட்சிணாமூர்த்தி, சக்தி தட்சிணாமூர்த்தி, பிரம்ம தட்சிணாமூர்த்தி, சுத்த தட்சிணாமூர்த்தி, திவ்விய தட்சிணாமூர்த்தி எனப்பல வடிவங்களில் போற்றுகிறோம். ஆயினும் வியாக்கியான தட்சிணாமூர்த்தி, ஞானதட்சிணாமூர்த்தி, யோகதட்சிணாமூர்த்தி, வீணாதரதட்சிணாமூர்த்தி என்னும் நான்கு வடிவங்களே ஆகமங்களில் சிறப்பாக விவரிக்கப்படுகின்றன.

1. வியாக்கியான தட்சிணாமூர்த்தி : கயிலை நாதனாம் சிவபெருமான் சாத்திரங்களை விளக்குபவராக - இமயமலையின்கண் தனிமையில் ஓர் ஆலமரத்தின்கீழ் புலித்தோலாசனத்தின் மீது அல்லது வெண் தாமரை மலர் மீது அமர்ந்துள்ளார். இடக்காலை வலது தொடைக்குக் குறுக்கே வளைத்து மடித்து வைத்து, வலக்காலைக் கீழே தொங்குமாறு அமைத்து அமர்ந்து வியாக்கியான தட்சிணாமூர்த்தி விளங்குகிறார். அவர்தம் வலக்காலின் கீழ் முயலகன் படுத்திருக்கிறான். இவ்வமைப்பில் தட்சிணாமூர்த்தி மூன்று கண்களும் நான்கு கரங்களும் கொண்டு திகழ்கிறார். அவரது முன் வலக்கரம் ஞானமுத்திரை அல்லது சந்தர்ஷண முத்திரையில் அமைந்துள்ளது. முன் இடக்கரம் வரதஹஸ்தம் அல்லது தண்டஹஸ்தமாக இருக்கும். அது இடது முழங்காலுக்கு மேலே அமைந்திருக்கும். பின்வலக்கரம் அட்சமாலையையும், பின்இடக்கரம் அக்கினி அல்லது சர்ப்பத்தையும் ஏந்தியிருக்கும். ஆசாரியன்



தட்சிணாமூர்த்தி



வியாக்யான தட்சிணாமூர்த்தி
ஆலங்குடி (தஞ்சை மாவட்டம்)

பக்கம் : 84



யோக தட்சிணாமூர்த்தி
இலம்பையங்கோட்டூர்
(அரக்கோணம் அருகில்)

பக்கம் : 86



வீணாதர தட்சிணாமூர்த்தி
நாகலாபுரம்
(ஆந்திரமாநிலம்)

பக்கம் : 87

தட்சிணாமூர்த்தி



சக்தி தட்சிணாமூர்த்தி
வாணியம்பாடி (வடஆற்காடு)
பக்கம் : 88



சாம்ப்ய தட்சிணாமூர்த்தி
சுருட்டப்பள்ளி (ஆந்திரமாநிலம்)
பக்கம் : 88

என்ற முறையில் உள்ளத்தில் உறுதியையும் சிந்தனை வேகத்தையும் காட்டுவதாக இவரது தோற்றம் அமைந்திருக்கும். ஜடாபாரம், ஜடாபந்தம், ஜடாமண்டலம், ஜடாமகுடம் அல்லது பட்டபந்தத்தால் கட்டப்பட்ட ஜடைகளை உடையவராக இவர் திகழ்கிறார். ஜடாபாரத்தின் நடுவே கங்கையின் புன்முறுவல்பூத்த முகம் தெரியும். வெண்மையான ஆடையும், புலித்தோலும் அணிந்து, அணிகலன்களையும் தரித்து விளங்கும் இவரது இடது காதில் சங்கபத்திரமும் வலது காதில் குண்டலமும் விளங்கும். அல்லது இருகாதுகளிலுமே சங்கபத்திரம் அல்லது குண்டலம் அணிந்திருப்பார். கழுத்தில் ஓர் உருத்திராக்க மாலை அணிந்து எவ்வித சஞ்சலமுமின்றி, சாந்தத்துடன் அமைதி தவழும் முகமுடையவர் இவர்.

இவரது தன்மையைப் பற்றிச் சில்பரத்தினம் குறிப்பிடுகையில், தர்மத்தைப் போதிக்கும் இம்மூர்த்தம் பக்தர்களுக்கு மிகவும் புனிதமானது; தன்னை வழிபடும் அனைவருக்கும் இவர் அனைத்து நலன்களையும் அளிக்கிறார் என்று கூறுகிறது.

சிறந்த ஞானாசாரியராகத் திகழும் இவரைச் சூழ்ந்து, சாத்திரம் பயில விழையும் முனிவர்கள் அமர்ந்திருப்பர். அம்முனிவர்களைப்பற்றி அம்சுமத்பேதாகமம் பேசுகின்றது. "நாரதர், ஜமதக்கினி, வசிஷ்டர், பிருகு, பரத்துவாஜர், சனகர், அகஸ்தியர், என்னும் முனிவர்கள் அவரைச் சூழ்ந்து அமர்ந்திருப்பார்." ஆனால் காரணாகமத்தின்படி, அகஸ்தியர், புலஸ்தியர், விசுவாமித்திரர், ஆங்கீரசர் என்போர் இவரருகே அமர்ந்திருப்பர். இம்முனிவர்கள் ஜடாமகுடமும் உருத்திராக்கமாலையும் அணிந்திருப்பர்.

தட்சிணாமூர்த்தி உபநிடதமும் சூதசம்ஹிதையும் தட்சிணாமூர்த்தியின் தத்துவச் சிறப்பைப் பகருகின்றன. ஒரு கற்ப முடிவில் அனைத்துலகங்களையும் தன்னுள் ஒடுக்கி மகிழ்ச்சிமிக்கு விளங்கும் பரம்பொருள் இவரே என்று கூறப்படுகிறது. இவரது திருமேனி நிலைத்த பேரின்பமும் நிலையான சக்தியும் நிறைந்ததொன்றாகத் திகழ்கின்றது. பிறப்பில்லாதவரும், இறப்பில்லாதவரும், என்றும் அழியாதவருமாக இவர் விளங்குகிறார். தன்னைவழிபடுவோர்களுக்குப் பேரின்பஞான வீடளிக்கிறார்.

பொதுவாக எல்லாச் சிவாலயங்களிலும் இவ்வகைத்தட்சிணாமூர்த்தியே விளங்குகின்றார். "ஏரிசையும் வடவாலின் கீழ்இருந்தங்கு ஈரிருவர்க்கு இரங்கிநின்று நேரிய நான்மறைப் பொருளை உரைத்து ஒளிசேர் நெறியளித்தோன்", "அழிந்தசிந்தை அந்தணாளர்க்கு அறம்பொருள் இன்பம்வீடு மொழிந்தவாயான்" என்றெல்லாம் தேவார ஆசிரியர்கள் போற்றும் இப்பெருமானை நாமும் நாளும் பணிந்து உய்வடைவோம்.

2. **ஞானதட்சிணாமூர்த்தி** :—வியாக்கியான தட்சிணாமூர்த்திக்கும் ஞானதட்சிணாமூர்த்திக்கும் அதிக வேறுபாடு இல்லை. ஞானதட்சிணாமூர்த்தியின் பின்வலக் கரத்தில் அட்சமாலையும், பின் இடக்கரத்தில் உற்பமலரும் விளங்கும். முன்வலக்கரம் ஞானமுத்திரையைக் காட்டும்: முன் இடக்கை அபயஹஸ்தமாகவோ தண்டஹஸ்தமாகவோ அமைந்திருக்கும்.

காமிகாகமத்தின்படி, ஞானதட்சிணாமூர்த்தியின் முன்வல, இடக்கரங்கள் கடகஹஸ்தமாக—அதாவது முன்வலக்கரத்து உள்ளங்கைக் கீழ்நோக்கியும், முன் இடக்கரத்து உள்ளங்கைமேல் நோக்கியும் அமைந்திருக்கும். இதனைக் காமிகாகமம் "சர்ப்பகரம்" எனக்குறிப்பிடுகின்றது.

ஞானதட்சிணாமூர்த்தி வடிவங்களை ஆலூர், திருவொற்றியூர், சுசீந்திரம், காவேரிப்பாக்கம் திருக்கோயில்களில் காணலாம்.

3. **யோகதட்சிணாமூர்த்தி** :—யோகாசாரியராக விளங்கும் தட்சிணாமூர்த்தி திருக்கோலம் இது. இக்கோலத்தில் மூன்று வகைகள் உள்ளன. முதல்வகை



அமைப்பில் அவரது இருகால்களும் ஸ்வஸ்திகாசன அமைப்பில் இருக்கும். முன் இடக்கையை மடிமீது யோக அமைப்பு முறையில் வைத்துக்கொண் டிருப்பார். முன் வலக்கையை மார்புக்கருகில் யோக முத்திரையாகக் காட்டிக்கொண்டிருப்பார். பின்வலக் கையில், அட்சமாலையும் பின் இடக்கையில் பத்மமும் விளங்குகின்றன. அவரது பார்வை மூக்கின் நுனியில் பொருந்தியுள்ளது. அவரைச்சூழ்ந்து முனிவர்கள் பணிந்து அமர்ந்திருப்பர்.

இரண்டாவது வகை அமைப்பில், இவர் இடக்காலை வளைத்து உத்குடிகாஸனமாக அமர்ந் திருப்பார். இவரது உடலையும் இடக்காலையும் யோக பட்டம் மூடியிருக்கும். ஆசனத்தின்கீழே வலக்கால் தொங்கிக்கொண்டிருக்கும். இடக்காலின் வளைந்த முழங்கால்மீது இவர் தனது முன் இடக்கரத்தை நீட்டி வைத்திருப்பார்.

மூன்றாவது வகையில், இவரது இருகால்களும் வளைந்து குறுக்கே செங்குத்தாக அமைந்திருக்கும். அதனைச்சுற்றி ஒரு யோகபட்டம் கட்டப்பட்டிருக்கும். தனது இருகைகளையும் நீட்டி முழங்கால்கள் மீது இவர் வைத்திருப்பார். பின்வலக்கரத்தில் அட்சமாலையும், பின்இடக்கரத்தில் கமண்டலமும் கொண்டிருப்பார். இவரது ஜடைகள் ஜடாமண்டலமாக அமைந்திருக்கும். அதில் வழக்கமாக உள்ள பிறை, சர்ப்பம் போன்றதனைத்தும் இடம்பெற்றிருக்கும்.

யோகதட்சிணாமூர்த்தி வடிவங்களைக் காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில், திருவொற்றியூர், இலம்பையங்கோட்டூர், நன்சன்கூடு முதலிய தலங்களில் காணலாம்.

கந்தபுராணம், காமதகனப்படலத்தில் யோகதட்சிணாமூர்த்தி வடிவம் பேசப்படுகிறது.

4. **வீணாதர தட்சிணாமூர்த்தி** : இசைவல்லுநராகவும், இசைக் கலையாசிரியராகவும் இவ்வடிவில் தட்சிணாமூர்த்தி திகழ்கிறார். காமிகாகமம், அம்சுமத்பேதாகமம், காரணாகமம் போன்றவை இத்திருவுருவத்தை விவரிக்கின்றன.

அம்சுமத்பேதாகமத்தின்படி, இவரது இடக்கால் உத்குடிகாசன அமைப்புடைய தாயிருக்கும். முன் இருகரங்களும் வீணையைப்பற்றி இருக்கும். ஏனைய அம்சங்கள் அனைத்தும் வியாக்கியான தட்சிணாமூர்த்திக் குரியன போன்றே அமைந்திருக்கும்.

காமிகாகமத்தின்படி, வீணையை வைத்துக் கொள்ள ஏற்றமுறையில் இவர் இடக்கரத்தை உயர்த்தி வலக்கரத்தைத் தாழ்த்தி வைத்துக் கொண்டிருப்பார். வீணையின் தலைப்பகுதியை இடது கையினாலும், கீழ்ப்பகுதியை வலது கையினாலும் பற்றியிருப்பார். வீணையின் ஒலி எழுப்பும் பாகம் இவரது வலது தொடையின்மீது வைக்கப்பட்டிருக்கும். இவரது பின்வலக்கரம் வீணையை மீட்டும். இவரது முகமோ, சந்தர்ஷண முத்திரையுடைய கரத்தை நோக்கியதாயிருக்கும் அல்லது அக்கரத்தையே நோக்குவதாகவும் இருக்கலாம். இவரைப் பல்வேறு விலங்குகள், பிராணிகள், சித்தர், வித்தியாதரர், கின்னரர், பூதங்கள் முதலிய பலரும் சூழ்ந்திருப்பர். மலையில் ஆலமரத்தின்கீழ் இவர் அமர்ந்திருப்பார். புலித்தோல் மூடிய மணித்தவிசின் மீது சாந்தமே வடிவமாக இவர் விளங்குவார். இவர் நின்ற கோலத்திலோ, அமர்ந்த கோலத்திலோ, முனிவர்கள் சூழ்ந்தோ, சூழாமலோ, முயலகன் மீது தனது காலைப் பதித்தோ, பதியாமலோ, ஆலமரத்தின் கீழோ ஆலமரம் இன்றியோ விளங்கலாம்.

திருமுறைகளில் வீணாதர தட்சிணாமூர்த்தி வடிவம் பல இடங்களில் போற்றப் பெறுகின்றன. "மிக நல்லவீணை தடவி", "மழலை வீணையர்", "வீணை பயில்...பரமயோகி", "பாடல் வீணையர்", வீணை முதிரவேள் வாய் மூரிபாடி", "வேதத்து ஒலி கொண்டு வீணை கேட்பார்", "எம்மிறை நல்வீணை வாசிக்குமே", "வித்தக வீணையொடும்......அத்தன்" எனவரும் மூவர் தேவாரப் பகுதிகளைக் காண்க.

மேலப்பெரும் பள்ளம் (திருவலம்புரம்), திருமறைக்காடு, நாகலாபுரம், ஒரத்தநாடு, காஞ்சி கயிலாசநாதர் கோயில், வீணாதர தட்சிணாமூர்த்தி வடிவங்கள் குறிப்பிடத்தக்கவை. நெல்லை மாவட்டம் கழுகுமலை வெட்டுவான் தட்சிணாமூர்த்தி தன் இருகைகளில் வீணைக்குப் பதிலாக மிருதங்கம் வைத்துள்ளார்.

நஞ்சன்கூடில் (கர்நாடகம்) விளங்கும் தட்சிணாமூர்த்தி வியாக்கியான, யோக, வீணாதரவடிவங்களின் கூட்டமைப்பாகும். யோகநிலையில் அமர்ந்திருப்பதால் அவரை யோகமூர்த்தி எனவும், தனதுபின் இடக்கரத்தில் வீணையை ஏந்தியுள்ளதால் வீணாதர மூர்த்தி எனவும், வலது முன்கரம் சின்முத்திரையாகவும் இடது முன்கரம் புத்தகத்தைக் கொண்டும் விளங்குவதால் வியாக்கியானமூர்த்தி எனவும் இவரைக் கருதலாம்.

கர்நாடக மாநிலத்தில் ஸ்ரீரங்கபட்டினம் கங்காதரேசுவரர் கோயிலில் விளங்கும் தட்சிணாமூர்த்தி - கீழேகற்சிலையும் அதற்குமேல் செப்புத் திருமேனியும் - இரண்டுமே கிழக்கு நோக்கி அமைந்துள்ளன. கால்களை மடித்து, யோகபட்டை அணிந்து, கரங்களில் சின்முத்திரை, ஜபமாலை, புத்தகம், வீணை முதலியன கொண்டு ஞான வடிவாய் விளங்கும் இவ்வடிவம் காண்போரை வியக்கச் செய்யும்.

மயிலாடுதுறையில், காவிரியின் வடகரையில் விளங்கும் உத்தரமாயூரம் என்னும் வள்ளலார் கோயிலில் மேதாதட்சிணாமூர்த்தி மிகச் சிறப்பாக விளங்குகிறார். இவர் நந்தி மீது ஆரோகணித்து விளங்குகிறார். திருவாரூர் சித்தீச்சரம் மேதாதட்சிணா மூர்த்தியும் குறிப்பிட வேண்டியதொன்றாம்.

தக்கோலத்தில் விளங்கும் தட்சிணாமூர்த்தி ஒரு காலைத் தொங்கவிட்டு, மற்றொரு காலை ஆசனத்தின்மீது ஏற்றிவைத்துத் தலைசாய்த்து விளங்குகிறார்.

திரிசூலம் என்ற தலத்து தட்சிணா மூர்த்தி, தனது வலக்காலை தொங்க விட்டு இடக்காலை மடித்து உத்குடிகாசன நிலையில் விளங்குகிறார். கழுகுமலை தட்சிணாமூர்த்தி ஒருகையைத் தரையில்ஊன்றி விச்ராந்தி நிலையில் திகழ்கிறார்.



ஆந்திரா-அனந்தபூர் மாவட்டம் ஹேமாவதி என்னும் இடத்தில் விளங்கும் தட்சிணாமூர்த்தி ஐயப்பன் போன்று யோகபட்டம் தரித்து அமர்ந்துள்ளார்.

கும்பகோணம் தேப்பெருமாள் நல்லூரில் அன்ன தான தட்சிணாமூர்த்தி திகழ்கிறார். திருவையாறு கோயிலில் கபாலமும் சூலமும் ஏந்திய நிலையில், தன்திருவடியின் கீழ் ஆமைவிளங்கத் தட்சிணா மூர்த்தி திகழ்கிறார்.

தட்சிணாமூர்த்தியிடம் அம்பிகை பிரணவ உபதேசம் பெற்றதலம் ஓமாம்புலியூர் ஆகும்.

சுருட்டபள்ளி ஸ்ரீபள்ளிகொண்டேசுவரர் கோயிலில் சாம்பயதட்சிணாமூர்த்தி விளங்குகிறார். சக+அம்ப்ய=சாம்ப்ய எனவரும். அம்பிகையுடன் கூட இவர் விளங்குவது தனிச் சிறப்பு ஆகும். இவர் நந்திசேசுவரருடன் காட்சி தருகிறார். இவரது சின்முத்திரை கரம் நந்தியின் தலைமீது படிந்துள்ளது. யோக பட்டயத்துடன் இடதுகால் குத்துட்டிருக்க, வலதுகால் முயலகன்மீது அழுந்தியுள்ளது. இடப்புறம் சாந்திதேவி இவருடன் நெருங்கி அமர்ந்திருக்கிறாள். சுவாமி அவளை அன்புடன் அணைத்திருக்கிறார். ஞானமும் சாந்தியும் இணைபிரியாதவை என்ற தத்துவத்தை விளக்கும் அற்புதத் திருக்கோலமாக இவர் திகழ்கிறார்.

ஆலங்குடி தட்சிணாமூர்த்தி புகழ்மிக்கது.

சென்னை-திருவேட்டீசுரன் பேட்டை, மல்லீச்சுரர் கோயில், பழனி பெரியா வுடையார் கோயில், கண்டியூர், பெருவேளூர் தட்சிணாமூர்த்தி வடிவங்களும் குறிப்பிடத் தக்கன.

போதில் மாதவா குழுவுடன் கேட்பக்கோல ஆல்நிழற்கீழ் அறம் பகர்ந்து, நல்லற முரைத்து ஞானமோடு பண்ணார்ந்த வீணை பயின்ற விரலவனைப்பணிந்து பேரின்பம் எய்துவோம்.

★ ★ ★

கிராதமூர்த்தி

அந்த வில் விசயனும் அவன்பதம் பணிந்(து)
எந்தை பாரதவமர்க்கிசைந்த வீரர் மெய்
சிந்தநின் பேர்பெறு தெய்வ வாளியைத்
தந்தருள் என்றனன் தவத்தின் மேனின்றான்

ஐயனும் அம்மையோடருள் புரிந்துபின்
வெய்ய பொற்றூணியும் வில்லுமந்த்ரமும்
துய்ய பாசுபத மெய்த் தொடையுமுட்டியு
மொய்யென நிலையுடன் உதவினானரோ

—வில்லிபாரதம்—ஆரணியபருவம்
அருச்சுனன் தவநிலைச் சுருக்கம்

"**கா**ண்டிபம்" என்ற அதிசய வில்லை அக்னியிடமிருந்து பெற்ற அருச்சுனன் பாரதப்போரில் எதிரிகளின் ஆற்றலை முறியடித்தவன். பார்த்தனுக்குப் பத்து பெயர்கள் உண்டு. அருச்சுனன், பற்குணன், கிரீடி, தனஞ்ஜெயன், சுவேத வாகனன் விபற்சு, விஜயன், கிருஷ்ணன், சவ்வியசாசி, பார்த்தன் ஆகிய பத்து பெயர்களில் 'சவ்வியசாசி' என்றால் இடது-வலது என்றும் இரண்டு கைகளாலும் அம்பு தொடுப்பவன் என்று பொருள். அத்தகைய சிறந்த வில்லாளியான விஜயன் கௌரவர்களை வெற்றிகொள்ள சிவபெருமானிடமிருந்து "**பாசுபதம்**" என்றும் வலிமை வாய்ந்த அஸ்திரத்தைப் பெறுகிறான்.

பாசுபதம் பெறவேண்டித் தவமிருந்த பார்த்தனுக்குப் பரமன் வேடரூபத்தில் காட்சி அளிக்கிறார், காட்டுப்பன்றி ஒன்றினை வேட்டையாட இருவரும் அம்பு எய்கிறார்கள். இருவரது அம்பும் ஒரே சமயத்தில் வேறு வேறு திசையிலிருந்து பன்றியைத் தாக்குகிறது. இருவரும் உரிமை கொண்டாடும் நிலையில் போர் மூள, இறுதியில் பார்த்தனுடைய திறமைக்குப் பரிசாக பாசுபதத்தை அளிக்கிறான் பரமன். இவ்வாறு மகாபாரதம் வனபர்வதத்தில் விவரிக்கப்படுகிறது.

பண்டு பெரும் போர்க்கோலப் பார்த்தனுக்காகக்கொண்டு நடந்த வேடர் கோலத்தைக் "கிராத மூர்த்தி" என்றும் "பாசுபதமூர்த்தி" எனவும் 'கிராதார்ஜுன மூர்த்தி' என்றும் அழைப்பர். இவ்வடிவில் சிவபெருமான் மூன்று கண்களும் நான்கு திருக்கரங்களும், ஜடாமகுடமும் கொண்டிருப்பார். அவரது திருக்கரங்களில் வில் (தனுசு), அம்பு (பாணம்), கோடரி (பரசு), மான் என்னும் நான்கும் திகழ்கின்றன. சமபங்கநிலையில் அவர் நேராக நிற்கிறார். சிறந்த ஆடைகளையும் அனைத்து வித அணிகலன்களையும் அவர் அணிந்திருப்பார். அவருக்கு வலப்பக்கம் அருச்சுனனும், இடப்பக்கம் கௌரியும் நிற்கின்றனர். அருச்சுனன் கூப்பிய கரத்தினனாய் நிற்கிறான்.

பாசுபதாஸ்திரத்தின் அமைப்பையும் ஆகமங்கள் கூறுகின்றன. அது நான்கு முகங்களை உடையது. ஒவ்வொரு முகத்திலும் மூன்று கண்கள் உள்ளன. நான்கு கரங்களையும், உக்கிர முகங்களையும், பயங்கரமான நீண்ட கோரப் பற்களையும், கரிய முடியையும், கொடிய மீசையையும் கொண்டு அது விளங்குகிறது. அதன் நாற்கரங்களிலும் சக்தி, முத்கரம், சங்கம், கட்கம், ஆகியன திகழ்கின்றன. பாசு பதாஸ்திர ஆயுத புருஷன் பத்மாஸனத்தில் அமர்ந்துள்ளார். அவர் சிவபெருமானுடைய உக்கிர வடிவை யொத்தவராகவே காணப் பெறுகிறார்.

தில்லைச்சிற்றம்பலத்தின் கிழக்கே தற்போது அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அமைந்துள்ள பகுதியே திருவேட்களம் என்னும் தொன்மையான சிவத்தலமாகும். இங்கேதான் சிவபெருமான் பார்த்தனுக்குப் பாசுபதம் அளித்தருளினார் என்று இத்தல மான்மியம் குறிப்பிடுகின்றது, "வேடனார் உறை வேட்களம்" என்று பாடுவார் அப்பர்பெருமான். இத்தலத்தில் உள்ள பாசுபத மூர்த்தி மிகவும் அற்புதமானது.

"இடக்கை மலர்வரிசிலையும் வலக்கை மலர்ப் பாணமும்
வெந்நிடையே பாண
மடக்கிய வெங்கொடுவரித் தோலாவ நாழிகையு
மிக வழுகு கூரக்
கடக்களிறன்றுரித்த பிரான் கண்டவர்கள்
வெருவரமுன் கொண்டகோலந்
தொடக்கியுரை செயநினைக்கிலார்ஆர நாவுடையோற்
குஞ்சொல்லலாமோ"

—வில்லிபாரதம்-ஆரணிய பருவம்

'இடக்கை மலர் வரிசிலையும் வலக்கை மலர்ப்பாணமும்' என்னும் வில்லி பாரதப் பாடல் வரிகளுக்கு ஒப்ப திருவேட்களத்தில் வேட்டுவக் கோலத்தில் பாசுபதம் கொடுத்த பரமனாகத் திகழும் பெருமானது இடக்கரம் "சிகர" முத்திரையில் வில்லைப் பிடித்துக் கொண்டுள்ளது. வலக்கரத்தில் அம்பும் கொண்டு தலை ஜடா மகுடத்துடன் காட்சியளிக்கிறார். கழுத்தில் கொம்பு மாலையும், காலில் வீரக்கழலும் அணிந்து திரிபங்க நிலையிலே காட்சியளிக்கவும் அருகிலே கௌரி வேடுவச்சியாகத் திகழ்கிறாள்.

திருவேட்களத்தில் உள்ள பார்த்தனுடைய எழிற்கோலம் நெஞ்சை கொள்ளை கொள்ளும். 'திரிபங்க' நிலையில் அவன் நிற்கும் காட்சியே அற்புதம். 'சவ்விய சாசி' என்னும் அவனது பெயருக்கேற்ப வலது—இடது ஆகிய இரண்டு கைகளாலும் அம்பு எய்ய உதவியாக முதுகின் இருபுறங்களிலும் அம்பறாத்துணி அமைந்திருப்பதும் கண்டு இன்புறத்தக்கது. கால்கட்டை விரலிலும், கைகளில் சுண்டு விரலிலும் மிருகங்களின் கொம்பினால் ஆகிய மோதிரத்தையும் அணிந்துள்ளான். தலையையும் தோளையும் வளைத்து கூப்பிய கைகளுடன் உள்ள அவனது நிலை "லீனம்" என்ற தாண்டவ நிலையாகும்.

திருவேட்டகுடி, திருவலம்புரம் ஆகிய தலங்களிலும் வேட்டுவக் கோலத்தைக் கண்டு இன்புறலாம்.

கும்பகோணம் ஸ்ரீ ஆதிகும்பேச்வரர் திருக்கோயிலில் ஒரு "கிராத மூர்த்தி"யின் வடிவம் உள்ளது. இவ்வடிவம் அத்தல வரலாற்றின்படி, பிரளயத்தின்போது சிருஷ்டி பீஜம் வைத்த குடம் வெள்ளத்தில் மிதந்துவர சிவபெருமான் வேட உருவில் வந்து அக்குடத்தின்மீது அம்பு எய்தி மீண்டும் சிருஷ்டியைத் தோற்றுவித்தார் என்று கூறும். எனவே இத்தலத்திற்கு "குட மூக்கு" எனவும், குடம் வைக்கப்பட்டிருந்த இடம் "குட வாயில்" என்றும் கூறுவர். கும்பகோணத்திலுள்ள வேடுவ வடிவம் ஆகமத்தில் குறிப்பிட்டுள்ள வகையில் நான்கு கரங்களுடன் அமைந்துள்ளது. முன்வலக்கரத்தில் அம்பும், முன் இடக்கரத்தில் வில்லும் கொண்டு, பின் வலக்கரத்தில் கோடரியும், பின் இடக்கரத்தில் மானும் கொண்டு ஜடாமகுடத்துடன் சிறப்பாகத் திகழ்கிறார். இவருக்கும் பாசுபத மூர்த்திக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பது அறியத் தக்கது.

"அருச்சுனருக்கு அருள் செயக் கருதும் வேடத்தர்" என்று திருஞான சம்பந்தரும் "பார்த்தனுக்கருள் செய்த சிற்றம்பலத் கூத்தன்" என்றும், 'வேடனாய் விசயற்கருள் செய்தவன்', 'ஞான வேடன் விசயற் கருள் செய்யும் கானவேடன்' என்று திருவெண்காடு தேவாரத்தில் திருநாவுக்கரசரும் பாசுபத மூர்த்தியைப் போற்றுகிறார்கள்.

"முத்தைத்தரு" என்று முருகப்பெருமான் அடியெடுத்துக் கொடுக்க அருணகிரிநாதர் பாடிய முதல் திருப்புகழில், 'திக்குப் பரியட்டப் பயிரவர் தொக்குத் தொகு தொக்குத்தொகுதொகு சித்ரப்பவுரிக்குத் திரிகடக எனஓத' என்னும் வரியில்

'பவுரி' என்னும் நடனத்தை முருகன் ஆடியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பவுரி என்பது ஒரு குழு நடனம். சிவபெருமான் பார்த்தனுக்காக வேட்டுவக் கோலம் கொண்ட போது 'பவுரி' நடனத்தை ஆடியதாகக் கூறுவர். தற்போது இந்தியாவிலுள்ள பல்வேறு மலைக்குடிபிரிவினரில் 'கிராதர்' என்றொரு இனமும் உள்ளதாக அறிய முடிகிறது. இந்த இனத்தவர்கள் இன்றும் 'பவுரி' நடனம் ஆடுகிறார்கள் என்று கருத இடமுண்டு.

வீரமும் வெற்றியும் வேண்டுவோர் பாசுபத மூர்த்தியை வழிபட்டு ஆற்றலும் ஆயுதமும் பெற்று உலகில் நல்லன தழைக்கவும் அல்லன அகற்றவும் இறையருளோடு செயல்படலாம் என்பது இம்மூர்த்தி தரும் செய்தியல்லவா !

★ ★ ★



கிராதமூர்த்தி



கிராதமூர்த்தி (பாசுபதமூர்த்தி)
திருவேட்களம் (தென் ஆற்காடு மாவட்டம்)




அர்ச்சுனன்

பக்கம் : 91



கிராதமூர்த்தி
கும்பகோணம் ஸ்ரீ ஆதிகும்பேச்வரர் கோயில்
பக்கம் : 91

நீலகண்டமூர்த்தி (விஷாபஹரணர்)



ஸ்ரீ பள்ளிகொண்டேச்வரர் கோயில்
சுருட்டப்பள்ளி (சித்தூர் மாவட்டம்) ஆந்திரமாநிலம்
பக்கம் : 98

நீலகண்டர்

பொங்கி நின்று எழுந்த கடல் நஞ்சினைப்
பங்கி யுண்டதோர் தெய்வம் உண்டோ சொலாய் !

—திருநாவுக்கரசர்.

சாவா மூவா நிலைபெற அமுதம் உண்ணவேண்டி, தேவர்களும் தானவர்களும் பாற்கடலைக் கடையத் துணிந்து, மேருமலையை மத்தாகவும், வாசுகியை நாணாகவும், திருமாலாம் கூர்மத்தை (ஆமையை) அச்சாகவும் அமைத்துக் கடைந்தனர். அப்போது ஆலகால விஷம் அக்கடலினின்று எழுந்தது. அனைவரும் அஞ்சியோடினர். அவ்விடத்தின் புகைபட்டுக் திருமால் கருமாலானார். ஆனால் சிவபெருமான், தன் நிழலான ஆலால சுந்தரனை அழைத்து, அவ்விடத்தைக் கொணரச் செய்து உண்டார். அவ்விடம் அவரது கழுத்தில் (கண்டத்தில்) சென்று தங்கியதால் அவர் கழுத்து நீல நிறமாயிற்று. அவரும் நீலகண்டர் எனப் போற்றப் பெறலானார். வடமொழியில் வர்மன புராணம், பிரம்மாண்ட புராணம், பாகவதம் ஆகியவற்றில் சிவபெருமான் ஆலகாலவிடமுண்ட வரலாறு பேசப்படுகின்றது.

தமிழ் நாட்டில் சங்க காலந்தொட்டே நீலகண்டமூர்த்தியின் மாண்பு மக்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்ததைச் சங்க இலக்கியங்களில் காண்கிறோம். அதியமான் நெல்லிக்கனியை ஔவையாரிடம் கொடுத்தபோது அவர் அதியனைப் பாராட்டிப் பாடும் பாடலில்

"பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே"

என்று வாழ்த்துவதைப் புறநானூறு காட்டுகிறது.

"கறைமிடறு அணியலும் அணிந்தன்று அக்
கறை பதினெண் கணனும் ஏத்தவும் படுமே"

எனக் கடவுள் வாழ்த்துப் புறநானூற்றுப் பாடலிலும் வருகின்றது.

"நீரகம் பனிக்கும் அஞ்சுவரு கடுந்திறற்
பேரிசை நவிரம் மேஎய் உறையும்
காரி யுண்டிக் கடவுளது இயற்கை"

என்று மலைபடுகடாமும்,

"விண்ணோர் அமுதுண்டும் சாவ ஒருவரும்
உண்ணாத நஞ்சு உண்டிருந்து அருள்செய்குவாய்"

என்று சிலப்பதிகாரமும்,

"விண்ணினார் புகழ்தற் கொத்த விழுமியோன் நெற்றி போழ்ந்த
கண்ணினான் கண்டத்ன்மேற் கறையை யார் கறையன்றென்பார்"

என்று குண்டலகேசியிலும் வருவதைக் காணலாம்.

"விடமும் வந்து ஈசன்கோல மிடற்றினில் நீலவண்ண
வடிவுபெற் றணியதாகி வயங்கிற்றுப் பெரிதும் என்றால்
கொடியரும் பெருமையோரைக் கூடின்வெங் கோதுநீங்கி
ஓடிவறு நலம்பெற்றுய்தல் உரைப்பதென் உலகின் அம்மா"

எனவரும் **சூளாமணிப்** பாடல் விடமும் பெருமான் தொடர்பால் அழகுபெற்றுக் கொடுமை நீங்கி, உலகத்தோர் போற்றும் பேறு பெற்றுவிட்டது என நயம்படக் காட்டுகின்றது. இராமன், கும்பகருணனைத் தன்னோடு சேர்த்துக் கொள்ளுமாறு வீடணன் மூலம் சொல்லியனுப்ப, கும்பகருணன் தன்னை நஞ்சாகவும், இராமனைச் சிவபெருமானாகவும் ஒப்புமைகாட்டும் அருமையான பாடலைக் கம்பன் படைக்கிறான் பாருங்கள்.

பஞ்செனச் சிவக்கும் மென்கால் தேவியைப் பிரித்தபாவி
வஞ்சனுக்கு இளையஎன்னை வருக என்றருள் செய்தானோ?
தஞ்செனக் கருதினானோ? தாழ்சடைக் கடவுள் உண்ட
நஞ்செனத் தகையன்அன்றோ நாயகன் அருளின் நாயேன்!

காளமேகப் புலவர் தனக்கே யுரித்தான சிலேடைப் பொருளில் இறைவன் ஆலகால விடம் உண்டதைக் காட்டும் அருமையான பாடல் இதோ :

ஆலங்குடியானை ஆலாலம் உண்டானை
ஆலங்குடியான் என்று ஆர்சொன்னார்—ஆலம்
குடியானேல் வானும் குவலயமும் எல்லாம்
மடியாவோ முற்றொருங்கு மாய்ந்து.

ஆலங்குடி இறைவனை ஆலங்குடியான் என்று சொல்கிறோம். அவன் ஆலம்குடியான் எனக் கூறல் பொருந்தாது. அவன்தானே ஆலம் குடித்தான்! அப்படி அவன் ஆலம் குடியாதிருப்பனேல் வானும் குவலயமெல்லாம் அழிந்திருக்கும் அல்லவா ?

சிவபெருமான் நஞ்சுண்டதாலேயே தேவர்தம் மனைவியருக்குக் காதோலை தரிக்கும் மாங்கலியம் தரித்தது என்று நயம்படப் பேசுவார் குமரகுருபர சுவாமிகள்.

"தேவர்தம் பாவையர்க்கு அன்று காதோலை பாலித்த தயவாளர்."

வடலூர் இராமலிங்க சுவாமிகளோ நீலகண்டத்தால்தான் எல்லோருமே இன்றும் உள்ளார்கள் எனக் காட்டுகிறார்.

மால் எங்கே ? வேதன் உயர் வாழ்வெங்கே இந்திரன்
செங்கோல் எங்கே வானோர் குடி எங்கே
கோலஞ்சேர் அண்டம் எங்கே அவ்வவ் வரும்பொருள் எங்கே
நினது கண்டம் அங்கே நீலம் உறாங்கால் —திருவருட்பா

திருமுறைகளில் நீலகண்டப் பெருமானது பெருமை பலவாறு போற்றப் படுகிறது. திருஞானசம்பந்தர் 'நீலகண்டப் பதிகம்' என ஒரு பதிகமே பாடியருளினார். நீலகண்டப்பதிகம் திருஞானசம்பந்தர் ஏன் பாடினார் என்ற வினாவுக்குச் சேக்கிழார் சுவாமிகள் நயமான விடை தருகிறார். கேளுங்கள் :

அவ்வினைக்கு இவ்வினை என்றெடுத்து ஐயர் அமுதுசெய்த
வெவ்விடம் முன்தடுத்து எம்இடர் நீக்கிய வெற்றியினால்
எவ்விடத்தும் அடியார்இடர் காப்பது கண்டம் என்றே
செய்வினை தீண்டா திருநீலகண்டம் எனச் செப்பினார் —பெரிய புராணம்

திருவண்ணாமலை தேவாரத்தில் நீலகண்டார் தரும் நன்மைப் பொருளைக் காட்டு கின்றார் திருஞானசம்பந்தர் :

"மஞ்சைப் போழ்ந்த மதியம் சூடும் வானோர் பெருமான் ஊர்
நஞ்சைக் கண்டத்து அடக்கும் அதுவும் நன்மைப் பொருள் போலும் !"

'நீலமார் மிடற்றன்', 'கறைநிலாவிய கண்டர்', 'கறைகொள் கண்டத்தர்' எனப் பலவாறு போற்றுவார் ஆளுடைய பிள்ளையார். 'கங்குலிற் கறுத்த கண்டர்' எனப் போற்றுவார் அப்பர் அடிகள். 'வீங்கிருளே போலும் மிடறு' என ஒப்பிடுவார் கண்ணப்ப நாயனார். மணிவாசகரோ,

கோலாலமாகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த
ஆலாலமுண்டான் அவன்சதுர்தான் என்னேடி
ஆலாலம் உண்டிலனேல் அன்று அயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ

என்று போற்றுகிறார்.

சேக்கிழார் பெருமான் திருநீலகண்டப் பெருமான் குறித்து இரண்டு அருமையான நிகழ்ச்சிகளைக் காட்டுவார். அப்பர் சுவாமிகளுக்குச் சமணர் தூண்டுதலால் பல்லவ மன்னன் ஆணைப்படி நஞ்சுகலந்த அடிசில் ஊட்டப்படுகிறது. அப்போது அப்பர் சுவாமிகள் நிலை எவ்வாறு இருந்தது?

நஞ்சும் அமுதாம் எங்கள் நாதன் அடியார்க்கென்று
வஞ்சமிகு நெஞ்சுடையார் வஞ்சனையாம் படியறிந்தே
வெஞ்சடையார் சீர்விளக்கும் திறலுடையார் தீவிடத்தால்
வெஞ்சமணர் இடுவித்த பால்அடிசில் மிசைந்திருந்தார்.

பொடியார்க்கும் திருமேனிப் புனிதர்க்குப் புவனங்கள்
முடிவாக்கும் துயர்நீங்க முன்னைவிடம் அமுதானால்
படியார்க்கும் அறிவரிய பசுபதியார் தம்முடைய
அடியார்க்கு நஞ்சுஅமுதம் ஆவதுதான் அற்புதமோ!

—திருநாவுக்கரசு நாயனார் புராணம்.

சிவபெருமானுடைய ஆலம் உண்ட அருளாடலைப் போற்றித் திருநீலகண்டம், திருநீலகண்டம் என்றே ஜபித்து உய்வடைந்த நாயன்மார் ஒருவர் உண்டு. அவர்தான் திருநீலகண்ட நாயனார். தில்லையிலே வாழ்ந்து இளமையாக்கினார் திருக்கோயில் குளத்திலே திருநீலகண்டம் என மூழ்கி இளமைபெற்ற பேராளர். அவர் மாண்பினைக் கூறவந்த சேக்கிழார் திருநீலகண்ட மூர்த்தியின் பெருமையினைக் கூறி, அத்தகைய திருநீலகண்டம் என்று காட்டுகிறார் பாருங்கள்.

....

புவனங்கள் உய்ய ஐயர்
பொங்கும் நஞ்சுண்ண, யாம்செய்
தவம்இன்று தடுத்த தென்னத்
தகைந்துதான் தரித்த தென்று
சிவன்எந்தை கண்டம் தன்னைத்
திருநீல கண்டம் என்பார்.

—திருநீலகண்ட நாயனார் புராணம்.

நாயன்மார்களில் மற்றொருவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்ற பெயருடையவர் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. உலக உயிர்கள் எல்லாம் அழிவு எய்தாதவாறு எல்லையற்ற தனது பேரருளின் பெருக்கால் ஆலாலவிடம் உண்டருளிய நீலகண்டப் பெருமானின் புகழ் எல்லாப் புலவர்களையும் கவர்ந்ததில் வியப்பேது !

நீலகண்டப் பெருமானின் தத்துவம் யாது?

மக்களில் மூவகை காணப்பெறுகிறது. பிறரைத் துன்புறுத்தித் தாமே வாழ விரும்புவோர் ஒருவகை. இவர்கள் கடையர்கள் எனப்படுவர். இத்தகையவர்களால் தான் உலகம் அல்லற்பட்டு அவலமுறுகின்றது. அசுரர்கள் எல்லாம் இவ்வகையினர் தாம். பிறரும் வாழவேண்டும் நாமும் வாழவேண்டும் என நினைப்போர் ஒருவகை. இவர்கள் நடுத்தர மக்கள். தம்மை அழித்துக் கொண்டேனும் பிறரை வாழ்விக்க முயலுவோர். இவர்களே தலையாய மாந்தர் ஆவர். பிறர் நலம் பெற விழைந்து தன்னலம் துறப்பவரே சிறந்த உத்தமர் எனப் போற்றப் பெறுகிறார்கள். உலகை வாழ்வித்த உத்தமர்கள். அருந்தொண்டாற்றிய பெருமனங்கொண்ட தியாகிகள் இவ்வகை. இவர்களுக்கெல்லாம் நாயகமாகத் திகழ்கிறார் தியாகராசனான திருநீல கண்ட மூர்த்தி. மன்னுயிர் இன்ப நலம் துய்க்கவேண்டித் தாம் எத்தனைத் துன்பங்கள் வரினும் இன்முகத்துடன் ஏற்கும் ஏந்தல்களால்தான் உலகம் இன்றும் உள்ளது. அளவிலா அன்பினால் அளவிலாத் துன்பத்தையும் மகிழ்வோடு ஏற்க முன் வருகின்றனர்.

> பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க
> நாகரிகம் வேண்டு பவர்.

என்று தமிழ் மறை கூறியதும் திருநீலகண்ட மூர்த்தியின் செயலை உன்னித்தானோ ! இதுதான் நாகரிகப் பண்பு. நாகரிக வாழ்வு என்பது நன்மை பிறருக்குச் செய்வதுதான். இப்பண்பு வளர நாம் திருநீலகண்ட மூர்த்தியைத் தியானித்துத் தூயராய் வாழ வேண்டும்.

இனி ஆகமங்களில் திருநீலகண்ட மூர்த்தியின் வடிவ அமைப்பு கூறப்படும் திறத்தினைச் சற்று காண்போம். **விஷாபஹரண மூர்த்தி** என்று ஆகமங்களில் இப்பெருமான் குறிக்கப்பெறுகிறார். அதாவது விடம் உண்ட பெருமான் என்பது அதன் பொருள். காரணாகமத்தில் இம்மூர்த்தியின் வடிவம் காட்டப்பெறுகிறது ; இவர் ஜடாமகுடம் தரித்தவராய், மூன்று கண்களும் நான்கு கரங்களும் கொண்டு திகழ்கிறார். இவரது பின்கரங்கள் இரண்டிலும் பரசும், மானும் காணப்பெறும். முன்கரங்கள் இரண்டில் ஒன்றில் விஷம் உடைய பாத்திரமும் மற்றொன்று வரதமாகவும் அமைந்திருக்கும். உடனே விஷம் அருந்தப் போவது போல இவரது வடிவம் அமைந் திருக்கும். அனைத்து அணிகலன்களும் இவர் பூண்டிருப்பார். இவருக்கு இடப்பால் உமையம்மை விளங்குவாள். அவள் தனது நாதனைத் தழுவிக் கொண்டு, தன்வலக் கரத்தால் அவரது கழுத்தைப் பற்றியிருப்பாள். மிகவும் வேதனையும் குழப்பமும் நிறைந்தவளாகத் தேவியின் தோற்றம் அமைந்திருக்கும்.

மற்றொரு விதமாகவும் இம்மூர்த்தம் அமைந்திருக்கக்கூடும். விஷாபஹரண மூர்த்தியின் முகம் மிகவும் உக்கிரமாகவும் பக்கப்பற்களுடனும் இருக்கும். புலித் தோலாடை அணிந்து, சிறுமணிகளால் ஆனமாலை மற்றும் வழக்கமான பல மாலைகளையும் இவர் அணிந்திருப்பார். அவற்றுள் சில தேள்களால் ஆனவையாயிருக்கும். இவரது இரு வலக்கரங்களும் முறையே திரிசூலத்தையும் விஷக்கிண்ணத்தையும் கொண்டிருக்கும். இவரது இடக்கரம் ஒன்றில் கபாலம் இருக்கும். மற்றொரு இடக்கரம் தேவியை அணைத்து விளங்கும். இறைவனும் இறைவியும் இவ்வடிவில் இடபவாகனத்தின்மீது விளங்குவர்.

மதுரைக் கோயிலில் நீலகண்டமூர்த்தியின் வடிவத்தைக் காண்கிறோம். சுருட்டப் பள்ளியில் நஞ்சுண்ட ஈசர் பள்ளிகொண்ட ஈசராகச் சயனக் கோலத்தில் காட்சி தருகிறார். சுதையிலான இம்மூர்த்தி, பதினான்கு அடிநீளமுடையது. இவரது தலைமாட்டில் சர்வமங்களாம்பிகை அமர்ந்திருக்கிறாள். உலகத்தை உய்வித்த நிலையில் அவளது முகம் பெருமிதத்துடன் புனிதப்புரிப்பில் திகழ்கிறது. சுற்றிலும் நான்முகன், திருமால், இந்திரன், பிருகு, மார்க்கண்டேயர், நாரதர், சூரியன், சந்திரன், அகஸ்தியர், கௌதமர், புலஸ்தியர், தும்புரர், வசிட்டர், விசுவாமித்திரர், வால்மீகி ஆகியோர் விளங்குகின்றனர்.

செங்கற்பட்டு மாவட்டம் திருவாலங்காட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ள விஷாபஹரணர் செப்புத்திருமேனி தற்போது சென்னை அரசினர் கலைக்கூடத்தில் உள்ளது.

“ வெங்கண் வ்யாளங் கொதித்தெங்கும் வேமென்றெடுத்து,
உண்டுமேல் அண்டருக்கு அமுதாக
விண்டநாதன் ”

என்று அருணகிரிநாதசுவாமிகள் போற்றும் நீலகண்டப்பெருமானை வழிபட்டுத் தன்னலமில்லாத் தகைமைசால் நன்மனம் பெற்று நானிலம் சிறக்க வாழ்வோம்.

★ ★ ★



கங்காளர்

குறளா யணுகி மூவடிமண் கொண்டு நெடுகி மூவுலகுந்
திறலான் அளந்து மாவலியைச் சிறையிற் படுத்துவியந்தானை
இறவேச வட்டி வெரி நெலும்பை யெழிற் கங்காளப்படையென்ன
அறவோர் வழுத்தக் கைக்கொண்ட அங்கணாணன் திருவுருவம் —காஞ்சிப்புராணம்

திருமால் வாமனவடிவேற்று, மாவலிபால் சென்று மூவடி மண் கேட்டுப்பெற்று, ஈரடியால் மூவுலகும் அளந்து, மூன்றாவது அடியால் மாவலியைக் கீழுலகிற்கு அனுப்பிய திரிவிக்கிரம வடிவுங் கொண்டார். அதன்பின் அவர் உலகையும் அழிக்கத் தொடங்கினார். வாமனனது உக்கிரத்தைத் தணிக்க வேண்டித் தேவரும் சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவபெருமானும் உலகைக்காத்தற் பொருட்டு, வஜ்ஜிராயுதங்கொண்டு வாமனன் மார்பில் அடிக்க, வாமனன் இறந்து வீழ்ந்தார். வாமனனது கங்காளத்தை (முதுகெலும்பை) எடுத்துத் தனது தண்டாகச்சிவபெருமான் வைத்துக் கொண்ட வடிவமே கங்காளமூர்த்தி என அழைக்கப்படுகிறது. உபதேச காண்டத்தில் கங்காளர் வரலாறு கூறப்படுகிறது.

பற்றினன் வயிரத்தண்டம் பகிரண்டம் அதிர ஓச்சிச்
சுற்றினன் உருமுக்காலத் தொழித்தனன் துளவமார்பின்
எற்றினன் எற்றலோடும் எரிபடு சண்டவாயு
மூற்றுற விற்றுவீழு மூரிவெங் கிரியிற் சாய்ந்தான்

கருநிறக் கமஞ்சூன் மேகக் காரதள் உரித்து வாங்கித்
திருநிறத் தமையக் காளகஞ்சுக மென்னச் சேர்த்தி
வெரிநுறப் பிடுங்கு மென்புதண்டென வெடுத்துக் கொண்டான்
மருமலர்த் துளவ மாயோன் ஆணவ மயக்கந் தீர்ந்தான்.

ஆணவம் போக்கிய அரனாரின் அருளாடலைக் காட்டுவது கங்காளமூர்த்தியாகும்.

பொதுவாகக் கங்காளமூர்த்திக்கும் பிட்சாடனமூர்த்திக்கும் வேறுபாடு தெரியாது சிலர் தடுமாறுவதுண்டு, ஏனெனில் இரண்டுமே ஏறத்தாழ ஓரே மாதிரியாகத் தோன்றும். ஆனால் உற்று நோக்கின் வேறுபாடுகளை நன்கு உணர்ந்து கொள்ள முடியும். முக்கிய வேறுபாடுகள் வருமாறு :


கங்காளமூர்த்தி	பிட்சாடனமூர்த்தி
முன் வலக்கை உடுக்கை அடிக்கக்குச்சி ஒன்றை ஏந்தியிருக்கும்.	முன் வலக்கை அருகம்புல்லால் மானை ஈர்க்கும்.
முன் இடக்கை உடுக்கை ஏந்தியிருக்கும்.	முன் இடக்கை கபாலத்தை ஏந்தியிருக்கும்.
பின் வலக்கரம் தன் அன்பிற்குரிய மானுக்கு ஏதோ அளிப்பது போன்றிருக்கும்.	பின் வலக்கரம் உடுக்கை ஏந்தியிருக்கும்.
பின் இடக்கரம் கங்காள தண்டத்தை (இறந்தவர்களின் கைகால் எலும்பு களைக் கோத்து வைக்கும் குச்சி) வைத்திருப்பார்.	பின் இடக்கரம் சூலமும் பாம்பும் கொண்டிருக்கும்.
ஆடையணிந்திருப்பார்.	நிர்வாணக்கோலம்.

இனி, பிரம்மகபாலத்தையும், விஷ்வக்ஸேனரது கங்காளத்தையும், ஏந்திப் பிச்சை ஏற்கும் சிவபெருமானுடைய பைரவக்கோலம் பற்றிக் கூர்மபுராணம் பேசுகின்றது. ஆனால் கங்காளமூர்த்தி வேறு, பைரவமூர்த்தி வேறு என்பது தெளிவு. வடமொழி இலிங்கபுராணம், ஸ்காந்தம், ஆதித்திய புராணங்களிலும் கங்காளமூர்த்தி விவரிக்கப்பட்டுள்ளது. கங்காளவடிவம் தென்னகத்துக்கே உரிய சிறப்பான வடிவம் என்பது அறிஞர் முடிபு.

அம்சுமத் பேதாகமம், காமிகாகமம், காரணாகமம், சில்பரத்தினம் போன்ற நூல்களில் கங்காளமூர்த்தி திருவுருவம் காட்டப்படுகின்றது.


கங்காளமூர்த்தி நின்ற கோலத்தில் இருப்பார். அவரது இடக்கால் பூமியில் நன்கு ஊன்றியிருக்கும்; வலக்கால் சற்றே வளைந்து அவர் நடந்து செல்வதைக் காட்டும். ஊமத்தைமலர், சர்ப்பம், பிறை ஆகியவற்றைச் சூடிய ஜடாமகுடம் புனைந்திருப்பார். மகிழ்ச்சி நிறைந்த முகத்தினராய், இனிய பாடல்களை இசைத்துக் கொண்டு, புன்முறுவல் பூத்து அவர் திகழ்வார். அவரது முத்துப் போன்ற பற்கள் பாதி தெரியுமாறு வாய் அமைந்திருக்கும். இருகாதுகளிலும் சாதாரண குண்டலங்கள்

கங்காளர்



திருச்செங்காட்டங்குடி
(நன்னிலம் வட்டம்)
பக்கம் : 101


சக்ரதானர்



மதுரை நந்திமண்டபம்

பக்கம் : 105

கஜமுக அனுக்ரஹர்



மதுரை நந்திமண்டபம்

பக்கம் : 107

அல்லது வலக்காதில் மகரகுண்டலமும் இடக்காதில் சங்கபத்திரமும் அணிந்திருப்பார். நான்கு கரங்கள் இவர் கொண்டிருப்பார். முன் வலக்கரம் பாணத்தையும், முன் இடக்கரம் உடுக்கையும் ஏந்தியிருக்கும். பின் வலக்கரம் நீண்டு வளர்ப்புப் பிராணியான மானின் வாய்க்கருகே கடக ஹஸ்தமாயிருக்கும். பின் இடக்கரத்தில் கங்காளதண்டம் ஏந்தியிருப்பார். அதில் இறந்தோரது எலும்புகள் கட்டப்பட்டிருக்கும். மயில் இறகாலும் கொடியாலும் அது அலங்கரிக்கப்பட்டிருக்கும். படுக்கைவாட்டில் இக்கங்காள தண்டமானது இடது தோளில் வைத்து, அதன் ஒரு முனையைப் பின் இடக்கையால் பற்றி இருப்பார். அரையில் கச்சமும், அதில் தங்கத் தாலமைந்த ஒரு சிறு வாள் வெள்ளிப் பிடியுடன் தொங்குமாறு விளங்கும். திருவடிகளில் மரப் பாதுகைகளை அணிந்திருப்பார். உடலெங்கும் பாம்பு அணிகலன்களாகத் திகழும். அவரைச் சுற்றிலும் எண்ணற்ற பூதகணங்களும் பெண்டிரும் ஆடியும்பாடியும் கூடியிருப்பர். ஒரு பூதம் பெரியபாத்திரம் ஒன்றைத் தனது தலைமீது வைத்துக் கொண்டு இடப்பக்கம் நிற்கும். பிச்சைஏற்கும் உணவு வகைகளைச் சேமித்து வைக்கவே அப்பாத்திரத்தை அப்பூதம் சுமந்து நிற்கும். கங்காளமூர்த்தியிடம் கொண்ட காமத்தால் பெண்டிர் ஆடைநெகிழ நிற்பர். எண்ணற்ற முனிவர், தேவர், கந்தருவர், சித்தர், வித்தியாதரர் ஆகியோர் இவரைச் சுற்றி நின்று கைகுவித்து அஞ்சலி செய்து கொண்டிருப்பர். இவருக்கு முன்னால் வாயு தெருவைச் சுத்தம் செய்வார்; வருணன் நீர் தெளிப்பார்; பிறதேவர்கள் மலர்தூவிப் போற்றுவர்; முனிவர்கள் வேதம் ஓதுவர்; சூரியனும் சந்திரனும் குடைபிடிப்பர்; நாரதரும் தும்புருவும் தம் இசைக்கருவிகளுடன் பெருமானுக்கு உகந்த பாடல்களைப் பாடுவர்.

கும்பகோணம் நாகேசுவரசுவாமி கோயில் என்னும் குடந்தைக் கீழ்க்கோட்டத்தில் கங்காளமூர்த்தி திருவுருவம் மேற்குறித்த அமைப்பில் சிறப்பாகத் தனி சந்நிதியாக அமைந்துள்ளது. சுசீந்திரம், தென்காசி, திருச்செங்காட்டங்குடி, தாராசுரம் கோயில்களில் விளங்கும் கங்காளமூர்த்தி வடிவங்கள் சிறப்புடையன.

திருமுறைகளில் கங்காளமூர்த்தி குறிப்பிடப்பெறுகிறார். "வள்ளல்கையது மேவுகங்காளமே" என்று திருஞான சம்பந்தரும், "கங்காள வேடக்கருத்தர்" என்று திருநாவுக்கரசரும், "கங்காளம் தோள்மேலே காதலித்தான்." என்று மணிவாசகரும் பரவுகின்றனர்.

சக்ரதானர்

அடல் பொருது பூசலே விளைந்திட
எதிர்பொர வொணாமலேக சங்கர
அரஹர சிவா மகாதெ வென்றுனி அன்றுசேவித்
தவனி வெகு காலமாய் வணங்கியுள்
உருகி வெகு பாசகோச சம்ப்ரம
அதிபெல கடோரமா சலந்தரன் நொந்துவிழ
உடல்தடியும் ஆழிதா வென்அம்புய
மலர்கள் தசதூறு தாளிடும்பகல்
ஒரு மலரிலாது கோவணிந்திடு செங்கண்மாலுக்
குதவிய மகேசர்..................

—திருப்புகழ் (படர்புயல்... திருச்செந்தூர்)

சிவபெருமான் ஜலந்தராசுரனைச் சக்கராயுதத்தால் கொன்ற வரலாற்றை முன்னர் குறிப்பிட்டோம். அந்த சக்கராயுதமே சுதரிசனம் என அழைக்கப்படும். அதனைக் தனக்குத் தந்தருள வேண்டுமென்று திருமால் சிவபெருமானைப் பூசித்து வந்தார். தினமும் ஆயிரம் தாமரை மலர்களால் திருமால் பூசித்தார். ஒருநாள் ஒரு பூக்குறைய தமது கண்ணையே பறித்து மலராகச் சாத்தினார், அவரது பூசைக்கு

உகந்த சிவபெருமான் அவருக்குச் சக்கரப்படையை வழங்கியதோடு கமலக்கண்ணன் என்ற திருப்பெயரையும் கொடுத் தருளினார் எனப்புராணங்கள் கூறுகின்றன. சிவபெருமான் சக்கரதான மூர்த்தியானார் ; திருமால் சக்கரபாணி ஆனார்.

அதர்வண வேதத்தில் காணப்பெறும் சரபோபநிடதத்தில் "எவருடைய இட்து பாதத்தில் விஷ்ணு தமது கண்மலரை அர்ச்சித்துச் சுதரிசனமென்னும் சக்கரம் பெற்றுக் கொண்டாரோ அந்த உருத்திரமூர்த்திக்கு வணக்கம்" * என வருகிறது. திருமால் சிவபெருமானைப் பூசித்துச் சக்கரம் பெற்ற வரலாறு மகாபாரதத்திலும் குறிப்பிடப் பெறுகிறது. தமிழில் கூர்மபுராணத்தில் மாயோன் நேமி பெற்ற அத்தியாயம் என்று ஒரு அத்தியாயமே உள்ளது. அதில் திருமால் சக்கரம் பெற்ற வரலாறு விரிவாகப் பேசப்படுகிறது :

வையம் பொதிந்த செங்கனிவாய் மாயோன் அன்புக்குண் மகிழ்வுற்(று)
ஐயன் கையாற் புறநீவி யடியிற் புனைந்த மலர்க்கண்ணும்
எய்த நல்கிச் சுதரிசனமென்னுஞ் சுடராழியும் ஈந்து
செய்ய கமலக் கண்ணன் என்னும் பெயருஞ் சிறப்பினொடும் அளித்தான்.

உபதேச காண்டத்திலும் திருமால் சக்கரம் பெற்றவரலாறு பேசப்படுகிறது :

"என்னப் போற்றி முடிபடி தொட்டிழுகப் பணிந்தா னெழுனோக்கி
மின்னுச் சடையோன் திருவருள் கூர்ந்துருகா நின்றான் விழிக்கமலக்
கன்னிக் கிறைவன் கருத்துணர்ந்து கதிராயிரம் பொன் னொளி பரப்பும்
பொன்னந்திகிரி புரிந்து பின்னும் எதுவேண்டுவது புகல் என்றான்."

திருமால் பூசைக்குகந்து சிவபெருமான் திருவருள் சுரந்த பாங்கினைக் காஞ்சிப் புராணமும் காட்டுகின்றது.

"ஆங்கவனை எதிர்நோக்கி நின் பூசைக்ககமகிழ்ந்தேம் உனக்கிஞ்ஞான்று
தேங்கமல விழியளித்தோம் பதுமாக்கன் எனும் பெயரிற்றிகழ்வாய் இவ்வூர்
பாங்குபெறு **திருமாற்பேறு** எனப்பொலிக என்றருளிப் பானுகோடி
தாங்கு கதிர்ச் சுதரிசனம் பெயராழித் தனிப்படையும் உதவினங்கோன்."

வழிதீங் சுவைக் கள்வாய் மடுத்து மழலைச் சுரும்பர் இசைமிழற்றுஞ்
செழிபூங்கமலம் ஒன்றினுக்குத் திருந்து காதல் மெய்யன்பின்
விழிசூன் றடியின் அருச்சித்த விறன் மாயனுக்குச் சுதரிசனங்
கழி பேரருளால் ஈந்தருளுங் கடவுட் பெருமான் திருவுருவம்.

காஞ்சிப்புராணச் செய்தியின்படி திருமால் சக்கரம் பெற்ற திருத்தலம் 'திருமாற்பேறு' என்பது ஆகும். இது தொண்டைநாட்டில் திருமால்பூர் எனவும் அரிச்சந்திரபுரம் எனவும் தற்போது அழைக்கப்படும். இத்தலத்தில் இறைவனுக்கு முன்னே நந்திதேவருக்குப்பதிலாகத் திருமால் கூப்பிய கரத்தோடு நின்று கொண்டிருக்கிறார்.

---

* "யோ வாம பதார்ச்சித விஷ்ணு நேத்ரஸ் தஸ்மை ததௌ சக்ரமதீவ ஹருஷ்ட : தஸ்மை ருத்ராய நமோ அஸ்து"

தஞ்சைமாவட்டத்தில் திருவீழிமிழலை என்னும் தலமும் சக்கரதானமூர்த்தி வரலாற்றைத் தன் தலமான்மியமாகக் கொண்டுள்ளது. திருமால் விண்ணுலகினின்றும் கொணர்ந்த விமானத்தின் கீழ்ச் சிவபெருமானை வழிபட்டுச் சுதரிசனம் பெற்ற வரலாறு அத்தலபுராணத்தில் விரிவாகப் பேசப்படுகிறது.

சீர்மேவும் திருமகள்தன் மகிணன் மேவிச்
செங்கணிடந் தம்புயம் போலன்பாய்ச் சாத்தக்
கூர்மேவுந் தனியாழி யவனுக் கீந்தாட்
கொண்ட அருட் கடலமரர் கோமான் எங்கோன்
ஏர்மேவு மடங்கலணி விமானம் விண்ணின்
றிழியவது கோயில் கொண்டே எவரும் போற்றப்
பார்மேவுந் திருவீழிமிழலை மேவும்
பரன்வீழி நாதனடி பணிந்து வாழ்வாம் —திருவீழிமிழலைப்புராணம்

தேவாரப்பாக்களில் சிவபெருமான் திருமாலுக்குச் சக்கரம் அருளிய தலமாகத் திருவீழிமிழலையே குறிப்பிடப்படுகிறது :

"தன்தவம் பெரிய சலந்தரன் உடலம் தடிந்த சக்கரமெனக்கருளென்று
அன்றரி வழிபட்டு இழிச்சிய விமானத்திறையவன் பிறையணி சடையன்
நின்ற நாள் காலை யிருந்த நாண்மாலை கிடந்த மண்மேல் வருகலியை
வென்ற வேதியர்கள் விழாவறா வீழிமிழலையானென வினைகெடுமே."
—திருஞானசம்பந்தர்.

"நீற்றினை நிறையப்பூசி நித்தல் ஆயிரம் பூக்கொண்டு
ஏற்றுழி யொருநாளொன்று குறையக் கண்ணிறைய விட்ட
ஆற்றலுக் காழி நல்கி அவன் கொணர்ந் திழிச்சுங்கோயில்
வீற்றிருந்தளிப்பர் வீழிமிழலையுள் விகிர்தனாரே." —திருநாவுக்கரசர்.

திருவாசகத்தில் மணிவாசகப் பெருமான், திருமாலுக்குச்சக்கரம் அளித்தருளிய சிவபெருமான் பெருமையைப் போற்றுகின்றார் :

பங்கயம் ஆயிரம் பூவினிலோர் பூக்குறைய
தங்கண்இடந்து அரன் சேவடிமேற் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரம் மாற்கு அருளியவாறு
எங்கும் பரவிநாம் தோணோக்கமாடாமோ. —திருத்தோணோக்கம்

சலமுடைய சலந்தரன்றன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடி
நலமுடைய நாரணன்றன் நயனமிடந் தரனடிக்கீழ்
அலராக விட ஆழி அருளினன் காண் சாழலோ. —திருச்சாழல்.

திருப்பல்லாண்டும் 'மாலுக்குச்சக்கரம் அன்றருள் செய்தவன்' எனப்பேசுகின்றது.


உத்தரகாமிகாகமும் ஸ்ரீ தத்துவநிதியும் சக்கரதான மூர்த்தியின் வடிவமைப் பினைக் காட்டுகின்றன.

உத்தரகாமிகாகமத்தின்படி இவ்வடிவத்தில் சிவபெருமான் மூன்று கண்களும் நான்கு கரங்களும் கொண்டு ஜடாமகுடம் புனைந்து சாந்தமூர்த்தியாகத் திகழ்கிறார். அவர் தனது வலது காலை மடக்கி, இடது காலைத் தொங்க அமைத்து அமர்ந் திருப்பார். அவரது இரு வலக்கரங்களிலும் டங்கமும் சக்கரமும் இருக்கும். இம்மூர்த்தியைச் சுற்றிப் பிரபாமண்டலமும் சிரஸ்சக்கரமும் அமைந்துள்ளன. இவரது இடப்பக்கம் பார்வதி அம்மையார் அமர்ந்திருப்பர். வலப்புறம் நான்முகன் நிற்பார். முன்னே திருமால் தனது இருகரங்குவித்து அஞ்சலி செய்து வழிபடுவது போன்றோ, தாமரை மலர்களையும் தனது கண்ணையும் அர்ப்பணித்து வழிபடுவது போன்றோ விளங்குவார்.

ஸ்ரீதத்துவநிதியின்படி, சக்கரதானமூர்த்தியின் கரத்தில் டங்கத்திற்குப் பதிலாகப் பரசு இருத்தல் வேண்டும். இவருக்கு இடப்பக்கம் திருமால் நின்று கொண்டிருப்பார். அவரது தோற்றம், அவர் சிவபெருமானை வழிபட்டு வரம் பெறவும், சக்கரத்தைப் பெற்றுக் கொள்ளவும் தயாராக இருப்பதைக்காட்டும். சிவபெருமான் திருமாலுக்கு ஒரு பீதாம்பரத்தையும் கௌத்துவமணியையும் சக்கரத்தையும் வழங்குவது போன்ற அமைப் புடையவராயிருப்பார். திருமாலின் நான்கு கரங்களுள் இரண்டில் சங்கும் சக்கரமும் ஏனைய இரண்டும் அஞ்சலி செய்வதாயும் அமைந்திருக்கும்.

காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில், மதுரைக்கோயில் சக்கரதானமூர்த்தி சிற்பங்கள் சிறப்புடையன.

★ ★ ★



கஜமுக அனுக்ரஹர்

விநாயகருக்குக் கஜானன், கஜவதனன் யானைமுகன், ஐந்து கரன் என்றெல்லாம் பெயர்களுண்டு. வடமொழி சிவபுராணம்—ருத்திர சம்ஹிதையில் விநாயகனுக்கு யானை முகம் எவ்வாறு வந்தது என்பது குறித்து ஒரு செய்தி காணப்படுகிறது. யானைமுகம் பிரணவத்தைக்குறிப்பது பிரணவ வடிவனே விநாயகன் என்பது தத்துவ விளக்கமாகும். விநாயகருக்குச் சிவபெருமான் அனுக்கிரஹம் செய்த கோலமே விக்கினப் பிரசாதமூர்த்தி என வழங்கப்படும். உமாதேவியார் அருகிருக்கச் சிவபெருமான் தனது தொடையின் மீது விநாயகரை அமர்த்திக் கோண்டிருக்கும் வடிவமே 'விக்கினப்பிரசாத மூர்த்தியாகும் என்பர்.

விநாயகர் கஜமுகாசுரனுடன் போரிட்டு அவனை வென்றார் என்ற வரலாறு உள்ளது. அவ்வசுரனுடன் போர் புரியச் செல்லுமுன் தன் பெற்றோர்களின் ஆசிபெற வணங்கிய நிலையாகக் கஜமுக அனுக்கிரஹமூர்த்தி அமைந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு.

ஸ்ரீ தத்துவநிதியில் " விக்நேசுவரப் பிரஸந்நமூர்த்தி " என்று வடிவம் விவரிக்கப் பட்டுள்ளது. விக்கினேசுவரர் முன் காட்சி தந்த பெருமான் என்று பொருள்தரும் இவ்வடிவில் சிவபெருமான் மூன்று கண்ணும், நான்கு கரங்களும், சடைமுடியும் கொண்டிருப்பார். தனது வலக்கரங்களில் ஒன்றை அபயஹஸ்தமாக விநாயகரின்

சிரஸின் மேல் வைத்திருப்பார்; முன் இடக்கரம் வரதமாக இருக்கும். ஏனைய இருகரங்களில் மானையும் மழுவையும் தரித்திருப்பார். வலப்பக்கம் விக்கிநேசுவரர் இருப்பார். சிவபெருமான் வலது காலை மடித்து வைத்து. இடது காலைத் தொங்கு மாறமைத்து அமர்ந்திருப்பார். அவரது இடப்பக்கத்தில் சகல அலங்காரமும் மிக்கு, சிரித்த முகத்துடன் தேவி அமர்ந்திருப்பாள். அவளது வலது கால் மடித்து இடது கால் தொங்கவிடப்பட்டு அமர்ந்த நிலையில் இருப்பாள். அவளது இருகரங்களில் வலது கரம் நீலோற்பலத்தையும் இடது கரம் வரதமுத்திரையையும் கொண்டிருக்கும். முக்கண்ணுடைய இவள் சியாம வர்ணத்தினாள். சுருக்கமாகச் சொன்னால் சோமாஸ் கந்த மூர்த்தத்திலமைந்தது போன்று இறைவனும் இறைவியும் ஓரே பீடத்தில் அமர்ந்திருப்பர். விநாயகர் சிவப்பு வண்ணத்தராய், கிரீட மகுடம் தரித்து, நமஸ்கார முத்திரையாக இரு கரங்குவித்து நிற்பார். எஞ்சிய இருகரங்களில் பாசமும் அங்குசமும் ஏந்தியிருப்பார்.

சோமாஸ்கந்த மூர்த்தத்தில் இறைவனும் இறைவியும் ஸ்கந்தனுடன் அமைந் திருப்பது மிகவும் பிரபலமாக அமைந்துள்ளது. ஆனால் கஜமுகானுக்கிரஹ மூர்த்தி அவ்வாறு புகழ்பெறவில்லை.

கணபதியை உமாசுதன் என்பர். முருகனை சிவசுதன் என்பர். சிவசுதனான முருகனுக்கு அம்பிகை தனது சக்தி ஆயுதத்தைக் கொடுத்து சூரசம்ஹாரம் செய்யப் பரிபூரண அனுக்கிரகம் செய்தது போன்று, உமாசுதனான விநாயகருக்குச் சிவபெருமான் பூரண அனுக்ரகம் செய்து அவரைக் கணங்களுக்குப் பதியாக்கி மஹாகணபதியாக்கிய நிலையை கஜமுகானுக்கிரகமூர்த்தி வடிவம் காட்டுகிறது என்று கூறினும் பொருந்தும்.

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் உள்ள நந்தி மண்டபத்தில் கஜமுக அனுக்கிரஹமூர்த்தி வடிவம் அற்புதமாக உள்ளது.

இனி, சிவபராக்கிரமம் என்னும் நூலில் காணப்பெறும் கஜாந்தகமூர்த்தி என்பது திருவெண்காட்டில் ஐராவதத்துக்குச் சிவபெருமான் அருளிய கோலமாகும். இதுபற்றி திருவெண்காடு தேவாரத்தில் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடியுள்ளனர்.

சக்கரமாற் கீந்தானும் சலந்தரனைப் பிளந்தானும்
அக்கரைமேல் அசைத்தானும் அடைந்த ஐரா வதம்பணிய
மிக்கதனுக் கருள்சுரக்கும் வெண்காடும் வினைதுரக்கு
முக்குளநன் குடையானு முக்கணுடை இறையவனே —திருஞான சம்பந்தர்

இம்மூர்த்தியும், திருவிளையாடற் புராணத்தில் வரும் வெள்ளானைக்கருளிய படலமும், ஒரேகருத்துடையன. ஆனால் கஜாந்தகமூர்த்தி வேறு, நாம் மேற்குறிப்பிட கஜமுகானுக்கிரகமூர்த்தி வேறு என்பது தெளிவு.


★ ★ ★

சண்டேச அனுக்ரஹர்


தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு இவ்வண்டத்தொடுமுடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. **—திருப்பல்லாண்டு**

சிவபெருமான், தன்னைப் புகலென அடைந்த மெய்யடியார்தம் சித்தமெல்லாம் சிவமாக்கி அவர் செய்தனவே தவமாக்கும் அத்தன் அல்லவா! உலகில் புண்ணியம் செய்வோரும் உண்டு. பாவம் செய்வோரும் உண்டு. புண்ணியச் செயல்களுக்கு நன்மையான பயன்கிட்டும்: பாவம் புரிந்தால் தீமை விளையும். இது பொதுவான உண்மை. ஆனால் இதற்கு விதிவிலக்கான இரு செய்திகளைக் கேள்விப்படுகிறோம். தட்சப்பிரஜாபதி பெரிய வேள்வி செய்தார். அது மிகவும் புண்ணியம் தரத்தக்க செயல். ஆனால் அந்த வேள்வியில் அவர் தனது தலையை இழந்தார். வேள்வி நாசப்படுத்தப் பட்டு, வந்திருந்த தேவர்களும் கடவுளரும் அவமானம் உற்றனர். புண்ணியச் செயல் அங்கு பாதகமாகி விட்டது. காரணம் தக்கன் சிவபெருமானை இகழ்ந்து அவமதித்து செருக்கடைந்திருந்தான். நோக்கம் தவறாக இருந்ததால் செயலும் பொய்த்துவிடும் என்பது இதன் தத்துவம். இது போலவே நோக்கம் உயர்ந்ததாக இருந்து செயல் தவறாகும் போது அச்செயல் தண்டிக்கப்படுவது இல்லை என்பதைக் காட்டுவது சண்டேசர் வரலாறு.

சண்டேச அனுக்ரஹர்




மதுரை நந்திமண்டபம்
பக்கம் : 110



கங்கைகொண்ட சோழபுரம்
பக்கம் :110

ஏகபாதமூர்த்தி



ஏகபாதமூர்த்தி
மதுரை நந்திமண்டபம்

பக்கம் : 112



ஏகபாத திரிமூர்த்தி
திருவொற்றியூர்
ஸ்ரீ தியாகராஜர் திருக்கோயில்
பக்கம் : 112

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட்டம் திருப்பனந்தாளுக்கு அண்மையில் விளங்கும் சிற்றூர் சேய்ஞலூர். இது கந்தவேள் சிவபெருமானை வழிபட்ட தலமாதலின் அப்பெயர் பெற்றது. இவ்வூரில் சிவபெருமான் மற்றொரு சேய் பெற்றார். அவர்தான் சண்டேசர்! சேய்ஞலூரில் வாழ்ந்த எச்சதத்தன் என்னும் அந்தணருக்கு மகனாக வந்தவர் விசாரசன்மன். விசாரசன்மன், ஆநிரைகளைத் தாமே மேய்க்கும் பொறுப்பேற்று செய்துவரும்நாளில், மணலால் இலிங்கம் அமைத்து, மாடுகள் சொரிந்த பாலைக் கொண்டு அவ்விலிங்கத்துக்குத் திருமஞ்சனமாட்டி, வழிபட்டுவரும் வழக்கம் இருந்தது. இதனால் வீடுகளில் அம்மாடுகள் கொடுக்கும் பாலின் அளவும் குறைந்து விடவில்லை. மாடுகளை மேய்க்கும் இடத்தில் தன் மகன் பாலைக் கறந்து பாழாக்குகிறான் என மறைந்திருந்து கண்ட எச்சதத்தன், தன் மைந்தனின் சிவபூசைத் திறத்தினை உணராது, பூசனைக் கிடையூறாகக் காலால் உதைத்துச் சிதைக்க, சிவாபராதம் பொறுக்காத விசாரசன்மன், மாடுமேய்க்கும் கோலால் எச்சதத்தனின் காலில் அடிக்க, அது வாளாக மாறி அவன் காலைத் துணித்தது. விசாரசன்மனின் பக்தித்திறங்கண்டு பரமன் பெரிது உவந்து, அவரைத் தன் மகனாக ஏற்றுச் சண்டேசப்பதமும் தந்தருளினார். இதனால் பெருமானது அருளுந்திறம் இனிது புலப்படும்.

அரனடிக்கன்பர் செய்யும் பாவமும் அறமதாகும்
பரனடிக் கன்பிலாதார் புண்ணியம் பாவமாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி
நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மையாய்த்தே.

என்பது சிவஞானசித்தியார்.

சேக்கிழார் பெருமான் சண்டேசநாயனார் புராணத்தில் சிவபெருமான் விசாரசன் மனுக்குச் சண்டேசப்பதம் அருளிய திறத்தை மிக அருமையாகக் காட்டுகிறார். தாதையைத்தடிந்த சிறுவன் விசார்சன்மன் அரனாரின் மகனானார் என்று பேசுகிறார் :

"வந்து மிகை செய் தாதைதாள் மழுவாள் துணித்த மறைச்சிறுவர்
அந்த உடம்பு தன்னுடனே அரனார் மகனார் ஆயினார்"

—சண்டேசநாயனார் புராணம்

சிவபிரான் காட்சி கொடுத்தருளுகின்றார் :

"அண்டர்பிரானும் தொண்டர் தமக்கதிபனாக்கி, "அனைத்துநாம்
உண்டகலமும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்காகச்
சண்டீசனுமாம் பதந்தந்தோம்" என்றங் கவர்பொற்றடமுடிக்குத்
துண்டமதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார்."

—சண்டேசநாயனார் புராணம்

விசாரசன்மன் சண்டேச நாயனாராகி விட்டார். தொண்டர்களுக்கெல்லாம் அவர் தலைவராகிவிட்டார். ஆதலால் அடியார்களின் பிரதிநிதியாக ஒவ்வொரு சிவன் கோயிலிலும் இறைவன் திருவீதியுலாவில் சண்டேசரும் எழுந்தருளுகின்றார். ஐம்பெருங் கடவுளர் வீதியுலாவில், ஐந்தாவதாகத் திகழ்பவர் நம் சண்டேசர் அல்லவா! சண்டேசர் இல்லாது பெருமான் திருவீதியுலாவருவதில்லை. ஏன்? சண்டேசர் இல்லாத

சிவாலயமே இல்லை. அவ்வளவு உயர்ந்த நிலையை எய்திய சண்டேசர் செய்த செயல் தாதையைத் தாளற வீசியது ! ஆம் சிவ பூசைக்கு இடையூறு செய்பவர் தந்தையாயினும் தண்டிக்கப் படத்தக்கவர்தானே !

சண்டேச நாயனாருக்குச் சிவபெருமான் அருள்புரிந்த கோலமே சண்டேச அனுக்கிரகமூர்த்தி என்று போற்றப்படுகிறது. அம்சுமத்பேதாகமத்தில் இக்கோலம் விவரிக்கப் படுகிறது. இவ்வடிவில், சிவபெருமான் பார்வதி தேவியுடன், உமாசகித மூர்த்தியைப் போல அமர்ந்திருப்பார். அவரது முகம் சற்றே இடப்பால் திரும்பியிருக்கும். அவரது வலக்கரம் வரதமாகவும், இடக்கரம் சண்டேசர் தலைமீது வைத்தும் காணப்படும். சண்டேசர் பணிவுடன் தன்னிரு கரங்களையும் குவித்து வணங்கியவராய் சிவபெருமான் முன்பு பத்மாசனத்தின் மீது நிற்பார்.

உத்தரகாமிகாகமத்தின்படி, சிவபெருமானும் தேவியுடன் சந்திரசேகரர் கோலந் தாங்கி அமர்ந்திருப்பர். அவருக்கு முன்னால் கூப்பியகரங்களுடன் சண்டேசர் நின்று கொண்டிருப்பார்; அல்லது அமர்ந்திருப்பார். சிவபெருமான் தனது வலக்கரத்தில் ஒரு மாலையைக் கொண்டு இடது கையால் அதனைச் சண்டேசர் தலையைச் சுற்றிக் கட்டுவது போன்று விளங்குவார். பூர்வ காரணாகமும் சில்பரத்தினமும் இம்முறையி லேயே இவ்வடிவத்தைக் கூறுகின்றன.

கங்கைகொண்ட சோழபுரத்தில் சண்டேச அனுக்கிரக மூர்த்தியின் சிற்பம் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. சுசீந்திரத்திலும் மதுரையிலும் இம்மூர்த்தியின் வடிவங்கள் உள்ளன.

திருமுறைகளில் சண்டேசருக்குச் சிவபெருமான் அருளியதிறம் பெரிதும் விதந்தோதப்படுகிறது.

"வண்டுசேர் பொழில் சூழ்மங்கலக்குடி
விண்ட தாதையைத் தாளறவீசிய
சண்ட நாயகனுக்கருள் செய்தவன்
துண்ட மாமதி சூடிய சோதியே" என்று திருநாவுக்கரசரும்,

"ஏதநன்னில மீரறு வேலி
ஏயர்கோனுற்ற இரும்பிணி தவிர்த்துக்
கோதனங்களின் பால்கறந்தாட்டக்
கோலவெண்மணற் சிவன்றன் மேற்சென்ற
தாதை தாளற எறிந்த சண்டிக்குன்
சடைமிசை மலரருள் செயக்கண்டு
பூதவாளிநின் பொன்னடி அடைந்தேன்
பூம்பொழிற் றிருபுன்கூர் உளானே" என்று சுந்தரரும்,

"தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானை
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டுஞ்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர் தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்" என்று மணிவாசகரும்

போற்றுகின்றனர். நமது முன்னோர்கள் கல்வெட்டுக்களில் சண்டீசனைப் போற்றி ஓர் வெண்பாவை அமைத்துள்ளதும் ஈண்டுக் கருதத்தக்கது. சிவாலயம் பேண வேண்டும் என்பதை இப்பாடல் வற்புறுத்துகின்றது.

சண்டீச்சுரன் ஓலை சாகரஞ்சூழ் வையத்தீர்
கண்டீச் சுரன்கருமம் ஆராய்க - பண்டே
அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தான் பாதம்
திறம்பாமைச் சென்னிமேல் வைத்து.

மதுராந்தகம் வட்டம் பெரும்பேறு தான்தோன்றீசர் கோயில் முன் மண்டபத் தெற்குச் சுவரிலும், தஞ்சை வட்டம் திருக்களாவுடைய மகாதேவர் கோயில் வடபுறச் சுவரிலும், விழுப்புரம் திருவாமாத்தூர் கோயில் முன் பிராகாரத் தென்புறச் சுவரிலும், புதுக் கோட்டை திருமெய்யம் கள்ளம்பட்டி கோயில் முன்புள்ள கல்லிலும் இவ்வெண்பாப் பாடல் கல்வெட்டாகக் காணப்படுகின்றது.

சண்டேசர் ஒவ்வொரு கோயிலிலும் ஒவ்வொரு பெயரில் அழைக்கப் பெறுகிறார். சூரியன்—தேஜஸ் சண்டர்; விநாயகர்—கும்பச்சண்டர்; சுப்ரமண்யர்—சுமித்ரசண்டர்; சிவன்—த்வனி சண்டர்.

சிதம்பரம் கோயிலில் ஆதிச்சண்டர் நான்கு முகங்களுடன் விளங்குகிறார். திருவாரூரில் யமனே சண்டேசர் பொறுப்பை ஏற்றுள்ளார். சிவபூஜையில் பஞ்சாவரண பூஜையின் மூன்றாவது ஆவரணத்தில் ஆதிச்சண்டர் வருகிறார்.

புண்ணியம் பாதகமாகப் போற்றிய
அண்ணலந் தக்கனார் அகத்து நாணிய
புண்ணியம் பாதகமாகப் போற்றிய
அண்ணலந் தண்டிதன் அடிகள் போற்றுவாம்.

எனத் தணிகைப் புராண ஆசிரியரோடு நாமும் சண்டேச அனுக்கிரஹ மூர்த்தியை வழிபட்டுய்வோம்

★ ★ ★

ஏகபாதமூர்த்தி

வெய்யதிரி சூலம் விழைவோ டினிதேந்தும்
கைகளொரு நான்குமலர் கண்களொரு மூன்றும்
செய்யமலர் வென்றவொரு தாளுமுறுதேவை
பொய்யென அமைத்தவர்கள் முத்தியுறுவாரே.

—இலிங்கபுராணம்.

சர்வசம்ஹாரம் நிகழும் மகாப்பிரளய காலத்தில் அனைத்து உயிர்களும் தன்னிடம் சரணடைந்து, தன்திருவடியில் இலயம் பெறவேண்டி, ஒற்றைக்கால் உடையவராகத் திருவுளம் கொண்டு சிவபெருமான் விளங்கும் கோலமே ஏகபாதமூர்த்தி யாகும். இவர் ஒருமுகமும் நான்கு கரங்களும் கொண்டு விளங்குவார். இவரது பின் வலக்கரம் சூலத்தையும் பின் இடக்கரம் மழுவையும் ஏந்தியுள்ளன. இவரது முன் வலக் கரம் அபயகரமாகவும் முன் இடக்கரம் வரதகரமாகவும் அமைந்திருக்கும். மணிகளாலான மாலையை அணிந்து, புலித்தோல் உடுத்து, கங்கையும் பிறையும் விளங்கும் ஜடாமகுடமும் திகழ இவர் விளங்குவார்.

விசுவகர்ம சிற்பசாஸ்திரத்தில் ஏகபாதமூர்த்தி பதினாறுகரங்களுடையவராகக் காட்டப்படுகிறார். அவரது இடக்கரங்களில் முறையே கட்வாங்கம், பாணம், சக்கரம், டமருகம், முத்கரம், வரதம், அட்சமாலை, சூலம் ஆகியனவும், வலக்கரங்களில் முறையே தனுசு, கண்டம் (மணி), கபாலம், கௌமுதி (பிறை), தர்ஜனி (கண்ணாடி,) கதை, பரசு, சத்தியாயுதம் ஆகியனவும் அமைந்துள்ளன.

ஏகபாதமூர்த்தியை ஏகாதசருத்திரருள் ஒருவராகக் கூறுவாரும் உளர்.

மதுரையில் இம்மூர்த்தி தூண் சிற்பமாக உள்ளது. திருவொற்றியூரிலும் திருவானைக்காவில் அகிலாண்டேச்வரி சன்னதியில் தூணிலும் ஏகபாத திரிமூர்த்தி வடிவம் உள்ளது. பிரம்மாவும் விஷ்ணுவும் இருபுறம் விளங்க நடுவில் சிவபிரான் விளங்கும் ஏகபாததிரிமூர்த்திகோலம் அருமையாக உள்ளது.

ஏகபாதமூர்த்தியை வழிபடுவோர் அனைத்துப் பேறுகளும் எய்தி இன்புறுவர்.

இலிங்கோத்பவர்

'' வண்டமர் பங்கயத்து வளர்வானும்
வையம் முழுதும் உண்டமாலும் இகலிக்
கண்டிட ஒண்ணும் என்று கிளறிப்
பறந்தும் அறியாத சோதி...''

—திருஞானசம்பந்தர்

முன்னொரு காலத்தில் நான்முகனுக்கும் திருமாலுக்கும் தம்முள் யார் பெரியவர் என்றவினா எழுந்தது. நான்முகன், ''நானே படைக்கிறேன்; ஆகவே நான்தான் பெரியவன்'' என்றார். திருமால்'' நான் காக்கிறேன் ஆகவே நானே பெரியவன்'' என்றார். இவர்களிடையே வாதம் வலுத்தது. அப்போது அங்கே பேரொளிப்பிழம்பாகிய ஜோதித்தம்பம் ஒன்று எழுந்தது. அத்தம்பத்தின் அடிமுடி அறிந்தவரே பெரியவர் என்று அசரீரியாக வானொலியும் கேட்டது. நான்முகனாரும் திருமாலும் அத்தம்பத்தைக் கண்டு வியப்புற்றனர். தமக்குள் ஒரு உடன்பாட்டுக்கு வந்தனர். நான்முகன் அத்தம்பத்தின் முடியைக் கண்டறிவதெனவும், திருமால் அதன் அடியைக் கண்டறிவதெனவும் ஒத்துக் கொண்டனர். தம்பத்தின் முடியைக்காண அன்னமாகி நான்முகன் மேலே பறந்து செல்லலானார். திருமாலும் வராக (பன்றி) வடிவேற்று பூமிக்குள் சென்று அடி தேடலானார். பலகாலம் இருவரது முயற்சியும் தொடர்ந்து நடந்தது. பறந்து சென்ற அன்னமாகிய நான்முகன் தனது வான வழியில் ஒரு தாழம்பூ மேலிருந்து விழுவதைக் கண்டு அது எங்கிருந்து வருகிறது என வினவ, அத்தாழம்பூ தான் ஜோதித்தம்பத்தின் உச்சியிலிருந்து புறப்பட்டுப் பல காலமாகக் கீழ் நோக்கி வந்து கொண்டிருப்பதாயும் கூறியது. நான்முகன் தாழம்பூவைத் தன் பால் சேர்த்துக்கொண்டு. தம்பத்தின் உச்சியைத்தான் கண்டு விட்டாதாகவும் அதற்குத்

தாழம்பூவே சாட்சி எனவும் கூறினார். திருமால் பலகாலும் முயன்றும் தாம் அத்தம்பத்தின் அடியைக் கண்டறிய முடியவில்லை என ஒப்புக்கொண்டார். இருவரும் சோதித்தம்பமாக விளங்குபவர் சிவபெருமானே என அறிந்து, தம் பேதைமையொழிந்து பணிந்தனர். அவ்விருவர் அகந்தையையும் போக்கிச் சிவபெருமான் உலகிற்குத்தன் பேரொளி வடிவத்தைக் காட்டிய கோலமே இலிங்கோற்பவ மூர்த்தியாகும்.

நான்முகன் அறிவு வடிவானவர்; திருமால் செல்வத்தின் நாயகர். அறிவும் செல்வமும் இறுமாப்பைத் தரவல்லன. அகந்தை மிகச் செய்வன. ஆனால் அறிவினாலும் செல்வத்தாலும் இறைவனைக்காண முடியாது. அறிவின் வளமுடைய வர்கள் பொய் சொல்லவும் அஞ்சமாட்டார்கள் என்பதற்கு நான்முகன் செயல் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். வெறும் செல்வம் மட்டும் உடையவனைக்காட்டிலும் அறிவுள்ளவனே துணிந்து பொய் சொல்லமுடியும் போலும்! பணமுடையவனை விட அறிவுடையவனே அதிகம் பிழை செய்யவல்லவனும் கூட! இவையனைத்தும் மேற் சொன்ன வரலாறு உணர்த்தும் தத்துவம் அல்லவா!

பொய் சொன்னதற்காக நான்முகனுக்குக் கோயில் இல்லாமற்போயிற்று! தாழம்பூவும் சிவபெருமான் சூடும் பேற்றினை இழந்து விட்டது. திருமால் தன் பிழைக்கு வருந்தியதால் உய்வடைந்தார்.

ருக்வேத சம்ஹிதையில் வரும் ஒரு பகுதி திருமால் வராகவடிவேற்று அடி தேடியதையும் சிவபெருமானைத்துதித்ததையும் காட்டுகிறது* சரபோபநிடதத்திலும் இவ்வரலாறு குறிப்பிடப்படுகிறது.† வடமொழியில் இலிங்கபுராணம், கூர்மபுராணம், வாயுபுராணம், சிவபுராணம் ஆகியவற்றில் இவ்வரலாறு கூறப்பட்டுள்ளது.

திருமுறைகளில் இலிங்கோற்பவமூர்த்தி பலவாறு போற்றப்படுகிறார். திருஞான சம்பந்தர் தனது பதிகம் ஒவ்வொன்றிலும் ஒன்பதாவது பாடலில் 'அரிஅயன் தேடநின்ற பெருமான்' என்று போற்றுகின்றார். திருநாவுக்கரசர் தேவாரப்பாக்களில் 125 இடங்களில் ஆரழலாய் அயனுக்கும் அரிக்கும் அறியவொண்ணாதவன் மாண்பு போற்றப்படுகிறது. சுந்தரர் 35 இடங்களில் பண்டையமால் பிரமன் பறந்தும்

---

* விஷ்ணுர்வே வராஹம் ரூபமாஸ்தாய பூமிந் விதாரயந் ஸஹஸ்ரம் ஸமாஆஸந், பாதாந்வேஷண பரோ பூத்வா, த்வமேவ மாதாஸி, த்வமேவ பிதாஸி, த்வமேவ ப்ராதாஸி, த்வமேவ ஜ்யேஷ்டோஸி, த்வமேவ ஸ்ரேஷ்டோஸி, யஏவம் மஹிமாநம், வேதா த்ருஷ்டா பவதி, விஜ்ஞாதா பவதி, கர்த்தா பவதி, காரயிதாபவதி, ய ஏவம் வேத, சிவ ஸாயுஜ்ய மாப்நோதி, சிவஸாயுஜ்ய மாப்நோதி = விஷ்ணுவானவர் வராகமாகிப் பூமியைக் கிழித்துக்கீழே செல்லுங்கால் ஆயிரவருடங்களாயின. சிவனாரது பாதத்தைத் தேடுவதில் அவாவுடைய அவர், "தாயும்நீ, தந்தையும்நீ, உடன்பிறந்தாரும்நீ, மூத்தாரும்நீ, உயர்ந்தாரும்நீ " எனத்துதித்தார். இம்மாண்பினை அறியவல்லான் எவனோ அவனே காண்கின்றவனாகிறான், அறிந்தவனாகிறான், கர்த்தாவாகிறான், காரியஞ்செய்கின்றவனாகிறான். இவ்விதம் அறியவல்லான் எவனோ அவனே சிவசாயுஜ்ஜியத்தை அடைகிறான், சிவசாயுஜ்ஜியத்தை அடைகின்றான்.

† "யத்பாதாம்போருஹத்வம் த்வம் ம்ருக்யதே விஷ்ணு நாஸஹ" = எவருடைய பாதார விந்தங்கள் விஷ்ணுவால் தேடப்படுகின்றனவோ அந்த விஷ்ணுவுடன் கூடி......

இடந்தும் அயர்ந்தும் கண்டிலராம் அவர்கள் கழல் காண்பரிதாய பிரானைப் போற்றிப் பரவுகின்றார். 'நீண்டமாலும் அயனும்வெருவ நீண்ட நெருப்பு' எனப்போற்றும் மணிவாசகர்,

அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய்
நிலமுதற் கீழண்டமுற நின்றதுதான் என்னேடி
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றிலனேல் இருவருந்தம்
சலமுகத்தால் ஆங்காரம் தவிரார்காண் சாழலோ

என்று பாடுகின்றார். ஆம்! ஆதியும் அந்தமுமில்லாத அரும் பெருஞ்சோதியாகிய சிவபெருமானே முழுமுதற் பொருள் என்பதை இவ்வடிவம் இனிது காட்டுகின்றது. தன்குற்றம் உணர்ந்து வணங்குவார்க்குச் சிவபெருமான் அருள்சுரக்கும் என்பதும் இவ்வடிவத்தினால் நாம் பெறும் மற்றொரு படிப்பினையன்றோ!

சிவலிங்கதத்துவமும் லிங்கோற்பவ தத்துவத்தின் விளக்கமே எனலாம். இறைவன் பஞ்சபூதங்களில் ஒவ்வொரு அணுவிலும் ஊனாகவும் உயிராகவும் உணர்வாகவும் நிறைந்துள்ளார். பஞ்ச பூதங்களில் காற்றையும், நீரையும், வானையும், ஒருநிலையான உருவாக்கிக் காட்ட இயலாது. மண்ணை ஒரு வடிவாக்கிக் காட்டலாம். ஆனால் அது ஒளியுடையதாகாது. சோதியுருவில் காட்டுகின்றபோது கண்ணால் எளிதில் கண்டு கொள்ள முடிகின்றது. கொழுந்து விட்டு எரியும் தீ உருவில் அதன் நாக்குகளை எல்லாம் ஒதுக்கிவிட்டு, அதனுள் காணும் நீலநிறமுடைய மிகவும் பிரகாசமான வடிவை மட்டும் ஊன்றி நோக்கினால் அது ஒரு நீண்ட வட்டவடிவாக இருப்பது புலப்படும். அதையே இலிங்கமாக ஆக்கியுள்ளனர் நம் ஆன்றோர். அந்த இலிங்கவடிவில் உற்பவித்த மூர்த்தியே நாம் இங்கு குறிப்பிடும் இலிங்கோற்பவ மூர்த்தி!

"காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்
நாணாது நெடியமால் நான்முகனும் காணநடுச்
சோணாடும் தழற்பிழம்பாய்த் தோன்றியது தெளிந்தாராய்"

என்று சாக்கியநாயனார் புராணத்தில் சேக்கிழார் சுவாமிகள் இத்தத்துவத்தைத் தெளிவாக்குகின்றார்.

இலிங்கோற்பவ மூர்த்தி பற்றிக் கந்தபுராணத்தில் வரும் இருபாடல்கள் சுவையானவை.

என்நிகர் எவரும் இல்லென்று இருவரும் இகலும் எல்லை
அன்னவர் நடுவுதோன்றி அடிமுடி தெரியாதாகி
உன்னினர் தங்கட்கு எல்லாம் ஒல்லையில் முத்தி நல்கித்
தன்னிகர் இன்றி நின்ற தழற்பெருஞ் சைவம் கண்டார்

—உற்பத்தி காண்டம் - வழிநடைப்படலம், 11

லிங்கோத்பவர்



திருவண்ணாமலை
ஸ்ரீ அருணாசலேச்வரர் கோயில்
பக்கம் : 116



குடிமல்லூர்
(வாலாஜாபேட்டை அருகில்)
பக்கம் : 116

இலிங்கோற்பவமூர்த்தி தோன்றிய நாளே சிவராத்திரியாகும் என்பதைக் கந்தபுராணம் காட்டும் அருமையான பாடல் இது.

அரியும் யானும் முன்தேடும் அவ் அனற்கிரி அனல
கிரியெனும் படி நின்றதால் அவ்வொளி கிளர்ந்த
இரவதே சிவராத்திரி யாயினது இறைவர்
பரவி உய்ந்தனர் அன்னதோர் வைகலில் பலரும்.

—தட்சகாண்டம்—அடிமுடி தேடுபடலம். 96

அரியும் அயனும் தேடநின்ற பெருமான் என்றதும் நம்மனக்கண்முன் நிற்பது திருவண்ணாமலை என்னும் திருத்தலமாகும். மாலும் அயனும் அண்ணாத - எட்ட முடியாத சோதிப்பிழம்பாய்ப் பெருமான்நின்ற தலமே திருஅண்ணாமலை. அருணைக் கலம்பகத்தில் இத்தல மான்மியமாய் இவ்வரலாறு இனிது காட்டப்படுகிறது.

“ மணிகொண்ட நெடுங்கடலில் விழிவளரும் மாதவனும்
அணிகொண்ட புண்டரிகம் அகலாத சதுமுகனும்
ஞானக் கண்ணது கொண்டு நாடுமாறுணராதே
ஏனத்தின் வடிவாகி ஏகினத்தின் வடிவாகி

அடிதேடி அறிவவென அவனியெலாம் முழுதிடந்தும்
முடிதேடி வருவவென மூதண்ட மிசைப்பறந்தும்
காணரிய ஒருபொருளாய்க் களங்கமற விளங்குபெருஞ்
சோணகிரி யெனநிறைந்த சுடரொளியாய் நின்றருள்வோய் !”

இலிங்கோற்பவ மூர்த்திவடிவம் குறித்து அம்சுமத்பேதாகமம், காரணாகமம், காமிகாகமம், ஸ்ரீதத்வநிதி ஆகியவை விவரிக்கின்றன.

சந்திரசேகர மூர்த்தி வடிவத்தை இலிங்கத்தின் முன்பாகத்தில் செதுக்கப்பட வேண்டும். அப்போது அது இலிங்கோற்பவ மூர்த்தியாகும் என அம்சுமத்பேதாகமம் பேசுகின்றது.

காரணாகமத்தின்படி, இலிங்கத்தின் ஐந்தில் ஒருபாகம் மேற்பகுதியிலும் கீழ்ப் பகுதியிலும் எவ்வித சிற்பமும் செதுக்கப்படாமலிருத்தல் வேண்டும். சந்திர சேகரருடைய முழங்காலுக்குக் கீழமைந்த பகுதி புலப்படாமலிருக்க வேண்டும். அதாவது இலிங்கத்திலிருந்து சந்திரசேகரர் தோன்றியதாக அது அமைந்திருக்கும். இலிங்கத்தின் உச்சியின் வலப்பக்கத்தில் நான்முகனை ஓர் அன்னப்பறவையாக - ஹம்ஸமாகக் காட்டவேண்டும். இலிங்கத்தின் அடியில் இடப்பக்கத்தே திருமால் ஒரு வராகமாகச் சித்தரிக்கப்படவேண்டும். திருமாலும் நான்முகனும் இலிங்கத்தின் இடப்புறமும் வலப்புறமும் அஞ்சலிசெய்யும் நிலையில் காட்டப்படவேண்டும். இவ்வமைப்பு குடிமல்லூர் (வாலாஜாபேட்டை அருகில்) கோயிலில் அற்புதமாக உள்ளது.

சுகாசனர்



தேசிய அருங்காட்சியகம்
பக்கம் : 118

உமாசகிதர்



மதுரை நந்திமண்டபம்
பக்கம் : 121

அன்னத்தின் உருவம் சிவபெருமான் முகத்தினளவு உடையதாகவும், பன்றியின் உருவம் சிவபெருமான் முகத்தினளவைப் போன்று இருமடங்கு உடையதாகவும் இருத்தல் வேண்டும் என்று காமிகாகமம் பேசுகின்றது.

சிவன்கோயில் கருவறையின் மேற்குச்சுவர் நடுமாடத்தில் இலிங்கோற்பவமூர்த்தி இடம் பெறுகிறார். முதலாம் ஆதித்திய சோழர் காலம் வரையில் கருவறையின் பின் சுவரில் அர்த்த நாரீசர் கோலமே இடம் பெற்று வந்தது. முதற்பராந்தக சோழர் காலம் முதல் கருவறையின் பின் சுவரில் இலிங்கோற்பவமூர்த்தி இடம் பெறலாயிற்று.

பிள்ளையார்பட்டி, திருமெய்யம், குன்றக்குடி ஆகிய இடங்களிலமைந்த குடைவரைக் கோயில்களில் இலிங்கோற்பவ வடிவில் சிவபெருமான் உருவம் இடுப்பு வரையிலேயே காணப்படுகின்றது. இவற்றில் குன்றக்குடி தவிர்த்த ஏனைய இரண்டிலும் நான்முகனும் திருமாலும் இடம் பெறவில்லை. திருமெய்யம் இலிங்கோற்பவர், "விண் நிறைந்து ஓர் வெவ்வழலின் உரு" என்ற அப்பர் சொற்கேற்ப, இரு புறமும் தீயின் நாக்குகளோடு திகழ்கிறார். குன்றக்குடி இலிங்கோற்பவருக்கு இருபுறமும் நான்முகனும் திருமாலும் காணப்பெறுகின்றனர். பல்லவர் குடைவரைக் கோயில்களில் இவ்வடிவம் காணப்படவில்லை.

காஞ்சி கயிலாசநாதர் கோயிலில் இலிங்கோற்பவர் எட்டுக்கைகளுடன் காணப்படுகிறார்.

> தேடிக் கண்டு கொண்டேன்—திரு
> மாலொடு நான்முகனும்
> தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
> தேடிக் கண்டுகொண்டேன்

என்னும் அப்பர் பெருமானின் 'திரு அங்கமாலைப்' பாடல் இங்கு சிந்தித்தற்குரியது.

இலிங்கோற்பவமூர்த்தியை வழிபட்டால் எல்லாத் தீங்குகளும் விலகும். மக்கள் அனைவருக்கும் அனைத்து நலன்களையும் பேறுகளையும் நல்கும். பூதாதிகளின் தொல்லை இராது. நீண்ட ஆயுளையும் புண்ணியத்தையும் பெறுவர். மறுமையில் நிலைத்த பேரானந்தப் பெருவாழ்வையும் பெறுவர்.

★ ★ ★

சுகாஸனர்

திருக்கயிலையில் உமாதேவியார் சிவாகமங்களினது தத்துவங்களைத் தமக்குப் போதிக்க வேண்டிப் பிரார்த்திக்கச் சிவபெருமான் சுகாசனத்தில் அமர்ந்து உபதேசித்த திருக்கோலமே சுகாசன மூர்த்தியாகும், சுவத்திகம், கோமுகம், பதுமம், வீரம், கேசரி, பத்திரம், முக்தம், மயூரம், சுகம் என ஒன்பது வகை ஆசனங்களை ஆகமங்கள் குறிப்பிடுகின்றன. ஒரு காலை இருக்கையில் மடித்தமைத்து மற்றொரு காலைத் தொங்க விட்டு அமர்ந்திருப்பதே சுகாசனம் ஆகும்.

சில்பரத்தினம், ஸ்ரீ தத்துவநிதி ஆகியவற்றில் சுகாசனமூர்த்தி திருவுருவம் விவரிக்கப்பட்டுள்ளது. சில்பரத்தினத்தின்படி, இம்மூர்த்தி, ஒரு முகமும் மூன்று கண்களும், நான்கு கரங்களும் கொண்டு பவளச் சிவப்பு நிறமுடையவராக—அழகு மிக்கவராக பத்ர பீடத்தின் மீது நிமிர்ந்து அமர்ந்திருப்பார். சுகாசனத்தில் அமர்ந்த இவர் புலித்தோலையும் பட்டாடைகளையும் அணிந் திருப்பார். அவரது பின் வலக்கரத்தில் மழுவும், பின் இடக்கரத்தில் மானும் திகழும். முன் வலக்கை அபய ஹஸ்தமாகவும், முன் இடக்கை வரத ஹஸ்தமாக அல்லது சிம்ஹகரணமாகவும் அமைந்திருக்கும். வலக் காதில் மகர குண்டலம் அல்லது சிம்ஹ குண்டலமும் இடக்காதில் பத்ர குண்டலமும் இவர் தரித்திருப்பார். அல்லது இவரது இரு காதுகளிலும் வ்ரத்த குண்டலம் திகழும். ஜடா மகுடம், சர்ப்பகங்கணம், யக்ஞோபவீதம் ஆகியவற்றையும் இவர் அணிந்திருப்பார். இவர், சோமாஸ் கந்தமூர்த்தத்தில் தேவியும் கந்தனும் நீங்கிய வடிவமாகக் காட்சி தருவார்.



சில நூல்களில் ஒரு முகமும் ஆறுகரங்களும் கொண்டு வலத்திருக்கை ஒன்று சின் முத்திரை காட்ட வேத சிவாகமப் பொருளை அம்பிகைக்கு உபதேசிக்கும் கோலமாக இவ்வடிவம் காட்டப்படுகிறது.

சிவபராக்கிரமம் என்று நூலில் சிவபெருமானும் அம்பிகையும் சேர்ந்து சோமாஸ் கந்த வடிவத்தில் கந்தனின்றி அமைந்ததாகக் காட்டப்படுகிறது.

சுகாசனமூர்த்தியை வழிபடுவோர் வாழ்வில் சகலசுகங்களையும் அடைந்து இன்புறுவர் என்று ஆகமங்கள் கூறும்.

★ ★ ★



உமாசகிதர்

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்க யாதுமோர் குறைவிலை
கண்ணின் நல்ல:.துறும் கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே. —திருஞானசம்பந்தர்

சிவபெருமானது அருட்சக்தியே உமை என அழைக்கப்படுகிறது. சக்தி தன் வடிவே தன்னில் தடையிலா ஞானமாகும் என்பர் ஆன்றோர். ஞானமே உமை வடிவாகத் திகழ்கிறது. சிவபெருமானின் கருணையே அம்பிகை என்பது இதனால் புலப்படும். உமை என்பது சிவபெருமானது கருணையே என்று காட்ட அமைந்த திருக்கோலமே உமாசகிதமூர்த்தி அல்லது உமாமகேச்வரமூர்த்தி ஆகும்.

சுகாசனமூர்த்தி அருகே, தேவி அவரைப் பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தால் இக்கோலம் உமாசகிதமூர்த்தி என அழைக்கப்படும். இறைவனின் இடப்பக்கம் இறைவி அமர்ந்திருப்பாள். இவர் ஒரு முகமும் முக்கண்ணும் நாற்கரங்களும் கொண்டிருப்பார். சுகாசனத்தில் அமர்ந்த இவர் புலித்தோலையும் பட்டாடைகளையும் அணிந்திருப்பார். இவரது பின் வலக்கரத்தில் மழுவும் பின் இடக்கரத்தில் மானும் திகழும். முன்வலக்கை அபயஹஸ்தமாகவும் முன்இடக்கை வரதஹஸ்தமாக அல்லது

சிம்ஹாசனமாகவும் அமைந்திருக்கும். குண்டலம், ஜடாமகுடம், சர்ப்பகங்கணம், யக்ஞோபவீதம் ஆகியன அணிந்து மிக அழகுடையவராகத் திகழ்வார். தேவி ஒரு முகமும் இருகரங்களும் கொண்டு விளங்குவாள். அவளது வலக்கரத்தில் பத்மமும் (தாமரை மலர்) இடக்கரம் சிம்ஹாசனமாக அல்லது ஆசனத்தில் பதிந்தவாறும் இருக்கும். தேவி கரண்டமகுடம் சூடி அழகே உருவாக வலக்காலைத் தொங்க அமைத்து அமர்ந்திருப்பாள்.

சில்பரத்தினத்தின்படி, அவளது வலக்கரம் உற்பல மலரையும் இடக்கரம் வரதமும் கொண்டிருக்கும்.

இம்மூர்த்தி அமைப்பில் இறைவனும் இறைவியும் ஒரே இருக்கையிலோ, தனித்தனியாக வெவ்வேறு இருக்கைகளிலோ இருக்கலாம்.

ஸ்ரீலங்கா திருக்கேதீச்சரத்தில் உமாசகித மூர்த்தியின் அருமையான வடிவம் காணப்பெறுகிறது. காஞ்சியிலும் மதுரையிலும் இத்திருக்கோலத்தைக் காணலாம்.

மதுரைக் கோயிலில் தூண்சிற்பமாக இம்மூர்த்தி விளங்குகிறது. இவ்வடிவத்தின் தனிச்சிறப்பாக, இறைவன் பின் வலக்கரத்தில் ஜபமாலையும் பின் இடக்கரத்தில் சூலமும் கொண்டு முன் வலக்கரம் அபயம், முன் இடக்கரம் வரதமாக விளங்குகிறார். இறைவியின் வலக்கரத்தில் உற்பல மலரும் இடக்கரம் கட்டியவலம்பிதமும் அமைந்து விளங்குகிறது.

திருமுறைகளில் இம்மூர்த்தி, போற்றப்பட்டுள்ளது.

"திருந்திழை யவளொடும் பெருந்தகை இருந்ததே", "அரவிடைமாதொடும் வீற்றிருந்த அழக" என்று திருஞான சம்பந்தரும், "பண்ணினேர் மொழியாள் உமைபங்கர்" என்று திருநாவுக்கரசரும், மணிவாசகரும் பாடிப் பரவுகின்றனர். கந்த புராணத்திலும், இக்கோலம் காட்டப் பெறுகிறது!

"தந்துழி ஈசன்தன்னைத் தநயரும் அயனும் மாலும்
வந்தனை செய்து போற்ற மாயவன் வதனம் நோக்கி
நந்தமது அருளதாகும் நங்கையோ டினிது சேர்ந்தாம்
முந்தையின் வேதாச் செய்கை முற்றிடும் போதி என்றான்."

★ ★ ★

சங்கரநாராயணர்

அரன் நாரணன் நாமம் ஆன்விடை புள்ஊர்தி
உரை நூல் மறை உறையும் கோயில் - வரைநீர்
கருமம் அழிப்பு அளிப்பு கையது வேல்நேமி
உருவம் எரி கார் மேனிஒன்று. —பொய்கையாழ்வார்

தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழ் அரவும் பொன்நாணும் தோன்றுமால் - சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து —பேயாழ்வார்.

"மாலுமோர்பாகம் உடையார்" என்று திருஞானசம்பந்தர் போற்றும் சிவபெருமான் திருவுருவம் இடப்பாகம் திருமாலாகவும் வலப்பாகம் அரனாகவும் ஒரேவடிவில் காட்சிதரும் ஹரிஹரன் வடிவமாகும். இது ஒரு பெரிய தத்துவ விளக்கமாக அமைந்துள்ளது.*

சங்கரநாராயணர் வடிவம்பற்றிய வரலாறு வாமனபுராணத்தில் பேசப்படுகிறது. ஒருமுனிவரிடம், திருமால் தானும் சிவபெருமானும் ஒருவரே எனவும் தன்னிடத்திலேயே சிவபெருமான் விளங்குகிறார் எனவும் கூறி ஹரிஹரனாக ஓருருவில் அம்முனிவருக்குக் காட்சி தந்தருளினார்.

---

* "அரியலால் தேவியில்லை" என்ற கட்டுரையில் இந்நூலின் பிற்சேர்க்கையாக இதன் தத்துவவிளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரங்கோயில் என அழைக்கப் படும் சங்கரநாராயணர் கோயில் தனிச்சிறப்புடையதாகும். கோயிலின்பெயரால் இவ்வூர் விளங்குகிறது. இத்தலவரலாறு மிகவும் சுவையானது. முன்பு ஒருகாலத்தில் சங்கன் பதுமன் என்னும் இருநாகர்கள் இருந்தனர். சங்கன் சிறந்த சிவபக்தன்; பதுமன் சிறந்த விஷ்ணுபக்தன். ஒருநாள் இவர்களிடையே பெரியவிவாதம் எழுந்தது; யார் பெரியவர் : சிவனா ? திருமாலா ? இதே ஐயம் பார்வதி தேவிக்கும் வந்து விட்டது. அவள், 'இருவரும் ஒருவரா அல்லது வேறுவேறு நபர்களா ?'' என்று இறைவனிடமே கேட்டுவிட்டாள். இறைவனும், அம்பிகையைப் பார்த்து, நீ புன்னைவனத்தில் தவமியற்றி இவ்வுண்மையை அறிந்துகொள்'' எனப்பணித்து விட்டார். அன்னையும் அரன்ஆணைப்படி இப்புன்னைவனத்திற்கு வந்து அருந்தவம் இயற்றலானாள். இங்கே ஆடிமாதம் பௌர்ணமியன்று அம்மைக்கும் சங்கனுக்கும் பதுமனுக்கும் இறைவன் காட்சிதந்தருளினார், சங்கரநாராயணர் கோலத்தில்; அவரது இவ்வடிவம்கண்டு மூவரும் தெளிவடைகின்றனர். அக்கோலத்தையே இன்றும் நாம் இத்தலத்தில் கண்டு மகிழ்கிறோம். அரியும் அரனும் இணைந்த இவ்வழகிய கோலத்தைக் காணும் எவரும், தொடக்கத்தில் தரப்பட்டுள்ள பொய்கையாழ்வார், பேயாழ்வார் பாசுரங்களை எண்ணி வியக்காமலிருக்க முடியாது.

இதே போன்று கர்நாடக மாநிலத்தில் ஹோஸ்பெட் அருகே ''ஹரிஹர்'' என்ற சிற்றூரில் ஸ்ரீ ஹரிஹர சுவாமி கோயில் உள்ளது. மூலவர் சங்கரநாராயணராகக் காட்சி தருகின்றார். இருபுறமும் சிறிய அளவில் பார்வதியும் இலட்சுமியும் காட்சி தருகிறார்கள்.

ஆகமங்களில் கேசவார்த்தமூர்த்தி, ஹரிஹரமூர்த்தி, அரியார்த்தமூர்த்தி, என்றெல்லாம் சங்கரநாராயணர் குறிக்கப்பெறுகிறார். இவ்வடிவில் வலப்பக்கம் சிவபெருமானும் இடப்பக்கம் திருமாலும் விளங்குகிறார்கள். ஒருமுகமும் இருகரங் களும் கொண்ட இவ்வடிவில் முகத்தின் வலப்பக்கம் சிவனாகவும் இடப்பக்கம் திருமாலாகவும் அமைந்துள்ளன. சிவனுடைய பாகத்தில் விளங்கும் முகம் உக்கிரமான தாக, அரைநெற்றிக்கண் உடையதாக இருக்கும். இடப்பக்கம் திருமால் முகம் சாந்த மாக இருக்கும். வலதுகரம் கடகமுத்திரையாகவும் இடது கரத்தில் சக்கரம் அல்லது சங்கு அல்லது கதையும் விளங்கும். வலது முன்காலில் பாம்பு போன்ற ஒரு தண்டையும், இடது முன் காலில் நவரத்தினங்கள் இழைத்த தண்டையும் திகழும். திருமால் பாகம் மஞ்சள் பட்டாடை அணிந்து விளங்கும். சிவபாகம் வெண்ணிறமும், விஷ்ணு பாகம் பச்சை அல்லது நீலப்பழுப்புவண்ணமும் கொண்டிருக்கும். இம்மூர்த்தியின் இருகால் களும் வளைவின்றி அமைந்திருக்கும். இவரது தலைக்குப் பின்னால் ஒளிவட்டம் அல்லது சிரஸ்சக்கரம் அமைந்திருக்கும். இம்மூர்த்திக்கு இடப்பக்கம் கருடனும் வலப்பக்கம் நந்தியும் விளங்க வேண்டுமென்று விஷ்ணு தர்மோத்தரம் கூறுகின்றது.

சைவமும் வைணவமும் சமரசப் போக்கில் தழைக்க எழுந்த தனிச்சிறப்புடைய இத்திருக்கோலத்தைச் சைவத் திருமுறைகளும் திவ்யப்பிரபந்தமும் பலவாறு போற்று கின்றன. இருபெருந்தெய்வமும் இணைந்த கோலம்பற்றிய குறிப்பு அகநானூற்றுப் பாடலிலே காணப்படுகிறது ;-

உமாமகேச்வரர் - உமாசகிதர்



தேசிய அருங்காட்சியகம்
டெல்லி



தேசிய அருங்காட்சியகம்
ஷிமோகா (கர்நாடகா)

பக்கம் : 120

"வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து
உருவுடன் இயைந்த தோற்றம் போல
அந்தி வானமொடு கடல் அணிக்கொளாஅ
வந்த மாலை...."

"பாதியா உடல் கொண்டது மாலையே", "மாலுமோர்பாகர்" என்று திருஞானசம்பந்தரும், "திருமாலோர் பாகத்தன்", "குடமாடி இடமாகக் கொண்டான்" என்று திருநாவுக்கரசரும் போற்றும் இவ்வடிவை, "மலைமங்கை தன் பங்கனை பங்கில் வைத்துகந்தான்", "பிறை தங்கு சடையானை வலத்தே வைத்து" என்று பெரிய திருமொழியில் திருமங்கை ஆழ்வாரும் போற்றுகின்றார்.

சேரமான் பெருமாள் நாயனார் தனது பொன்வண்ணத்தந்தாதியில், இவ்வடிவை,

"இடமால் வலந்தானிடப்பால் துழாய் வலப்பா லொண் கொன்றை
வட மாலிடந் துகில் தோல் வலமாழியிடம் வலமான்
இடமால் கரிதால் வல் சேதிவனுக்கெழில் நலஞ்சேர்
குடமாலிடம் வலங் கொக்கரையாம் எங்கள் கூத்தனுக்கே"

என்று போற்றுவார்.

இதன் பொருள்: இடது பக்கம் திருமால்; வலப்பக்கம்தான்; இப்பக்கம் துளசியும் வலப்பக்கம் கொன்றையும் சூடியுள்ளார்; இடப்பக்கம் துகிலும் வலப்பக்கம் தோலும் அணிந்துள்ளார்; இடப்பக்கம் ஆழி (சங்கு)யும் வலப்பக்கம் மானும் ஏந்தியுள்ளார்; இடப்பக்கம் கருமை நிறமும் வலப்பக்கம் செந்நிறமும் உடையவர்; இடப்பக்கம் குடக்கூத்தாடுவார்; வலப்பக்கம் பாம்பணியாம் எங்கள் கூத்தனுக்கே.

'சங்கிடத்தான் இடத்தான்' என்று பட்டினத்துப்பிள்ளையார் இயற்றிய கோயில் நான்மணிமாலையிலும், 'இடப்பக்கம்மால்' 'மாலை ஒரு பால் மகிழ்ந்தானை' என்று கபிலதேவ நாயனார் சிவபெருமான் திருவந்தாதியிலும் போற்றுகிறார்கள்.

"இடமால் வலமாலை வண்ணமே"

இடப்பக்கம் கரிய நிறம். வலப்பக்கத்தில் மாலை வண்ணத்தைப் போன்ற நிறம் என்று சங்கர நாராயண அமைப்பை விளக்குவார் கபிலதேவநாயனார்.

மாலை ஒரு பால் மகிழ்ந்தானை வண்கொன்றை
மாலை ஒரு பால் முடியானை—மாலை
ஒளியானை உத்தமனை உண்ணாநஞ் சுண்டற்
றொளியானை ஏத்து உளம்

—சிவபெருமான் திருவந்தாதி.

சங்கரநாராயணர்



சங்கரநாராயணர் கோயில்
(நெல்லை மாவட்டம்)
பக்கம் : 123



மதுரை நந்து மண்டபம்

பக்கம் : 123



ஹரிஹர் (கர்நாடக மாநிலம்)

பக்கம் : 123

திருமாலை ஒரு பக்கம் வைத்து மகிழ்ந்தவரும், கொன்றை மாலையை ஒரு புறம் சூடிய வரும், மாலை வண்ணத்தின் ஒளி பெற்றவரும் என்றும், "மாலை" என்ற சொல்லை நயம்படக்காட்டுகிறார் கபிலதேவநாயனார்.


'பின்னைக்காய் நின்றார்க்கிடம் கொடுக்கும் பேரருளாளன்'

திருமகளின் அன்புக்காக நின்ற திருமாலுக்கு இடப்பாகம் கொடுக்கும் பேரருளாளன் என்று மற்றொரு பாடலில் குறிப்பிடுகிறார்.

வட இந்தியாவில் பஞ்சதீர்த்தம் என்னுமிடத்தமைந்த புவனேசுவரலிங்கத்தில் வலப்பகுதி சிவ அம்சமாகவும் இடப்பகுதி விஷ்ணு அம்சமாகவும் அமைந்துள்ளது என்பர்.

கர்நாடக மாநிலத்தில் ஷிமோகாவிலிருந்து 3 கல் தொலைவில் கூடலியென்று ஒரு சிற்றூர் உள்ளது. இங்கே துங்கா நதியும் பத்திரா நதியும் சங்கமமாகின்றன. இவ்விடத்தில் துங்காநதி திருமால் அம்சமாகவும் பத்திராநதி சிவபெருமான் அம்சமாகவும் கருதப்படுகின்றன என்பதும் இங்கு நினைவு கூறத்தக்கது.

★ ★ ★



அர்த்தநாரீசுவரர்

உமையும் தானும் வேறன்மை யுருவினிடத்துத் தெளிப்பான் போல்
இமையமயிலை யொருபாதி வடிவினிறுவி நாற்கரத்தும்
அமைய வனசந் திரிசூலம் அபய வரதம் இவை தாங்கு
நமையு முய்யக் கொண்டருளும் நாரிபாகன் திருவுருவம் **—காஞ்சிப்புராணம்**

ஆண்-பெண், ஒளி-இருள், தோற்றம்-அழிவு, என்பனவாகிய படைப்பின் மொத்த வடிவமாகவே சிவபெருமான் திகழ்கிறார். அவர் உலகுய்யக் கொண்டருளிய திருக்கோலங்களுள் மாதொரு பாகன் என்று போற்றப்பெறும்—ஒருபாதி ஆணும் ஒரு பாதி பெண்ணுமாக அமைந்த அர்த்தநாரீசுவரக் கோலமும் ஒன்றாகும். சிருட்டித் தொழிலைத் தொடங்கத் தனக்கு ஒரு பெண் வேண்டுமென்று பிரமன் வேண்ட, சிவபெருமான் தானே மாதொரு பாகனாகக் காட்சி தந்தருளினார் எனப் புராணங்கள் பேசும். அர்த்தநாரீசுவரக்கோலம் ஆணும் பெண்ணும் சேர்ந்திணைந்த உலக வளர்ச்சியை விளக்கும் தத்துவமாகும், சிவசக்தி எங்கும் எப்போதும் எதிலும் இணைந்தே இயங்குவதைக் "காதல் மடப்பிடியோடு களிறு வருவன கண்டேன். வரிக்குயில் பேடையோடு ஆடிவருவதைக் கண்டேன், பேடை மயிலொடும் கூடிப் பிணைந்து வருவது கண்டேன், கண்டேன் அவர் திருப்பாதம், கண்டறியாதன கண்டேன்" என்று திருவையாற்றில் கயிலாயக் காட்சி கண்டு போற்றுவார் திருநாவுக்கரசர் !.

அர்த்தநாரீசக் கோலம் எழுந்தது ஏன் என்பதற்கு ஒரு புராண வரலாறும் உண்டு. பிருங்கி என்ற முனிவர் சிவபெருமானை மட்டுமே வணங்கும் விரதம் பூண்டிருந்தார். இம்முனிவர் தன்னை வணங்கவில்லையே என்று பார்வதி தேவியாருக்குச் சினம் வந்தது; பிருங்கியின் ஆற்றலைக் குன்றச் செய்து விட்டார். பிருங்கி வலுவிழந்து, நேராக நிற்கமுடியாதவராக—எலும்புக் கூடாகி விட்டார். உடனே சிவபெருமான் பிருங்கிக்கு ஒருகால் அளித்து அவரை நிற்குமாறு செய்து விட்டார். பிருங்கியை ஒடுக்க, பார்வதி அம்மை தான் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்றதையடுத்து, வேதனையுற்றுச் சிவபெருமானைக் குறித்துத் தவமியற்றினார். தேவியின் தவத்திற்கு இரங்கிய சிவபெருமான் அம்மையின் வேண்டுகோளை ஏற்றுத் தம் உடலில் பாதியை அளித்து மங்கை பங்கனானார்.

அம்சுமத் பேதாகமம், காமிகாகமம், சுப்பிரபேதாகமம், சில்பரத்தினம், காரணாகமம் ஆகியவற்றில் அர்த்தநாரீசுவரக் கோலம் விவரிக்கப்பட்டுள்ளது.

இவ்வடிவில், வலப்பாகம் சிவனும் இடப்பாகம் உமையுமாக விளங்கக்காண்கிறோம். ஆண்பாதியில் தலையில் ஜடாமகுடமும் பிறையும் விளங்கும்; காதில் மகர குண்டலம், சர்ப்பகுண்டலம் அல்லது சாதாரண குண்டலம் விளங்கும். நெற்றியில் மூன்றாவது கண்பாதி இருக்கும். இடப்பாகத்துத்தலையில் கரண்ட மகுடம் அல்லது தலைமயிரை வாரி அழகாக முடித்து அமைத்திருக்கும். நெற்றியில் அரைப்பொட்டு வைத்திருக்கும். அது வலப்பக்கம் சிவனது மூன்றாவது நெற்றிக்கண்ணுக்கு இணையாக அமைந்திருக்கும். இடது கண்ணில் மையிட்டிருக்க வேண்டும். இடது காதில் 'வாலிகா' என்றழைக்கப்படும் குண்டலம் அணிந்து காணப்படும்.*



அர்த்தநாரீசுவரர் இரண்டு, மூன்று அல்லது நான்கு கரங்களை கொண்டிருப்பார். இருகரங்கள் மட்டும் பெற்றிருப்பின், வலக்கரம் வரத ஹஸ்தமாகக் அலலது கபாலம் ஏந்தியதாக இருக்கும். இடக்கரம் கண்ணாடி அல்லது கிளி அல்லது மலரை ஏந்திய தாகவோ, தொங்குமாறோ அமைந்திருக்கும். அல்லது அக்கரம் வளைந்து இடபத்தின் தலையில் வைத்த நிலையிலும் இருக்கலாம். கிளியும் அம்பிகையின் மணிக் கட்டில் கொத்துவது போன்று அமைந்திருக்கலாம்.

நான்கு கரங்கள் அமைந்திருப்பின், வலக்கரங்களில் ஒன்று அபயமுத்திரையும் மறறொன்று மழுவையும் பெற்றிருக்கும், அல்லது ஒருகை வரத முத்திரையும் மற்றொன்று சூலமும் ஏந்தியிருக்கலாம், அல்லது ஒரு

* 'வாலிகா' என்ற சொல் ஈண்டு ஒரு குறிப்பினைத் தருகிறது. தமிழ்ச் சொல்லான 'வாலி' என்பதிலிருந்து வாலிகா என்ற சொல் வந்துள்ளது. 'வாலி' என்பது ஒரு காதணி. இத்தகைய சொற்கள் ஆகமங்களில் பொதுவாகக் காணப்படுகின்றன. இவற்றை நோக்குமிடத்து, பெரும்பாலான ஆகமங்களை இயற்றியவர்கள் தமிழகத்தைச் சார்ந்தவர்களே என்பது புலப்படும்.

"நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்" என்பது ஐங்குறுநூறுப்பாடல்.

கரத்தில் டங்கமும் மற்றொன்று அபயமுத்திரையுமாக இருக்கலாம்; அல்லது ஒருகரம் இடபத்தின்மீது வைத்தும் மற்றொன்று அபயமுத்திரையுமாக இருக்கலாம்; அல்லது ஒருகரத்தில் சூலமும் மற்றொன்றில் அட்சமாலையும் விளங்கலாம். இடக்கரங்கள் இரண்டில் ஒன்று வளைந்து இடபத்தின் தலைமீது அல்லது சிங்கத்தின் தலைமீது வைத்தும், மற்றொன்று கடகமுத்திரையோடு ஒரு நீலோற்பல மலரைச்சூடியும் விளங்கும்; அல்லது அக்கரம் தொங்குவதாயும் இருக்கலாம்.

மூன்று கரங்கள் மட்டுமே இருந்தால், இடப்பக்கம் ஒருகரமும் வலப்பக்கம் இருகரங்களும் அமைய வேண்டும். இடக்கை ஒரு மலரையோ, கண்ணாடியையோ, கிளியையோ ஏந்தியிருக்கலாம். அக்கரம் கேயூரம், கங்கணம் மற்றும் பிற அணிகலன் களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். வலப்பக்கம் முழுதும் சிவபெருமானுக்குரிய அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்; இடுப்பில் புலித்தோலாடை, மார்பில் யக்ஞோபவீதம், அரையில் சர்ப்பமேகலை, நெற்றியில் திருநீறு ஆகியவை காணப்பெறும். வலக்கால் சற்றே வளைந்தோ நேராகவோ அமைந்து பத்மபீடத்தின்மீது பதிந்திருக்கும். சிவபெருமான் பகுதியாதலின் வலப்பாகமுகம் உக்கிரமுடையதாய்ச் செந்நிறமாய் அமைந்திருக்கும். இடப்பக்கத்தில் ஒரு பெண்ணின் மார்பகமாக வளர்ந்து திரண்ட ஸ்தனம் அமைந்திருக்கும். இடது மார்பிலும் கழுத்திலும் ஹாரங்களும் நவரத்தின வைர அணிகலன்களும் அணி செய்யும். இடப்பக்கத்தில் குங்குமம் இட்டு, பல வண்ணப்பட்டாடைகள் அணியப் பெற்றிருக்கும்; இடையில் ஒட்டியாணமும் விளங்கும், இடது முழங்காலில் சிலம்பும், இடது பாதத்தில் மருத்தோன்றிப் பூச்சும் விளங்கும். இடது கால் சற்றே வளைந்தோ நேராகவோ பத்மாசனத்தின் மீது அமைந்திருக்கலாம். இடப்பக்கம் கிளிப்பச்சை அல்லது கருமை நிறமாக அமைந்திருக்கும். தோற்றம் சாந்த சொரூபமாய் இருக்கும்.

திருச்செங்கோடு மலை மீது தொன்மையான அர்த்தநாரீச வடிவம் விளங்குகின்றது. இவ்வடிவைத்தான், "கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து மங்கை உருவாய் மறை ஏத்த நிற்கும்" என்று சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் போற்றுவார். இந்த அம்மையப்பனின் உருவில் தான் அன்பு பின்னிப்பிணைந்து கிடப்பதை சொற்களால் எப்படி விளக்கிக்காட்ட இயலும்!

இறைவன் தனது அங்கத்திலேயே தேவியைக் கொண்டிருப்பது குறித்து நயமான ஒரு செய்தியைத் திருஞானசம்பந்தர் காட்டுகின்றார்; திருஞானசம்பந்தரின் நகைசுவையையும் அதிலே கண்டு இன்புறலாம்.

"ஏருலாம் பலிக்கேகிட வைப்பிடம் இன்றியே
வாருலா முலையாளையொர் பாகத்து வைத்ததே".

அவர் பலிக்குச் செல்வாராதலின், தேவியை வைக்க இடமில்லாமல் அங்கத்திலேயே வைத்துக்கொண்டு விட்டார்!

அர்த்தநாரீசுவரர் வடிவங்கள் பாதாமி, (வாதாபி) மாமல்லபுரம், கும்பகோணம், திருச்செங்காட்டங்குடி, காஞ்சிபுரம், மதுரை, தாராசுரம் திருக்கோயில்களில் சிறப்பாகக் காணப்படுகின்றன. மாமல்லபுரம் தருமராஜரதத்தின் பின்புறச்சுவரில் விளங்கும் அர்த்தநாரீசரும், குடந்தைக் கீழ்க் கோட்டம் நாகேசர் கோயில் கருவறை மேற்குச் சுவரில்

அர்த்தநாரிச்வரர்



கும்பகோணம்
ஸ்ரீநாகேச்வரர் திருக்கோயில்
பக்கம் : 128



திருவெண்காடு (சீர்காழி வட்டம்)
சென்னை அருங்காட்சியகம்
பக்கம் : 128



திருச்செங்கோடு
(வலதுபுறம் பிருங்கி முனிவர்)
பக்கம் : 128



உமா மகேச்வரர் (சிவ பார்வதி)
சாளுக்கியர்கள் காலம்
தேசிய அருங்காட்சியகம், டெல்லி
பக்கம் : 121



உமா மகேச்வரர் (சிவ பார்வதி)

சாளுக்கியர்கள் காலம்

தேசிய அருங்காட்சியகம், டெல்லி

பக்கம் : 121

விளங்கும் அர்த்தநாரிசரும் தனிச்சிறப்புடையன. திருவண்ணாமலை திருக்கோயிலில் விளங்கும் அர்த்த நாரிசர் செப்புத்திருமேனியும் குறிப்பிடத்தக்கது.

பெண்ணுரு ஒரு திறன் ஆகின்று அவ்வுருத்தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்'' என்ற புறநானூற்றுவரி மாதொருபாகனைப் பேசுகிறது. சங்க நூல்களின் உரையாசிரியருள் சிறந்த நச்சினார்க்கினியர் மேற்கோளாக இக்கோலம் குறித்து ஒரு பழம் பாடலைக்காட்டுவார் :

"சிலம்பும் சிறு நுதலும் சில் குழலும் பல் வளையும் ஒரு பால் தோன்ற
வலங்கலந்து திண் தோளும் மாடு எருத்தும் ஒண்குழையும் ஒருபால் தோன்ற
விலங்கல் அருஞ்சுரத்து வேறு உருவில் ஒருடம்பாய் வருவார் கண்டே
அலங்கல் அவிர் சடைஎம் அண்ணல் விளையாட்டு என்று அகன்றேன் பாவம்!''

திருமுறைகளில் மாதொருபாகன் கோலம் மிகச்சிறப்பாகப் போற்றப்படுகின்றது.

"வெந்த வெண்ணீறு அணிந்து விரிநூல் திகழ்மார்பில் நல்ல
பந்தணவும் விரலாள் ஒருபாகம் அமர்ந்து அருளிக்
கொந்தணவும் பொழில் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
அந்தணனைத் தொழுவார் அவலம் அறுப்பாரே''

என்று திருஞானசம்பந்தர் திருச்செங்கோட்டு மங்கைபங்கனைப் பரவுகின்றார். "உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்'', "பாதியோர்மாதர்'', "பரநாரிபாகர்'', "பெண்ணொர்கூறினர்'', "பெண்ணுருமுடலினர்'' என்றெல்லாம் அவர் போற்றுவார். "தேனையார்குழலாளை ஓர்பாகமா'' "மங்கைதன்னை மகிழ்ந்தொருபால் வைத்துகந்தவடிவம்'', "கோங்கணைந்த கூவிளமும் மதமத்தமும் குழற்கணிந்த கொள்கையொடு கோலம்'', "உமையொருபாகர்'', "பாதியொர் மாதினன்'' என்றெல்லாம் போற்றும் திருநாவுக்கரசர் ஒரு பாடலில் மாதொரு பாகரையே நம் கண்முன் காட்டிவிடுகிறார் :

"புதுவிரி பொன்செய்ஓலை ஒருகாது; ஓர்காது
சுரிசங்கம் நின்றுபுரள,
விதிவிதி வேதகீதம் ஒருபாடும் ஓத
ஒருபாடு மெல்ல நகுமால்,
மதுவிரி கொன்றைதுன்று சடைபாகம் மாதர்
குழல்பாகமாக வருவார்
இதுஇவர் வண்ணவண்ணம் இவர் வண்ணவண்ணம்
எழில் வண்ணவண்ணம் இயல்பே''.

திருவாசகத்தில் ஒரு அருமையான வருணனையாக மாதொர்பாகர் காட்டப்படுகிறார் : தொன்மைக்கோலம் இக்கோலமே என்பார் மணிவாசகர் :

"தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்கவளையும் உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய்க் கோத்தும்பீ.''

" அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் " என்று நயமாகப் பேசும் திருக்களிற்றுப் படியார். அருணகிரிநாத சுவாமிகளும், " அழலுறும் இரும்பின்மேனி மகிழ்மரகதம் பெணாகம் அயலணிசிவன் " என்று இவ்வடிவினைப் போற்றுகின்றார்.

'மாதரங்கத் தன்னரங்கஞ் சேர்த்தி'

'உமைபாலுந் தன்பாலும் கண்டங்கரியன்'

பெண்ணின் உருவைத் தன் இடப்பாகத்தில் சேர்த்து என்றும் உமையின் பாகமும் தன்பாகமும் தன்னிடத்தே தங்கிய அருமையானவன் என்றும் கபிலதேவநாயனார் சிவபெருமான் திருவந்தாதியில் போற்றுவார்.

குமரகுருபரசுவாமிகள் 'மாதொருபாகன்' திருக்கோலங்குறித்துக் கூறும் இரு பாடல்கள் இவ்வடிவத்தின் தத்துவத்தை விளக்கும். மாதொருபாகனை ஒருவன் என்பேனோ? ஒருத்தி என்பேனோ? என்று திகைக்கிறார் குமரகுருபரர்:

ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உருவொன்றால் அவ்
வுருவை இஃது ஒருத்தன் என்கோ? ஒருத்தி என்கோ?
இருவருக்கும் உரித்தாக ஒருவர் என்றோர்
இயற்சொல் இலது எனின் யான்மற்று சொல்கேனோ

'எந்தாய்' என்றசொல்லை இருபொருள்படக்கூறி மாதொருபாகனைப் போற்றுகின்றார் குமரகுருபரர். எந்தாய்—எந்தையே; எந்தாய்—என்தாய்; ஆகவே எந்தாய் என்றே அழைப்பது தானே பொருந்தும்! பாடலைப் பார்ப்போம்.

செவ்வாய்க் கருங்கட் பைங்தோகைக்கும்
வெண்மதிச் சென்னியற்கும்
ஒவ்வாத் திருவுரு ஒன்றே உளது
அவ்வுருவினை மற்று
எவ்வாச்சியம் என்று எடுத்திசைப்பேம்
இன்னருட் புலியூர்
பைவாய் பொறியரவு அல்குல் **எந்தாய்**
என்று பாடுதுமே.

மாதியலும் பாதியன் வடிவம் சாத்திரங்களிலும் விளக்கப்படுகின்றது. இறைவன் அம்மையப்பனாக விளங்குவதாலேயே உலகியல் வாழ்வு நிகழ்கின்றது.

" ஆதியே உலகத்தில் ஆணொடு பெண்ணுமாய் அணைகாரியம்
நாதன் நாயகியோடுகூடி நயந்த காரணம் என்பரே " எனவும்,

" சத்தியும் சிவமும் ஆய தன்மை இவ்வுலகம் எல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உணர்குண குணியும் ஆக
வைத்தனன் அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை எல்லாம்
இத்தையும் அறியார் பீடலிங்கத்தின் இயல்பும் ஓரார்." எனவும்

சிவஞானசித்தியார் பேசும்.

ஒருமையின் இருமையும் இருமையின் ஒருமையுமாக அர்த்தநாரீசவடிவம் விளங்குகிறது. இறைவனின் அருட்பண்பே சக்தி எனக்காட்டினோம். சிவம் அமைதிநிலை; சக்தி ஆற்றல் நிலை. உலகப் பொருள்கள் அனைத்தும் சக்தியும் சிவமுமேயாகும். "சக்தியும் சிவமும் ஆயதன்மை இவ்வுலகம் எல்லாம்" என்று சிவஞான சித்தியார் கூறும்.

பொன்னும் அதன் நிறமும் போல, ஆதவனும் அவனொளியும் போல, மரமும் அதன் வயிரமும் போல சத்தி சிவத்தின்பால் பிரிவறத் தாதான்மியமாய் இயைந்து நிற்கின்றது.

சிவம் சக்தியோடு கூடியவழியே எல்லாத் தொழில்களையும் செய்யவல்லது.

"சிவன் எனும் பொருளும் ஆதிசத்தியோடு சேரின் எத்தொழிலும் வல்லதாம்
இவள் பிரிந்திடின் இயங்குதற்கும் அரிது அரிது எனாமறை இரைக்கும்"
—சௌந்தரியலஹரி—வீரைக்கவிராஜ பண்டிதர் தமிழாக்கம்

சிவம் தான் இயங்காமலிருந்து தனது ஆற்றலாகிய சக்தியை இயங்குவித்து ஐந்தொழில்களையும் நிகழ்த்துகின்றது.

"நம் கையினால் நாம் அனைத்தும் செய்வதே போன்று நாடுஅனைத்தும் நங்கை (சக்தி)யினாற் செய்தளிக்கிறான் நாயகன்" என்று திருக்களிற்றுப் படியார் நயம் படக்காட்டும்.

மாதொருபாகன் வடிவம், சிவபரம் பொருள் ஒன்றே சத்தனும் சத்தியுமாக இருதிறப்பட்டு நின்று பல்வேறு தொழில்களை நிகழ்த்தியருளும் திறத்தைக் காட்டுகின்றது. அச்சத்தியும் சிவபெருமான் எடுக்கும் கோலத்திற்கேற்பத் தனக்கு ஒரு வடிவாய் அவருடன் இயைந்து தொழிலாற்றும். இதனையே,

"சத்தியாய் விந்து சத்தியாய் மனோன்மணி தானாகி
ஒத்துறும் மகேசையாகி உமைதிரு வாணியாகி
வைத்துறும் சிவாதிக்கிங்ஙன் வரும்சத்தி ஒருத்திஆகும்
எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும்நிற்பள்"

என்று சிவஞான சித்தியார் பேசுகின்றது.

வலந்தான் கழல் இடம் பாடகம் பாம்புவலம் இடமே
கலந்தான் வலம்நீறிடம் சாந்தெரிவலம் பந்திடமென்
பலந்தார் வலம் இடம் ஆடகம் வேல்வலம் ஆழிஇடம்
சலந்தாழ் சடைவலம் தண்ணங் குழல்இடம் சங்கரற்கே
—பொன்வண்ணத்தந்தாதி

கங்கைவலம் இடம் பூவலம் குண்டலம் தோடிடப்பால்
தங்கும் கரவலம் வெம்மழு வீயிடம் பாந்தள் வலம்
சங்கம் இடம் வலம் தோல் இடம் ஆடைவலம் அக்கிடம்
அங்கஞ் சரிஅம்பலவன் வலன்காண் இடம் அணங்கே
—கோயில் திருப்பண்ணியர் விருத்தம்—நம்பியாண்டர் நம்பி

★ ★ ★

விடைபெறுகிறோம்

சிவபெருமான் உயிர்கள் மாட்டுக் கொண்ட பெருங்கருணையினால் திருக்கோலங் காட்டியருளிய அருமையான இருபத்தைந்து மகேசவடிவங்களை இதுகாறும் விரிவாகக் கண்டு களித்தோம். இவ்வடிவங்கள் சிவபெருமானுடைய எல்லையற்ற கருணையினால் விளைந்த எண்ணற்ற அருளாடல்களில் ஒரு சிலவே என்பது தெளிவு. இத்திருக் களில் ஏதேனும் ஒன்றைப்பற்றியாவது தியானித்து, அதன் மூலம் அகளனாகிய-நின்மலனாகிய-விமலனாகிய-வேத நுண் பொருளாகிய-சிவபரம் பொருளின் திருவருளுக்கு இலக்காகி இருமை இன்பங்களையும் எய்தி நாம் உய்வடையலாம். திருக்கோயில்களில் இம்மூர்த்தங்கள் கல்லிலும் செம்பிலும் சுதையிலும் காட்டப்பட்டுள்ளன போன்றே சிவஞானிகளில் கவிதையிலும் காட்டப்பட்டிருப்பதையும் நாம் கண்டு நம் முன்னோர்கள் சொற்கோயிலையும் கற்கோயிலையும் அமைத்த கவினுறு கலையறிவை எண்ணி வியப்படைகின்றோம்.

திருக்கோயில்களுக்கு வழிபடச் செல்வதும், ஆலயங்களில் எழுந்தருளியுள்ள அருள் திருமேனிகளை உணர்ந்து வணங்குவதும் அருகிவரும் இந்நாளில், நம் பாரத நாட்டின் அடுத்தடுத்து வரும் தலைமுறையினராவது இத்திருமேனிகளின் அருட்பொலிவுமிக்க தத்துவ உண்மைகளை ஒருவாறு உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற விழைவினால் மேற்கொண்ட ஒரு சிறு முயற்சியே இந்நூலாக உருவாகி வெளிவருகிறது. இந்நூலின் பயனாக, ஒரு சிலராயினும் நம் தெய்வத் திருவுருவங்களின் திரண்ட தத்துவச் சிறப்பினை உணர்ந்து வழிபட்டு உய்வார்களாயின் இந்நூல் இயற்றியதின் பயனை எய்தத் திருவருள் துணை நின்றது என்று மகிழ்ந்து இன்புறுவோம்.

ஆன்றோர்கள் அருளனுபவத்தில் கண்ட அருள் திருவுருவங்களைப்பற்றி அறிவினால் ஆய்ந்து அளந்து விடமுடியாது. "ஞானத்தால் தொழுவார் சிவஞானிகள்" என்றருளிய அப்பர் சுவாமிகளின் வாக்குப்படி, நாம் சிவஞானம் கை வரப்பெற்று,

இத்திருவுருவங்களை அணுகும்போது இவற்றின் வடிவமும் விளக்கமும் சொல்லொணாப் பேரின்பம் சுரந்து இன்பவெள்ளத்தில் நம்மைத் திளைக்கச் செய்யும். இத்திருவுருவங்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் திகழ்ந்து வருவதொன்றே இவற்றின் இறவா உண்மைத்தன்மைக்குச் சிறந்தசான்று ஆகும். கலைஞர்கள் கற்பனையில் செய்த கற்சிற்பங்களாக இவை இருந்திருக்குமேயானால், கிரேக்க ரோமானிய நாகரிகம் போன்று இவை எப்பொழுதோ அழிந்து ஒழிந்திருக்கும். அலை அலையாக இந்நாட்டின்மீது ஏற்பட்ட அன்னிய கலாசார சமயப் படையெடுப்புகள் இத்தத்துவத்திருமேனிகளை ஒன்றும் செய்ய முடியவில்லை என்பதை நாம் எண்ணிப்பார்க்கும் போது இவற்றின் மேன்மை இனிது புலப்படும்.

இத்திருவுருவங்களைக் காட்டிய ஞானிகளும், யோகியரும், இவற்றைத் திருக்கோயில்களாக வடிவமைத்த சிற்பிகளும் ஸ்தபதிகளும் இறையருளை முழுமையாகப் பெற்ற சிவஞானிகளேயாவர். அவர்கள் இறைவனைப் போலவே காலத்தை வென்றவர்கள் ; ஞானத்தில் திளைத்துநின்றவர்கள் ; தியானத்தில் ஒன்றிக் தம்மை இறைவனோடு இரண்டறக்கலந்தவர்கள். ஆகமசாஸ்திரவல்லமையோடு - தியானத்தால் தம்மைத் தூய்மைப்படுத்தி-புடம்போட்ட பொன்போன்று மாசற்ற மனத்தினராய் - தம்உள்ளே ஈசனைக் கொலுவீற்றிருக்கச்செய்து, அத்திருவருளின் வழி செயலாற்றியவர்கள். சிவானுபவத்தில் தம்மைக் கரைத்துக்கொண்டு - அதுதானாய் நின்று - அவர்கள் இவ்வடிவங்களையும் திருக்கோயில்களையும் அமைத்தார்கள். அதனால்தான் மெய்யறிவுநாட்டமுடையோர் இத்திருக்கோயில்களைக்கண்டு, வழிபடும்போது எல்லையற்ற இன்ப ஊற்றெழுந்து நெகிழ்ந்து உருகித் திருவருளைப் போற்றிப் பரவுகிறார்கள். அறிவியல் மேதைகளால் உணரமுடியாதவற்றை ஆத்மஞானி உணர்ந்து இன்புறுகின்றார். இதுவே பாரதநாடு உலகிற்கு வழங்கும் பெருங்கொடையுமாகும். ஒரு சமயத்தின் தூண்களாக மூன்று அம்சங்கள் விளங்குகின்றன ; திருமறைகள் ; அருளாளர்கள் ; திருக்கோயில்கள். இந்துசமயத்தில் இம்மூன்று அம்சங்களுமே முழுமையாகத் திகழ்ந்து உலகிற்கு உய்வைத்தர எப்போதும் காத்துக்கொண்டிருக்கின்றன. ஆனந்தத்தேனிருக்கும் அருங்கலைக் கருவூலங்களான நம் திருக்கோயில்கள் திருமறைகளையும் அருளாளர்களையும் விளக்கும் ஞானப் பெட்டகங்கள். ஆகவே கோயில்க்ளால் திருமுறைகளை உணரலாம் ; அருளாளர்களை உணரலாம் ; ஏன் இப்பிரபஞ்சத்திற்கே முழுமுதற்காரணமான பரம்பொருளின் அருளாடல்கள் அனைத்தையுமே உணர்ந்து இன்புறலாம். பெறற்கரிய பிறவியில் பாரதத்தில் இந்துக்களாகப் பிறந்தநாம் நம் ஆன்றோர்களின் அருநிதியமாக்த் திகழும் ஆலயங்களையும் ஆங்கே திகழும் திருவுருவங்களையும் பொருளுணர்ந்து போற்றி வழிபட்டு உலகின்புற வாழ அம்மையப்பன் திருவருள் சுரப்பதாக.

★ ★ ★

பிற்சேர்க்கை : 1

மகேசவடிவங்களும் நுண்கலைகளும்

தமிழ்நாட்டின் தனிச்சிறப்பாக அமைந்த நுண்கலைகளில் இசை, கூத்து என்பன இரு கண்களாகக் கருதத்தக்கன. ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்கும் இறைவன், இசைவல்லவனாக வீணாதட்சிணாமூர்த்தியாகத் திகழ்கின்றார். ஆடல்வல்லானாக அவர் விளங்கும்போது நூற்றெட்டுத் தாண்டவ வகைகளுக்கும் நாயகராகத் திகழ்வதோடு தலங்கள் தோறும் தனித்தன்மை வாய்ந்த தாண்டவ பேதங்களையும் காட்டி விடுகின்றார். அவர் புரிந்த எட்டு பராக்கிரமச் செயல்களுக்கும் எட்டுவித தாண்டவங்கள் குறிக்கப்படுகின்றன. கூத்து என்பதை நாட்டியம் எனவும் நாடகம் எனவும் இருபொருட்படவே தமிழில் கையாண்டு வருகிறோம். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழின் திறம் பேசும்போது நாடகத்தமிழில் கூத்தின் வகைகளும் பேசப்படுகின்றன. சிலப்பதிகாரத்தில் கூத்தின் வகைகள் விளக்கப்படுகின்றன.

யக்ஷகானம்: மைசூர்முதலான கர்நாடகப்பகுதிகளில் நடைபெற்றுவரும் நாட்டிய நாடகம் இது. கோயில் மண்டபங்களில் சிவலீலைகளையும் திருமால் லீலைகளையும் இதில் நாட்டிய நாடகமாக அமைத்து வழங்குகிறார்கள். தமிழ் நாட்டிலும் இதன் செல்வாக்கு ஏற்பட்டு, நாட்டிய நாடகங்கள் மெலட்டூர் சூலமங்கலம், சாலியமங்கலம் தேப்பெருமாள் நல்லூர் முதலிய ஊர்களில் பிராசீன சம்பிரதாய நாட்டிய நாடகம் என்ற பெயரில் இக்காலத்திலும் வள்ளிகல்யாணம், பிரகலாத சரித்திரம் போன்றவை நிகழ்ந்து வருதல் கண்கூடு.

"பகு நாடகங்கள்" என்ற பெயரில் முற்காலத்தில் யக்ஷகான நாட்டிய நாடகங்கள் நடிக்கப் பெற்றன. இவற்றுள் சிவலீலா நாட்டியங்கள் என்று பத்துவித நாட்டிய நாடகங்கள் உண்டு. இவை சிவபெருமானின் அருளாடல்களைக் காட்டுவன. இந்நாட்டிய நாடகங்கள் வருமாறு :

1. **கராள காந்தர் :** மன்னுயிர்களைக்காக்க வேண்டி பாற்கடலில் எழுந்த விஷத்தை உண்ட சிவபராக்கிரமத்தைக் காட்டும்.

2. **மிருத்யஞ்சயர் :** காலதேவனை அழிப்பவராகச் சிவபெருமானின் அருளாடல்.

3. **திரிபுர சம்ஹாரர் :** அசுரர்களின் முப்புரங்களையும் சிவபெருமான் அழித்த அருளாடல்.

4. **சாத்விக ஆனந்த ரூபர் :** உலகியல் நிகழ்வுகளை இணக்கமும் இசைவும் கொண்டதாகச் செய்ய சிவபெருமான் பாதி ஆணாகவும் பாதிபெண்ணாகவும் விளங்குதல்.

5. **பாலொநேத்ரர் :** காமனை எரித்த சிவபெருமான் அருளாடல்.

6. **அர்த்தநாரி :** சிவமும் சத்தியுமாகத் தானே விளங்குவதைக் காட்டச் சிவபெருமான் எடுத்த திருவடிவம்.

7. **அடவிகரூபர் :** அருச்சுனனது வலிமையையும் வீரத்தையும் சோதிக்கும் வேடுவனாகச் சிவபெருமான் எடுத்த கிராத வடிவம்.

8. **காலபைரவரூபர் :** தக்கனையும், தனது பகைவர்களையும் அழித்துச் சிவபெருமான் தனது கோபத்தாண்டவம் ஆடிய திறம்.

9. **நடராஜர் :** உலகின் இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் ஆடல்வல்லானின் அருளாடல்.

10. **சந்தியா நிருத்தியம் :** உயிர்களுக்குப் பேறளிக்கும் இன்பத்தாண்டவம். இதனை உலகமக்கள் அமைதியாக வழிபட்டு ஆனந்தம் அடைய வேண்டும்.

இவ்வாறு கருநாடகத்தில் யக்ஷகானம் என்ற கிராமிய நாட்டிய நாடகத்தைக் கோயில் கல்யாண மண்டபங்களில் திருவிழா நாட்களில் நிகழ்த்தி, பக்தர்களைப் பரவசமாக்கும் பணியை அந்தணர்கள் ஏற்படுத்தி இன்று அது நன்றாக வளர்ந்துள்ளது.

சிவபெருமானது 25 மகேசமூர்த்தங்களில் முக்கியமான பத்து வடிவங்களின் வரலாற்று விளக்கத்தை இந்நாட்டிய நாடகங்கள் மூலம் மக்களிடையே யக்ஷகானம் பரப்பிவரும் பாங்கு போற்றற்குரியது.

★ ★ ★

பிற்சேர்க்கை: 2

அரியலால் தேவியில்லை

எரியலால் உருவமில்லை ஏறலால் ஏறலில்லை
கரியலாற் போர்வையில்லை காண்டகு சோதியார்க்குப்
பிரிவிலா அமரர்கூடிப் பெருந்தகைப் பிரான் என்றேத்தும்
அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே. —திருநாவுக்கரசர்

ஏகைவ சக்தி: பரமேச்வரஸ்ய
ப்ரயோஜ நார்த்தாய சதுர்விதாபூத் |
போகே பவானீ புருஷேஷு விஷ்ணு:
க்ரோதேஷு காளீ சம்ரேஷு துர்க்கா || —குமாரசம்பவம்: காளிதாஸர்

"அறிவினால்மிக்க அறுவகைச் சமயம்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறுவது போன்று நம் பாரதநாட்டில் சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என முறையே சிவபெருமான், திருமால், தேவி, கணபதி, குமரன், சூரியனை முழுமுதலாகக் கொண்டு போற்றும் அறுவகைச் சமயங்கள் பேசப்படினும், சைவமும் வைணவமும் மிகவும் சிறப்புமிக்கனவாக-இந்து சமய நெறியின் இருகண்களெனக் கருதப்படும் பெற்றியன.

நீரேறு சடையன் சிவனே முதல்வன் என்று சைவமும், காயாம்பூவண்ணனான திருமாலே முதல்வன் என வைணவமும் போற்றிப் பரவிய போதிலும் சிவனும் திருமாலும் ஓருருவின் இருகூறுகளே என சிவஞானிகளும் வைணவ ஞானிகளும் பல பாடல்களில் காட்டியுள்ளனர். அதற்குக் காரணமும் இல்லாமலில்லை. குமார

சம்பவத்தில் மகாகவி காளிதாசர் கூறும் ஒரு கருத்து இங்கு சிந்திக்க வேண்டியதொன்று. சக்தி ஒன்று. பரமேசுவரனுடைய அருளாடல் பயனுக்கேற்ப அது நால்வகையாகப் பரிணமிக்கின்றது. போக சக்தியாக அது மிளிரும்போது பவானியாகவும், புருஷசக்தியாக வெளிப்படும்போது விஷ்ணுவாகவும், குரோத சக்தியாக விளங்கும்போது காளியாகவும், போர் (சமரம்) சக்தியாகத் திகழும்போது துர்க்கையாகவும் செயலாற்றுகின்றன என்று காளிதாசர் மிகத்தெளிவாகக் காட்டுகின்றார்.

ஆகவே அரனுடைய சக்தியே அரி என்பது இதனால் புலப்படும். சிவன் பெருமானாகத் திகழும்போது திருமால் பெருமாள் என அழைக்கப்படுவதும் இது பற்றியே யாம். சக்தி உலகத்தைப் புரக்கும் செயலை மேற்கொள்ளும்போது தனது மாயா வல்லமையால் ஆடவவடிவம் ஏற்று மாயன் என்னும் விஷ்ணுவாக விளங்குகிறாள்.

நெருப்பும் வெப்பமும் போன்று, சிவத்தோடு பிரிவின்றி அனைத்துச் செயல்களுக்கும் உடனிருந்து திகழும் சிவசக்தி அபரை, பராபரை, பரை என முத்திறப்படும். அபரை, பிராமி, வைணவி, ரௌத்ரி என மூவகையாகத்திகழ்வாள். சிருட்டித்தல் காரணமாக இருப்பவள் பிராமி. இவளே படைக்கும் பணி புரியும் நான் முகனின் சக்தி ; காத்தல் காரணமாக விளங்கும் வைஷ்ணவியே விஷ்ணுவென ஆண் வேடத்தில் விளங்கும் சக்தி ; அழித்தல் காரணமாகத்திகழும் ரௌத்ரி-ருத்ரனின் சக்தியாவாள்.

ஓருருவில் மாலும் அரனும்—வலப்பக்கம் சிவனும் இடப்பக்கம் திருமாலும் விளங்கும் கோலமே சங்கரநாராயணன் என்பதை நாம் முன்னமே விளக்கியுள்ளோம். இடவலமாகப்பார்க்கும்போது அரிஹரன் என்று கூறுவதும் உண்டு. இவ்வாறு மாலும் அரனும் திகழும் கோலத்தை ஆழ்வார்கள் மிகவும் சுவைத்து அனுபவித்துப் பாடிப் பரவியுள்ளனர். ஒரு சில இங்கு எடுத்துக்காட்டுவோம்.

" தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொனநாணும் தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும் திருமாலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து. " —பேயாழ்வார்

" பொன்திகழும் மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகந்தாய நெடுமாலும்—என்றும்
இருவரங்கத்தால் திரிவ ரேனும் ஒருவன்
ஒருவனங்கத்து என்றும் உளன். " —பொய்கையாழ்வார்

" அரன் நாரணன் நாமம் ஆன்விடைப் புள்ளூர்தி
உறை நூல் மறை உறையும் கோயில் வரைநீர்
கருமம் அழிப்பு அளிப்புக் கையது வேல்நேமி
உருவம் எரி கார்மேனி ஒன்று. —பொய்கையாழ்வார்

பூந்தண் துழாய் முடியாய் ! புனை கொன்றையஞ் செஞ்சடையாய் !
—நம்மாழ்வார்

அறமுதல் நான்கணவயாய் மூர்த்திமூன்றாய்
இருவகைப் பயனாய் ஒன்றாய் விரிந்துநின்றனை.

—திருமங்கையாழ்வார்

ஆகவே ஒரு பாதி சிவனும் ஒரு பாதி திருமாலுங்கொண்ட வடிவம் வைணவர்க்கும் உடன்பாடு என்பது தெளிவாகின்றது. திருமால் பற்றி நம் சைவம் எவ்வாறு கருதுகின்றது என்று பார்ப்போம். மகேசவடிவங்களில் சங்கர நாராயணனைப் போன்று மற்றொரு வடிவம் உள்ளது. அதுதான் மாதொருபாகர் என்னும் அர்த்தநாரீசுவரர், சங்கர நாராயண வடிவில் இடப்பாகம் திருமால், அர்த்தநாரீசுவரவடிவில் இடப்பாகம் உமை. ஆகவே திருமாலும் உமையும் ஒன்று என்பது பெறப்படும். துர்க்கையின் ஆயுதங்களாக சங்கும் சக்கரமும் திகழ்கின்றன. உமையை நாராயணி, வைஷ்ணவி என்றெல்லாம் அழைக்கிறோம். அவள் நாரணன் சோதரி என்று உபசாரமாகக் கூறுவது அவர்களிருவரும் ஓரேவகை என்பதைப் புலப்படுத்தும்.

நமது தேவார ஆசிரியர்கள் மாலொருபாகனாக, மாதொருபாகனாகச் சிவபெருமானைப் போற்றும் போது மாலும் மாதும் ஒருவரே என்பதை நன்றாக எடுத்துக் காட்டுகிறார்கள். இவ்வனுபவத்தில் வெளிப்பட்டது தான்

"அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே" என்ற அப்பர் தேவாரம்:

மாலொருபாகம் அரனொருபாகமாகப் பெருமான் விளங்குகிறார் என்பதைக் காட்டும் திருமுறைப்பகுதிகள் :

"மாலை மகிழ்ந்து ஒருபால் வைத்தார் போலும்!"

"மாலொரு பாகமாக மகிழ்ந்த நெய்த்தானனாரே !"

"மறிகடல் வண்ணன் பாகா !"

"நாரணனை இடப்பாகத்தடைத்தார் போலும் !"

"குடமாடியிடமாகக் கொண்டான் கண்டாய் !"

"காவியங் கண்ணளாகிக் கடல் வண்ணனாகி நின்ற
தேவியைப் பாகம் வைத்தார் திருப்பயற்றூரனாரே"

இவையனைத்தும் திருநாவுக்கரசர் திருவாக்கு !

இதற்கு இணையாக, அரனை வலப்பால் வைத்த திருமாலை ஆழ்வார்கள் காட்டும் நாலாயிரதிவ்வியப்பிரபந்த வரிகள் :

"பிறைதங்கு சடையானை வலத்தே வைத்து" —திருமங்கையாழ்வார்.

"வாசவார் குழலாள் மலைமங்கைதன் பங்கனைப்பங்கில் வைத்து
உகந்தான்தன்னை". —திருமங்கையாழ்வார்.

"மாகத்திளமதியம் சேரும் சடையானைப் பாகத்துவைத்தான்"
—நம்மாழ்வார்.

"வலத்தனன் திரிபுரம் எரித்தவன் இடம்பெற" —நம்மாழ்வார்.

"கண்ணுதல் கூடிய அருத்தனை" —திருமங்கையாழ்வார்.

“ தடம்புலை சடைமுடியன் தனியொருகூறமர்ந்துறையும்
உடம்புடையான் ” —நம்மாழ்வார்.

“ மாதாய மாலவனை மாதவனை ” —திருமழிசையாழ்வார்.

மேற்சொன்னவர்களுள் திருமழிசையாழ்வார் குறிப்பு நமக்கு ஒரு பேருண்மையைப் புலப்படுத்தும். ஆம்! திருமால் யார்? மாதாய் மாலவன். அம்பிகையாகிய திருமால் என்று அவரே காட்டுகிறார். ஆகவேதான் அரியலால் தேவியில்லை அரனுக்கு என்று அப்பரடிகளும் எடுத்துக்காட்டிவிட்டார். ஆகவே திருமால்தான் அம்பிகையாகச் சிவபெருமானுக்கு விளங்குவது புலப்படும்.

“ தரங்கக்கடலுள் வெங்கட்பணியணைமேல் துயில்கூரும் விழுப்பொருளே ” என்று அபிராமிபட்டர் அபிராமி அந்தாதியில் திருமாலே அம்பிகையாகக் காட்டுகிறார்.

மாதொருபாகனும் அம்மையப்பனுமாக விளங்கும் கோலமே மாலொருபாகமாக விளங்கும் மாதேவன் வடிவம் ஆகும் என்பதும் தெளிவு.

இனி, சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் அமைந்த சில ஒற்றுமை அம்சங்களைக் காட்டுவோம்.

1. இருவரும் பாம்பினைக் கொண்டிருத்தல்:

திருமால்: பையரவணைப் பள்ளியான்; வெள்ளத்தரவில் துயிலமர்ந்தவித்து. நாகத்தின் மேல்துயிலும் நாதனுக்கு அப்பாம்பு பலவாறு பணியாற்றுகின்றது.

“ சென்றால் குடையாம் இருந்தால் சிங்காதனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள்—என்றும்
புணையா மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கு
மணையாம் திருமாற்கு அரவு ” —பேயாழ்வார்

ஆகவே காயாம்பூ மேனியனுக்குக் கருநாகம் பாயல் மட்டுமன்று, குடை, சிங்காதனம், மரவடி, விளக்கு, பட்டு ஆகப்பலவாறு பணியாற்றும்.

சிவபெருமான்: விரும்பிஅணியும் அணிகலனே அரவம்தானே! கரங்கள் சிரம் தன்னிலும் கச்சுகமாகப் பொறிகொள் அரவம் புனைந்தீர்-சுந்தரர். அக்கு அரவம் அரைக்கசைத்த அம்மான்; பொறியரவம் மார்பாரம் பூண்டான்; உடையும் கொப்பளித்த நாகம்; மணி பணத்த அரவம் தோள்வளையாக் கொண்டார்—அப்பர்.

2. இருவருமே பகை கொண்டவற்றை இணைந்திருக்கச் செய்யும்திறம் உடையவர்கள் :

திருமால்: பாம்புடன் தீராப்பகை கொண்ட கருடனை ஊர்தியாகக் கொண்டிருக்கிறார். அதே நேரத்தில் அவருக்குப் படுக்கை, குடை, சிங்காதனம், மரவடி, விளக்கு, பட்டு ஆக விளங்குவது பாம்பு அல்லவா!

சிவபெருமான்: பாம்பையும் அதனோடு பகையான சந்திரனையும் ஒருசேரச் சடையில் ஆடுதல். பிறையார்ந்த சடை முடிமேற் பாம்புகங்கை பிணக்கந்தீர்த்து உடன் வைத்தார்—அப்பர்.

3. இருவருக்கும் நீர் தொடர்பு :

திருமால் : பள்ளிகொள்வது பாற்கடல், கரிய மேகங்களைப் பார்க்கும் போதெல்லாம் கரியநெடுமாலே நினைவுக்கு வருகிறது ; கருவடை மேகம் கண்டால் உன்னைக் கண்டால் ஒக்கும் கண்கள்—பெரியாழ்வார்.

சிவபெருமான் : சடையிலே கங்கையை வைத்தார். நீரின்றி அமையாது உலகு. இரைக்கும்புனல் செஞ்சடை வைத்த எம்மான்-சம்பந்தர்.

சிவபெருமானது கழுத்து (மிடறு) முகிலோடு ஒப்பிடப்பெறுவது.

புயலன மிடறுடைப் புண்ணியன்—சம்பந்தர்
காரேறு முகிலனைய கண்டத்தானே—அப்பர்
கருமா முகில் போல் மிடற்றாய்—சுந்தரர்.

4. இருவருக்கும் தேவியர் இருவர் :

திருமால் : "வாரணி முலையாள் மலர்மகளோடு மண்மகளும் உடன் நிற்ப" —திருமங்கையாழ்வார்.

சிவன் : மலைமடமங்கையோடும் வடகங்கை நங்கை மணவாளராகி மகிழ்வர் —அப்பர்.

5. இருவருமே கலைவல்லவர்கள் :

திருமால் : குடமாடும் கூத்தன். குழலூதும் கண்ணன்.

சிவபெருமான் : வீணைவித்தகன். ஆனந்தக்கூத்தன்.

6. இருவரும் யோகிகள் :

திருமால் : யோக நரசிம்மர் வடிவம். சிவன் கோயில் விமானத்தில் மேல்புறம் யோக நரசிம்மர் உருவம் காணப்படும்.

சிவபெருமான் : ஆலமர் செல்வனாம் யோக தட்சிணாமூர்த்தி : சிவன் கோயில் விமானத்தின் தென்புறம் யோகதட்சிணாமூர்த்தி உருவம் இருக்கும்.

சிவனும் அவரது அருட்சக்தியான மாதாம் திருமாலும் இவ்வாறு அடியவர்களால் தனித்தனியே போற்றப் பெறினும் மிக உன்னத நிலையில் வைத்துப்பார்க்கும் போது மாதாய மாலவனை மாதொரு பாகர் தம் இடப்பால் வைத்த மாண்பு சிறப்புடைய தாகும். இதனை விளக்குவதாக சென்னைக்கருகில் பொன்னேரியில் திருக்கோயில் விழா ஒன்று இன்றும் நிகழ்ந்துவருகிறது. பொன்னேரி சிவன் கோயிலான கும்மங்கலம் அகஸ்தீஸ்வரசுவாமி கோயிலில் விளங்கும் சிவபெருமானும், அருகிலுள்ள திரு ஆயர்பாடி கரிகிருஷ்ணப் பெருமாளும், பொன்னேரி வீதியில் சித்திரைத்திருவிழாவில் சந்தித்து **மாலைமாற்றிக்கொள்கிறார்கள்.** இத்திருவிழா நிகழும் இடம் "ஹரிஹர வீதி" என அழைக்கப்படுகிறது. இத்திருநாளை "ஹரிஹர சந்திப்பு" என்று கொண்டாடு கின்றனர்.

அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே.

★ ★ ★

பிற்சேர்க்கை: 3

நூற்றெட்டு தாண்டவ பேதங்கள் (கரணங்கள்)

1. **தலபுஷ்பபுடம் :** இடது மார்பிற்கு நேராகப் புஷ்ப புட முத்திரை காட்டி, கால் நுனிகளில் சஞ்சரிப்பவராக, சிறிது வணங்கிய பக்கத்தையுடையவராக நடமிடுவது. புஷ்ப புடத்தோடு இடது பக்கமாக இருப்பதால் இது தலபுஷ்ப புடம் என்னும் பெயர் பெற்றது.

2. **வர்த்திதம் :** இரு மணிக்கட்டுகளையும் வளைத்துத் தொடையின் பக்கத்தில் கைகளைத் தொங்க விடுவது.

3. **வலிதோருகம் :** கிளி மூக்கு போன்று இரு கைகளை மடக்கி அவற்றை உட்புறமாக இருபக்கமும் வளைத்து, தொடைகளையும் வளைத்து நிற்பது.

4. **அபவித்தம் :** சதுரஸ்ரமாக நின்று, கைகளைத் திருப்பி, சமகாலத்தில் எடுக்கப்பெற்ற சாரியைச் செய்து கையையும் சுக துண்டமாகச் செய்து தொடையின் முன்புறம் வைப்பதும், இடது கையைக் கடகாமுகமாகச் செய்து மார்பின் மேல் வைப்பதும் இத்தாண்டவம்.

5. **சமநகம் :** நகங்கள் நேராகத் தெரியும்படிக் கால்களை வைத்து, கொடி போன்று துவண்டு தொங்கும் கைகளுடன், உடல் வளையாமலும் நிமிராமலும் இயல்பாக இருத்தல்.

6. **லீனம் :** கழுத்தையும் தலையையும் முன்புறம் நீட்டி, வளைக்கப்பட்ட தோள்பட்டையுடன், பதாகாஸ்தத்தை மார்பின் நேரே பிடித்தல்.

7. **ஸ்வஸ்திகாரேசிதம் :** ஸ்வஸ்திக கரத்தை வீசியும் இடுப்பில் வைத்தும் ஆடுதல்.

8. **மண்டல ஸ்வஸ்திகம் :** சதுரஸ்ர காலில் நின்று, முன் நோக்கி, உத்வேஷ்டித வர்த்தனையாற் சென்று, ஊர்த்துவ மண்டலி வர்த்தனையால் ஸ்வஸ்திகம் அமைய ஆடுதல்.

9. **நிகுட்டகம் :** தோளுக்கும் சிரத்திற்கும் இடையில் கைகளைத் தூக்கியும், தாழ்த்தியும், கால்களையும் அவ்வாறே செய்வது. கைகளாற் செய்யப்பெறும் நிகுட்டகம் அலபல்லவமுத்திரையோடு கூடியகையில் சிறு விரலைத் தூக்குதலும் தாழ்த்துதலுமாகிய முறை. கால்களை உத்கடித பாதத்தால் அடையாளங்காட்டும் முறையில் நிற்பது. உத்கடித பாதமாவது கால் நுனியில் நின்று குதிகாலைப் பூமியில் தட்டுவது. அவ்வாறு தட்டும் போது இடது கையை உயர்த்தும் போதும், தாழ்த்தும் போதும், இடது குதிகாலைத் தட்டவேண்டும்; வலது கையை உயர்த்தும் போது வலது குதிகாலைத் தட்ட வேண்டும்.

10. **அர்த்தநிகுட்டகம் :** கைகளை சிரத்தின்மேல் வைத்து, கைகளை விரலுக்கு விரல் நேராகக் குவித்து பாதிவளைய இருப்பது.

11. **கடிச்சின்னம் :** வண்டுபோன்ற சாரியால் இருபக்கமும் சுழன்று, மண்டல ஸ்தானத்தில் நின்று, தோள்பட்டையின் உச்சியில் பல்லவ முத்திரையாகக் கையை வைத்தல். பல்லவமுத்திரை : எல்லாவிரல்களையும் நீட்டிக் கட்டை விரலைமட்டும் குறுக்கி, பதாகா முத்திரையோடு கூடிய இருகைகளையும் மணிக்கட்டிலிருந்து தொங்கவிட்டு, விரல்நுனியை அசைப்பது. வண்டுசாரி : பிரமரசாரி. இது வண்டு போலச் சுழன்று சுற்றுதல். மண்டலஸ்தானம் : பாதங்களை ஒன்றுக்கொன்று நான்குசாண் தூரத்தில் வைத்துக்கொள்ளுதல்.

12. **அர்த்தரேசிதகம் :** அலபத்ம முத்திரையோடு கூடிய இருகைகளையும் சுழற்றி இடக்கையை இடப்பக்கமாக சூசிஹஸ்தமாக நீட்டிக் கால்களைச் சற்று பார்சுவமாக வளைப்பது.

13. **வக்ஷஸ்வஸ்திகம் :** கால்களை ஸ்வஸ்திகமாக வைத்து, கைகளையும் மார்புக்குமேல் ஸ்வஸ்திகமாக வைப்பது. ஸ்வஸ்திகாபாதம் : பாதங்களை மாறிச் சிறுவிரலோடு சிறுவிரல் பொருந்த வைத்தல். ரேசிதஹஸ்தம் : மணிக்கட்டோடு மணிக்கட்டுப் பொருந்தக் குறுக்காக வைப்பது.

14. **உந்மத்தகம் :** கால்களைத் தொட்டிபோல் வளைத்துக் கைகளையும் நன்றாகநீட்டி, மணிக்கட்டிலிருந்து முன்கையைத் தொங்கவிட்டு ஆடல்.

15. **ஸ்வஸ்திகம் :** கைகால்களை ஸ்வஸ்திகம்போல அமைத்து ஆடல்.

16. **ப்ருஷ்டஸ்வஸ்திகம் :** முன்போலக் கைக்ளையும் கால்க்ளையும் ஸ்வஸ்திகமாக அமைத்துத் திரும்பி, முகத்தைமட்டும் சபைக்குக் குறுக்காக வைத்து நிற்றல்.

17. **திக்ஸ்வஸ்திகம் :** முன்போலவே ப்ருஷ்ட ஸ்வஸ்திகமாக நின்று பக்கங் களிலும் முன்பும் அசைந்து நடந்தால் அது திக் ஸ்வஸ்திகம் ஆகும்.

18. **அலாதகம் :** அலாதபாதமாகநின்று, வலதுகையை அதன்மேல் வைத்து முழந்தாளைத்தூக்கி நின்று ஆடுவது.

19. **கடிஸமம் :** ஸ்வஸ்திக நிலையிலிருந்து பிரிந்த பாதத்துடன் கைகளை உந்திக்கு நேராக இடுப்பில் வைத்து, பக்க நோக்காகச் சாய்ந்து நின்று ஆடுதல்.

20. **ஆக்ஷிப்தரேசிதம் :** இடதுகையை மடக்கி, மார்புக்கு நேராகவைத்து, வலது கையை ரேசித ஹஸ்தமாகத் தொங்கவிட்டு முழங்கால்களை மடக்கி நின்று ஆடுதல்.

21. **விக்ஷிப்தா க்ஷிப்தகம் :** வலது காலை வீசி நின்று, வல்துகையை வீசி, இடதுகைகால்களை முன்போல வைத்து ஆடுதல்.

22. **அர்த்த ஸ்வஸ்திகம் :** கால்களை ஸ்வஸ்திகமாக வைத்து, வலது கையைக் கரி ஹஸ்தமாக இடுப்பில் வைத்து, இடது கையைப் பாதி ஸ்வஸ்திகமாக மார்பின்மேல் வைத்து ஆடுதல்.

23. **அஞ்சிதம் :** கால்களை மாறி வைத்து, வலது உள்ளங்கால் வெளியே தெரியும் வண்ணம் வைத்து, இடது கையைச் சூசியாக மூக்குநுனியை நோக்கி நீட்டி, வலது கையைக் குறுக்காக இடது பக்கம் நீட்டி நின்று ஆடுதல்.

24. **புஜங்கத்ராஸிதம் :** காலை வளைத்து, உயரத்தூக்கி, முக்கோண வளை வாகத் தொடையை வளைத்து, இடுப்பு முழந்தாள்களையும் வளைத்து நின்று ஆடுதல். அதாவது பாம்பைக்கண்டு அஞ்சி ஓடுவது போன்ற நிலை. வலது கையைத் தோல ஹஸ்தமாகவும் இடது கையைக் கடக முகமாகவும் வைத்துக் கொள்ளல்.

25. **ஊர்த்துவஜாநு :** வலது முழந்தாளை மார்பினளவாக உயர்த்தி, அதற் கேற்ப வலது கையையும் வீசிநின்று, இடது கையை இடது தோளுக்கு நேராகக் கடகா முகமாகப் பிடித்து நின்று ஆடல்.

26. **நிகுஞ்சிதம் :** தேளின் கொடுக்குப் போலக் காலை வைத்து கையைப் பக்கத்தே தொங்கவிட்டு, இடது கையை மூக்கின் நேரே பிடித்து ஆடல்.

27. **மத்தல்லி :** வலது கால் நுனியை ஊன்றி, இடது காலைக் குறுக்காக அமைத்து, வலது கையைத் தொடைமேல் வைத்து, இடது கையைக் கடகாமுகமாக மார்பில் சேர்த்து மத்தளக்காரர் போல நின்று ஆடுதல்.

28. **அர்த்தமத்தல்லி :** முற்கூறியவாறு நின்று இடது கையை மட்டும் வீசி நின்றாடுதல்.

29. **ரேசித நிகுட்டிதம்** : வலது கையை வீசி, வலது காலை மடக்கி, வாம ஹஸ்தத்தைத் தோல ஹஸ்தமாகக்கொண்டு நின்று ஆடுதல்.

30. **பாதாபவித்தகம்** : சூசி பாதமாக நின்று, நாபிக்கு நேரே கைகளை வைத்து, இரண்டாவதாகிய பாதத்தை அபவித்த கரணமாக வைத்துத் தொடைகளால் சுழற்றி ஆடுதல்.

சூசி பாதம் : குதிகாலைத்தூக்கிக் கால் நுனியை ஊன்றி நிற்றல். அபவித்த கரணம்—தொடைகளை வலயமாகச் சுழற்றல்.

31. **வலிதம்** : இடது கையைத் தொடையில் பாம்புத்தலைபோல வளைத்து சூசி பாதமாகப் பிரமரிசாரியைச் செய்து-வண்டுபோலச் சுழன்று ஆடுதல்.

32. **கூர்ணிதம்** : வலது கரத்தைப் பக்கவாட்டில் உயர்த்திப் பின், இடது கையைத் தோல்ஹஸ்தமாகத் தொங்கவிட்டு, ஸ்வஸ்திக நிலையில் பிரிந்தது போன்று பாதத்தை வைத்து ஆடுதல்.

33. **லலிதம்** : வலது கையைக் கரி ஹஸ்தமாக நீட்டி இடது கையைத் தலைக்கு நேராக வளைத்துப்புறம் தெரியும் படியாக நீட்டிப் பலமுறை தரையைத் தட்டு பாதத்துடன் ஆடுதல்.

34. **தண்டபட்சம்** : வலது முழந்தாளை மார்புக்கு நேராக உயர்த்தி, இடது முழந்தாளைத் தாழ்த்தி, கொடிபோன்று, கைகளை இருமருங்கும் துவளவிட்டு ஆடுதல்.

35. **புஜங்கத்ராஸ்தரேசிதம்** : வளைந்த காலைத் தூக்கிக் கைகளை இடப் பாகத்தில் பாம்பு போலத் தொங்கவிட்டு ஆடுதல்.

36. **நூபுரம்** : முற்கூறியவாறு லதா ரேசிதமாகக் கைகளை இருமருங்கும் நீட்டி ஒரு காலை மற்றொரு காற் சிலம்பின் மேல் வைத்து ஆடுதல்.

37. **வைசாகரேசிதம்** : கைகால்களை வளைந்து, இடுப்பு, கழுத்து ஆகிய வற்றையும் வளைத்துச் சுழன்று ஆடுதல். வைசாகம் : மூன்றரை அடி இடைவெளி இருக்கும் வண்ணம் கால்களை வைத்துக் கடகாமுக முத்திரையுடன் ஆடுதல்.

கழுத்து முதலிய அங்கங்களைத் தனித்தனியே சுழற்றலும் வளைத்தலும் வைசாக ரேசிதம் என்பார் ராகுலகர்.

38. **பிரமரகம்** : திரிக பாதத்தால் வளைந்து நின்று இடது கையை அஞ்சிதமாக அமைத்து, வலது கையைச் சதுரமாக வைத்து நின்று ஆடுதல். திரிகம் : வளைந்த காலைத்தூக்கி, ஊன்றிய காலைச் சிறிது மடக்கி முழந்தாள்கள் ஸ்வஸ்திகம் போல அமையுமாறு வைத்து நிற்றல்.

39. **சதுரம்** : வலது காலைக் குட்டிதமாக அமைத்துச் சதுரம் அமையக் கைகளை இருமருங்கும் நீட்டி நின்று ஆடல்.

40. **புஜங்காஞ்சிதகம்** : கால்களைப் பாம்பு ஓடுவது போன்றமைத்து வலது கையைத் தொங்கவிட்டுத் தாண்டவம் ஆடுதல்.

41. **தண்டக ரேசிதம்:** தண்டம் போலக் கைகளை நீட்டியும் வளைத்தும் வைத்துத் தண்டபாத சாரியால் ஆடுதல்.

42. **விருச்சிககுட்டிதம்:** தேள் கொடுக்கைப் போன்று காலை அமைத்துக் கைகளைத் தேளின் முன் பரிசினி போல வைத்து நின்று ஆடுதல்.

43. **கடிப்பிராந்தம்:** வளைந்த பாதத்தைத் தூக்கி முழந்தாளை மேல் நோக்கியதாகச் சிறிது உயர்த்தி, நிற்பதாகிய சூசி பாதத்துடன் ஒரேகாலத்தில் இடுப்பை வளைத்து ஆடுதல். இடுப்பு வளைந்தாடும்போது கைகளும் அதனை ஒட்டிச் சுழல வேண்டும்.

44. **லதாவிருச்சிகம்:** இடது காலைச் சிறிது மடக்கி ஊன்றி, வலது காலைத் தேள்கொடுக்கு போன்று, பின்புறம் வளைத்து நீட்டி, இடது கையைக் கொடிபோல நீட்டித் துவளவிட்டு நின்று ஆடுதல்.

45. **சின்னம்:** வைசாக ஸ்தானத்தில் கைகளை அலபத்ம முத்திரையாகப் பிடித்து இடுப்பில் வைத்து நின்றாடல்.

46. **விருச்சிக ரேசிதம்:** காலைத் தேள்போல வைத்து இருகைகளையும் ஸ்வஸ்திகமாக அமைத்து இருமருங்கும் நீட்டி நின்றாடல்.

47. **விருச்சிகம்:** தோள், சிரம் இவற்றிடைக் குறிக்கும் கரிஹஸ்தக் கைகளுடன் கால் பின்பக்கம் வளைந்திருக்க, தூரத்தில் வளைந்த பின்பக்கத்துடன் நின்று ஆடுதல்.

48. **வ்யம்ஸிதம்:** வளைந்த வலது காலை ஐந்தடி அகற்றிவைத்து நிற்கும் ஆலீடஸ்தானத்தில் நின்று, கைகளை மார்புக்கு நேரே மடக்கிப் பிடித்து, மேலும் கீழுமாய்ச் சுழன்று ஆடுதல்.

49. **பார்சுவ நிகுட்டகம்:** கைகளை ஸ்வஸ்திகமாகப் பக்கங்களில் அமைத்து நிகுட்டித பாதமாக நின்று ஆடுதல்.

50. **லலாட திலகம்:** வலது காலை விருச்சிக பாதம் போன்று நெற்றிக்கு நேரே தூக்கி, இடது கையால் பிடித்துக் கொண்டு நெற்றியில் பொட்டு வைத்தல்,

51. **கிராந்தகம்:** பின்பக்கம் சாய்ந்து நின்று வளைந்த காலைத் தூக்கி, முன்பக்கம் விசிறி நின்று, காற்படத்தைத் தரையில் தட்டுதலாகிய அதிக்கிராந்த சாரியில் நின்று, கைகளை மார்புக்கு நேராக அமைத்து நின்று ஆடுதல்.

52. **குஞ்சிதம்:** முதலில் வலது காலை வளைத்து, வலது கையையும் வளைத்து, இடது காலைத் தூக்கி நிறுத்தி ஆடுதல்.

53. **சக்ரமண்டலம்:** முன்பாவது, பின்பாவது கைகால் நுனிகளைப் பூமியில் ஊன்றி, உடலை வளைத்துச் சக்கரத்தின் வட்டம்போல இருந்து ஆடல்.

54. **உரோமண்டலம்:** ஸ்வஸ்திகமாக வீசப்பட்ட பாதத்துடன் அபவித்த நிலையில் கைகளை வட்டமாக மார்பில் அமைத்து நின்று ஆடல்.

55. **ஆக்ஷிப்தம்:** ஆக்ஷிப்த சாரியாகப் பக்க வாட்டில் சிறிது சாய்ந்த கைகளால் சதுரமான கடகாமுகக் கையுடன் நின்று ஆடல்.

56. **தலவிலஸிதம் :** உயரத்தூக்கிய வலதுகாலுடன் பாதகக்கையையும் இரு பக்கங்களிலும் தோளுக்கு மேலே உயர்த்தி நின்று ஆடுதல்.

57. **அர்க்கலம் :** கால்நுனியால் நின்றுகொண்டு பின்புறமாகச் சாய்ந்து கைகளைத் தரையில் ஊன்றி வளைந்து நிற்றல். இந்நடனத்திற்கு ஒரே சமயத்தில் இருகைகளும் அலபல்லவமாகச் சற்றே முன் நீட்டப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

58. **விட்சிப்தம் :** கை, கால் இரண்டையும் ஒருபக்கமாகப் பின்புறமாகவாவது, பக்கங்களிலாவது நீட்டி ஆடுதல்.

59. **ஆவர்த்தம் :** மடங்கிய காலை நீட்டி, விரைவாக மீட்டும் திருப்பிப் பிரயோகத்திற்கு ஏற்றாற் போன்றுக் கைகளைத் திருப்பி ஆடுதல்.

60. **டோலாபாதம் :** வளைந்த காலைத் தூக்கி, ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்குத் தொங்கவிட்டு அசைந்து நின்று ஆடுதல்.

61. **விவர்த்தம் :** இடதுகாலையும் உடலையும் சிறிது வளைத்துத் தூக்கி, கைகளை இருமருங்கும் விசிறி பிரமரிஹஸ்தமாக வைத்து ஆடுதல்.

62. **விநிவர்த்தம் :** சூசி ஹஸ்தமாக, வலது காலைத் தொடைப் பக்கத்தில் வளைத்து, ஸ்வஸ்திகம் போல் வைத்து, மற்றொரு காலைத் திருப்பும்போது தொடை திரும்பும்படி பக்கங்களில் ஹம்ஸபட்சம் அமையச் சுற்றி ஆடுதல்.

63. **பார்சுவக் கிராந்தம் :** காலைமுன்வீசி, அதற்குத்தக ஏற்றவாறு கைகளையும் வீசி நின்று ஆடுதல்.

64. **நிஸ்தம்பிதம் :** வலது காலை வளைத்து, குதத்தின் சமீபமாக வைத்து உயர்த்தி, கடகாமுக ஹஸ்தமாக ஒரு கையை அமைத்து வலதுகையை லலாடதிலகமாகச் செய்து ஆடுதல்.

65. **வித்யுத் பிராந்தம் :** வலது காலைக் குதத்திலிருந்து நன்றாக வளைத்துப் பின்புறமாக உயர்த்தி, இடது கையை இடதுகாலின் இடுப்பு ஓரமாக முன்புறம் தொங்க விட்டு வலதுகையை விசிறி ஆடுதல்.

66. **அதிக்கிராந்தம் :** முன்னோக்கி அதிக்கிராந்த சாரியாக நடந்து, பிரயோகத்திற்குத் தக்கவாறு கைகளை அமைத்து நின்று ஆடுதல்.

67. **விவர்த்திதம் :** கைகால்களை ஆக்ஷிப்தமாக அமைத்து பிரமரி ரீதியாகத் திரும்பித் திரும்பி ஆடுதல்.

68. **கஜகரீடிதகம் :** வளைந்து சுட்டிய இடக்கையைக் காதுக்கு நேராகப் பிடித்து, வலது கையை லதா ஹஸ்தமாக அமைத்து டோலா பாத சாரியால் நின்று ஆடுதல்.

69. **தல ஸம்ஸ்போடிதம் :** விரைவாகக் காலைத் தூக்கி முன்னாக வைத்து, கைகளைத் தல ஸம்ஸ்போடிதமாக வைத்து ஆடுதல்.

70. **கருடப்லுதகம் :** விருச்சிக பதமாக, பக்கத்தில் வளைய நின்று, ஒரு கையை மார்பில் வைத்து, மற்றொரு கையைக் கண்டத்தில் சுட்டும்படி வைத்துக் கொண்டு நின்று ஆடுதல்.

71. **கண்ட சூசி :** சூசி பாதமாகப் பக்கத்தில் வளைய நின்று, ஒரு கையை மார்பில் வைத்து, மற்றொரு கையைக் கண்டத்தில் சுட்டும்படி வைத்துக் கொண்டு நின்று ஆடுதல்.

72. **பரிவிர்த்தம் :** சூசி பாதமாக மற்றொரு காலைத் திருப்பிப் பதாகையாகக் கைகளை இருபக்கமும் சிரத்தில் சுட்டவைத்து ஆடுதல்.

73. **பார்சுவ ஜாநு :** ஒரு காலைச் சமமாக வைத்து, ஒரு காலைத் தொடையின் பின்னாக அமைத்து முஷ்டி ஹஸ்தமாகக் கையை மார்பில் வைத்து, மற்றொரு கையைப் பக்கமாக வீசி நின்று ஆடுதல்.

74. **கிருத்ராவலீனகம் :** இடது காலைப் பின்புறமாக வளைத்து, வலது காலைத் தூக்கி முன்வைத்து, கைவீசி நின்று ஆடுதல்.

75. **சன்னதம் :** சூசி ஹஸ்தமான கைகளைக் கட்டிக் கொண்டு, கால்களை வளைத்து விரல் நுனியைப் பூமியில் ஊன்றச் செய்து ஆடுதல்.

76. **சூசி :** கால் நுனிகளால் நின்று சூசி ஹஸ்தமாகக் கைகளைப் பிரயோகத் திற்குத்தக மார்புக்கு நேராக அமைத்து ஆடுதல்.

77. **அர்த்த சூசி :** வலது கையை அலபத்மமாகத் தலைக்கு நேரே பிடித்து, சூசிக்குக் கூறப்பட்டது போல நின்றாடுதல்.

78. **சூசீவித்தம் :** சூசி பாதமாக நின்று வலது கையை இடுப்பிலும் இடது கையை மார்பிலும் அமைத்து நின்று ஆடுதல்.

79. **அபக்ராந்தம் :** தொடைகளை வளைத்து, வளைந்த காலைத் தூக்கிப் பக்கங்களில் வளைய வைத்து பிரயோகத்திற்குத் தக, கைகளை அமைத்து ஆடுதல்.

80. **மயூரலலிதம் :** விருச்சிகபதம் அமைத்து, கைகளை ரேசிதமாக வைத்துப் பிரமரியாகவும், சுழன்றும் மயில் போன்று ஆடுதல்.

81. **சர்ப்பிதம் :** வளைந்து வீசப்பட்டக் கால்களுடன் தலையையும் சாய்த்து நின்று, அதற்குத்தக. கைகளை ரேசிதமாக வைத்து, மாறி மாறி அவ்வாறே இரு மருங்கும் ஆடுதல்.

82. **தண்டபாதம் :** வலது காலைப் பின்பக்கமாகத் தூக்கி, இடது காலைத் தரையில் நுனிக்காலால் தட்டி நின்று, சிலம்பு ஒலிக்க, இடது கையை உயரதூக்கி, வலது கையைத் தொங்கவிட்டு நின்று ஆடுதல்.

83. **ஹரிணப்லுதம் :** முழந்தாளை வளைத்துத் தூக்கி, இடப்புறமாகத் தோளுக்கு நேராகத் தொங்க விட்டு ஆடுதல்.

84. **பிரேங்கோலிதம் :** பாதங்களை வளைய வைத்துக் கொண்டு, கைகளைத் தோலாகரமாகப் பக்கத்திற்குப் பக்கம் திருப்பி, பிரமரிசாரியாகத் துள்ளிக்குதித்து ஆடல்.

85. **நிதம்பம் :** மேல் நோக்கிய விரல்களையுடைய பதாகை முத்திரையோடு கூடிய கைகளால் தலை வரையில் கொண்டு சென்று, பின்பு, திரும்பிய கைகளால் மேலிடத்துச் சென்று திரும்பியதாகக் கைகளை அமைத்து, சுற்றிலும் பார்க்கக் கூடியதாகப் பதாகக் கையை அமைத்துப் பின்பு உடம்பை நோக்கியதாகக் கையைத் தொங்க விட்டு நிதம்பநிருத்த ஹஸ்தத்துடன் ஆடுதல்.

86. **ஸ்கலிதம் :** இடது காலைச் சமபதமாகவும், வலது காலை வளைத்தும், வலது கையை ஹம்ஸ பட்சமாகவும், இடது கையைத் தொங்க விட்டும் இவ்வாறு மாறி மாறி ஆடுதல்.

87. **கரிஹஸ்தகம் :** வலதுகால் குதியைச் சாய்ந்து ஊன்றி, இடது காலைச் சிறிது மடங்கி வைத்து, லதா ஹஸ்தமாக அமைந்த ஒரு கையைத் தூக்கி, ஒரு பக்கத்திலிருந்து ஒரு பக்கம் அசைத்து, பின்பு திரிபதாக முத்திரையாகக் காது ஓரத்தில் ஒரு கையை அமைத்து நின்று ஆடுதல்.

88. **பிரஸர்ப்பிதகம் :** ஹம்ஸ பட்சமாகவும், லதாஹஸ்தமாகிய நிருத்த ஹஸ்தமாகவும் கைகளை அமைத்து, வளைந்தகைக்கு எதிராகவுள்ள காலால் மெதுவாகப் பூமியைத் தட்டிக் கொண்டு நடத்தல்.

89. **சிம்மவிக்ரீடிதம் :** அலாத சாரியை முன்னால் விரைவாகச் செய்து, அதனை ஓட்டி, கைகளையும் வட்டமாகச்சுழற்றி ஆடுதல். இது சிங்கத்தின் கையை அடித்தல் போலிருப்பதால் இப்பெயர் பெற்றது.

90. **ஸிங்காகர்ஷிதகம் :** விருச்சிக பாதமாகநின்று, வலது கையை வளைத்து, ஸ்வஸ்திகமாக அமைத்து, இடதுகையைப் பதாகையாகத் தொடைக்கு நேரே தொங்கவிட்டு ஆடி, மீண்டும் இடதுகாலையும் அதற்கு ஏற்பக் கைகளையும் அமைத்து நின்று ஆடுதல்.

91. **உத்ருத்தம் :** பாதங்களை ஊன்றி முழங்காலால் இடுப்பு முதலியவை திரும்பும்படியாக அமைத்து, கைகளையும் முறுக்கி நின்று ஆடுதல்.

92. **உபசிருதகம் :** வளைந்த காலைத் தூக்கி, ஆக்ஷிப்தசாரியை அமைத்து, இடது பக்கமாகத் திரும்பி, கைகளைத் திருப்புவதால் உடலை வணங்கச் செய்து, கைகளையும் லதா ஹஸ்தமாகத் தொங்கவிட்டு நின்று ஆடுதல்.

93. **தலஸங்கட்டிதம் :** கால்களைத் தோலாபாதமாக இருமருங்கும் வளைத்துக் கைகளைப் பதாகை முத்திரையாகப் பிடித்து, கீழ்நோக்கி, இரண்டையும் சேர்த்துப் பிடித்துநின்று, இடதுகையை இடுப்பிலும் வலதுகையை ஹம்ஸபட்சமாகவும் பிடித்துச் சுழன்று ஆடுதல்.

94. **ஜநிதம் :** காலை இருமருங்கும் வளையவைத்து, வலது கையை முஷ்டிஹஸ்தமாக மார்புக்கு நேரே பிடித்து, இடதுகையை லதாஹஸ்தமாகத் தொங்கவிடுதல்.

95. **அவஹித்தகம் :** ஜநிதத்தைப் போலநின்று, கைகளை மார்புக்கு நேரே மடக்கி, நெற்றி, மார்பு இவற்றிற்கு நேராக முறையே பிடித்து, தளிர் ஒன்றுக்கொன்று நேராக இருப்பது போன்று கைகளை அமைத்து மெதுவாக ஆடுதல்.

கிளிமூக்குப் போலக் கைகளை மார்புக்கு நேரே அணைத்து நின்று ஆடுதல் என்பர் சிலர்.

96. **நிவேசம் :** கைகளை மார்புக்கு நேராகப் பிடித்து, மார்பைத் தாழ்த்தி, மண்டலஸ்தானகமாகநின்று ஆடுதல்.

97. **ஏலகாக்கிரீடிதம் :** வளைந்த, வணங்கிய உடல் அமைப்போடு தலசஞ்சர பாதங்களால் தூக்கி அசைத்துத் துள்ளிவிழுதல்.

98. **ஊரூத்விருத்தம் :** வலது கையைச் சற்று திருப்பித் தொடையில் வைத்துக்கொண்டு முழங்காலை வளைத்துச் சிறிது தூக்கி ஆடுதல்.

99. **மதஸ்கலிதம் :** கைகளைத் தோலா ஹஸ்தமாகவும், சிரத்தைச் சிறிது வளைத்தும் கால்கள் இரண்டையும் வளையவைத்து ஆடுதல்.

100. **விஷ்ணுக்கிராந்தம் :** கால்களை முன்னர் வீசியும், ஆகாயத்தை நோக்கி வளைத்தும், கைகளை ரேசிதமாகவும் அமைத்து நின்று ஆடுதல்.

101. **ஸம்பிராந்தம் :** கைகளை மடக்கி, இடுப்புக்கு நேராக வைத்துக் கொண்டு, தொடைகளையும், அவ்வாறே வளைய வைத்து நின்று ஆடுதல்.

102. **விஷ்கம்பம் :** அபிவித்தகரமும் நிகுட்டித பாதமும் அமைய இடது கையை மார்பில் வைத்துக்கொண்டு நின்று ஆடுதல்.

103. **உத்கட்டிதம் :** பாதங்களைச் சதுரம்பட வளைத்து, முன்காலால் நின்றும், கைகளைத் தலசங்கட்டிதமாக வைத்தும் பக்கத்தைச் சிறிது வணங்கி நின்றும் ஆடுதல்.

104. **விருஷபக் கிரீடிதம் :** கைகளை அலாதக ஹஸ்தமாகச் செய்து கால்களை வளைத்து நின்று ஆடுதல்.

105. **லோலிதம் :** கைகளை மார்புக்கு நேராக மலர்ந்த தாமரை போன்று அமைத்து, கால்களை ஸ்வஸ்திகமாக வைத்து, சிறிது சாய்ந்த முகத்தோடு ஆடுதல்.

106. **நாகாப ஸர்ப்பிதம் :** வலது கையை மார்புக்கு நேராக வைத்து, இடது கையைச் செவிக்கு நேராக வைத்து, வலது காலை முழங்கால் வரையில் மடக்கி, இடது காலைப் பின்புறமாகக் கழுத்துவரையில் தூக்கி, பாம்பு அசைவது போன்று அசைந்து ஆடுதல்.

107. **சகடாஸ்யம் :** கை, கால், உடல் இவற்றை வண்டிச் சக்கரம் போல அமைத்து, முகத்தைத் திரி பதாகை போல அமைத்து ஆடல்.

108. **கங்காவதரணம் :** ஆகாயத்தினின்றும் கங்கை கீழே இறங்குவது போன்று, இருகைகளையும் பூமியில் ஊன்றி, உடலைப் பின்புறமாக வளைத்து, கால்களை இடுப்புவரை நேரே தூக்கி ஆடுதல்.

இந்நூற்றெட்டு பேதங்களும் சாரிகளுக்கும் வழங்கப்படுகின்றன. ஆகையால் சாரிகளாலேயே இவற்றிற்குப் பெயர் அமைத்தது என்று கூறுதலே பொருந்தும்.

✶ ✶ ✶

பிற்சேர்க்கை: 4

சிவபராக்கிரமம் என்னும் நூலில் காணப்பெறும் சிவ வடிவங்கள் *

1. இலிங்கமூர்த்தி
2. இலிங்கோற்பவமூர்த்தி
3. முகலிங்கமூர்த்தி
4. சதாசிவமூர்த்தி
5. மகாசதாசிவமூர்த்தி
6. உமாமகேசமூர்த்தி
7. சுகாஸனமூர்த்தி
8. உமேசமூர்த்தி
9. சோமாஸ்கந்தமூர்த்தி
10. சந்திரசேகரமூர்த்தி
11. விருஷபாரூடமூர்த்தி
12. விருஷபாந்திகமூர்த்தி
13. புஜங்கலளிதமூர்த்தி
14. புஜங்கத்ராஸமூர்த்தி
15. சந்தியாநிருத்தமூர்த்தி
16. சதாநிருத்தமூர்த்தி
17. சண்டதாண்டவமூர்த்தி
18. கங்காரமூர்த்தி
19. கங்காவிஸர்ஜனமூர்த்தி
20. திரிபுராந்தகமூர்த்தி
21. கல்யாணசுந்தரமூர்த்தி
22. அர்த்தநாரீசுவரமூர்த்தி
23. கஜார்யுத்தமூர்த்தி
24. ஜ்வராபக்னமூர்த்தி
25. ஸார்த்தூலஹரமூர்த்தி
26. பாசுபதமூர்த்தி
27. கங்காளமூர்த்தி
28. கேசவார்த்தமூர்த்தி

---

*சிவபராக்கிரமம்: ஈக்காடு இரத்தினவேலு முதலியார் இயற்றியது, அ. முத்துவேல் முதலியார் பதிப்பு: சென்னை, மூன்றாம் பதிப்பு: 1932,

29. பிக்ஷாடனமூர்த்தி
30. சிம்ஹாக்னமூர்த்தி
31. சண்டேசானுக்ரஹமூர்த்தி
32. தக்ஷிணாமூர்த்தி
33. யோகதக்ஷிணாமூர்த்தி
34. வீணாதக்ஷிணாமூர்த்தி
35. காலாந்தகமூர்த்தி
36. காமதகனமூர்த்தி
37. லகுளேஸ்வரமூர்த்தி
38. பைரவமூர்த்தி
39. ஆபதுத்தாரணமூர்த்தி
40. வடுகமூர்த்தி
41. க்ஷேத்திரபாலகமூர்த்தி
42. வீரபத்திரமூர்த்தி
43. அகோராஸ்திரமூர்த்தி
44. தக்ஷயக்ஞஹதமூர்த்தி
45. கிராதமூர்த்தி
46. குருமூர்த்தி
47. அச்வாரூடமூர்த்தி
48. கஜாந்திகமூர்த்தி
49. ஜலந்தரவதமூர்த்தி
50. ஏகபாதத்ரிமூர்த்தி
51. த்ரிபாதத்ரிமூர்த்தி
52. ஏகபாதமூர்த்தி
53. கௌரிவரப்ரதமூர்த்தி
54. சக்ரதானஸ்வரூபமூர்த்தி
55. கௌரிலீலாசமன்விதமூர்த்தி
56. விஷாபஹரணமூர்த்தி
57. கருடாந்திகமூர்த்தி
58. பிரம்மசிரஸ்சேதமூர்த்தி
59. கூர்மஸம்ஹாரமூர்த்தி
60. மத்ஸ்யஸம்ஹாரமூர்த்தி
61. வராஹஸம்ஹாரமூர்த்தி
62. பிரார்த்தனாமூர்த்தி
63. ரக்தபிக்ஷப்ரதானமூர்த்தி
64. சிஷ்யபாவமூர்த்தி

★ ★ ★



பிற்சேர்க்கை : 5

மகேச்வர மூர்த்தியும் அவர்தம் சக்தியும்

மூர்த்தி பே4தே3ந ப2லபே4த ப்ரத3ஶந பரஶ்ரவதுர்த்தோ3 ऽநுப3ந்த4 :
ஸ்ரீதா2க்ஷிண குடத்3வீப க்ஷேத்ர மாஹாத்ம்யே த்ரிம்ஶேத்4யாயே
ஏக ஸப்ததிதம ஶ்லோகோபக்ரம ஶ்லோகாவஸநபா4கா3த் ஸமுத்3த்4ருத :

1.	லிங்கோ3த்1ப4வ மூர்த்தி :	—	மோக்ஷப்ரதாயிநீ
2.	த்ரிமூர்தகபு4தா மூர்த்தி :	—	வம்ஶவ்ருத்3தி4ப்ரதாயிநீ
3.	கல்யாணஸுந்த3ர மூர்த்தி :	—	ஸர்வதா3 மங்க3ளப்ரதா3யிநீ
4.	உமாஸகாய மூர்த்தி :	—	பா4ர்யா ஸௌக்2ய ப்ரதா3யிநீ
5.	ஸுகா2ஸீந மூர்த்தி :	—	த4ர்மார்(த்)த2காமமோக்ஷப்ரதா3யிநீ
6.	க3ங்கா2த4ர மூர்த்தி :	—	ஸர்வ பாபப்ரணாஶநீ
7.	நடேஶ மூர்த்தி :	—	ஸம்பத்3யோக3ப்ரதாயிநீ
8.	சண்டே3ஶாநவரப்ரத3 மூர்த்தி :	—	மஹா பாதக நாஶிநீ
9.	வ்ருஷப4வாஹந மூர்த்தி :	—	த4ர்மஸித்3தி1ப்ரதாயிநீ
10.	ஸ்ரீநீலகண்ட4 மூர்த்தி :	—	விஷதோ3ஷப்ரணாஶிநீ
11.	ஹரிஹர மூர்த்தி :	—	த4ர்மார்(த்)த2 தா3யிநீ
12.	ஏகபாத மூர்த்தி :	—	மஹாரோக3 விநாஶிநீ
13.	அர்(த்)த4நாரீஶ்வர மூர்த்தி :	—	ஸர்வஸௌக்2ய ப்ரதா3யிநீ
14.	ஸ்ரீத3க்ஷிணா மூர்த்தி :	—	மேதா4 ப்ரக்ஞா பரதா3யிநீ
15.	ஸோமாதி3நாயக மூர்த்தி :	—	ஸர்வஸித்3தி4 ப்ரதா3யிநீ
16.	ஸோமாஸ்கந்த மூர்த்தி :	—	புத்ரஸௌக்2ய ப்ரதா3யிநீ
17.	சந்த்3ரமௌளீஶ்வர மூர்த்தி :	—	த4நதா4ந்ய ப்ரதாயிநீ
18.	வீரப4த்3ர மூர்த்தி :	—	ஶத்ருவித்3வேஷ நாஶிநீ
19.	காலஸம்ஹார மூர்த்தி :	—	ஸர்வாரிஷ்ட விநாஶிநீ
20.	காமாந்தக மூர்த்தி :	—	ரோக3விக்4ந விநாஶிநி
21.	க3ஜாந்தக மூர்த்தி :	—	பராபி4சார ஶமநீ
22.	த்ரிபுரஸம்ஹார மூர்த்தி :	—	ஜந்மஜராம்ருத்யு விநாஶிநீ
23.	பி4க்ஷாடந மூர்த்தி :	—	யோஷித்ப்ருந்த3 விமோஹிநீ
24.	ஜலந்த4ர ஸம்ஹார மூர்த்தி :	—	து3ஷ்ட விநாஶிநீ
25.	ஶரப4 மூர்த்தி :	—	அரிப்ரணாஶிநீ
26.	பை4ரவ மூர்த்தி :	—	ரக்ஷாகரீ

பிற்சேர்க்கை: 6

ஆகமஸார ருத்ர த்ரிசதி

தியானம்:

பாதே விஷ்ணு விலோசனம் கடிதடே
ஸ்ரீநார ஸிம்ஹாஜினம்
ஹஸ்தே சூல கபால டக்க டமரும்
கண்டேது ஹாலாஹலம் |
சூலாக்ரே சவ கேசவம்
ஹரிசிரோ மாலாம் ததந் மௌளினா
ஸர்வம் விஷ்ணுமயம் ஸதாசிவ வபுः
வக்த்ரம் புராணோதிதம் ||

ஓம் சிவாய நம:
,, துரிய சைதந்யாய நம:
,, கூடஸ்த சைதந்யாய நம:
,, ப்ரண வார்த்தாய நம:
,, ஸர்வ ச்ருத்யர்த்தாய நம: 5

,, தத்பத லக்ஷ்யார்த்தாய நம:
,, அஹம்பத லக்ஷ்யார்த்தாய நம:
,, அசரீராய நம:
,, அதீந்திரியாய நம:
,, அநந்த காரணாய நம: 10

,, சுத்த சைதந்யாய நம:
,, ஆத்மநே நம:
,, ஸச்சிதாநந்தாய நம:
,, ஜகத் ஸ்ருஷ்டிஸ்திதிலய காரிணே நம:
,, அதர்க்ய மஹிம்னே நம: 15

ஓம் ஜகததிஷ்டானாய நம:
,, பரிச்சேத ரஹிதாய நம:
,, பேதத்ரய ரஹிதாய நம:
,, ச்ருதிப்ரணவ கம்யாய நம:
,, அந்தரிந்த்ரிய கம்யாய நம: 20

,, நிஷ்களாய நம:
,, ஸதாசிவாத்மனே நம:
,, நிஷ்கள சகளாய நம:
,, நிர்விசேஷாய நம:
,, வியதீந்த்ர சாபவத் தேஜோமயவபுஷே நம: 25

,, அவ்யக்தாய நம:
,, விஞானாத்யனுக்ரஹ நிமித்த ஸதாசிவாத்ம நாநா ரூபவதே நம:
,, ஸதாசிவாத்மனே நம:
,, லிங்கத்ரய ரஹிதாய நம:
,, புருஷாக்ருதயே நம: 30

,, ஏகஸ்மாதபி சிவசக்த்யாத்மனோ பயஸ்மைநம:
,, ஸஹஸ்ர சீர்ஷாய நம:
,, பஞ்ச சீர்ஷாய நம:
,, விச்வதோ முகாய நம:
,, பஞ்சமுகாய நம: 35

,, விச்வதச்சக்ஷுஷே நம:
,, பஞ்சதசவபுஷே நம :
,, விச்வதோ ஹஸ்தாய நம:
,, தசஹஸ்தாய நம:
,, விச்வத: பாதாய நம: 40

,, த்விபாதாய நம:
,, ஜாதிவர்ணரஹிதாய நம:
,, தேவப்ராஹ்மணாய நம:
,, அவர்ண்ய குணாய நம:
,, தேஹதாவள்ய சுத்தஸத்வாத்மக ப்ரகடனாய நம: 45

,, அவஸ்தா ரஹிதாய நம:
,, சந்தத் ஜாக்ரதயே நம:
,, ஸ்வயம் விச்வாவ பாஸகாய நம:
,, சந்த்ரகலா சூடாமணயே நம:
,, அனுபமா ரஹிதாய நம: 50

ஓம் தேக சரண காந்த்யா ஸத்வாதிகாய நம:
,, நிர்குணாய நம:
,, குணத்ரயாத்மக மாயா சபலத்வாத் மகத்வ ப்ரகடனாய நம:
,, ச்ருதி சூடாமணயே நம:
,, சந்த்ர சூடாமணயே நம: 55

,, கங்கா பாஸக மௌலயே நம:
,, ஸ்வகத பேத ரஹிதாய நம:
,, ஸந்தத காந்த மந்தஸ்மிதஸௌந்தர வதனாரவிந்தாய நம:
,, வர்த்தித்வ ரஹிதாய நம:
,, கைலாஸ வாஸினே நம: 60

,, ஸ்வயம் ஸர்வாதாராய நம:
,, அந்தர்த்யான ரோஹண வ்யஸனாய நம:
,, அக்லேத்யாய நம:
,, கல்பகாதி திவ்யதரு பரிபாலக குஸுமப்ருந்த நிஷ்யந்தமான் மகரந்த ஸிந்து ஸந்தோஹ ஸந்தத ஸந்த்யஜ்யமான ஸகளாங்காய நம:
,, ஸஹளாங்காய நம: 65

,, விஜாதிய ரஹிதாய நம:
,, முக்தாதபத்ர நித்ய நிர்கள மௌக்திகதாரா சந்தத நிரந்தர ஸர்வாங்காய நம:
,, அக்ரியாய நம:
,, ஸர்வப்ரபஞ்ச சிருஷ்ட்யாதி பஞ்சக்ருத்ய கர்த்ரே நம:
,, அநங்காய நம: 70

,, மஹேஸ்வர ஜனகாய நம:
,, நிஷ்பந்தாய நம:
,, ஸ்வயம் ஸர்வாதாராய நம:
,, மூர்த்தித்வ ரஹிதாய நம:
,, பஞ்ச பிரம்ம மூர்த்தயே நம: 75

,, சரீரத்ரய ரஹிதாய நம:
,, சர்வஞ்ஞாய நம:
,, மகேச்வராத்மனே நம:
,, ஈச்வர சைதந்யாய நம:
,, தத்பதோபஹிதார்த்தாய நம: 80

,, அஹம்பதோப ஹிதார்த்தாய நம:
,, ஸகலாய நம:
,, ருத்ர விஷ்ணுப்ரம்மாதி ஜனகாய நம:
,, ஸதாசிவாய நம:
,, பஞ்சப்ரம்மாத்மக ஸர்வாங்காய நம; 85

ஓம் ஈசானாத்மக மூர்த்னே நம:
,, தத்புருஷாத்மக வதனாய நம:
,, அகோராத்மக ஹ்ருதயாய நம:
,, வாமதேவாத்மக குஹ்யாய நம:
,, ஸத்யோ ஜாதாத்மக பாதாய நம: 90

,, பஞ்ச ப்ரம்மாத்மக வதனாய நம:
,, ஈசானாத்மக ஊர்த்வ வதனாய நம:
,, தத்புருஷாத்மக பூர்வ வதனாய நம:
,, அகோராத்மக தக்ஷிண வதனாய நம:
,, வாமதேவாத்மக உத்தர வதனாய நம: 95

,, ஸத்யோஜாதாத்மக பஸ்சிம வதனாய நம:
,, பஞ்ச ஸாதாக்யாத்மக பஞ்ச வதனாய நம:
,, சிவசாதாக்ய தத்வாத்மக ஊர்த்வ வதனாய நம:
,, கர்த்ரு சாதாக்யாத்மக தக்ஷிண வதனாய நம:
,, அமூர்த்தி சாதாக்யாத்மக உத்தர வதனாய நம: 100

,, மூர்த்திசாதாக்யாத்மக பஸ்சிம வதனாய நம:
,, கர்ம சாதாக்யாத்மக பூர்வ வதனாய நம:
,, பராபரசிவ தத்வாத்மனே நம:
,, பராமூர்த்தி தத்வாத்மனே நம:
,, ஸூக்ஷ்மாத் ஸூக்ஷ்மமூர்த்தி தத்வாத்மனே நம: 105

,, ஸூக்ஷ்மமூர்த்தி தத்வாத்மக கர்மாத்மனே நம:
,, தேக ரஹித நிஷ்காளாத்மனே நம:
,, தேக ஸம்யுத ஸகலாத்மனே நம:
,, தேஹி தேஹ ஸம்பந்தி பாவாத்மனே நம:
,, சுத்தவித்யா தேஹமஹா ஸதாசிவாய நம: 110

,, ஈசானாத்மக ஊர்த்வ வதனாய நம:
,, ஈச்வதாத்மக தக்ஷிண வதனாய நம:
,, ப்ரம்மாத்மக உத்தர வதனாய நம:
,, விஷ்ணுவாத்மக பூர்வ வதனாய நம:
,, ஸதாசிவாத்மக பஸ்சிம வதனாய நம: 115

,, பஞ்சகலாத்மக ஸர்வாங்காய நம:
,, சாந்த்யதீத கலாத்மக மூர்த்வாதிகாய நம:
,, சாந்தி கலாத்மக ப்ரவாதிகாய நம:
,, வித்யா கலாத்மக தால்வாதிகாய நம:
,, ப்ரதிஷ்டாகலாத்மக கண்ட்டாதிகாய நம: 120

ஓம் நிவிர்த்தி கலாத்மக ஹ்ருதயாதிகாய நம:
,, பஞ்சமூர்த் யாத்மனே நம:
,, ப்ரம்மாத்மக பாதாய நம:
,, விஷ்ணுவாத்மக குஹ்யாய நம:
,, ருத்ராத்மக ஹ்ருதயாய நம: 125

,, ஈச்வராத்மக வதனாய நம:
,, ஸதா சிவாத்மக மூர்த்னே நம:
,, பஞ்ச மூர்த்யாத்மக பஞ்சவதனாய நம:
,, ஸதாசிவமூர்த்யாத்மக ஊர்த்வவதனாய நம:
,, ஈச்வராத்மக பூர்வ வதனாய நம: 130

,, ருத்ராத்மக தக்ஷிண வதனாய நம:
,, விஷ்ண் வாத்மக உத்தரவ்தனாய நம:
,, ப்ரம்மாத்மக பஸ்சிம வதனாய நம:
,, ஸர்வ வேதமந்த்ர ஜனகபஞ்ச வதனாய நம:
,, ப்ரணவாதி மந்த்ர ஜனக ஊர்த்வ வதனாய நம: 135

,, அதர்வண வேத ஜனக் தக்ஷிண வதனாய நம:
,, யஜுர்வேத ஜனக உத்தர வதனாய் நம:
,, ருக்வேத ஜனக பஸ்சிம வதனாய நம:
,, ஸாமவேத் ஜனக பூர்வ வதனாய நம:
,, அஷ்டாவிம்சதி ஆகம ப்ரதிபாதக பஞ்ச வதனாய நம: 440

,, ப்ரோக் கிதாத்யாகமாஷ்டக ப்ரதிபாதக ஊர்த்வ வதனாய நம:
,, வீராத்யாகம பஞ்சக ப்ரதிபாதக தக்ஷிண வதனாய நம:
,, தீப்தாத்யாகம பஞ்சக ப்ரதிபாதக உத்தர வதனாய நம:
,, காமிகாத்யாக பஞ்சக ப்ரதிபாதக பூர்வ வதனாய நம:
,, ரௌரவாத்யாகம பஞ்சக ப்ரதிபாதக பஸ்சிம வதனாய நம: 145

,, பஞ்சவிம்சதி மூர்த்தி ப்ரதிபாதக பஞ்ச வதனாய நம:
,, ஸுகாஸீனாதி பஞ்சகமூர்த்தி ப்ரதிபாதக ஊர்த்வ வதனாய நம:
,, லிங்கோத்பவாதி பஞ்சகமூர்த்தி ப்ரதிபாதக பூர்வ வதனாய நம:
,, காலாக்னாதி ஸப்தகமூர்த்தி ப்ரதிபாதக தக்ஷிண வதனாய நம:
,, அர்த்தநாரீச்வராதி சதுர்மூர்த்தி ப்ரதிபாதக உத்தர வதனாய நம: 150

,, விஷாபஹாார்யாதி சதுர்மூர்த்தி ப்ரதிபாதக பஸ்சிம வதனாய நம:
,, பராசர வசிஷ்ட மார்க்கண்டேய ஆபஸ்தம்ப போதாயனாதி
வர்க்கதிசாக அகஸ்த்யாதி பஞ்சகதீக்ஷா குருபூத பஞ்சவதனாய நம:
,, அகஸ்த்ய தீக்ஷாகுருபூத ஊர்த்வ வதனாய நம:
,, கௌதம தீக்ஷாகுருபூத பூர்வவதனாய் நம:
,, பரத்வாஜ தீக்ஷாகுருபூத தக்ஷிணவதனாய் நம: 155

ஓம் காச்யப தீக்ஷாகுருபூத உத்தரவதனாய நம:
,, கௌசிக தீக்ஷாகுருபூத பஸ்சிமவதனாய நம:
,, பராத்வால கிஞ்ச்சி திசா னோர்த்வ வதனாய நம:
,, பீத தருண பூர்வ வதனாய நம:
,, தம்ஷ்ட்ரா ப்ரகடிதர ச்யாம தக்ஷிண வதனாய நம: 160

,, யுவதி விலாஸ தருண உத்தரவதனாய நம:
,, ஸாம்ராடாக்ஷ்யாதி தவள பஸ்சிம வதனாய நம:
,, ஷடர்த்தாத்மனே நம:
,, மந்த்ர நாமக ப்ரணவாத்மனே நம:
,, யந்த்ர நாமக லிங்காத்மனே நம: 165

,, தேவதா நாமக பஞ்சப்பிரம்மாத்மனே நம:
,, ப்ராபக நாமக வ்யக்தாதி பிருதிவ்யாத்மனே நம:
,, குருநாமக ஞ்யபகாத்மனே நம:
,, சிஷ்ய நாமக ஞத்ராத்மனே நம:
,, ஷட்விதா பிதாத்மனே நம: 170

,, பதிநாமக வ்யாபாரத்ரய லக்ஷித சக்திமதாத்மனே நம:
,, குண்டலிநாமக லயாதிவ்யாபார சுத்த ஜன்யாத்மனே நம:
,, மாயா நாமக போக்த்ருத்வ ஸாதன வ்புரீந்த்ரியாதி
ஜனக ஜந்து ஸ்ருஷ்டியாத்மனே நம:
,, பசுநாமக ஸகலாதி வந்த்ய த்ரயாத்மனே நம:
,, பாச நாமக ஸகலாதி த்வாந்த ப்ரம்மாத்மனே நம: 175

,, காரக நாமக புக்திமுக்தி பலப்ரத தீக்ஷா க்ரியாத்மனே நம:
,, ஷடத்வாத்மனே நம:
,, கலாத்வ ஸர்வாங்காய நம:
,, புவனாத்வ ரோம்னே நம:
,, வர்ணாத்வ த்வசினே நம: 180

,, மந்த்ராத்மருதிராய நம:
,, பதாத்வ ஸிராமாம்ஸாதிகாய நம:
,, தத்வாத்வ அஸ்திகாதிகாய நம:
,, ஷடங்காத்மனே நம:
,, ஸர்வக்ஞ சக்தி ஹ்ருதயாய நம: 185

ஓம் நித்ய த்ருப்தி சக்தி ஸிரஸே நம:
,, அநாதி போத சக்தி சிகாயை நம:
,, ஸ்வதந்த்ர சக்தி கவசாய நம:
,, அலுப்த சக்தி நேத்ரத்ரயாய நம:
,, அநந்தசக்தி அஸ்த்ராய நம: 190

ஓம் ஷடக்ஷராத்மனே நம:
,, ப்ரண வாக்ஷர ஹ்ருதயாய நம:
,, **ந**அக்ஷர வதநாய நம:
,, **ம**அக்ஷர தக்ஷிண பாஹவே நம:
,, **சி**அக்ஷர வாமபாஹவே நம: 195

,, **வா**அக்ஷர தக்ஷிணபாதாய நம:
,, **ய**அக்ஷர வாமபாதாய நம:
,, ஈசான மந்த்ராத்மக மூர்த்தாதிகாய நம:
,, தத்புருஷாத்மக வலாடாக்ஷாய நம:
,, அகோரமந்த்ராத்மக கண்ட்டாய நம: 200

,, வாமதேவ மந்த்ராத்மக நாப்யாதி காய நம:
,, ஸத்யோஜாத மந்த்ராத்மக மூலாதாராதி காய நம:
,, ப்ரணவாய நம:
,, வேஷ்டக ப்ரணவாதீத கனதஸ்யாத:
பீடமத்யோ பரிக்ரமாதி விலஸத் அகாராதி நாதாந்தாத்மனே நம: 205

,, காமிகாகம பாதாய நம:
,, யோகஜாகம குல்பாய நம:
,, சிந்த்யாகம பாதாங்குளயே நம:
,, காரணாகம ஜங்காய நம:
,, அஜிதாகம ஜானவே நம:
,, தீப்தாகம உரவே நம: 210

,, ஸூக்ஷமாகம குஹ்ய பீஜாய நம:
,, ஸஹஸ்ராகம கட்யை நம:
,, அம்சுமதாகம ப்ருஷ்டாய நம:
,, ஸுப்ரபேதாகம நாபினே நம:
,, விஜயாகம குக்ஷயே நம: 215

,, நித்யாகம ஹ்ருதயாய நம:
,, ஸ்வயம்புவாகம மஸ்தகாய நம:
,, அநலாகம லோசனாய நம:
,, வீராகம கர்ணாய நம:
,, ரௌரவாகம ச்ரோத்ராய நம: 220

,, மகுடாகம மகுடாங்கப்ரத்யங்காய நம:
,, விமலாகம பாஹவே நம:
,, சந்த்ரஞானாகம மாநஸிகாய நம:
,, பிம்பாகம வதனாய நம:
,, ப்ரோத்கீதாகம ஜிஹ்வாய நம: 225

ஓம் லலிதாகம கபோலாய நம:
,, ஸித்தாந்தாகம லலாடாய நம:
,, ஸந்தானாகம ரத்னகுண்டலாய நம:
,, சர்வோத்தாகமோ பேக்ஷிதாய நம:
,, பரமேச்வராகம ஹாராய நம: 230

,, கிரணாகம ரத்ன பூஷணாய நம:
,, வாதுளாகம வாக்மினே நம:
,, காலோத்தராகம நாஸயே நம:
,, பௌஷ்டிகாகம ரதனாய நம:
,, வாதுளாகம வஸ்த்ராய நம: 235

,, சிவதர்மானு லேபனாய நம:
,, சிவஸ்தல புஷ்ப மால்யாய நம:
,, சிவசித்தாந்த நிவேதனாய நம:
,, சிவதந்த்ராகார சரீராய நம:
,, தக்ஷிணாபிமுக முகாய நம: 240

,, ஞான:சந்த்ர கலா சேகராய நம:
,, அம்ருதகாய கங்காதராய நம:
,, நித்யஞானாய நம:
,, நித்ய வைராக்யாய நம:
,, நித்யத்ருத தைர்யாய நம: 245

,, நித்ய க்ஷமாய நம:
,, நித்ய ஸத்வஸ்தாய நம:
,, நித்யாத்ம போதாய நம:
,, நித்யாதி சஷ்டாத்ராய நம:
,, பஞ்சவிம்சதி மூர்த்யாத்மனே நம: 250

,, சந்திரசேகராய நம:
,, உமாமகேச்வராய நம:
,, வ்ருஷப வாஹனாய நம:
,, நடேச்வராய நம:
,, கல்யாண சுந்தராய நம: 255

,, பிக்ஷாடன வேஷாய நம:
,, காமாரயே நம :
,, காலாரயே நம:
,, ஜலந்தராரயே நம:
,, கஜாஸுராரயே நம: 260

ஓம் த்ரிபுராரயே நம:
,, வீரபத்ராய நம:
,, சரபேச்வராய நம:
,, அகோரேச்வராய நம:
,, அர்த்தநாரீச்வராய நம- 265

,, கிராதகேச்வராய நம:
,, கங்காள வேஷதாய நம:
,, சண்டேச்வரவரதாய நம:
,, விஷஹாரிணே நம:
,, சக்ரதான மூர்த்தயே நம: 270

,, விக்னேச்வர ப்ரஸாதகாய நம:
,, ஸோமாஸ் கந்தாய நம:
,, ஏக பாதாய நம:
,, ஸுகாஸீனாய நம:
,, ஸ்ரீதக்ஷிணா மூர்த்தயே நம: 275

,, ஸ்தாணவே நம:
,, ப்ருதிவ்யாத்மநே நம:
,, அபாத்மனே நம:
,, தேஜஸாத்மனே நம:
,, வாய்வாத்மனே நம: 280

,, ஆகாசாத்மனே நம:
,, ரவ்யாத்மனே நம
,, சந்த்ராத்மனே நம:
,, யஜமானாத்மனே நம:
,, ஆத்மனே நம: 285

,, வர்ண பூஷாய நம:
,, அம்மகுடாய நம:
,, கம் கபர்நாய நம:
,, க$_2$ம் சந்த்ரகலாய நம:
,, க$_3$ம் கங்காதராய நம: 290

,, க$_4$ம் பட்டிகாய நம:
,, ஙம் லலாட பூஷணாய நம:
,, சம் தக்ஷிணகர்ண குண்டலாய நம:
,, ச$_2$ம் வாமகர்ண குண்டலாய நம:
,, ச$_3$ம் தக்ஷிணகர்ண பூஷணாய நம: 295

ஓம் ச$_4$ம் வாமகர்ண பூஷணாய நம:
,, ஞம் தக்ஷிணகர்ண தடஸ் தாய நம:
,, டம் வாமகர்ண தடஸ்தாய நம:
,, ட$_2$ம் க்ரைவேயகாய நம:
,, ட$_3$ம் உரக பூஷணாய நம: 300
,, ட$_4$ம் ஹாராய நம:
,, ணம் மாலாய நம:
,, தம் யக்ஞோப வீதாய நம:
,, த$_2$ம் தக்ஷிணபாஹு பூஷணாய நம:
,, த$_3$ம் வாம பாஹு பூஷணாய நம: 305
,, த$_4$ம் தக்ஷிண பாஹு கடகாய நம:
,, நம் வாம பாஹு கடகாய நம:
,, பம் தக்ஷிண பாஹு கராங்குளிகாய நம:
,, ப$_2$ம் வாமபாஹு கராங்குளிகாய நம:
,, ப$_3$ம் பரசுனே நம: 310
,, ப$_4$ம் ம்ருகாய நம:
,, மம் வரதாய நம:
,, யம் அபயாய நம:
,, ரம் ஓட்யாணாய நம:
,, லம் கடிஸூத்ராய நம: 315
,, வம் சர்மாம்பராய நம:
,, ஸம் தக்ஷிணபாத நூபுராய நம:
,, ஷம் வாமபாத நூபுராய நம:
,, ஸம் தக்ஷிண பாத கடகாய நம:
,, ஹம் வாமபாத கடகாய நம: 320
,, ளம் தக்ஷிண பாதாங்குளிகாய நம:
,, க்ஷம் வாமபாதாங்குளிகாய நம:
,, விஷ்ணு கந்தர பாதாய நம:
,, மத்ஸ்யாக்ஷி ஹ்ருதயாய நம:
,, க்ரோடச்ருங்கதராய நம: 325
,, நரஸிம்ஹ சர்மாம் பராயநம:
,, த்ரிவிக்ரம அஸ்திகணாயநம:
,, ஹம்ஸமய ஸர்வாங்காய நம:
,, ஸ்ரீபரம கல்யாணி ஸமேதாய நம:
,, ஸ்ரீபரம சிவ சரணார விந்தாப்யாம் நம: 330

ஆகமஸார ருத்ர த்ரிசதி முற்றும்.

★ ★ ★

பிற்சேர்க்கை : 7

இந்நூல் எழுத உதவிய நூல்கள்

தமிழ் நூல்கள் :

அமரகாதலர் : தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்.
அருணகிரி அந்தாதி
அருணகிரிநாதர் அடிச்சுவட்டில் ...திருப்புகழ் தலப்பயணம் :
R. இராமசேஷன் & வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன் 1981.
அருணாசலபுராணம்
ஆடல்வல்லான் : ச. தண்டபாணி தேசிகர். திருவாவடுதுறையாதீனம் 1967.
இந்துசமயக் கடவுள்களின் திருவுருவங்கள் : தி. இராசமாணிக்கம். 1982.
கழக வெளியீடு.
இரட்டையர் பிரபந்தங்கள்.
இலிங்கபுராணம்.
உண்மை விளக்கம்.
உபதேச காண்டம்.
உமாபதிசிவம் பிரபந்தங்கள்.
கந்தபுராணம்.
கம்பராமாயணம்.

கல்லும் சொல்லாதோ கவி : தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்.
காசிகண்டம் :
காசியாத்திரை : பரணிதரன்.
காஞ்சிப்புராணம்.
காரைக்கால் அம்மையார் பிரபந்தங்கள் - உரையுடன் : R. ராமசேஷன்.
குடந்தைப் புராணம்.
குமரகுருபர சுவாமிகள் பிரபந்தங்கள்.
குற்றாலபுராணம்.
கூர்மபுராணம்.
சிலப்பதிகாரம்.
சிவன் : ந. சி. கந்தையா. கழகவெளியீடு. (429.)
சிவஞானசித்தியார்
சிவபராக்கிரமம் : இரத்தினவேலு முதலியார். 1932.
சிவபெருமான் திருவந்தாதி.
சீர்காழிப்புராணம்.
திருக்களிற்றுப்படியார்.
திருநாகேச்சரத்தலபுராணம் : சிங்காரவேற் பிள்ளை. 1927.
திருத்தொண்டர் புராணம் : சிவக்கவிமணி உரையுடன்.
திருப்பல்லாண்டு.
திருப்புகழ் : தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை—
"முருகவேள் பன்னிருதிருமுறை" : 6 தொகுதிகள்.
திருப்புத்தூர் புராணம்.
திருமந்திரம்.
திருவெண்காட்டுத் தலவரலாறு.
தியாகராசலீலை.
திருவாசகம்.
திருவிசைப்பா.
திருவிளையாடற் புராணம் : பரஞ்சோதிமுனிவர்.
திருவிளையாடற் புராணம் : பெரும்பற்றப்புலியூர்நம்பி.
திருவீழிமிழலை புராணம்.
தெய்வத்திருவுருவங்கள் : ந. ரா. முருகவேள்.
தேவார ஒளிநெறி : தொகுதிகள்—தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை
தேவாரம்—திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர்.
தொல்காப்பியம்.
நாலாயிர திவ்வியப்பிரபந்தம்.
பதினோராம் திருமுறை.
புனிதப்பயணம் : பரணீதரன்.
பொன்வண்ணத்தந்தாதி : சேரமான் பெருமாள் நாயனார்.
வேங்கடம் முதல் குமரி வரை : தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்.
வேதாரணியத்தல வரலாறு.

வடமொழி நூல்கள்

அதர்வணவேதம்

அம்சுமத் பேதாகமம்

ஆதித்யபுராணம்

ஐதயேய பிராமணம்

ரிக்வேதம்

கச்யபசில்ப சாஸ்திரம் : தஞ்சை சரஸ்வதி மகால் பதிப்பு : 1960

காமிகாகமம்

காரணாகமம்

குமாரசம்பவம்

கூர்ம புராணம்

சதபத பிராமணம்

சில்ப சங்கிரகம்

சில்பரத்தினம்

சிவ புராணம்

சுக்ல யஜுர்வேதம்

சுப்பிரபேதாகமம்

சூதசம்ஹிதை

ஸ்காந்த புராணம்

நாட்டிய வேத விவர்த்தி

பரதசார சங்கிரஹம்

பரத சூடாமணி

மஹாபாரதம்

மகுடாகமம்

மாயாமதம்

லிங்கபுராணம்

வாதுளோத்தரம்

வாமனபுராணம்

வாயு புராணம்

விசுவகர்மசில்ப சாஸ்திரம் : தஞ்சை சரஸ்வதிமகால் பதிப்பு

விஷ்ணுதர்மோத்தரம்

ஸ்ரீதத்வநிதி : தஞ்சை சரஸ்வதிமகால் பதிப்பு


மலர்கள் :

திருக்கேதீச்சரம் கும்பாபிஷேக மலர் 1975
திருச்சிற்றம்பலவன் கோயில் 1979
திருமயிலைக் கபாலீச்சரம் கும்பாபிஷேக மலர் 1982
திருவண்ணாமலை கும்பாபிஷேக மலர் 1976
திருவானைக்காவ கும்பாபிஷேக மலர் 1970
திருவிடைமருதூர் கும்பாபிஷேக மலர் 1970
ஸ்ரீகௌரி சங்கர் ஆத்மஞான சபை சிறப்பு மலர் 1983

ஆங்கில நூல்கள் :

Elements of Hindu Iconography, T. A, Gopinatha Rao. 2 vols. 1914-16
L' iconographic De Subramanya Au Tamilnadu : F' Hernault Pondicherry 1978 (French)
Manifestations of Shiva : Stella Kramrish. 1981
Sankara & Shanmatha conference Souvenir. Madras, 1969
South Indian Gods & Goddesses, H. Krishna Sastri
The Presence of Shiva : Stella Kramrish. 1981
Temples of Tamilnadu. R. K. Das. 1964
Ways to Shiva. Joseph. M. Dye. 1980

★ ★ ★



பிற்சேர்க்கை : 8

அட்டாட்ட விக்கிரக லீலை

சந்திர சேகரம் அர்த்தநாரீ சுரம்
சக்கிரப் பிரதானம்
தக்ஷிணாமூர்த்தம் இலிங்கம் லிங்கோற்பவம்
தக்ஷயக்கிய பங்கம்
சந்தியின் நிர்த்தனஞ் சந்தத நிர்த்தனம்
சண்டேசா நுக்கிரகம்
சலந்தர வதம் அகொராஸ்திர மேகப்
தம் அசுவாரூடம்
சத்ய சதாசிவம் மிக்கசதா சிவம்
தகுலகுளேசுவரம்
சகஜ சுகாசனம் கூர்ம சங்காரமச்
சாரி வராஹாரி
சற்குரு மூர்த்தம் உமேசம் உமாபதி
ஐய புஜங்கத்ராசம்
சார்த்தூ லஹாரி பைரவம் கலியாணசுந்
தரம் வடுகங் கிராதம்

சுந்தர விருஷப ஊர்தி விஷாபஹா
ரணசுவரா பக்நம்
துகளறு க்ஷேத்திர பாலகம் தொல்கரு
டாந்திகம் முகலிங்கம்
துங்க கங்காதரம் கங்கா விஸர்ஜநம்
சுப சோமாஸ்கந்தம்
சூரஸிம்ஹாரி கமாரியமாத்தகஞ்
சுசி மாணவ பாவம்
சுபகர பிரார்த்தனை மூர்த்த நறுந்திரி
புராந்தகஞ் சுரர்பரசும்
சுமுக கங்காளம் இரக்த பிக்ஷைப்பிர
தான மிருஞ்சுடரே
சுடர் கவுரீ வரப்பிரதம் மஹாபா
சுபத சொரூப மணி
தோன்று புஜங்க லளிதம் ரிஷபாந்திகம்
தோமறு கஜயுத்தம்

விந்தை விளம்பு கஜாந்திகம் வீணை
தயங்கு தக்ஷிண மூர்த்தம்
மேதக யோக விநோ தமதாக
விளங்கு தக்ஷிண மூர்த்தம்
விமல் பிக்ஷாடனங் கவலையுத்தாரணம்
வேத கணம் புகழும்
விதிசிர கண்டனம் கவுரிவிலாசமந்
விதம் எழிலரியர்த்தம்
வீரபத்திரம் திரிமூர்த்தி முப்பாதம்
ஹாவே தாளி நடம்
வெருவறு மேக பதத்திரி உருவாய்
விளம்பறுபது நான்கும்
விலாச வளிப்பு நிமித்த மெடுத்தவொர்
மெய்ப் பொருளெதுவதுவே
விண்ணவர் மண்ணவர் கண்ணவர் யாவரும்
வீடருளாய் எனவே

வந்தனைபுரிய விருந்துளனீ யென
வண்டமிழான் மனசான்
வாழ்த்தி வணங்கெனையாள என் இருதய
மலரில் எழுந்தருளாய்
மந்திர நாயக தந்திர நாயக
மங்களநாயக ஓம்
மயத வரீசுர பரமகுஹேசுர
வசன மனாதீத
வரதக்ரு பாகர குமர பராபர
வரைவறு ஷாட்குண்ய
வஸ்துவெனற்புதசத்திய வித்தக
மரண மொடயன மிலா
வானவ ஞானநபோ மணியே திரு
மாலயனறியா ஓர்
மாமலையின் பெயரான் குருநாத என்
மருடெறு மாமமுனியே

—பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்

★ ★ ★

நின்ற திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
இயமான னாய்எறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாய்அட்ட மூர்த்தி ஆகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடைஅடிகள் நின்ற வாறே. 1

மண்ணாகி விண்ணாகி மலையு மாகி
வயிரமுமாய் மாணிக்கந் தானே யாகிக்
கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியு மாகிக்
கலையாகிக் கலைஞானந் தானே யாகிப்
பெண்ணாகிப் பெண்ணுக்கோர் ஆணு மாகிப்
பிரளயத்துக் கப்பால்ஓ ரண்ட மாகி
எண்ணாகி எண்ணுக்கோர் எழுத்து மாகி
எழுஞ்சுடராய் எம்அடிகள் நின்ற வாறே. 2

கல்லாகிக் களறாகிக் கானு மாகிக்
காவிரியாய்க் கால்ஆறாய்க் கழியு மாகிப்
புல்லாகிப் புதலாகிப் பூடு மாகிப்
புரமாகிப் புரமூன்றுங் கெடுத்தா னாகிச்
சொல்லாகிச் சொல்லுக்கோர் பொருளு மாகிச்
சுலாவாகிச் சுலாவுக்கோர் சூழ லாகி
நெல்லாகி நிலனாகி நீரு மாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்ற வாறே 3

காற்றாகிக் கார்முகிலாய்க் காலம் மூன்றாய்க்
கனவாகி நனவாகிக் கங்கு லாகிக்
கூற்றாகிக் கூற்றுதைத்த கொல்களிறு மாகிக்
குரைகடலாய்க் குரைகடற்கோர் கோமா னுமாய்
நீற்றானாய் நீறேற்ற மேனி யாகி
நீள்விசும்பாய் நீள்விசும்பி னுச்சி யாகி
ஏற்றானாய் ஏறூர்ந்த செல்வ னாகி
எழுஞ்சுடராய் எம்மடிகள் நின்ற வாறே. 4

தீயாகி நீராகித் திண்மை யாகித்
திசையாகி அத்திசைக்கோர் தெய்வ மாகித்
தாயாகித் தந்தையாய்ச் சார்வு மாகித்
தாரகையும் ஞாயிறுந்தண் மதியு மாகிக்
காயாகிப் பழமாகிப் பழத்தில் நின்ற
இரதங்கள் நுகர்வானுந் தானே யாகி
நீயாகி நானாகி நேர்மை யாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்ற வாறே. 5

அங்கமாய் ஆதியாய் வேத மாகி
அருமறை யோ(டு)ஐம் பூதந் தானே யாகிப்
பங்கமாய்ப் பலசொல்லுந் தானே யாகிப்
பால்மதியோ(டு) ஆதியாய்ப் பான்மை யாகிக்
கங்கையாய்க் காவிரியாய்க் கன்னி யாகிக்
கடலாகி மலையாகிக் கழியு மாகி
எங்குமாய் ஏறூர்ந்த செல்வ னாகி
எழுஞ்சுடராய் எம்மடிகள் நின்ற வாறே. 6

மாதா பிதாவாகி மக்க ளாகி
மறிகடலும் மால்விசும்புந் தானே யாகிக்
கோதா விரியாய்க் குமரி யாகிக்
கொல்புலித்தோ லாடைக் குழக னாகிப்
போதாய மலர்கொண்டு போற்றி நின்று
புனைவார் பிறப்பறுக்கும் புனித னாகி
யாதானுமென நினைந்தார்க் கெளிதே யாகி
அழல்வண்ண வண்ணர் தாம் நின்ற வாறே. 7

ஆவாகி ஆவினில் ஐந்து மாகி
அறிவாகி அழலாகி அவியு மாகி
நாவாகி நாவுக்கோர் உரையு மாகி
நாதனாய் வேதத்தி னுள்ளோ னாகிப்
பூவாகிப் பூவுக்கோர் நாற்ற மாகிப்
புக்குளால் வாசமாகி நின்ற னாகித்
தேவாதித் தேவர் முதலு மாகிச்
செழுஞ்சுடராய்ச் சென்றடிகள் நின்ற வாறே. 8

நீராகி நீளகலந் தானே யாகி
நிழலாகி நீள்விசும்பின் உச்சி யாகிப்
பேராகிப் பேருக்கோர் பெருமை யாகிப்
பெருமதில்கள் மூன்றினையும் எய்தானாகி
ஆரேனுந் தன்னடைந்தார் தம்மை எல்லாம்
ஆட்கொள்ள வல்ல எம்ஈச னார்தாம்
பாராகிப் பண்ணாகிப் பாட லாகிப்
பரஞ்சுடராய்ச் சென்றடிகள் நின்ற வாறே. 9

மாலாகி நான்முகனாய் மாபூதமாய்
மருக்கமாய் அருக்கமாய் மகிழ்வு மாகிப்
பாலாகி எண்திசைக்கும் எல்லையாகிப்
பரப்பாகிப் பரலோகந் தானே யாகிப்
பூலோக புவலோக சுவலோ கமாய்ப்
பூதங்களாய்ப் புராணன் தானே யாகி
ஏலா தனவெல்லாம் ஏல்விப் பானாய்
எழுஞ் சுடராய் எம்மடிகள் நின்ற வாறே. 10

திருச்சிற்றம்பலம்

—திருநாவுக்கரசு சுவாமிகள்



போற்றி போற்றி

சதுர்முகன் தந்தைக்குக் கதிர்விடு கடவுள்
ஆழி கொடுத்த பேரருள் போற்றி
முயற்சியொடு பணிந்த இயக்கர்கோ னுக்கு
மாநிதி இரண்டும் ஆனாப் பெருவளத்து
அளகை ஒன்றும் தளர்வின்றி நிறுவிய
செல்வம் கொடுத்த செல்வம் போற்றி
தாள் நிழல் அடைந்த மாணிக் காக
நாண்முறை பிறழாது கோண்முறை வலித்துப்
பதைத்துவரும் கூற்றைப் படிமிசைத் தெறிக்க
உதைத்துயிர் அளித்த உதவி போற்றி
குலைகுலை குலைந்த நிலையாத்தேவர்
படுபேர் அவலம் இடையின்றி விலக்கிக்
கடல்விடம் அருந்தின கருணை போற்றி
தவிராச் சீற்றத் தவுணர் மூவெயில்
ஒல்லனல் கொளுவி ஒரு நொடி பொடிபட
வில்லொன்று வளைத்த வீரம் போற்றி
பூமென் கரும்பொடு பொடிபட நிலத்துக்
காமனைப் பார்த்த கண்ணுதல் போற்றி

தெய்வ யாளி கைமுயன் று கிழித்தெனக்
கரியொன் றுரித்த பெருவிறல் போற்றி
பண்டு பெரும்போர்ப் பார்த்தனுக் காகக்
கொண்டு நடந்த கோலம் போற்றி
விரற்பதம் ஒன்றில் வெள்ளிமலை எடுத்த
அரக்கனை நெரித்த ஆண்மை போற்றி
விலங்கல் விண்டு விழுந்தென முன்னாள்
சலந்தரன் தடிந்த தண்டம் போற்றி
தாதையை எறிந்த வேதியச் சிறுவற்குப்
பரிகலம் கொடுத்த திருவுளம் போற்றி
நின்முதல் வழிபடத் தன்மகன் தடிந்த
தொண்டர் மனையில் உண்டல் போற்றி
வெண்ணெய் உண்ண எண்ணுடு வந்து
நந்தா விளக்கை நுந்துபு பெயர்த்த
தாவுபுல் எலிக்கு மூவுல காள
நொய்தினில் அளித்த கைவளம் போற்றி
பொங்குளை அழல்வாய்ப் புகைவிழி ஒருதனிச்
சிங்கம் கொன்ற சேவகம் போற்றி
வரிமிடற் றெறுழ்வலி மணியுகு பகுவாய்
உரகம் பூண்ட ஒப்பனை போற்றி
கங்கையும் கடுக்கையும் கலந்துழி ஒருபால்
திங்கள் சூடிய செஞ்சடை போற்றி
கடவுள் இருவர் அடியும் முடியும்
காண்டல் வேண்டக் கனற்பிழம் பாகி
நீண்டு நின்ற நீளம் போற்றி
ஆலம் பில்குநின் சூலம் போற்றி
கூறுதற் கரியநின் ஏறு போற்றி
ஏக வெற்பன் மகிழும் மகட்கிடப்
பாகம் கொடுத்த பண்பு போற்றி
தில்லை மாநகர் போற்றி தில்லையுட்
செம்பொன் அம்பலம் போற்றி அம்பலத்
தாடும் நாடகம் போற்றி என்றாங்கு
என்றும் போற்றினும் என்தனக்கிறைவ
ஆற்றல் இல்லை ஆயினும்
போற்றி போற்றி நின் பொலம்பூ அடிக்கே.

—கோயில் நான்மணிமாலை
பட்டினத்துப்பிள்ளையார்

★ ★ ★

திருப்புகழ் பதிப்பகம்
சென்னை
600005